வெளியிடு—29—2—1968]
Issued—29—2—1968]

27 MAR 1968

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

283

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*வியாழக்கிழமை, 1967 ஜூன் 29*
**Thursday, 29th June 1967**

தொகுதி III—எண் 2
**Volume III—No. 2**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

D
V211, 31 N67
N67.3.2
65611

D
V211, 31'N67
N67.3-2

## உள்ளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| 1. வினுக்கள்-விடைகள் .. .. .. .. .. | 97-122 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல் .. | 122 |
| (இ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா .. | 207 |
| 3. அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் .. .. | 122-123 |
| (இ) பேரவை அலுவல் .. .. .. .. | 123 |
| 4. 1967-68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)— | |
| (அ) கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் .. .. | 123-207 |
| (இ) கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் .. .. | |
| (உ) கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை .. | |
| (எ) கோரிக்கை எண் XIX—கூட்டுறவு .. .. | |
| 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 207-208 |


65011

# தமிழகச் சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1967 ஜ[illegible]

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்". உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை கூறுவார்கள்.

### நவீன விவசாய முறைகள்

***99 வினா.—திரு செ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில விவசாயக் கல்லூரிகளில் இளம் விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளைப் பற்றிய போதனையும் பயிற்சியும் அளிக்கும் திட்டம் ஏதேனும் சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஒரு பக்கம் விவசாய ஆராய்ச்சிகள் பெருகிக்கொண்டு விவசாயத்தில் நவீன முறைகள் எல்லாம் கொண்டுவரப் படுகின்றன. இன்னொரு பக்கம் கிராமத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு இது தெரியாமல் இருக்கிறது. இரண்டிற்கும் தொடர்பு ஏற்படக்கூடிய முறையில் இந்த மாதிரி முறைகளில் பயிற்சி அளித்தால் என்ன என்று கேட்கிறேன் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் இளம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ஒரு திட்டம் 1961-ல் கொண்டுவரப்பட்டது. விவசாய உற்பத்தி விஷயமாக நவீன முறையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1961-ல் விவசாயக் கல்லூரி அவசியம் இல்லையென்று கருதி இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இதற்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விவசாயப் பள்ளி இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி விவசாயக் கல்லூரிகள் தமிழகத்தில் இயங்குகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** நவீன விவசாய முறைகள் அங்கங்கே விவசாயப் பண்ணைகளிலே வைத்துச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. கிராமப்புற விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளைப்பற்றி கற்றுத் தெரிந்துக் கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாயப் பயிற்சிகள் சர்க்கார் விதைப்பண்ணைகள் எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் நடத்தப் படுகிறது. ஆனால் ஆராய்ச்சிப் பண்ணையிலே இம்மாதிரி பயிற்சி அளிக்கப் படவில்லை. அங்கே ஆராய்ச்சியாளர்கள்தான் பயிற்சி பெறுகிறார்கள்.

**திரு. சு. துரைசாமி :** விவசாய ஆராய்ச்சிக் கூடங்களிலே, விவசாயப் பள்ளிகளிலே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்போது விவசாயக் குடும்பங்களிலே சம்பந்தம் உள்ளவர்களுக்கு முதலிடம் அளிக்கப் படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாயக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்க்கும்போது விவசாயக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. விவசாயத்திலே அக்கறை உள்ள மாணவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் தேர்வுக் குழுவிற்குக் கட்டளையிடுகிறது.

**திரு. கே. விநாயகம் :** உணவு நெருக்கடி அதிகமாக இருக்கிற இந்த நேரத்தில் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையான நோக்கத்தைக்கொண்டு விவசாயப் பண்ணையிலே விவசாயிகளுக்கு பகல் நேரத்திலே போதிப்பதை விட்டு—ஏனென்றால் அவர்கள் பகல் நேரத்திலே வேலையில் ஈடுபட்டிருக்கக்கூடிய காரணத்தால்—அவர்களுக்கு மாலை நேரத்திலே கற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பள்ளிகளில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதிகாலையில் பண்ணைக்குச்சென்று பண்ணை வேலைகள் செய்கிறார்கள். 10, 11 மணி அளவிலே பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. தேவையான நேரத்திலே அவர்கள் வயலுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். முழு மனித உழைப்பையும் விவசாயப் பண்ணையிலே பயன்படுத்துகிறார்கள். மற்ற வேலைகளிலும் பயிற்சி பெறுகிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** விவசாயக் கல்லூரியிலே பயிற்சி பெறுகிறவர்களுக்கு பயிற்சிக் காலத்திலே உதவித்தொகை அளிக்கப்படுகிறதா ? அந்த உதவித்தொகைப் போதுமானதாக இல்லையென்றால் அதை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மாதம் 30 ரூபாய் ஸ்டைபண்ட் அளிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் மாதம் 40 ரூபாய் அளிக்கப்படுகிறது.

**Dr. H. V. HANDE :** Sir, with regard to the training in modern methods of agriculture, even if they had training, there is not much scope for implementing those modern methods in the present context. Because, the farms are very small, they are so small that even a tractor could not be put into operation. Under these circumstances, will the Government come forward to tell us whether they have any concrete proposals to see that these modern equipments like tractors etc., are used in these farms and the food production is increased thereby ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது இருக்கிற விதைப்பண்ணைகளில்தான் பயிற்சிகள் நடைபெறுவதாக நான் அறிவித்தேன். முதலிலே விதைப்பண்ணைகளை மோசமான இடத்தில் வைத்து விட்டார்கள். டிராக்டர்கள் சில பண்ணைகளிலே பயன்படுத்தப் படுகின்றன. பயிற்சிப் பள்ளிகளிலே டிராக்டர்களை இயக்குவது, டிராக்டர்களினுடைய ஸ்பேர் பார்ட்ஸ்களை மாற்றுவது, பின்னால் பழுது ஏற்பட்டால் பழுது பார்ப்பதற்கும் அதைச் சரி செய்வதற்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** விவசாயக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கும்போது விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு முதலிடம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயக் குடி மக்களுக்கு இத்தனை சதவிகிதம் ஒதுக்கப்படும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சமூகவாரி பிரதிநிதித்துவம் தான் கவனிக்கப்படுகிறது. பொதுவாக விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் விவசாயத்தில் அக்கறை கொண்டவர்களாக இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. இதிலே



விவசாயக் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதற்காக மார்க்குகள் வழங்கப்படுகின்றன. இதில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அதிக வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விவசாயக் கல்லூரிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது போதுமான கல்லூரிகள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய எண்ணிக்கையை விட மிகக் குறைவாகத்தான் மாணவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். ஆகையால் அதில் ஊக்கம் எடுத்துக்கொண்டு எதிர்காலத்தில் அதிகமான மாணவர்களைச் சேர்க்க கனம் உறுப்பினர் அவர்கள் இடம் கிடைக்காத கல்லூரிகளில் முயற்சி செய்வதைவிட இடம் கிடைக்கக்கூடிய விவசாயக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பிரசாரம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** நாட்டில் நன்மைகள் விவசாயத்தில் தான் ஏற்படுகின்றன. ஆகையால் விவசாயத்தில் நல்ல சேவை செய்துள்ள திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் விவசாயத்துறையில் எந்தெந்த அளவிலே முன்னேற்றம் கண்டிருக்கிறார்களோ அவைகளெல்லாம் கவனிக்கப்படுகின்றன. அவர்கள் உற்பத்தி செய்த பப்பாளிப் பழம், சோளம் போன்றவைகள் எக்சிபிஷனிலே வைக்கப் பட்டு அந்த நுணுக்க அறிவானது மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே செய்யப்படுகிறது. அவர்களுடைய அறிவைப் பயன்படுத்த சர்க்கார் எப்பொழுதும் தயாராய் இருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** விவசாயக் கல்லூரிகளிலே பயிற்சி பெறும் மாணவர்களுக்கு போதனை மட்டும் தரப்படுகிறதா அல்லது மாணவர்களை வயலிலே அரசாங்கம் வைத்து வேலை செய்யக்கூடிய அளவிலே பயிற்சி தரப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கேள்வி விவசாயிகளைப் பற்றியது. கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போது விவசாயக் கல்லூரிகளில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு வயலிலே வேலை செய்யவேண்டும் என்ற அளவில் போதனையும் அளிக்கப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலில் விவசாயப் பள்ளிகளிலே மாணவர்களுக்கு என்ன பயிற்சி தரப்படுகிறது என்ன ஊதியம் கொடுக்கப் படுகிறது என்பதுதான். ஆனால் நான் கேட்பது சாதாரண விவசாயிகள் இருக்கிறார்களே அவர்கள் போதிய அளவிற்கு முன் அந்தால் விவசாயத்தைக் கற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா, அவர்களுக்கு உதவி செய்ய ஏதாவது முயற்சி உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கும் இப்பொழுது கேட்கிற கேள்விக்கும் தொடர்பு இல்லை. பொறுப்புள்ள அங்கத்தினர் கேட்கின்ற காரணத்தினால் பதில் சொல்ல விரும்புகிறேன். இதிலே இளம் விவசாயிகளுக்கு 8-வது ஸ்டாண்டர்ட் வரை படித்த மாணவர்களுக்குத்தான் இந்தப் பள்ளியிலே இடம் உண்டு. ஒவ்வொரு கல்லூரியிலும் 20 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இது நீங்கலாக கிராம சேவக்குகள் மூலமாக (குறுக்கிடு) கிராம சேவிகைகள் அல்ல, கிராம சேவக்குகள் அதாவது கிராம விஸ்தரிப்பு அதிகாரிகள்—நான் சொல்வதை கனம் அங்கத்தினர் கூர்ந்து கவனிக்கவேண்டும்—நேரடியாக கிராம மக்களை சந்தித்து என்னென்ன பொறுக்கு விதைகளை உபயோகப்படுத்த வேண்டும் என்பன போன்றவற்றை எல்லாம் மக்களுக்குச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி யிலே பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு, 10 ஆண்டுக் காலமாக விவ சாயத்திலே ஈடுபட்டு, நெல் விளைச்சலிலே அதிக உற்பத்தி செய்து போட்டி யிலே வெற்றிபெற்ற விவசாயிகளை பயிற்சி அளிக்க அனுப்பும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது விவசாயப் பள்ளிகளைப் பற்றிய கேள்வி. வேறு கேள்வி இருந்தால், தனிக்கேள்வி அனுப்பினால் தகுந்த பதில் அளிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் விவசாயத் துறையில் புரிந்ததாகச் சொல்லப்படுகிற சாதனைகளெல்லாம் அமெரிக்கா போன்ற நாடுகளில் 20 ஆண்டுகளுக்கு முன்னே செய்யப்பட்ட சாதனைகள் என்பதைச் சர்க்கார் உணருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் விவசாயத்துறையில் ஆராய்ச்சி செய்து கண்டிருக்கிற சாதனைகள் 20 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதா, முன்னால் கண்டு பிடிக்கப்பட்டதா என்ற தகவல் இல்லை. திரு. ஜி. டி. நாயுடு அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளவைகளைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இந்தச் சர்க்காருக்கு இருக்கிறது. அவர்களு டைய சம்மதம் இருந்தால் பயன் படுத்திக்கொள்ள சர்க்கார் தயாராக இருக்கிறது.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள்**

*100 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் இறுதிக் குள் எத்தனை வடி குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டன ?

(இ) எத்தனை கிணறுகள் இறக்குவதாக திட்டமிடப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) வடி முனைக் குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தின் கீழ் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் முடிய 2,576 கிணறுகள் இறக்கப்பட்டன.

(இ) 2,000 கிணறுகள் 1966-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதிக்குள்ளாக தோண்டி முடிக்கத் திட்டமிடப்பட்டன.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கிணறு தோண்டப்படக் கூடிய நேரத்தில், வாரத்திற்குச் சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய நிலத்தில் தோண்டுவதற்கு அரசு உதவி செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போதைக்கு இந்த உதவி வாரக்குத்தகைதாரருக்கு இல்லாமல் இருக்கிறது. இதைப் பற்றி மீண்டும் பரிசீலிக்கப்படும். இதைப் பற்றி அரசாங்கத்திற்கு விவசாயக் கருத்தரங் கில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து முடியுமானால் உதவி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இரண்டு ஏக்கர்களுக்கும் குறைவான நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, குத்தகைக்குப் பயிரி டும் விவசாயிகளுக்கும், குறிப்பாக தர்மபுரம், திருவாடுதுறை மடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிடும் விவசாயிகளுக்கும் அரசாங்கமே வடி முனைக் குழாய்க் கிணறுகள் வெட்டிக்கொடுத்து, விவசாயிகளிடமிருந்து வாடகையாக வசூலிக்கும் திட்டம் உண்டா ?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போதைக்கு குத்தகைக்குப் பயிரிடுகிறவர்களுக்கும், வாரத்திற்குப் பயிரிடுகிறவர்களுக்கும் இந்த வாய்ப் பும் வசதியும் இல்லாமல் இருக்கிறது என்று கனம் உறுப்பினர் அழகர் சாமி அவர்களுடைய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சொன்னேன். இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி வசதி உள்ளவர்கள்தான் வடிமுனைக் குழாய்க் கிணறு களை இறக்க வசதி இருக்கிறது. மற்றவர்களுக்கு இந்த வசதி இல்லாத காரணத்தினால், அரசாங்கம் சமுதாயக் கிணறு வெட்டி வசதி செய்யலாமா என்று யோசனை செய்துகொண்டு வருகிறது. பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்தும், சட்ட மன்ற உறுப்பினர்களும் முயற்சி எடுத்து எந்தப் பகுதியில் உத்திரவாதம் அளிக்கிறார்களோ அங்கே சமுதாய நலத் திட்டத் தின்கீழ் தோண்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முயற்சியில் கனம் அங்கத்தினர் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த வடி முனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பதிலே சர்க்கார் தன்னுடைய கொள்கையை எந்த அளவுக்குத் தெளிவுபடுத்துகிறதோ அந்த அளவுக்கு மடாதிபதி கள் ஒத்துழைப்பதில்லை. அதோடுகூட, தர்மாபுரம் மடத்திற்கு 12,000 ஏக்கர்களும், திருவாடுதுறை மடத்திற்கு 6,000 ஏக்கர்களும் இருக்கின்றன. வடி முனைக் குழாய்களை அங்கு வைப்பதிலும், கிணறுகளைத் தோண்டு வதிலும், பொதுச் சமுதாயக் கிணறுகளைத் தோண்டுவதிலும், விவசாயி கள் முயற்சி செய்தால் அவர்கள் நிரந்தரமாகத் தடையாக இருக்கிறார்கள். மராமத்து செய்யக் கூட தடை செய்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை அரசாங்கம் கவனிப்பதோடு, பவர் டிரில்ஸ் வேண்டுமென்று தஞ்சை ஜில்லாவிலே சொல்லியிருந்தும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நமது சட்டப் பேரவை விதிகளில், விதி 31 (10)-இல் 'Question must not be of excessive length' என்று இருப்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர் கேட்ட வரையிலுள்ள துணை வினாவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM :** Sir, on a point of order, I have heard wit. patience the Rule referred to by the Hon. Speaker, viz., that the question must not be of excessive length. But if it is one sentence containing 128 words, as stated by Mr. Winston Churchill on the floor of the Parliament, it can be allowed.

**MR. SPEAKER :** The point of order of the hon. Member is hypothetical . . .

**THIRU K. VINAYAKAM :** It is correct.

**MR. SPEAKER :** The hon. Member himself says, 'it is hypothetical.' So, I need not give any decision.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சர்க்கார் தனிப்பட்ட விவசாயி களுக்கு உதவி செய்கிற முறையில் தான் கடனாகவும் மானியமாகவும் வழங்கி வடி முனைக் குழாய்க் கிணறுகளை இறக்க வசதி செய்திருக்கிறது. மடாதிபதிகள் தடையாக இருக்கிறார்கள் என்றால், அதைச் சென்ற அரசு கவனித்திருக்க வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தும் எப்படி 6,000 ஏக்கர்கள் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மேற்கொண்டு கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல் கொடுத்தால் இதிலே என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவர் அவர்களே, வடி முனைக் குழாய்க் கிணறுத் திட்டம் மதுரை மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டதாகத் தெரியவில்லையே, அதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அந்தப் பகுதியிலே வாய்ப்பு இல்லாத காரணத்தினுல்தான். எங்கே நீரோட்டம் இருக்கிறதோ அந்த ஆற்றுப் பகுதியில், பாலாறு பேஸின் ரூல்ஸ் போன்ற விதிகள் குறுக் கிடாத பகுதியில் வடி முனைக் கிணறு இறக்கத் திட்டமிட்டிருக்கிறது அர சாங்கம். மதுரை பகுதியில் அத்தகைய வாய்ப்பு இருக்குமானுல், கனம் அங்கத்தினர் அவர்களை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். இப் போது இருக்கிற திட்டப் பிரகாரம் மதுரையில் விஸ்தரிக்க இடமில்லை.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, நாகை தொகுதியில் பவர் டிரில்ஸ் அதிகமாகக் கொடுத்தால்தான் தண்ணீர் வரும் என்ற நிலைமை இருப்பதால், அதை கவனிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அது பற்றி கவனிக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்** : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே ஆற்றிலே தண்ணீர் வருவதற்கு முன்பே நாற்று விட்டுத் தயாராக இருக்க வேண்டும் என்று ஆவலோடு வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சார வசதி கோரப்பட்டு, எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன்களால் கடன் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டது. அது கொடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இது மின்சார இலாகா பற்றிய கேள்வியாக இருப்பதால், தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு கரு. சிமைச்சாமி** : தலைவர் அவர்களே, எங்கே தண்ணீர் வசதி அதிகமாக இருக்கிறதோ அங்கேதான் இப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் அமலாக்கப்படுகிறது. ராமநாதபுரம் ஜில்லா வறண்ட பகுதி. இருந் தாலும் அங்கே வைகை நதி ஓடுகிறது. ஆற்றுப் படுகையாக இருந்தால் நிறைவேற்றப்படும் என்று சொன்ஞர்கள். ராமநாதபுரம் பகுதியில் வடி முனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்ட ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : ராமநாதபுரம் மாவட்டம் வறண்ட பிரதேசம் தான் என்பது தெரியும். இப்போது இருக்கிற திட்டப் பிரகாரம் பதில் சொன்னேன். வாய்ப்பு இருக்குமானுல், கனம் உறுப்பினர் எழுதி அனுப்பிஞல் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்பிப் பரிசீலனை செய்து, அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ருல் பார்ட் 2 ஸ்கீமில் அடுத்த ஆண்டு சேர்க்கப்படும்.

## கனிவள ஆராய்ச்சி

*103 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, திருப்பத்தூர் அருகில், "வெர்மிகுலேட்" என்ற ஒரு விதமான அப்ரகப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா ?

(இ) இவை ஒலிக்கட்டுப்பாடு அமைப்புகளுக்கும், மின்விசை அமைப்பு களுக்குமான பாதுகாப்புக்கும் பயன்படுவது உண்மையா ?

(உ) இது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) & (இ) : ஆம்.

(உ) இப்படிவங்களைச் சிக்கன முறையில் சுமார் 4 லட்சம் ரூபாய் செலவில் வெட்டியெடுக்கும் திட்டம் ஒன்றைத் தொழில்-வாணிகத் துறை நெறியாளர் அனுப்பியுள்ளார். இது குறித்த செயற்குறிப்புகளை அர சாங்கம் ஆலோசித்து வருகிறது.



**திரு. வி. கே. கோதண்டராமன்** : இதுபோன்ற கனிவளம் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே, இப்பேற்பட்ட முக்கியமான கனி வளத்தை உபயோகப்படுத்தி, உடனடியாக நமது சர்க்கார் ஒரு தொழிற் சாலையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யமுடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : "வெர்மிகுலேட்" என்ற இந்தக் கனி மிக முக்கியமான பணிகளுக்குப் பயன்படுகிறது. வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்கு அருகில் சேவத்தூர், இலவம்பட்டி போன்ற இடங்களில் அது கிடைக்கிறது. 36 ஏக்கர் நிலங்களிலே அது இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 30 அடிக்கு கீழே 1,90,000 டன் இருக்கக் கூடும் என்று யூகிக்கப்படுகிறது. இதனுடைய முக்கியமான சிறப்பு என்ன வென்ருல், இது சூடு, மின்சாரம், ஓசை இவற்றை தடுத்து நிறுத்தும் சக்தி படைத்த ஒரு உலோகம். உலகத்திலேயே இந்தக் கனிவளம் ஒரு சில இடங்களில் தான் கிடைக்கப்பெறுகிறது. உலகத்திலேயே தென் ஆப்பிரிக்கா தான் இதை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. இந்த விலை உயர்ந்த பொருள் ஜப்பான் நாடு, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆகிய நாடுகளுக்கு தேவைப்படும். அந்த நாடுகளுக்கு இதை ஏற்றுமதி செய்யக் கூடும் என்று கருதப்படுகிற காரணத்திஞல், இதற்கான ஒரு செயற் குறிப்பு தொழில் வாணிபத் துறை இயக்குனரால் தரப்பட்டிருக்கிறது. எனவே, ரூ. 4 லட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை சேவத்தூரில் அமைக்கலாம் என்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி செயற் குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

**Thiru K. Vinayakam**: Does this vein of vermiculite stop with the 36 acres of land that has been prospected so far or is there any prospect of this vein going on to South Arcot also ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்பொழுது 36 ஏக்கர் நிலத்தில் ஆராயப்பட்ட வகையிலே 1,90,000 டன் இருக்கும் என்று கருதப்படுகிறது. அந்த அளவுக்கு கிடைக்கிறதா, மேற்கொண்டு போகிறதா என்ற விவரம் இல்லை. இனி செய்யப்படுகின்ற ஆராய்ச்சியின் பயனுக அந்த விவரம் கிடைக்கக்கூடும்.

**திரு. எம். சுரேந்திரன்** : இதுபோன்ற ஒரு மாதிரியான கற்கள் சேலம் ஜில்லா முழுவதும் பல இடங்களில் கிடைப்பதாக தகவல் இருப் பதை இந்த அரசாங்கம் அறியுமா ? அதை ஆராய்ந்து தோண்டி எடுப் பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : சேலம் மாவட்டத்தில் எந்தப் பகுதியில் இப்படிப்பட்ட கற்கள் கிடைக்கின்றன என்பது தெரிய வில்லை. அப்படி ஏதாவது அபூர்வமான கற்கள் கிடைக்குமானுல், அதை புவியியல் ஆராய்ச்சித் துறையினருக்கு அனுப்பிவைத்தால், அவர்கள் அதை ஆராய்ந்து மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற அவ சியம் ஏற்பட்டால், அந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்வார்கள்.

**Dr. H. V. Hande**: Sir, just now the Minister said that the whole project will cost Rs. 4 lakhs. Will the Minister tell us what exactly is the stage in which the matter is ? When such a small amount is required to start the industry, why does not the Ministry come forward with concrete proposals to start the industry ? Will he tell us whether any foreign exchange is involved and whether any private agencies have applied for permit to start the industry ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ரூ. 4 லட்சம் செலவில் வெட்டி எடுக்கும் திட்டம் ஒன்றை தொழில்-வாணிபத் துறைநெறியாளர் தந்திருக்கிருர்கள். இதை வெட்டி எடுப்பதற்கு ரூ. 4 லட்சம் போதும் என்று கருதப்படுகிறது.

**திரு. க. மு. ராஜகோபால்** : காஞ்சிபுரத்தில் கட்டவாக்கம் கிராமத்தில் நிலக்கரி சுரங்கம் தோண்டி எடுக்கப்படுகிறதா ? அதற்குச் செலவான தொகை எவ்வளவு ? நிலக்கரி இருக்கிறதா ? இல்லையா என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இது "வெர்மிகுலேட்" பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கனிவளத்தை எந்தக் காரணத்தை ஒட்டியும் வெளி நாடுகளுக்கு அனுப்பாமல் உறுதியாக நின்று நமது நாட்டிலேயே இது சம்பந்தப்பட்ட தொழிற்சாலையை கண்டிப்பாக ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை சர்க்கார் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ரூ. 4 லட்சம் செலவில் வெட்டி எடுப்பதற்கு முயற்சி நடைபெற இருக்கிறது. இந்தக் கனிப் பொருளை தனியாக பக்குவப்படுத்தி, எந்தெந்த வகையிலே இதைப் பயன் படுத்தக் கூடும் என்பதை ஆராய்வதற்கான வாய்ப்பு இப்பொழுது இல்லை. மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். நம்மிடம் கிடைக்கும் இந்தக் கனிப்பொருளை வைத்துக்கொண்டு அதைப் பயன்படுத்துவதற்கான ஒரு தொழிற்சாலையை இங்கேயே ஆரம்பிப்பதென்றால் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவாகலாம். ஆகவே, இந்த தொழிற்சாலையை வைக்க வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவில்லை. இந்தப் பொருளை ஏற்கனவே பயன்படுத்திக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகள் அயல் நாடுகளில் இருப்பதினால் முதலில் அங்கே அனுப்பலாம். இது சூடு, மின்சாரம், ஓசை இவற்றைத் தடுத்து நிறுத்தும் சக்தி படைத்திருப்பதனால், பல்வேறு பொருள்களோடு இந்தப் பொருளையும் சேர்த்து உற்பத்திப் பொருள்கள் ஆக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த ஒரு பொருளை மட்டும் வைத்துக்கொண்டு வேறு உற்பத்தி பொருளை உண்டாக்க முடியாது. அப்படி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை இங்கேயே ஏற்படக்கூடும் என்ற நிலைமை வந்தால், அப்பொழுது இந்தப் பொருள் நமக்கு தேவைப்படுமானால், அப்பொழுது வேண்டுமானால் ஏற்றுமதியை நிறுத்திவிட்டு இங்கேயே அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திரு. மு. ச. சிவசாமி** : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு திருப்பத்தூருக்கு அருகில் இருக்கக் கூடிய இந்த "வெர்மிகு லேட்" உலோகத்தை தோண்டி எடுக்க அனுமதி அதாவது "மைனிங் லைசென்ஸ்" கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்பொழுது அந்தக் கனி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை வெட்டி எடுப்பதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அதை எந்த அளவுக்கு வெட்டுகிறது, எங்கே அனுப்புவது, யாரைக் கொண்டு அனுப்புவது என்ற பிரச்னைகளெல்லாம் இப்பொழுது எழவில்லை. குழந்தை பிறந்ததற்குப் பிறகுதான் பெயர் வைக்கவேண்டும்.

**திரு. எம். பூபதி** : இம்மாதிரி கனிப்பொருள்களை பஞ்சாலை முதலாளிகள் மூலதனம் தாங்களே இட்டு அவைகளின் மூலம் அதிக லாபம் சம்பாதித்துக் கொண்டு பஞ்சாலைகளில் நெருக்கடி உண்டாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற தகவல் சர்க்காருக்கு தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்ட தகவல் எதுவும் வரவில்லை.

**THIRU K. VINAYAKAM** : In view of the quality of this vermiculite mica which is not available anywhere in the world except South Africa, in view of the large quantity of the deposit available and in view of the anxiety expressed on the floor of this House, will the Minister assure this House that the State Government will take up this issue with the Central Government and, even if no aid is forthcoming from the Centre, the State Government will take it up and run this industry as its own concern, if other conditions are found satisfactory ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : "வெர்மிகுலேட்" தொழிற்சாலையை உருவாக்கி அதனால் போதுமான அளவுக்கு லாபம் கிடைக்கக் கூடிய தன்மை இருக்குமானால் அரசாங்கமே அதை ஏற்று நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால் அதைப் பற்றி கவனிக்கப்படும். அதனால் அதிக லாபம் வராது என்கின்ற நிலையில்தான் மற்றவர்களிடம் ஒப்படைக்கின்ற நிலைமை வருமே தவிர, அது இல்லாதவரை, எளிதாக லாபம் தரக்கூடியதாக இருக்குமானால், அதை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முயலும்.

**THIRU K. S. KOTHANDARAMIAH** : Sir, if we read the District Gazetteers and District Manuals written by the European Officers during the British administration, we find that may minerals are available in different parts of this State. On this account will the Government arrange for a geological survey of the entire State ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மத்திய அரசாங்கத்தினுடைய புவியியல் துறையினரும், மாநில அரசாங்கத்தினுடைய புவியியல் துறையினரும் பல்வேறு வகையான திட்டங்களை ஆங்காங்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பொழுது கிடைக்கின்ற கனிப்பொருள்களுடைய நிலைமைகள், இனி கிடைக்கக்கூடியவை என்ன என்பதைப் பற்றியும் ஆராய்ந்து, அதன் மூலம் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் யாவை, இனி என்னென்ன தொழிற்சாலைகள் ஏற்படுத்தக்கூடும் என்பதைப்பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பிறகு தான் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இருக்கிற நிலைமைகளை வெளியாக்கலாம்.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர்** : நீலகிரி மாவட்டத்தில் சில இடங்களில் தங்கம் இருப்பதாக அறிகிறோம். அதை வெட்டி எடுக்கக் கூடிய வகையில் சர்க்காருக்கு எதேனும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இது "வெர்மிகுலேட்" பற்றிய கேள்வி. நீலகிரியில் தங்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அது பற்றி தனிக்கேள்வி கேட்டால், விவரம் கொடுக்கக் கூடும்.

*104 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— மு. ப. 9-30

(அ) தென்னார்க்காடு ஜில்லா, மாமண்டூர் அருகில் தாமிரம், காரீயம், துத்தநாக படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா ?

(இ) இவைகளை எடுப்பதற்காக சர்க்கார், மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(உ) இவ்வேலை தனியார் துறையில் எவருக்கேனும் விடப்பட்டுள்ளதா?

(எ) இதுவரை பரீட்சார்த்தமாக ஆராய்ந்து பார்க்கப்பட்டதில் கண்டு பிடிக்கப்பட்ட விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) and (இ) ஆம். அப்பகுதியில் புவியியல்-இரசாயன ஆராய்ச்சியை மும்முரமாகப் மேற்கொள்ளவும், குழிகள் தோண்டவும், கனிப்பொருள்களைப்

பகுத்தாராய்ந்து தரங்களை மதிப்பிடுவதற்கென அவற்றின் மாதிரிகளைச் சேகரிக்க சுரங்க வாயிற்குழி ஒன்றை அமைக்கவும், தயாரித்துள்ள திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(உ) இல்லை.

(எ) மேற்கொள்ளப்பட்ட சர்வே மூலம் சுமார் 10 இலட்சம் டன் கனிப்பொருள் கிடைக்கக் கூடுமென்றும், அதில் தாமிரம், ஈயம், துத்தநாகம் ஆகியவை முறையே சராசரி 0·63, 2·00, 2·73 சதவீதம் இருக்கக் கூடும் என்றும் தெரிகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், இது போன்ற கனி வளங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, இன்னும் தமிழகத்தில் பல இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றைத் தனியார் துறையில் விடவில்லை என்றாலும், பொதுத் துறையில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மாமண்டூர் அருகில் தாமிர, துத்தநாக, காரியப் படிவங்கள் இருப்பதாகத் தெரிந்து அவற்றைத் தோண்டி எடுக்க அரசாங்கம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு இதிலிருந்து வரும் பொருள்கள் எந்த அளவிற்குக் கிடைக்கிறது, எந்த அளவிற்கு பயன் படுத்தப் படுகிறது என்று வரும்போது தான் கனம அங்கத்தினர் கூறும் கருத்துக்களை ஆராயப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி** : தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் உள்ள கிராமத்தில் காரீயம் இருப்பதாகத் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இந்தக் கேள்வி மாமண்டூர் பற்றியது. செஞ்சி பற்றி தனிக் கேள்வி போட்டால், சொல்லலாம்.

**Dr. H. V. HANDE** : Sir, when do the Government propose to start the work of excavating minerals and what is the exact amount of expenditure that is envisaged by this Government ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று குறிப்பு இல்லை. சர்வேயில் 10 லட்சம் டன் கனிப்பொருள் கிடைக்கலாம் என்று தெரிகிறது. அது சம்பந்தமாக கனிப் பொருள்களை எடுத்து ஆராய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Mineral Survey*

* 105 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start or carry on geological survey of Tiruttani taluk, Chingleput district, with a view to find out the mineral potentialities of the place ?

**மாண்புமிகு திரு: இரா. நெடுஞ்செழியன்** : ஆம். 1967–68-ம் ஆண்டில் திருத்தணி தாலுகாவில் முறையான கனிவள ஆராய்ச்சியை மேற்கொள்ள மாநில புவியியல் ஆராய்ச்சிக் கிளை கருதியுள்ளது.

**திரு. கே. விநாயகம்** : தலைவர் அவர்களே, எப்படி இப்பொழுது நெய்வேலியில் அதிகமான பழுப்பு நிலக்கரி கிடைக்கிறதோ, அதைப்பற்றி 50, 60 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளலார் தன் பாட்டுகளில் இதுபற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்களோ, அதே போல திருத்தணி தல புராணத்திலும் கச்சியப்ப புலவர் தன் பாட்டுகளில் தெய்வயானை திருக்கல்யாணத்திற்கு பொன்னும், வெள்ளியும், நவரத்தினங்களும் கொண்டு வந்ததாகவும், அவற்றை மலைக்கு அடியில் புதைத்து வைத்துவிட்டதாகவும்



சொல்லப் பட்டிருக்கிறது. அதைக் குறித்து, ஜியலாஜிகல் ஆராய்ச்சியாளர்கள் கண்ணோட்டம் வைத்து, பொன், வெள்ளி, நவரத்தினங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் உத்தரவு இடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, திருத்தணி தலபுராணத்தில் பாடப் பெற்று இருக்கிற நிலைமை பற்றி உறுப்பினர் குறிப்பிட்டார்கள். பொன்மலை என்பதாலேயே, திருச்சியில் பொன் இருக்கிறது என்றோ, பாலாற்றில் பால் இருக்கிறது என்றோ, (சிரிப்பு) தேன் அருவியில் தேன் கிடைக்கும் என்றோ கருதுவது சரியில்லை. திருத்தணியில் வளங்கள் இல்லாததால் தான் அது பிற்போக்கான நிலையில் இருக்கிறது. வளங்கள் இருந்திருந்தால், நீண்டகாலமாகவே பயன் படுத்தியிருப்பார்கள். ஆனாலும், வளங்களும் இல்லாமல் இல்லை. "Feldspar", " quartz " என்கின்ற பொருள்கள் பத்மபுரம் என்கிற இடத்தில் கிடைக்கின்றன என்று தெரிகிறது. அதையொட்டி 1967–68-லிருந்து புவியியல் கிளை ஆராய்ச்சி செய்கிறார்கள். வேறு ஏதாவது கனிப்பொருள் கிடைக்கிறது என்று ஆராய்ச்சியின் பேரில் முடிவுக்கு வந்த பிறகு குறிப்பிட்டுச் சொல்லலாம்.

### *Industrial Potentialities in Tiruttani taluk*

* 106 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to explore the industrial potentialities of Tiruttani taluk, Chingleput district, with a view to start small scale and cottage industries ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தொழில் நிறுவுவதற்காக இம்மாநிலத்தில் எல்லா வட்டாரங்களிலும் உள்ள வாய்ப்புக்கள் குறித்து மாநிலத் தொழில்-வாணிகத் துறை நெறியாளர் அலுவலகம் இடைவிடாமல் ஆராய்ந்து வருகிறது. அரசு புதிய புதிய தொழில் பிரிவுகளைத் தொடங்கும்போதெல்லாம், அவற்றிற்கு இயைபுடைய கூறுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, அவற்றை நிறுவுவதற்கான இடங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இது குறித்து பயனுள்ள தகவல் அல்லது செயல் முறைக்கேற்ற கருத்துக்கள் எவற்றையேனும் வழங்குவார்களேயானால் அவை முறைப்படி ஆலோசிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம்** : சார், இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்படுகின்ற தகவலை வைத்துக்கொண்டு, அந்தப் பக்கத்திலே எந்தவிதமான தொழில்கள் புதிதாக ஏற்படுத்த முடியும் என்கிற தகவல் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கிறது. தொழில் ஆரம்பிப்பதாக இருந்தால், அது தனியார் துறையிலா அல்லது பொதுத் துறையிலா ஆரம்பிக்கப்படும் ? எவ்வளவு முதலீடு போடவேண்டும் ? முதல் போட்டால், லாபம் வரும் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ஏற்கனவேயே, சிறு சிறு தொழில்கள் ஆரம்பிக்க பல முறைகளில், பல கம்பெனிகளுக்கு கடன் உதவி செய்யப்பட்டிருக்கிறது. தச்சுப்பட்டறை, முதலியவற்றிற்கு என்பவை பற்றி இங்கே பல விளக்கங்கள் இருக்கின்றன. அவற்றைப் படிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். பொன்பாடு என்கிற இடத்தில் கெமிகல் இஞ்சினீயரிங் கார்பரேஷன் 1961-லும், திருத்தணி கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் என்று 1963-லும் நிறுவப் பட்டிருக்கின்றன. மேலும், 1965-ல், தி லக்ஷ்மி பௌண்ட்ரி ஒர்க்ஸ் என்பதும், 1967-ல் தி பாபா ஏஜன்ஸீஸ் (பார் லேட் இஞ்சினீயரிங்) என்று பூனிமாங்காட்டிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு தனியார் துறையில் ஒரு ஸ்பின்னிங் மில்லும், சரஸ்வதி காட்டன் மில், என்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சிறு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க, இண்டஸ்ட்ரீயல் சர்வீஸ் இன்ஸ்டிட்யூட் ஆவன செய்து வருகிறது. திருத்தணியைப் பொருத்தவரை என்னென்ன பொருள்கள் கிடைக்கும் என்றும்

என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாம் என்றும் குறிப்பு இந்த சர்வேயில் கிடைக்கவில்லை. 1967–68-ம் ஆண்டில் புவியியல் ஆராய்ச்சித் துறை செய்யும் ஆராய்ச்சியை வைத்துக்கொண்டு அரசாங்கம் கவனம் செலுத்தும். லாபகரமாக இருந்தால், தனியார் துறையில் வைக்கலாமா, அல்லது பொதுத் துறையில் வைக்கலாமா என்று அப்பொழுது யோசிக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், நம் ராச்சியத்தைப் பொருத்தவரை சிறு தொழில்கள் பரவலாக அமைக்க வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்று நம்பலாம். பல்வேறு பகுதிகளிலும், ஆங்காங்கே கிடைக்கும் பொருள்களைக் கொண்டு, அங்குள்ளவர்கள் தொழில்களில் ஈடுபடும் வகையில் அரசாங்கம் ஊக்கம் அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே கனம் உறுப்பினர் கருத்தின் அடிப்படையில் எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன விதமான மூலப் பொருள்கள் கிடைக்கின்றன என்று கண்டு ஆராய்ந்து அதற்குத்தக்க தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பதை, தொழில் துறையினர் பொதுமக்களுக்கு அறிவித்தால் பல தொழில்களையும் ஆரம்பிக்க உதவியாக இருக்கும். அந்த அடிப்படையில்தான் பல தொழில்களையும் ஆரம்பிக்க, மாவட்டங்களில் கண்காட்சிகளை தொழில் துறையினர் ஏற்பாடு செய்கிறார்கள். ஏற்கனவே இது குறித்து கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. என்னென்ன தொழிற்சாலைகள் எங்கெங்கே ஆரம்பிக்கலாம் என்று குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன. எவ்வளவு தொகைகளைக் கொண்டு ஆரம்பிக்கலாம், 5,000 அல்லது 10,000 அல்லது ஒரு லட்சம் என்று மூலதனம் போட்டு என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம், என்னென்ன பொருள்கள் கிடைக்கின்றன, எப்படிப்பட்ட தொழில்களுக்கு, என்றெல்லாம் அறிவிக்கப்பட்டால் தொழிற்சாலைகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். அந்த முறையில் அது பற்றி ஆராய்ச்சியும் நடத்தி வருகிறார்கள். புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தொழில்கள் பற்றிய விளம்பரங்களை கண்காட்சிகள் மூலமும், மற்ற வகையிலும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டால், தொழில்கள் ஆரம்பிக்க மக்கள் முன்வரக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. விநயகம் :** சார், திருத்தணி பகுதியிலே செமண்ட் தொழிற்சாலை வைக்க கச்சாப் பொருள் இருக்கிறது என்று புவியியல் ஆராய்ச்சி செய்தவர்கள் ஒரு அறிக்கையை விட்டார்கள். போதிய அளவு அந்தப் பொருள் இல்லையென்றாலும், வேண்டிய பொருள் இருக்கிறதா என்று கொஞ்சம் தீவிர ஆராய்ச்சி செய்து பார்த்து செய்யலாம் என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா ? அங்கே நல்ல பொம்மைகள், விக்ரகங்கள் செய்யக்கூடிய கற்கள் (ஸ்டோன்ஸ்) கிடைப்பதை வைத்துக்கொண்டு, எப்படி மகாபலிபுரத்தில் சிற்பங்கள் செய்கிறார்களோ அந்த வகையில் அங்கேயும் பொம்மைகள் செய்யலாம் என்று பிரசித்தி பெற்ற சிற்பிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் துறையிலும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து ஒரு நல்ல முடிவிற்கு அரசாங்கம் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்துக்களின் அடிப்படையில் கவனம் செலுத்த அவர்களுக்குக் கிடைத்திருக்கும் முழு விவரங்களையும் குறிப்புகளையும் எழுதியனுப்பினால், அதை ஆராய்ச்சித்துறைக்கு அனுப்பி, அவற்றை ஆராயச் செய்து, ஒரு பொம்மைத் தொழிற்சாலையோ, செமண்ட் தொழிற்சாலையோ அமைக்க வசதி ஏற்பட்டால் அதுபற்றி யோசிக்கலாம்.

### தேசிய உணவு பட்ஜெட்

*107 வினா.—திரு. சோ. அழகர்சாமி } திரு. கே. விநயகம் } மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "தேசிய உணவு பட்ஜெட்" பற்றிய அறிக்கை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளதா ?



(இ) ஆம் எனில், அந்த அறிக்கையின் நகல் ஒன்று சபை முன்பு வைக்கப்படுமா ?

(ஈ) அந்த அறிக்கையை பரிசீலனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை. தேசிய உணவு பட்ஜெட் தயாரிப்பது பற்றி இந்திய அரசு இன்னும் பரிசீலனை செய்து வருகிறது.

(இ) இக் கேள்வி எழவில்லை.

(ஈ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. கே. விநயகம் :** இந்தத் தேசிய உணவு பட்ஜெட்டைத் தயார் செய்து, அதை நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பி, நம்முடைய யோசனைகளைக் கேட்டுப் பிறகு முடிவெடுப்பதாகக் குறிப்பு படித்தேன். அப்படியிருந்தால் அதனுடைய முக்கிய அம்சங்கள் (salient features) என்னவென்று அமைச்சரவர்கள் சொல்ல முடியுமா ?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** The Foodgrains Policy Committee. 1966, appointed by the Government of India went into the question and made certain recommendations. One of the recommendations is that a National Food Budget should be formulated with a view to make an equitable distribution of the available food supplies. I shall place before this House the salient features of the National Food Budget.

In the planning and managing of available food supplies is implicit the idea of a National Food Budget. In formulating the Budget, a preliminary task will be to assess the surpluses and deficits of each State on as scientific and realistic a basis as possible. The principle of sharing the available surpluses on a national basis has to be accepted wholeheartedly by all and especially by the States surplus in foodgrains. The deficit States too have an obligation, that of making the most of their own resources before making demand on the Central Pool of food resources.

For p eparing the National Food Budget, the important factors that should be kept in view are 'normal' consumption patterns in different States, t aditional inter-State inflows and outflows, prevailing prices of foodgrains and the prospect of foodgrains production in different States for the year to which the Budget relates. Consumption patterns and inter-State trade in foodgrains during the period 1961–63 can be taken as a working basis for the preparation of the Budget. Though it will not be possible to finalise the Budget right at the commencement of the procurement season, it should be possible to draw up a tentative Budget in the light of the available information regarding crop prospects at the beginning of the season. This can then be reviewed every month in the light of the new information regarding crop position. It would be an advantage if certain basic quotas of procurement for movement outside the State are fixed for the surplus States, say, at 75 per cent of the average net outflow during the period 1961 to 1963.

The National Food Budget will have to be prepared for all foodgrains for which there are restrictions on inter-State movement.

It is necessary to devise a machinery which will ensure that all concerned will participate to the fullest extent in the preparation and implementation of the National Food Budget.

These are the salient features of the Food Budget. This subject was discussed at the Conference of the Chief Ministers held at New Delhi on 8th and 9th April 1967. No tentative decision was taken and finalisation of the Food Budget has been deferred.

**திரு கரு. சீமைச்சாமி :** இந்தத் தேசிய உணவு பட்ஜெட் அம்சங்கள் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். பற்றாக் குறை மாநிலங்களாயிருந்தால் அவைகளுக்கு மற்ற மாநிலங்கள் அதிகமாய் வைத்திருக்கிற உணவுப் பண்டங்களைக் கொடுப்பது சம்பந்தமாகச் சொன்னார்கள். அது போல இப்பொழுது கேரளாவிலே தண்ணீர் கடலிலே வீணாகப் போகிறது. அதைத் திருப்பித் தமிழகத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைப் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கேரளாவின் தண்ணீர்பற்றி உதகமண்டலத்தில் நடந்த தென் மண்டலக் கவுன்ஸிலில், பொதுவாகத் தென் மாநிலங்கள் பற்றி, தண்ணீர் அளவு, அவைகளை எப்படி எங்கு திருப்பி விடலாம் என்பது பற்றிய விவாதம் மத்திய உள்துறை அமைச்சரவர்களின் தலைமையில் நடைபெற்றது. இன்னும் 6 மாதங்களுக்குள் கேரள மாநிலம் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும்; தமிழ்நாடு மாநிலம் ஒரு அறிக்கை கொடுக்கவேண்டும்; கர்நாடக மாநிலம் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும். நம்முடைய தேவைகளுக்கு, எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியுமென்று அறிக்கை கொடுத்து, மெமோரண்டங்கள் கொடுத்து, மெமோரண்டங்களின் மேல் இந்தத் துறை மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களை மத்தியஸ்தமாகக் கொண்டு அதன் மீது ஆறு மாதங்களுக்குப் பிறகு நமக்குக் கேரளாவிலிருந்து தண்ணீர் வருகிற பிரச்னை பற்றிப் பேசுவது என்று தென் மண்டல கவுன்ஸில் முடிவெடுத்திருக்கிறது.

**THIRU K. VINAYAKAM :** Whereas the object of this kind of the proposed National Food Budget is to assure and ensure equitable distribution among the deficit as well as surplus States in this country, was the State Government consulted about our position by the Centre not in a conference but in writing and what is the view expressed by our State—the State is deficit or surplus or in a position just to manage its own requirements—and what is the reaction of the Union Food Minister ?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** The Union Government consulted us. We have estimated the production of all cereals (not only rice) during the current year at 53·02 lakh tonnes and the consumption of cereals at 51·65 lakh tonnes. The reaction of the Central Government is that they have estimated that if everything goes on well, we will have a surplus of cereals of 131,000 tonnes and that we should make available this quantity for supply to Kerala. But this Government have taken the stand that while the production figures are more or less correct, the figures of consumption are under-pitched and that there will be no surplus of cereals available in this State for supply to any other State. This is the view expressed at the Conference of Chief Ministers by our Hon. Chief Minister.



**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, தேசிய உணவு பட்ஜெட்டை ஏற்பது, எதிர்காலத்தில் மாநிலங்களுக்குள்ள உணவு சம்பந்தப்பட்ட அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும், நிர்ப்பந்திக்கவும் மத்திய அரசாங்கம் வழி உண்டாக்கக்கூடிய நிலைமையை எதிர்காலத்தில் உருவாக்காதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படிப்பட்ட நிலைமைகளை, இந்த மாநிலத்தினுடைய நலன்களுக்கும், அதனுடைய தேவைகளுக்கும் விரோதமாக ஒத்துக்கொள்ள ஒரு போதும் இந்த அரசாங்கம் சம்மதிக்காது.

**THIRU T. MARTIN :** Will the Hon. Minister be pleased to tell the House whether in the estimate made by the Government, Tirunelveli district has been taken as a deficit dist ict or as a surplus district in regard to production of foodgrains ?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** The Hon. Member must have known that Tirunelveli is already a deficit district.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த திட்டத்தையே ஒரு சில ராஜ்யங்கள் ஏற்றுக்கொள்ளாத நிலைமையின் காரணமாகத்தான் இவ்வளவு விரைவில் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்பது உண்மையா ? அப்படியானால், அது சம்பந்தமாக எந்தெந்த ராஜ்யங்கள் என்னென்ன நிலைமையை எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக உணவு நெருக்கடி சிக்கலான பிரச்னை. அதுவும் பற்றாக்குறையும், உபரியும் ஆக இரண்டும் கலந்து இப்படி விநியோகம் செய்யும் ஏற்பாடு இன்று பொதுவாக மத்திய அரசுக்கும், எல்லா மாநில அரசுகளுக்கும் ஒரு பெரிய தலைவலி என்று கூட சொல்லலாம். அதிலுள்ள சிக்கலால் தாமதமே தவிர, சம்மதம் தெரிவிக்கவில்லை அல்லது விரோதம் என்பதால் அல்ல.

**THIRU K. VINAYAKAM :** Arising out of the answer given by the Hon. Minister regarding production of cereals in our State, is the Government aware of the fact that Bengalgram is a rare commodity which is not freely available in our State and has to be imported from the Punjab and other States and what steps the Government have taken to press for the inclusion in the National Food Budget the import of cereals to our State ?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN :** This Government has already made representations. The latest representation has been made to the Hon. Minister for Food in the Union Government yesterday at the Madras aerodrome. The point has been pressed that our demand for pulses comes to nearly 150,000 tonnes whereas our production is only 1,000 tonnes. That is the crux of the problem. So, the Government of India used to allot some pulses from Haryana, the Punjab, Uttar Pradesh and other States. This time they have banned the export of pulses. So, a contingency has arisen. This Government has been making representations, and the last representation was made yesterday by me along with my Hon. Colleague the Minister for Agriculture. They have already allotted about 8,000 tonnes of pulses through the Food Corporation. We hope the position will improve.

[1967 ஜூன் 29

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பருப்பு வாங்கி, அதெல்லாம் விற்க முடியாமல் கிடந்ததாக அறிகிறேன். அப்படியில்லாமல், இப்பொழுது நஷ்டம் ஏற்படாத வகையில், நல்ல முறையில் பருப்பு வாங்கி விற்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே கேட்ட கேள்விக் கான விடையிலேயே இதற்குரிய விடையும் அடங்கியிருக்கிறது. பருப்பு வாங்குகிற விவகாரத்தில் முன்பு இருந்த மாநில அரசாங்கங்களால் சில சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, ஒரு கோடி ரூபாய்க்குப் பருப்பு வாங்கினார்கள். ரூ. 100 முதல் ரூ. 110 வரையில் அதற்கு விலை கொடுத்து வாங்கினார்கள். அதே நேரத்தில் வெளியில் ரூ. 80-க்கு விற்றது. முன்பிருந்த அரசாங்கம் பருப்பு வாங்கி வைத்திருந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில், பல கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்த பருப்பு உளுத்துப் போயிருந்த நிலையை அறிந்து, இப்பொழுது உணவுப் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் நேரில் சென்று பார்த்து, சில உத்தரவுகளைப் பிறப்பித்ததன் விளைவாக, 22 லட்ச ரூபாய் நஷ்டம் ஆகக்கூடிய நிலைமை இருந்ததை 12 லட்சம் ரூபாய்க்குக் குறைக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்து, இதிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான ஓர் அறிக்கையை நான் இந்த மன்றத்திற்கு இன்னும் சில நாட்களில் சமர்ப்பிப்பதாக இருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் கேள்வியொன்றுக் குப் பதிலளிக்கும் போது, " உளுத்துப் போன பருப்பு " என்று சொன் ஞர்கள். உளுத்துப் போன பருப்பை மீண்டும் விற்பதற்கு இந்த அரசு ஏன் ஏற்பாடு செய்தார்கள் ? அப்படி ஏற்பாடு செய்ததனல், அதிகமான லாபம் வியாபாரிகள் அடைந்தார்கள் என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வியாபாரிகள் அதிக லாபம் அடைந்தார்களா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் நான் விவரமான அறிக்கை வைக்கும்போது கனம் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளலாம். இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் இருந்த நிலை என்னவென்றல், நம்முடைய அரசாங்க கிடங்குகளில் 110 ரூபாய் வீதம் பருப்பு வாங்கி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பருப்பின் விலை வெளி மார்க்கெட்டில் ரூ. 80, ரூ. 70 என்ற அளவிற்கு இருந்தது. கோயமுத்தூரில் இருக்கும் கிடங்கிலும், மதுரை கிடங்கிலும், தஞ்சை கிடங்கிலும் நான் நேரில் பார்வையிட்டபோது, 1965-ம் வருஷத்தில் வாங்கி வைக்கப்பட்டிருந்த பருப்பு வகைகள், " டீ-கம்போஸ் " ஆகிற நிலையில், இன்னும் சில மாதங்களில் கொடுக்கப்படாவிட்டால் கெட்டுப் போகக் கூடிய நிலையில், நஷ்டக் கணக்கு ஏறக்கூடிய நிலையில் இருந்தது. உடனே கணக்கெடுத்து, அதுபற்றி உத்திரவிடப்பட்டது. உடனே, டெண்டர் மூலமாகவும் மற்றவைகள் மூலமாகவும் அவைகளை " டிஸ்போஸ் " செய்வ தற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நேரத்தில், வெளி மாநிலங்கள் திடீர் என்று உத்தரவு பிறப்பித்த ஒரு நல்ல காரியமும் ஏற்பட்டது. அதற்கு அடுத்தபடியாக, அங்கேயும் உற்பத்தி குறைந்து விட்டது. உடனே மளமள என்று விலை ஏற ஆரம்பித்தது. நாம் முதலில் ரூ. 110 என்று நிர்ணயித்தது, ரூ. 125 வரையிலும் விலை ஏறியது. அவ்வளவும் 1965-ம் வருஷத்திய ஸ்டாக்தான். அதுதான் அவ்வாறு செய்யப்பட்டது. இவற்றிலெல்லாம் இந்த அரசு மிகவும் ஆழ்ந்த பரிசீலனை செய்து, ஆலோசனை செய்து, அதன் பிறகுதான் இப்படிச் செய்யப்பட்டது. விவரங் கள் இல்லாமல் சொல்லுவதைவிட, இதுபற்றி நான் பேரவை விதி 82-இன் கீழ் அறிக்கை சமர்ப்பிப்பதைக் கவனித்தால் விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். கேள்வி வராமலிருந்தால், நானே இது சம்பந்தமான அறிக்கையொன்றை இந்த மன்றத்திற்குச் சமர்ப்பிப்பதாக இருக்கிறேன். அந்த அறிக்கைக்குப் பிறகு இது பற்றி கேள்வி கேட்டால், இன்னும் இந்த மாமன்றம் மேலும் நல்ல, தெளிவான கருத்துக்களைப் பெறவும், இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை ஆதரிக்கும்படியான நிலைமையும் இருக்கும் என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன்.



1967 ஜூன் 29]

### சர்க்கரைப் பங்கீடு

*108 வினு.—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

சர்க்கரை ரேஷனை எடுத்துவிட உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை ஐயா.

**திரு. கே. விநாயகம் :** இந்த சர்க்கரை விநியோக விஷயத்தைப் பொறுத்த வரையில், இப்பொழுது சென்னை நகரில் சர்க்கரை கிடைப்பதே இல்லை. அப்படியே கிடைத்தாலுங்கூட, அதிகமான விலையிலே கிடைக் கிறது. விநியோக முறை இப்படி இருக்கிறது. திடீரென்று நேற்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்த கோட்டாவை பாதியாகக் குறைத்துவிட்டதாக ஒரு உத்தரவு வந்திருக்கிறது. கிராமங்களில் சர்க்கரை யே கிடைப்பதில்லை. இவ்வளவு அதிகமாகச் சர்க்கரை உற்பத்தியாகிற இந்த மாநிலத்திலே இந்த நிலை இருக்கிறது. ஒரு காலத்தில் " ஸர்ப்ளஸ்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு உற்பத்தி இருந்ததே. அது எப்படி இப்பொழுது திடீரென்று " டெஃபிஸிட் " ஆக மாறிவிட்டது ? எங்களைப் போன்றவர்களுக்குச் சர்க்கரையே கிடைக்காததற்குக் காரணம் என்ன ? அதற்கு இந்த அமைச்சரவை என்ன உத்தரவு போட்டிருக்கிறது ? சர்க்கரை கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதத்தை தரமுடியும் ? சர்க் கரை நிலைமை " இம்ப்ரூவ் " ஆகுமா, அல்லது கீழே இறங்கிவிடுமா ? என்று சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அமைச்சரவை உத்தரவு போடும் நிலையில் இல்லை. உத்தரவாதம் செய்யும் நிலையிலும் இல்லை. கனம் உறுப்பினரோடு சேர்ந்து பரிதாபப்படும் நிலையிலேதான் இருக்கிறது. அதற்குக் காரணம், இந்த மாநிலத்திலே கரும்பு விளை கிறது. இந்த மாநிலத்திலேயே சர்க்கரையும் உற்பத்தியாகிறது. ஆனல், எந்த எந்த மாநிலத்திற்கு எவ்வளவு எவ்வளவு அலாட் பண்ண வேண் டும் என்று நிர்ணயிப்பதற்கான உரிமை டெல்லியில் இருக்கும் மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. இந்த மாநிலத்திற்குச் சாதாரணமான சுயதேவை என்ற அளவிற்கு 16 ஆயிரம் டன் சர்க்கரை அலாட் செய்யப்பட்டு வந்தது. இது பிப்ரவரி மாதம் வரையில். ஆனல். திடீரென்று மார்ச் மாதத்தி லிருந்து இது 11 ஆயிரம் டன்னகக் குறைக்கப்பட்டது. அதையும், இந்த மாதத்திலே ஒன்பதாயிரம் சொச்சம் டன்னகக் குறைத்துவிட்டார்கள். இதற்கு மத்திய அரசாங்கம் சொல்லும் காரணம், பொதுவாக இந்தியா விலேயே கரும்பு விளைச்சல் குறைந்து விட்டது. மூன்றிலொரு பங்கு குறைந்துவிட்டது. அதனல் எல்லா மாநிலங்களும் அந்த அளவிற்குக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்ன காரணத்தினலேதான், பொதுவாக இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனல், நாம் அவர்களைக் கேட்டிருக்கிறோம். சர்க்கரை கோட்டாவைக் கொஞ்சம் அதிகரிக்கவேண் டும் என்று. அதுவும், திருமணக்காலம் வருகிறது ; ஆனி மாதம் தமிழ்நாட்டிற்கு முக்கியமான ஒரு மாதம். அதனல், சர்க்கரைக்குத் தேவை அதிகம் இருக்கிறது. அதை உத்தேசித்தாவது சர்க்கரைக் கோட் டாவை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்க அமைச்சரிடம் இந்த அரசாங்கம் வற்புறுத்தியிருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, சர்க்கரைத் தட்டுப்பாடாக உள்ள இந்த நேரத்தில் பல ஊர்களில் கற்கண்டு செய்வதற்கென்று சர்க்கரை கோட்டா அளிக்கப்பட்டு வருவதை நிறுத்தும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற யோசனை இந்த அரசாங்கத்தினுடைய ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கிறது. கற்கண்டு மட்டுமல்லாமல், சர்க்கரை விநியோக முறை முன்னு

லிருந்த சர்க்காரால் வகுக்கப்பட்டது. அதன்படி சர்க்கரை விநியோகப் பொறுப்பு பல இடங்களில் சிலருக்குக் கொடுக்கப்பட்டதன் விளைவாக, ப்ளாக் மார்க்கெட்டில் விற்கக்கூடிய நிலைமை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், சீராக விநியோகம் செய்வதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். மொத்த வியாபாரிகள் என்ற பெயரில், சம்பந்தமே இல்லாதவர்கள்கூட ஒவ்வொரு ஜில்லாவிலும் விநியோகிக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், ஹோல்ஸேலர்ஸ் என்று இருப்பவர்களைக் கூட எடுத்துவிட்டு, அரசாங்கமே நேரடியாக விநியோகிக்கும் முறையை மேற்கொள்ளவும் யோசனை இருக்கிறது. பாக்டரியிலிருந்து சர்க்கரை கொடுக்கப்படுகிறதைப் பொறுத்த வரையில் ஒரு மாதம் என்பது, 23-ந் தேதியிலிருந்து அடுத்த மாதம் 22-ந் தேதி வரை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக விரைவிலே இந்த அரசாங்கம் சில குறிப்பிட்ட மாறுதல்களைச் செய்ய இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, சர்க்கரைப் பற்றாக் குறை இருக்கிறது என்று உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மராமத்து அமைச்சரவர்கள், "கரும்பு யாராவது போட்டால் தண்ணீர் விடும் சாவி என் கையில் இருக்கிறது" என்று சொன்னது உணவு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? தெரிந்தால், அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இப்படியொரு தவறான வாதத்தைக் கிளப்புவது எனக்கு விந்தையாக இருக்கிறது. நான் அவரிடமிருந்து இப்படிப்பட்ட வாதத்தை எதிர்பார்க்கவில்லை. கரும்பு யாராவது போட்டால் தண்ணீர் விடமாட்டேன் என்று என்றைக்கும் நான் சொன்னதில்லை. ஒருவாசகத்தினுடைய தலையையும் வாலையும் விட்டுவிட்டு, இடையிலே உள்ளதை மாத்திரம் வைத்துக்கொண்டு பேசுவது நல்லதல்ல. நான் சொன்னது— நெல் விளைச்சலுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையில், கொள்முதல் பற்றி இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கை தவறானது என்ற அளவிலே காங்கிரஸ் தலைவர்கள் சிலர் மேடையிலே பேச, அப்படிப் பேசியதனுடைய இறுதி உரையாக, "ஆகவே நெல் பயிரிடாதீர்கள், கரும்பு போடுங்கள்" என்று விவசாயிகளைத் தூண்டிவிட்ட நேரத்தில், "அப்படி வேண்டுமென்றே நெல் பயிருக்குக் குந்தகமாகப் போடப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தான் நான் சொன்னேன். இப்போதும் இந்த நிலையில் தான் அரசு இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

முற்பகல் 10-00 **திரு. இ. வி. எம். அண்ணாமலை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கத்தைப் போலவே இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கம் தலையிடுகிறது என்றும் நம்முடைய சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்று கூறுகிற விதத்தில் இருந்து விடுபட்டு, நம்முடைய தேவைகளை நாமே நிர்ணயித்துக்கொண்டு சர்க்கரைப் பற்றாக்குறையைப் போக்க, ஒரு அறக்கிளர்ச்சியை ஏற்படுத்த தமிழக மக்களுக்கு விண்ணப்பம் விடுமா இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இக் கேள்வி தமிழக மக்களுடைய மனநிலையைக் கூறுவதாகும். இந்த வாதத்தை மட்டும் இப்போது வைத்துக்கொள்ள முடியாது. நம்முடைய தேவைகளை மத்திய அரசாங்கத்திடம் கூறி நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியாக இந்த அரசாங்கம் கேட்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கரும்பு உற்பத்திக்கும் நிறையத் தண்ணீர் வசதி வேண்டும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மாண்புமிகு மராமத்து அமைச்சர் அவர்கள், பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் நெல் பயிரிடுவதற்குப் பதிலாக கரும்பு போடுங்கள் என்று சொல்லி வருவதாகச் சொன்னது தப்பான அபிப்பிராயம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது கேள்வி அல்ல. அவருடைய கருத்து விளக்கம்.

**திரு. மா. இராசாங்கம் :** மத்திய அரசாங்கம் தமிழகத்துக்கு தேவைப்படுகிற சர்க்கரைக் கோட்டாவை ஒதுக்காததனால்தான் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உற்பத்திக் குறைவுதான் இந்தச் சங்கடத்திற்குக் காரணம்.

**திரு. என். சங்கரய்யா :** சபாநாயகர் அவர்களே, வெளிநாடுகளுக்கு சீனி ஏற்றுமதி செய்வதன் காரணமாக இங்குள்ள விநியோகத்திற்கு குறைபாடு ஏற்பட்டிருக்கிறது என்பதுபற்றி மாநில அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இங்கே ஏராளமான உற்பத்தி இருந்தும் குறைவாகத்தான் விநியோகிக்கப்படுகிறது. ஏற்றுமதியைத் தவிர்த்து மாநிலங்களின் தேவைக்கேற்ப விநியோகிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக, முன்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது ஏற்றுமதி செய்யப்படவில்லை. மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி குறைந்திருப்பதன் எதிரொலிதான் இந்த நெருக்கடி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஏற்கனவே குறைவாக கிராமங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட்டுகள் அரசியல் நோக்கத்தோடு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை சர்க்கார் உணருமா ? அப்படி உணர்ந்தால் அதை மாற்றி அமைத்துப் புதிதாகக் கொடுக்க திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசியல் நோக்கத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று பிரேத விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், ஜில்லாவில் உள்ள ஹோல்சேல் வியாபாரிகள் கல்கண்டு உற்பத்தியாளர்கள், இவர்களுக்கிடையே விநியோக முறை ஆகியவற்றில் நிரம்பக் கோளாறுகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி சரியான மாறுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** மன்றத் தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு குறைவு ஏற்பட்டிருக்கிறதாகக் குறிப்பிட்டார்கள். அதன் கணக்கில் பார்த்தால் நம்முடைய கோட்டா மூன்றில் ஒரு பங்குதான் குறைக்கப்படவேண்டும், அதிகமாகக் குறைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் உத்தேசமாகச் சொன்னேனே தவிர, இருநூறு, முந்நூறு டன் குறைவுகளைப் பற்றி ஒன்றுமில்லை.

**திரு. அ. ஆறுமுகம் :** சர்க்கரைக் கட்டுப்பாடுகள் இருப்பதனால்தான் பற்றாக்குறையும், விலையேற்றமும் இருப்பதாகத் தெரிவிக்கிறார்களே, இது பற்றி அரசினர் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப்பற்றித்தான் முதலில் பதில் அளித்தேன். சுதந்திராக் கட்சித் தலைவர்கள் என்ன அபிப்பிராயம் கொள்கிறார்களோ ? மதில் கதவைத் திறந்தால் அதற்குள் எல்லா சரக்கும் இருக்கும் என்று நினைக்கிறார்கள். நேற்றையதினம் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜ்ஜீவன்ராம் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த போது அவர்களும் கேட்டார்கள். இதுசம்பந்தமாக கண்டிரோலை எடுத்து விடலாமா என்பதாக. கண்டிரோலை எடுப்பதற்கு இந்த மாநில அரசு உடன்படாது, இன்றுள்ள நிலைமையிலேயே பல தொந்திரவுகள் ஏற்படுகின்றன, இதை மாற்றக்கூடாது என்று தெரிவித்துள்ளேன்.

திரு. கரு. ராம. கலியமாணிக்கம் அம்பலம் : சர்க்கரை உற்பத்திக் குறைவினால் கோட்டா அதிகம் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். இப்போது கரும்புக்கு வரிபோட்டிருக்கிறார்கள். இதனால் உற்பத்தி பாதிக்கப் படாதா ? ஆகவே கரும்பு போன்ற விவசாயப் பொருள்களுக்கு வரிபோடு வதைக் கைவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கரை விநியோகம் சம்பந்தப்பட்ட கேள்வி இது. கரும்பு உற்பத்தி வேறு. கரும்பு உற்பத்தி பாதிக்கப்படக்கூடாது என்று விரும்புகிறேன். இப்போது உற்பத்தியாகிற கரும்பே நமக்குத் தேவையான சர்க்கரைக்குப் போதுமான அளவில் இல்லை. கரும்பு உற்பத்தியில் ஒரு புரட்சிகரமான நிலை ஏற்படவேண்டும்.

திரு. ஜி. ஆர். எட்மண்டு பெர்னாண்டோ : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலுக்காவில் அடைக்கலா புரத்தில் பனையில் இருந்து நல்ல சர்க்கரை தயாரிக்கிறார்கள். இது போன்ற உற்பத்தியையும் பெருக்கி ஜனங்களுக்குச் சாக்கரை கிடைக்க வில்லை என்ற தட்டுப்பாட்டைக் குறைக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறேன். மத்திய சர்க்காரோடு இணைந்திருக்கிற கொள்கை இது. நாமாகச் செய்கிற காரியம் இல்லை. கண்டிரோல் இருக்கும்போதே டெல்லியில் கிலோ 7 ரூபாய், பம்பாயில் 8 ரூபாய்—(திரு கே. விநாயகம் : இங்கே 5 ரூபாய் விற்கிறது)—இப்படி விலை இருப்பதாகச் சொல்கிறார்கள். எந்த வகையில் இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பது என்பதை இந்தச் சர்க்கார் நன்கு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, சக்ககரை விற்பனை செய்பவர் கள் பெரும்பாலோர். . . . . .

• • • • •

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I object to this kind of insinuation against Congressmen. . .

THIRU K. RAMAMOORTHY : Sir, it is an insinuation. The Hon. Member must substantiate it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்பப்பட்டுள்ள நடைமுறைக் கேள்விக்குத் தீர்ப்பு அளிக்கும் வகையில், 'வினாக்களில் குற்றங் குறைச் சாட்டுக்கள் இருக்கக்கூடாது' என்று பேரவை விதி 31(5) இருப்பதால், உறுப்பினரின் வினாவுக்கு அனுமதியை மறுத்துவிடுகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, it must be expunged.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : அதில் இம்ப்யூடேஷன் என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால், If it is a statement of fact and the hon. Member is able to substantiate it, will it be permissible or not ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல வேளையாக அமைச்சர் அவர்கள் விளக்குவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்கள். நான், 'வினாக்களில்' என்று சொன்னேன். நமக்கு வினாவிடை நேரம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால், அந்த நேரத்தில் 16 விதமான கேள்விகள் கேட்கக் கூடாது என்று வரையறைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, 'வினாக்களில் குற்றங் குறைச்சாட்டுகள் இருக்கக்கூடாது' என்பதாகும். குற்றங் குறைச்சாட்டுகளைச் சொல்லுவதற்கு இது நேரமல்ல. 16 விதமான வினாக்களை 'கேள்வி நேரத்தில்' தடுத்து இருந்தாலும், 67-வது விதிப் படி 6 விதமான பேச்சுக்கள் மட்டுமே விவாத நேரத்திலே தடுக்கப்பட்டிருக் கின்றன. விவாதத்தின்போது விரிவாகப் பேச நேரமும் இடமும் இருக்கிறது.

** பேரவைத் தலைவர் ஆணைப்படி அகற்றப்பட்டது



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தங்களிடமிருந்து இன்னொரு
விளக்கம் பெற விரும்புகிறேன். அவர் போட்ட கேள்வியை வேறு
விதமாக மாற்றிக் கேட்டால், ** ** ** * * அதாவது,
சர்க்காருக்கு வேண்டுமென்றே தொல்லை கொடுப்பதற்காகச் சிலர் இப்படி
விற்பது சர்க்காருக்குத் தெரியுமா ?" என்று கேட்க அனுமதிக்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிக் கேட்பதில் யார் மீதும்
குற்றச்சாட்டு இல்லை. ஆகவே, வினாவை இப்படி மாற்றிக் கேட்க இடமிருக்
கிறது. திரு. ந. வீராசாமி அவர்கள், இவ்வாறு வினாவை மாற்றிக் கேட்க
விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகின்றேன். இப்படிக் குற்றச்
சாட்டு இல்லாத வினாவை அனுமதிக்கிறேன். இதற்குமுன் அவர் கேட்ட
வினா குற்றச்சாட்டு உடையதாக இருப்பதால், அதை அகற்றி, சட்டப் பேரவை
நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட ஆணையிடுகிறேன்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, சர்க்கரை விற்பனை செய்ப
வர்கள் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்று
4 ரூபாய் கிலோ என்று விற்று, அரசைப்பற்றித் தவறாகப் பிரசாரம் செய்
வதை அரசாங்கம் தடுக்குமா ? என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மாதிரியான சில நிலைமை
கள் பல இடங்களில் இருக்கின்றன. விநியோகம் தாறுமாறாகச் செய்யப்
படுகிறது. விநியோக உரிமை விதிகளுக்கு அப்பாற்பட்டு, பரிவு காரண
மாகச் சிலருக்குக் கொடுக்கப்பட்டது என்பதுதான் இந்த அரசாங்கம்
கண்டிருக்கிற உண்மை. இவைகளையெல்லாம் தீவிரமாக மாற்றி
அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, just now the Hon.
Minister for Food has stated something about the Swatantra Party
and its ideology and policy. Are the Government aware
that because of decontrol there will be much more free supply of
sugar especially if the borders of the State are sealed? So far as
the Madras State is concerned, definitely it would be much more
easy to get sugar. Because there is control, the people have culti-
vated the habit of hoarding a small quantity of sugar and the
moment the control is removed there will be free supply of sugar,
because, there will not be this indirect hoarding.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am sorry I cannot
endorse the view of my hon. Friend and the Swatantra Party
leader. Now, I shall cite an example. With regard to the Rama-
nathapuram district, we lifted movement control within the district
after the representations made by the hon. Members, Thiru Karia-
manickam Ambalam, Thiru Cheemzichamy and other representa-
tives. But the price has gone up in Tiruvadanai and Karaikudi.
In fact, the very same people who wanted the removal of the
ban now insist that the inter-taluk ban must be reimposed. Such
being the case, the Government apprehend that things will not
improve.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாத
காலமாக தேயிலை, காபி, இனிப்புப் பொருள்கள் விலை கூடியதற்குக்
காரணம் மத்திய சர்க்கார், இந்த மாநில சர்க்காருக்குக் கொடுக்க
வேண்டிய சீனி கோட்டா அளவைக் குறைத்ததுதான் என்பது சர்க்கா
ருக்குத் தெரியுமா ?

(விடை இல்லை.)

* பேரவைத் தலைவர் ஆணைப்படி அகற்றப்பட்டது.

**Thiru K. VINAYAKAM**: Sir, may I know what is the total production of sugar in our State in a year and what percentage of cut has been imposed by the Central Government on our domestic consumption, necessitating a reduction in the sugar quota for this State? Will the Government make representations to the Central Government for substituting some kind of cereals? Also will the Government think of the possibility of substituting saccharine instead of sugar for human consumption?

**The Hon. Thiru K. A. MATHIALAGAN**: Sir, I want notice. I have no information regarding the total production of sugar. As regards the other suggestion of the hon. Member, it can be very seriously considered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : துணை வினாக்களுக்கு இனி நேரமில்லை.

**Thiru K. VINAYAKAM**: Sir, I rise on a matter of public importance . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்மிகு உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள், பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். பாயிண்ட் ஆஃப் பிரிவிலேஜ் எழுப்பலாம். பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் எழுப்பலாம். ஆனால், பாயிண்ட் ஆஃப் பப்ளிக் இம்ப்பார்ட்டன்ஸ் என்று எழுப்பிப் பேசமுடியாது.

**Thiru K. VINAYAKAM**: Sir, on a point of personal explanation சர்க்கரை என்பது ரொம்ப சுவையான விஷயம். அந்த பொருள் இப்போது கிடைப்பது இல்லை. ஆதலாலே ஒரு அரைமணி நேரம் ஒதுக்கி, தனி விவாதம் ஒன்று நடத்துவதற்கு தலைவர் அவர்கள் அனுமதி தருவார்களா என்று கேட்கிறேன்.

**Mr. SPEAKER**: It is not a point of personal explanation. At the time of question hour, any hon. Member can ask that half-an-hour debate be allowed on a matter which has been the subject of a question as mentioned in Rule 40. But I am afraid, I am not able to allow it. The reason is that I have already allowed 25 minutes for this question. The time allowed for the questions, one hour, has also been exceeded. I pass on to the next question.

ஏற்கெனவே நேரம் அதிகமாகிவிட்டது. ஆகவே, இனி வரும் வினாக்களுக்கு, ஒரு துணை வினா மட்டுமே அனுமதிக்க முடியும்.

* 109 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி** : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திற்கென இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரு மாதங்களில் ஒதுக்கப்பட்ட சர்க்கரையின் அளவு என்ன, தாலுகாவாரியாக ?

(இ) இந்த அளவு வடார்க்காடு மாவட்டத்திற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசாங்கம் அறியுமா ?

(உ) ஆம் எனில், இப்பற்றுக்குறையைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : (அ) முதல் (உ) வரை : விவர அறிக்கை * சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 209–210–ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. எஸ். ஜே. ராமசாமி** : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் தாலுகாவாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்தில் ஒரு அளவு, இன்னொரு மாதத்தில் ஒரு அளவுமாக இருக்கிறது. முதல் மாதங்களில் கொடுத்ததைவிட பின்னால் பிப்ரவரி மாதத்தில் குறைத்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அமைச்சர் அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் மத்திய சர்க்கார் கோட்டா குறைவாக இருக்கிறது என்று சொல்வார்கள். மத்திய சர்க்காரிடத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் போராடி கோட்டாவை அதிகமாகப் பெறுவதற்கு முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மத்திய சர்க்காருடன் போராடத்தான் முடியுமே தவிர, கொடுக்கவேண்டிய உரிமை அங்கேதான் இருக்கிறது, அதிலே பெரிய அபிவிருத்தி ஏற்படும் என்று என்னால் நம்பமுடியவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : இதிலே தாலுகாவுக்குத் தாலுகா பாரபட்சம் இருக்கிறது. வேலூருக்கு 4,586 மூட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற தாலுகாக்களில் எல்லாம் குறைவாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையாவது அமைச்சர் அவர்கள் சமமாக கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்திரவிட்டு பாரபட்சம் இல்லாமல் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பாரபட்சம் என்று கனம் உறுப்பினர் சொல்வது முற்றிலும் தவறானது. வேலூர் என்பது தலை நகராக இருப்பதாலும், தேவைகள் மற்ற தாலுகாக்களைவிட அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும்தான் அப்படி இருக்கிறதே தவிர, பாரபட்சம் இருப்பதாகக் கருதுவதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நேரம் மிகவும் நீடித்துவிட்டபடியால் இன்னும் விடையளிக்கப்படாத வினாக்களைப் பொறுத்தவரையில், மூன்று வகைகளில் முடிவு செய்யலாம். வினாக்களையும் விடைகளையும் பேரவையின் நடவடிக்கைத் தொகுப்பிலே அச்சடித்துவிடலாம்; அல்லது வினாக்களைக் கேட்ட உறுப்பினர் மட்டும் ஒரு துணை வினாவைக் கேட்பதற்கு அனுமதித்து, வினாப் பட்டியலை முடிக்கலாம். அல்லது அமைச்சர்கள், கேட்கப்படாத வினாக்களையெல்லாம் நாளைக்குத் தள்ளிவைக்க வேண்டுமென்று கோரலாம். இவற்றில் பேரவை எதை விரும்புகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : கேட்கப்படாத கேள்விகளை நாளைக்கு மற்றக் கேள்விகளையெடுத்துக்கொள்ளும்பொழுது எடுத்துக்கொள்ளலாம். அந்த முறையிலே இவற்றை நாளைக்குத் தள்ளிவைத்தால் கேள்விகள் கேட்ட உறுப்பினர்கள் ஒன்றிரண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புக்கள் இருக்க முடியும்.

**திரு. க. ர. நல்லசிவம்** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்வதால் கேள்விகளை முடிக்க முடியாது. தினமும் இங்கே வருகின்ற கேள்விகளே குறைவாகத்தான் இருக்கின்றன. ஆகவே, அந்தந்தக் கேள்விகளை அன்றைக்கே அதிகமாக நேரம் கொடுத்து முடித்தால்தான் முடிக்கமுடியும். அப்படியில்லாமல் ஒரு நாள் முடிக்கவேண்டிய கேள்வியை மறுநாள் தள்ளிவைப்போமானால் அன்றாடம் முடியவேண்டிய கேள்விகள் முடியாது, தள்ளிக் கொண்டேதான் போகும், நம்முடைய கேள்விகளையெல்லாம் முடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நாளை தள்ளிவைப்பதாக இருந்தால் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 110-வது வினாவை நாளைக்குத் தள்ளி வைக்கவேண்டுமென்று கோரவேண்டும்.

[1967 ஜூன் 29

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சார், என்னுடைய 110-வது வினாவை நாளைக்குத் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 110-வது வினா நாளைக்குத் தள்ளி வைக்கப்படுகிறது. 111-வது வினாவைத் தள்ளி வைக்க மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கோரவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சார், 111-வது வினாவை நாளைக்குத் தள்ளிவக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 111-வது வினா நாளைக்கு தள்ளி வைக்கப்படுகிறது. 112-வது வினாவையும், 113-வது வினாவையும் தள்ளி வைக்க மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள் கோரவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சார், 112-வது வினாவையும், 113-வது வினாவையும் நாளைக்குத் தள்ளிவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 112-வது 113-வது வினாக்கள் நாளைக்குத் தள்ளிவைக்கப்படுகின்றன. அடுத்தது 114-வது வினா. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கோரவேண்டும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சார், 114-வது வினாவை நாளைக்குத் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா 114 நாளைக்குத் தள்ளிவைக்கப்படுகிறது. வினாக்கள் 110 முதல் 114 வரை நாளைக்குத் தள்ளிவைக்கப்படுகின்றன. இப்பொழுது வினா 109 தொடரும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** துணைக் கேள்வி கேட்பதற்கு தலைவர் அவர்கள் அனுமதியளித்ததால் துணைக் கேள்வி கேட்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் சர்க்கரைப் பற்றுக்குறை அதிகமாக இருக்கிறது. ஆகவே மாவட்டம் முழுமையும் கோட்டாவை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நிலைகள் சீர்திருந்துமானால் அதைவிட சந்தோஷம் எனக்கு வேறு ஒன்றுமில்லை. வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களுக்கும் அதிகரிக்க அரசாங்கம் அப்பொழுது முயற்சியெடுக்கும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சர்க்கரை அதிகமாக கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அங்கங்கே கண்டசாரி சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது நிரந்தரமான பரிகாரமாக ஆகாது. எதிர்பாராத சில சம்பவங்களை வைத்துக்கொண்டு முடிவுக்கு வருவது அவ்வளவு சரியல்ல.

**திரு. எஸ். முருகையன் :** வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 10,000 மூட்டைகள் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. இதிலே வட வேலூர், தென் வேலூர் என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து கொடுக்கிறார்கள். இரண்டு பகுதிகளும் ஒன்றுதான், ஜனத்தொகைகூட சரியாகத்தான் இருக்கிறது. அப்படி இருக்க தென் வேலூருக்கு 2,500 மூட்டையும், வட வேலூருக்கு 7,500 மூட்டையும் கொடுக்கப்பட்டிருக்கிறது, இப்படி பாரபட்சம் காட்ட வேண்டிய அவசியம் என்ன ? தென் வேலூருக்கு அதிகமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?



1967 ஜூன் 29]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வடக்கு தெற்கு இரண்டுக்கும் தேவையான அளவுகள் தான் விநியோகிக்கிறோம். ஆனால் அங்கங்கே இருக்கிற மக்களின் தேவைகளைப் பொறுத்த அடிப்படையிலேதான் அந்த அளவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏதாவது குறைகள் இருக்குமானால் உறுப்பினர் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே கொண்டு வரலாம். அப்பொழுது அது சரி செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகருக்கு 4 ஆயிரத்து சொச்சம் மூட்டைகள் கொடுக்கப்படுகின்றன. வேலூருக்கு அடுத்தாற்போல் குடியாத்தம் தாலூகாதான் 4 லட்சம் ஜனத்தொகை கொண்டது. ஆனால், அங்கே எட்டிலே ஒரு பங்குகூட கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதைப் பாகுபாடு என்றுதானே சொல்ல வேண்டும். பற்றுக்குறையைப் போக்குவதற்கு அங்கே உள்ள சர்க்கரை ஆலையில் போதுமான அளவுக்கு வேண்டிய சர்க்கரையை எடுத்துக் கொண்டு மற்றவற்றை மாத்திரம் வெளி நாடுகளுக்கோ அல்லது வெளி யிடங்களுக்கோ அனுப்புமாறு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் சொல்கிற யோசனை மிகவும் ஆபத்தான யோசனையாகும். அப்படியே ஒவ்வொரு சர்க்கரை ஆலை இருக்கிற இடத்திலேயும் அந்த அந்த ஊருக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு மீதியை மற்ற இடங்களுக்கு அனுப்புவது என்று ஆரம்பித்தால் பிரச்னை இங்கே வேண்டுமானால் தீர்ந்துவிடும். ஆனால் வேறு இடங்களில் புதிய பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

**திரு. மா. பா. சாரதி :** தலைவர் அவர்களே, 1966 ஜூன், ஜூலை மாதங்களிலே வேலூருக்கு ஒதுக்கப்பட்ட மூட்டைகள் 7 ஆயிரம். பிறகு அக்டோபர்-நவம்பரில் 6 ஆயிரம் மூட்டைகள். இப்பொழுது நாலாயிரத்து சொச்சம் மூட்டைகள்தான் ஒதுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இது வரக்கூடிய மாதங்களிலே குறையும் என்று சொல்லக்கூடிய நிலை இருப்பதால் இப்பொழுதுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது ? அதைப்பற்றிய அறிக்கையொன்றை இங்கே சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இன்னொரு கணக்கும் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாலு ஆயிரத்திலிருந்து பிப்ரவரி மாதத்தில் 3,200 ஆகி, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வருவதைப் போல் வந்து ஏப்ரல் மாதத்திற்கு 2,500 மூட்டைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய காரணங்களை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும் என்பதைப்போன்றுதான் இப்பொழுது காரியங்கள் நடக்கவேண்டியிருக்கிறது.

**திரு. ஏ. முனியாண்டி :** கனம் தலைவரவர்களே, கோடைக்கானல், முற்
நீலகிரி போன்ற ஊர்களில் உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகின்ற பகல்
காரணத்தினால் அந்தப் பகுதிகளுக்கு அதிகமாக கோட்டா வழங்க முடியுமா 10-30
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கோடைக்கானல், நீலகிரி போன்ற பகுதிகளுக்கு உல்லாசப் பயணிகள் அதிகமாக வருவதால் சர்க்கரைக் கோட்டாவை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்வதைப் போல ஒவ்வொருவரும் அவரவர்கள் ஊரைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு காரணம் இருப்பதாகச் சொல்லுவார்கள். ஒருவர் யாத்திரீகர்கள் அதிகமாக வருவதாகச் சொல்வார், ஒருவர் கடற்கரை இருப்பதாகச் சொல்வார்—இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்வார்கள். பொதுவாக, எந்தெந்த நேரத்தில் வெளியூர்களில் இருந்து அதிகமாகப் பிரயாணிகள் வருகிறார்கள் என்று கணக்கெடுத்து, அதை வைத்துத்தான் அந்தப் பிராந்தியத்திற்கு விநியோக முறை நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஆகையால் உறுப்பினர் திரு. பூபதி அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைக் குறித்து மட்டும் துணைக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, உணவு இல்லாமல் மக்கள் இறந்த சரித்திரம் இருக்கிறது. ஆனால் சர்க்கரை இல்லாமல் மக்கள் இறந்ததாகச் சரித்திரம் இல்லை. நமது மாநிலம் உணவைப் பொறுத்த வரையில் பற்றுக்குறை மாநிலமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பற்றுக் குறை நிலையை மாற்றுகிற வகையில் இந்த கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்ற அந்தக் கேள்வி, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எழவில்லை. அது தனிப் பிரச்சினை. சர்க்கரை விநியோகத்திற்கும் கரும்புப் பயிருக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அதே மாதிரியாக, நெல், மற்ற உணவு தானியங்கள் உற்பத்திக்கும் கரும்பு பயிரிடுவதற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லை. நான் ஏற்கெனவே பதில் சொன்னேன், கரும்பு விளைச்சலினாலோ அல்லது வேறு காரியத்தினாலோ இதெல்லாம் ஏற்படவில்லை. வேண்டுமென்றே அரசியல் காரணத்திற்காக, திரித்துக் கூறுவதற்காக, "கரும்பு வேண்டாம், கரும்பு வேண்டாம்" என்று சொன்னார்கள் அதைக் குறித்துப் பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். இரண்டு பக்கங்களிலும் இந்த விவாதம் இல்லாமல், அரிசி உற்பத்தியையும் பெருக்கவேண்டும், சர்க்கரை உற்பத்தியையும் பெருக்கவேண்டும். கரும்பு நன்றாகப் பயிரிடப்பட வேண்டும். இந்த வகையில் நாம் திட்டமிடுவது தான் இந்த மாநிலத்தினுடைய நல்வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் பாடுபடுவதற்குரிய செயலாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது மணி 10-30-க்கு மேல் ஆகிவிட்டது. வினா-விடை நேரம் இத்துடன் முடிவடைகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்புகள்.

### (அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கை மீது விவாதத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னால் ஓர் அறிவிப்பு உள்ளது.

தொழில்கள் வாரியத்தின் (Board of Industries) தேர்தலுக்காக இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை ஒத்திருப்பதால், அதாவது இரண்டாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். முருகையன், திரு. கோ. பூவராகன் ஆகிய இரு வேட்பாளர்களும் தொழில் வாரியத்துக்கு (Board of Industries) முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என்று நான் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

## 3. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் (லீடர் ஆப். தி ஹவுஸ் ) இந்தக் கோரிக்கைகளினுடைய வரிசையை மாற்றியமைப்பதைக் குறித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர்
அவர்களே, "7—7—1967-ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட
வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் XVI—வேளாண்மை, எண்
XVII மீன்வளம், எண XVIII—விலங்கின வளர்ப்பு, எண் XXXIX—
வேளாண்மை மூலதனச் செலவு, எண் XXXV—காட்டு வளத் துறை,
எண் XXI—சின்கோனா, எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு
14—7—1967-ஆம் நாளன்றும், 14—7—1967-ஆம் நாளான்று
எடுத்துக் கொள்ளப்படவேண்டிய மானியக் கோரிக்கை எண் XXV—
ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்
7—7—1967-ஆம் நாளன்றும் மாற்றி எடுத்துக்கொள்ளப்பட
வேண்டும் " என்று நான் கோருகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று விவாதத்திற்கு எடுத்துக்
கொள்ள வேண்டிய நிதிக் கோரிக்கைகளைப் பொறுத்த வரையில்,
12·30 வரையில் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவுத் துறை
ஆகிய மூன்று கோரிக்கைகளையும்,பிறகு "கூட்டுறவு" கோரிக்கையையும்
எடுத்துக் கொள்ளலாம். இதைக் குறித்த ஒரு தீர்மானத்தை மாண்பு
மிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

### (இ) பேரவை அலுவல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள மானியக் கோரிக்கை
கள் எண் X–நீதி நிர்வாகம், எண் XI–சிறைச்சாலைகள்,
எண் V–பத்திரப் பதிவுத் துறை ஆகியவைகளை ஒன்றாக
விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், இவ் விவாதத்திற்கு
12·30 மணி வரை காலம் ஒதுக்க வேண்டும் என்றும், சட்டப்
பேரவை விதி 21, உட்பிரிவு 3–இன் கீழ் நான் கோருகின்றேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

### (அ) கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
அவர்கள் " நீதி நிர்வாகம்" பற்றிய நிதிக் கோரிக்கையைக் கொண்டுவரு
வார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கவர்னர்
அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்
மொழிகிறேன்:

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ்
ரூ. 1,98,31,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையொட்டிய வெட்டுத் தீர்மானங்
களை அந்தந்த உறுப்பினர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள்.
வழிமொழியத் தேவை இல்லை.

**திரு. க. ர. நல்லசிவம்:** "கொள்கை பற்றி விவாதிக்க" என் பெயரில்
உள்ள கீழ்க்கண்ட. வெட்டுத்தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

" கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ்
ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

THIRU T. MARTIN ; Sir, to discuss about the ways and means of improving the administration of Justice, I move the following out motion ;

'That the allotement of Rs. 1,98,31,800 under Demand No. X—Administration of Justice – be reduoed by Rs. 10).'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சௌந்தரப்பாண்டியன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் அவர் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படுகின்றன.

இப்பொழுது திரு. என். வரதராஜன் அவர்கள் தம்முடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

***திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருககும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிவதற்குப் பதிலாக ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் மீதும் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர் ஒரு வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிவதென்பது வழக்கம். ஒருவர் ஒரு வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டால் பாக்கியுள்ளவை யெல்லாம் முன்மொழியப் பட்டு விட்டதாக எடுத்துக் கொள்ளுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். காலம் அனுவசியமாகத் தாமதப்படுவதனால் இந்த என்னுடைய யோசனையைத் தெரிவிக்கலாம் என்று கருதி இதைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் அறிவுப்புக் கொடுக்கப்பட்டு இப் பேரவைமுன் இருப்பதால், அவை ஒவ்வொன்றாக முன் மொழியப்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த யோசனையை விதிக் குழுவிலும், அலுவல் ஆய்வுக் குழுவிலும் வைத்து, அங்கே பேசிய பிறகு, நமது நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கும் உறுப்பினர், தீர்மானத்தின் முழு வாசகத்தையும் படிக்க விரும்பினால், அவ்வாறு படிக்க அவருக்கு உரிமை இருக்கிறது.

திரு. என். வரதராஜன் அவர்களும் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் அவர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொண்டதாக கருதப்படுகிறது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** Sir, to discuss the need for appointment of a Labour Bench of the High Court I move the following out motion :

" That the allotment of Rs. 1,98,31,800 under Demand No. X—Administration of Justice—be reduced by Rs 100."

தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்க ஒவ்வொரு தொழிலாளர் கோர்ட்டுகளிலும் இலவச வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டியது பற்றி எடுத்துக்காட்ட என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

" கோரிக்கை எண் X— நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



கோர்ட்டுக்களில் உடனுக்குடன் விசாரணை செய்து தீர்ப்புக் கூற முடியாத நிலைமையால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்காட்ட என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

வழக்கு தாக்கல் செய்யப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு உள்ளாக வழக்குகளை முடிக்க வேண்டுமென்பதின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூற என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ 100 குறைக்க வேண்டும்."

கோர்ட்டுகளுக்குப் போகும் பொதுமக்கள் தங்குவதற்கான இடவசதி செய்யாததால், மக்கள் படும் அவதியைப்பற்றி எடுத்துக்கூற என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

மூன்று லட்சம் ஜனத்தொகைக்கு மேல் உள்ள எல்லாத் தாலூக்காக்களிலும் முன்சிப் கோர்ட்டு ஆரம்பிக்க வேண்டுமென்பதைப்பற்றி எடுத்துக் கூற—என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

குடியாத்தம் நகரில் முன்சிப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்ட என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்."

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

நீதிபதிகளுக்கு வீடுகட்டிக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,9?,31,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எம். வில்லியம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால், அவர் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. கோ. பாரதிமோகன் :** சிவில் வழக்குகள், கோர்ட்டுகளில் ஒத்திப் போடப்பட்டு நீண்ட காலங்களாக நடைபெற்று வருவதைத் தடுத்து விரைவில் விசாரித்து முடிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

THIRU K. RAMAMURTHY : Sir, to discuss about the indiscriminate delay in dipo‑ing the cases of the litigant public I move the following out motion :

" That the allotment of Rs. 1,98,31,800 under Demand No. X—Administration of Justice—be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. வி. ஜார்ஜ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால், அவர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. க. ர. நல்லசிவம்** : ஈரோட்டில் தனி மாவட்ட நீதிமன்றம் அமைப்பது பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**Thiru A. A. SUBBA RAJA** : Sir, to discuss the suggestion to establish a mobile court at Rajapalayam, I move the following cut motion :

'That the allotement of Rs. 1,98,31,800 under Demand No. X—Administration of Justice–be reduced by Rs. 100.

**(இ) கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள்—**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, "சிறைச்சாலைகள்" என்னும் தலைப்பின்கீழ் உள்ள நிதிக் கோரிக்கையை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இப் பேரவைக்குக் கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,12,07,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. க. ர. நல்லசிவம்** : கொள்கை பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன் :

சிறைகளில் நடக்கும் ஒழுங்கீனங்களைப் பற்றி எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

அரசியல் கைதிகளை கண்ணியமாக நடத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றி எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

சிறைகளில் ஒழுங்கான கல்வி வசதி அளிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

அரசியல் கைதிகள் விரும்பும் பத்திரிகைகளை அனுமதிக்க வேண்டியதைப் பற்றி எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."



சிறை சீர்திருத்தம் செய்வதற்கான ஆலோசனைகளைக் கூற ஒரு குழு அமைக்க வேண்டியது பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

முதன் முறையாக ஆயுள் தண்டனை அடைந்து பாதி காலத்தை முடித்த எல்லா ஆயுள் தண்டனைக் கைதிகளையும் விடுதலை செய்வதைப் பற்றி எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

எல்லா அரசியல் கட்சியினர்களையும் ஜெயில் பார்வையாளர்களாக நியமனம் செய்ய வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் XI சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

சிறை வார்டர்களின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

சிறைகளில் வேலை செய்யும் கைதிகளின் ஊதியத்தை உயர்த்தும் அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. கே. என். குமாரசாமி** : சிறைச்சாலைகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றி விவாதிக்க, தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. க. ர. நல்லசிவம்** : தலைவர் அவர்களே, ஆயுள் கைதிகள் தண்டனைக்கால குறைப்பு பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

கைதிகளது கல்வித் தரத்தை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. தோ. மு. நல்லசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**Thiru K. RAMAMURTHY** : Sir, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 2,12,07,700 under Demand No. XI—Jails–be reduced by Rs. 100.'

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, தண்டனை காலத்தில் பாதி சிறையில் அனுபவித்து விட்டால், அவர்களை விடுதலை செய்வது பற்றி விவாதிக்க—என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

[1967 ஜூன் 29

**திரு. கோ. பாரதிமோகன் :** தலைவர் அவர்களே, நீண்டகாலம் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் கைதிகளுக்குக் கருணைகாட்டி அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். மருதாசலம் அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் தங்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணைகளை முன் மொழிகிறேன்:

சிறை வார்டர்கள் சம்பளத்தை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

சிறைக் கைதிகளுக்கு நல்ல முறையில் உணவு அளிக்கப்பட வேண்டும் என்பது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

கைதிகள் செய்யும் வேலைக்குக் குறைந்தபட்சம் சம்பளம் நிர்ணயித்து இந்தத் துறையில் அவர்களுக்குத் தேவையான சாமான்கள் வாங்கிக் கொள்ள அனுமதிப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. கோ. பாரதிமோகன் :** கைதிகளின் உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் அளித்து, அவை அவர்களின் குடும்பத்தாருக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—என் பெயரிலுள்ள கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"கோரிக்கை எண் XI—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,12,07,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். வரதராஜன் அவர்களும் திரு. ஏ. பாலசுப்பிரமணியன் அவர்களும் தங்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**(உ) கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத்துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பத்திரப் பதிவுத் துறைக் கான நிதிக் கோரிக்கையை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,25,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



1967 ஜூன் 29]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, கொள்கைப்பற்றி விவாதிக்க என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 76,25,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**THIRU K. VINAYAKAM :** Sir, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 76,25,400 under Demand No. V—Registration Department—be reduced by Rs. 100.'

**THIRU K. RAMAMOORTHY :** Sir, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 76,25,400 under Demand No. V—Registration Department—be reduced by Rs. 100'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ந. சவுந்தரபாண்டியன், ஏ. ஆர். மாரிமுத்து, எம். வில்லியம் ஆகியோர் தங்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள பத்திரப் பதிவு முறையால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை முன் மொழிகிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 76,25,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. க. ரா. நல்லசிவம் :** தலைவர் அவர்களே, சீட்டு நிதி (Chit funds) இயங்குகிற முறைகள் பற்றி விவாதிக்க என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 76,25,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது இந்த மூன்று கோரிக்கைத் தீர்மானங்களின் மீதும் அவற்றையொட்டி கொண்டுவரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் மீதும் விவாதம் நடைபெறும். சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மூன்று தீர்மானங்களின் மீதும் முதலிலே கூற வேண்டியதைக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளும் ஒன்றுக்கொன்று இணைந்து இல்லாவிட்டாலும் காலத்தை உத்தேசித்து மூன்றையும் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் சொல்லலாம்—பதில் சொல்லலாம் என்ற முறையில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக, இந்த மூன்று துறையைப் பற்றிச் சுருக்கமாக இன்றைய அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

நீதி நிர்வாகத்தைப் பொருத்தமட்டில் வெட்டுத் தீர்மானம் கொடுத் திருக்கிற அடிப்படையில் பார்க்கும்போது, அரசாங்கம் நீதித் துறையில் தலையிடக் கூடாது, அது ஒரு சுதந்திரமான துறையாக விளங்க வேண்டு மென்ற கருத்தை இந்த அரசாங்கம் முழுக்க, முழுக்க ஏற்றுக் கொள்ளு கிறது. அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கும் தயாராக இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நீதி மன்றங்கள் அமைப்பு முறையை மாற்றியமைக்க வேண்டும்—மக்களுடைய

இவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே பொருள் இல்லாத முறையில், பொருளற்றவர்கள், வறியவர்கள் நீதியை எளிதில் பெற முடியாமல் இருக்கிறது. முன்பு ஒரு சினிமாவிற்கு இன்றைய முதல்வர் அவர்கள் ஒரு வசனம் எழுதியிருந்தார்கள். அதாவது, சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீல் வாதம் ஒரு விளக்கு — அந்த விளக்கின் ஒளியை ஏழையால் எளிதில் பெற முடியாது என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த நிலைக்கு நிச்சயமாக விடக்கூடாதென்று இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் சிறிய வழக்குகளுக்காகச் செல்லக்கூடியவர்கள், சிறு சிறு வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள், கணவனால் கைவிடப்பட்டு அங்கு மெயின் டெனன்ஸ் கேட்டு முறையிட்டுக் கொண்டிருக்கிறவர்கள் வழக்கறிஞர்கள் உதவி இல்லாமல் தவிக்கிறார்கள். செஷன்ஸ் கோர்ட்டுகளில் கொலைக் குற்றம் செய்தவர்களுக்கும், மற்றபடி பெரிய குற்றங்கள் செய்தவர்களுக்கும் அரசாங்கம் தனது செலவில் வழக்கறிஞர்களை வைத்திருக்கிறது. ஆனால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் சிறிய குற்றங்கள் செய்ததற்காக அங்கு போய் நிற்கிற குற்றவாளிகளுக்கு நான் முன்பு குறிப்பிட்டது போன்று அவர்கள் நிர்க்கதியாக விடப்பட்டிருக்கிறார்கள். மெயின்டெனன்ஸ் கேட்டு வந்திருக்கும் பெண்களுக்கு உதவி புரிவதற்கு வழக்கறிஞர்கள் உதவியில்லை. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கும் அரசு வழக்கறிஞர்கள் உதவியைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இண்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல், மோட்டார் க்ளெயிம்ஸ் ட்ரிப்யூனல், என்று இப்படி பலவிதமான ட்ரிப்யூனல்ஸ் இருக்கின்றன. இந்த ட்ரிப்யூனல்களில் வழக்காடச் செல்லும் வழக்காளர்களுக்கு வழக்கறிஞர்களை பீஸ் கொடுத்துத்தான் தேட வேண்டியிருக்கிறது. ஆகவே சர்க்கார் தரப்பில் சில வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து ஒரு குழுவை ஏற்படுத்தி அந்தக் குழுவிலிருந்து பலரை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளுக்கு ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடிய வக்கீல்கள் என்ற முறையில் அனுப்பியும், தொழில் கோர்ட் மற்றும் க்ளெயிம்ஸ் ட்ரிப்யூனலுக்கும் அனுப்பினால் அது சிறந்த நன்மை பயப்பதாக இருக்கும். அந்தவிதமாகச் சென்று பணியாற்றுகிற வழக்கறிஞர்களை அவர்கள் மாஜிஸ்ட்ரேட் உத்தியோகத்திற்காக அல்லது டிஸ்ட்ரிக்ட் முன்சீப் உத்தியோகத்திற்காக ஏன் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் உத்தியோகத்திற்குக் கூட அவர்கள் வந்தால் அவர்களுக்கு தகுந்த சலுகை கொடுப்போம் என்று சர்க்கார் கூறினால் அந்தவிதமான பணி புரிவதற்கு ஏராளமான இளம் வழக்கறிஞர்கள் முன்வருவார்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இன்றைய கோர்ட் பீஸ் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டியிருக்கிறது. இந்த கோர்ட் பீஸை ஒரு கொடூரமான கோர்ட் பீஸ் என்றுதான் சொல்ல வேண்டி யிருக்கிறது. இன்று ஹைகோர்ட்டில் ஒரிஜினல் ஸைடில் உள்ள வழக்குகளை அரசாங்கம் புள்ளிவாரியாகப் பார்த்தால் கோர்ட் பீஸ் குறைந்த நேரத்தில் அதிகமான வழக்குகளும் பீஸ் கூட்டப்பட்ட நேரத்தில் குறைந்த வழக்குகளும் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே இந்த விதமான கோர்ட் பீஸ் கோர்ட்டுகளில் வழக்குகள் வருவதைத் தடுக்குமளவிற்கு " அப்ரஸிவ் நேச்சராக " இருக்கிறது. ஆகவே அதைக் குறைத்து வழக்குகள் கோர்ட்டுக்கு வந்து நியாயம் கிடைக்கக்கூடிய அளவிற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நீதித் துறையைப் பொறுத்த மட்டில் வழக்காட வருகிறவர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக வழக்குகளுக்கு வருகிற " பே மாஸ்டர் லிட்டிகன்ட்ஸ் " அங்கு இருக்கக் கூட இடம் இல்லாத அளவிற்குக் கீழ் கோர்ட்டுகளில் பல மணி நேரம் கால்கடுக்க கோர்ட்டார் முன் நின்று கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அங்குள்ள வழக்கறிஞர்கள் தாங்கள் இருப்பதற்குச் சரியான நாற்காலிகளோ அல்லது இருந்து எழுதுவதற்கு மேஜைகளோ இல்லாமல் இருக்கிற வழக்கறிஞர் எப்போது எழுந்து இடத்தைக் காலி செய்வார், [illegible] இருக்கக்கூடிய பரிதாபகரமான நிலை



கீழ் கோர்ட்டுகளில் இருக்கிறது. ஆகவே அதற்கு வேண்டிய தளவாடங்களை அரசு கோர்ட்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீதி செங்கோலுக்கு அடிபணியாது நடந்து வந்திருக்கிறது என்பதை எல்லோரும் அறிவர். செங்கோல் நீதியில் தலையிட்டு நீதி நிலை குலைந்ததாகவோ அல்லது நீதி சரிந்ததாகவோ சாதாரணமாக யாரும் இந்த நாட்டில் கருதியிருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். என்னை பொறுத்தவரையில் ஏறத்தாழ 11 ஆண்டுகளாக வழக்கறிஞராக இருந்து வரும் முறையில் செங்கோலுக்கு நீதி அடி பணிந்ததாக நான் பார்த்தது மில்லை, கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பதுமில்லை. ஆனால் ஒரு முக்கியமான விஷயம். அந்த நீதி செங்கோலுக்கு அடி பணிந்திருக்கிறது என்ற விஷயத்தைப் பற்றி ஒரு பத்திரிகையில் வந்த குறிப்பை இந்த அவையில் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களை நிறுவனராகக் கொண்டுவருகிற முரசொலிப் பத்திரிகையில் 26—4—1967-ல் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லி இருக்கிறது. அதாவது காஞ்சியில் முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் மாதவன் அவர்களுக்கும் வரவேற்புக் கொடுத்திருக்கிறார்கள் வழக்கறிஞர்கள். அந்தக் கூட்டத்தில் அவர்கள் பேசியதாக இந்தப் பத்திரிகையில் ஒரு விஷயம் கூறப்பட்டிருக்கிறது :— முற்பகல் 11-00

" நமது நாட்டில் விசித்திரமான நிலை இது வரை நிலவி வந்தது ! சில இடங்களில் தீர்ப்பு எழுதுவதற்கு முன் அரசாங்கத்தைக் கலந்து கொண்டு எழுதுவது உண்டு. இன்னும் சில இடங்களில் எது எழுத வேண்டுமோ எழுதிவிடுங்கள்; நான் கையெழுத்துப் போட்டுவிடுகிறேன் என்று கூறுவதுமுண்டு" என்று முதலமைச்சர் அவர்கள் கூறியதாக இருக்கிறது. அதற்கு அடுத்த இரண்டாவது பத்தியில்—

" அந்த நிகழ்ச்சியில் பேசிய சட்ட அமைச்சர் மாதவன் ஒரு நீதிபதி ஆளுங்கட்சியின் நலனுக்கு எதிராகத் தீர்ப்பு எழுதுவார் என்று தெரிந்தும், அவரை வேறு ஊருக்கு மாற்றினார்கள் என்ற சம்பவத்தை எடுத்துரைத்தார்.

அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு நமது காலத்தில் அது நடக்கவில்லையே ! என்று கேட்டார். இல்லை, அதற்கு முன் நடந்தது என்று மாதவன் கூறியதும் மகிழ்ச்சிக் கையொலி எழுந்தது" என்று கூறப்பட்டிருக்கிறது. அவைத் தலைவர் அவர்களே, இந்த வாசகம் உண்மையாக இருக்குமானால், நீதி அரசுக்கும் செங்கோலுக்கும் அடி பணிந்தது என்று கருதுகிறேன். இதைப்பற்றி விரிவான விளக்கத்தைச் சட்ட அமைச்சர் அவர்கள் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமான பத்திரிகையில் வந்தால் இதற்கு இவ்வளவு தூரம் மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை. என்றாலும், பொதுப்பணித்துறை அமைச்சரை நிறுவனராகக் கொண்டிருக்கிற " முரசொலி " என்ற பத்திரிகையில் வந்திருப்பதால்—அதிலே சர்க்கார் விளம்பரங்களும் வருகின்றன—இந்த அவையில் அதைப் பற்றிக் கேட்க வேண்டிய கடமை வழக்கறிஞன் என்ற முறையிலும், சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலும் எனக்கு இருப்பதால் அதை இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்று சப்-ஜட்ஜுகளுக்கு ரிட்டயர் ஆகிற வயது 55-ஆக இருக்கிறது. அதை 58-ஆக்க வேண்டுமென்று அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி சட்ட அமைச்சர் கூட கூறியிருக்கிறார். எனவே, இதில் உடனடியாகத் தலையிட்டு, சீக்கிரம் அவர்களுக்கு ரிட்டயர் வயது 58 என்று கொண்டுவர வேண்டும்.

மேலும், ரிட் ஜூரிஸ்டிக்ஷனைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. நமது தமிழகத்தில் உள்ள அநேக சட்டங்களில் சிவில் கோர்ட்டுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் செல்லக்கூடிய உரிமை கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே,

இனிமேல் இயற்றப்படக்கூடிய சட்டங்களில், ஒன்று சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும், இல்லையென்ருல் சென்னை உயர் நீதி மன்றத்திற்கு எதிர்த்து அப்பீல் செய்யக்கூடிய ரைட் ஆஃப் அப்பீல் — ரெப்ரெஸென்ட்டேஷன் ஆஃப் பீப்பிள் ஆக்டில் எப்படி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யக்கூடிய உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதோ — அதே போன்று, **Right of appeal as in the Representation of the People Act on fact and on law** அப்பீல் செய்ய உரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன். காரணம் என்ன என்ருல், அநேக சட்டங்களில் சிவில் கோர்ட்டுக்குச் செல்லுகிற உரிமை இல்லாதபடியால், பாதிக்கப்பட்டவர்கள் ரிட் போட சென்னை உயர் நீதி மன்றத்திற்கு வருகிருர்கள். அவர்கள் ரிட் ஜூரிஸ்டிக்ஷனுக்கு ஆளாகும்போது **The High Court cannot interfere in error of law when it finding is arrived at by a tribunal or a local quasi-judicial authority on appreciation of evidence or misconstruction of certain provisions of the Act** என்று கூறி, அவர்கள் தள்ளிவிடுகிருர்கள். “**On facts**” ரிட் ஜூரிஸ்டிக்ஷனில் இன்டர்ஃபியரன்ஸ் இல்லை. “லா” வைப் பொறுத்தமட்டிலும் கூட ஜூரிஸ்டிக்ஷனைக் குறைத்திருக்கிருர்கள். எல்லோரும் ரிட் ஜூரிஸ்டிக்ஷனுக்கு எளிதாக வர முடியவில்லை. இனி இயற்றும் சட்டங்களில் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ரிட் ஜூரிஸ்டிக்ஷனில் முதலில் ஒரு ரிட் பெட்டிஷன் டிஸ்மிஸ் ஆனால் அப்பீலுக்குப் போக 100 ரூபாய் கட்டணம் வைத்திருக்கிருர்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

ஹைக்கோர்ட்டைப் பொறுத்த அளவில் இன்று வழக்குகள் காலதாமதமாகித் தேங்கிக் கிடக்கவில்லை என்று தான் நான் கூறுவேன். ஓரளவுக்குத் தேக்கம் ஏற்பட்டது என்ருல், இந்த டாக்குமெண்ட்டுகளை ட்ரான்ஸ்லேட் செய்து அதை அச்சடிப்பதில் சில நேரத்தில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, அந்த முறையில் தனியார் பிரஸ்களுக்கும் அந்த உரிமையை அதிகமாக வழங்கினுல், அந்த டாக்குமெண்ட்டுகளை எளிதில் ட்ரான்ஸ்லேட் செய்து, அச்சிட்டு, கோர்ட்டுக்குச் சீக்கிரமாகக் கொண்டுவர ஏற்பாடு செய்தது போல ஆகும்.

அடுத்து, பழைய மாவட்ட ஜூரிஸ்டிக்ஷனை—டிஸ்ட்ரிக்ட் ஜூரிஸ்டிக்ஷன் — மறு பரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரு தாலூகாவிற்கு இரண்டு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளாவது வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அந்த முறையில், சாத்தான்குளத்தில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தேவை என்று கூறிக்கொள்கிறேன். மேலும், தாலூகாவிற்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் தேவை. அந்த முறையில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை திருச்செந்தூரிலோ, சாத்தான்குளத்திலோ வைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜெயிலைப் பொறுத்தமட்டில், இன்று குற்றவாளிகள், பெரிய தண்டனை அனுபவிக்கிறவர்கள், ஜெயிலுக்குச் செல்லுகிருர்கள். கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக தண்டனை அனுபவிக்கிறவர்கள் ஜெயிலில் இருக்கிருர்கள். அந்தச் சிறைச்சாலைக்குச் சாதாரணமாக குடி குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களும் அனுப்பப்படுகிருர்கள். சிறு சிறு குற்றங்கள் செய்து தண்டிக்கப்பட்டவர்களும் அங்கு அனுப்பப்படுகிருர்கள். இந்த விதமாக சிறு குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு அனுப்பப்படுகிறவர்கள், பெரிய குற்றங்களைச் செய்தவர்களோடு அங்கே பழக நேரிடுகிறது. அப்படி அவர்கள் பழக நேரிடுகிற போது, சிற்சில சமயங்களில் தீய வழக்கங்களை அங்கிருந்து கற்று வெளியே வருகிருர்கள். சிறு குற்றவாளிகளாகச் செல்லுகிறவர்கள் ஹார்டண்ட் கிரிமினல்ஸோடு அவர்களுக்கு ஏற்பட்ட அஸோஸியேஷன் காரணமாக அவர்கள் பெரிய குற்றங்கள் புரிய ஏதுவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்குத் தனிச் சிறைச்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிக்கிறவர்கள் அங்கே வேலை செய்கிருர்கள். அதற்கு அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் விடுதலை பெறுகிற நாள் அன்று அவர்கள் கணக்கில் சேர்ந்துள்ள தொகையை வழங்குகிருர்கள். அந்த விதமாக வழங்குகிற நிலையில், விடுதலை என்று சொன்னவுடன் ஏற்படுகிற உற்சாகத்தில், அந்தத் தொகையை வாங்கி வர முடியாதபடி, சிறைச்சாலையை விட்டு எப்போது வெளியே செல்வோம் என்று வெளியே வந்துவிடுகிருர்கள். அவர்கள் அந்தத் தொகையை வாங்காமல் வெளியே வந்துவிடுகிருர்கள் என்ற நிலைமை ஏற்படுகிறது. சிறைச்சாலையிலிருந்து ஒரு கைதிக்கு பணமோ, மற்றவைகளோ கொடுக்கப்பட வேண்டியவைகள் சரியான முறையில் கொடுக்கப்பட்டு விட்டன என்று ஒரு ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் ஸர்ட்டிஃபை செய்வது நலம் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், ஜெயில் ஆடிட் என்பதைப் பொறுத்த மட்டில் இப்போது இருக்கிற முறையை மாற்றி, நல்ல பெரிய ஆடிட் குழுவை அமைத்து, ஆடிட் வேலையை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகளிலிருந்து வெளியே வருகிறவர்களுக்கு நல்ல முறையில் வேலை தேடித் தரும் வாய்ப்பை சர்க்காரின் கீழுள்ள பொதுப்பணித் துறைகளில் தொழில் துறைகளில் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வெ. முனுசாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நீதி நிர்வாகத்திற்கு அளிக்க வேண்டிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலும், பிறருக்காக வழக்காடும் பணியை ஏற்றிருக்கிற வழக்கறிஞன் என்ற முறையிலும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு அளித்திருக்கிற குறிப்புக்களைப் படித்துப் பார்க்கும்போது, நீதி நிர்வாகத்தில் இந்த ஆண்டு சென்ற ஆண்டை விட வருமானம் கூடியிருக்கிறது, ரூ. 6,000 என்பதைக் காண்கிருேம். அதையும் மனத்திலே கொண்டு, நீதி நிர்வாகம் நிலைத்து இருக்க வேண்டும், நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு, அரசினருக்கு ரூ. 1,98,31,800 வழங்க வேண்டுமென்று இந்தக் கோரிக்கையைச் சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிருர்கள்.

நீதியின் சின்னமாக தராசு இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிருேம். ஒரு தட்டு சாய்ந்தோ, மறு தட்டு சாய்ந்தோ இருக்கக் கூடாது. சமநிலை இருக்க வேண்டுமென்று இந்தச் சின்னத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருேம். இந்த நேரத்தில் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவரை, சட்டம் பயின்ற வழக்கறிஞராக இருக்கக் கூடியவரை நாம் சட்ட அமைச்சராகப் பெற்றிருக்கிருேம். அவர் ஏற்கனவே இந்த மன்றத்தில் பேசிய கருத்துக்களை, இன்றைய தினம் பிரதான எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற திரு. மார்ட்டின் அவர்கள் எனக்கு முன்னுல் பேசியிருக்கிருர். ஆகவே, சட்டங்களை வந்த 100–120 நாட்களுக்குள் மாற்றி அமைக்க முடியுமா என்று பார்த்தால், இயலாது என்று உணர்வார்கள். அந்தக் குறைகளைப் போக்கும் வகையில் சட்டங்களை நல்லதொரு நிரந்தர அடிப்படையில் நிச்சயமாக அவர்கள் மாற்றி அமைப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த நம்பிக்கையின்பேரில் தான் இந்த அரசும் பணியாற்றுகிறது என்று கருதுகிறேன். அந்த வகையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். ஏற்கனவே ஆங்கிலேயர் காலத்தில் நீதி நிர்வாகம் ரெவின்யூ போர்டு நிர்வாகத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. அது கூடாது என்ற காரணத்தினுல் அதைப் பிரித்து வைத்தார்கள். அதைப் பிரித்து

வைத்த பிறகு இன்றைய தினம் நீதி தனியாக நிலைத்து நிற்கிறது என்பதைக் காண்கிறோம். இருப்பினும், தாசில்தார், டெப்யூடி தாசில்தார், சப் கலெக்டர் ஆகியோர்கள் ஸி. ஆர். பி. ஸி. பயிற்சி பெற வேண்டும் என்ற காரணத்தினால் அவர்களுக்குப் பயிற்சி பெறும் காலம், டிரெயினிங் பீரியட் என்று வைத்திருக்கிறார்கள். அது பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வழக்கறிஞர் என்ற வகையிலே, ஏதோ தையல் கடையில் வேலை பார்ப்பவர் துணி தைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இருக்கிற துணிகளையெல்லாம் வெட்டி நாசம் செய்வதுபோல, பயிற்சி பெறும் அதிகாரிகள் நீதிபதிகளாக இயங்கும்பொழுது, அது நீதித்துறையில் மக்களை பாதிக்கின்ற வகையில் அமைகிறது. சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இருக்கிற சில வழக்குகளை எக்ஸிக்யூடிவ் லெவலில் இருக்கிற தாசில்தார், டெப்யூடி தாசில்தார், செகண்டு கிளாஸ் மாஜிஸ்டிரேட், தேர்டு கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாக பயிற்சி பெறுகிற நேரத்தில், அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்த நேரத்தில் எந்த விதத்தில் நீதி கோரிச் செல்லும் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சட்ட அமைச்சர் அவர்கள் உணர்வார்கள், நாமும் உணர்கிறோம். ஆகவே, இந்தப் பயிற்சியை தேவை யற்ற ஒன்றாக நான் கருதுகிறேன். ஸி. ஆர். பி. ஸி. பயிற்சி பெற வேண்டுமென்றால் அதற்கான படிப்பை படித்துவிட்டு தேர்வையும் எழுதிய பிறகு, வேண்டுமானால் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் உட்கார்ந்து கொண்டு பார்வையாளராக இருந்து, அந்த அனுபவத்தைக் கொண்டு வேண்டிய அளவுக்குப் பயிற்சி பெறலாம் என்று கருதுகிறேன். அந்த அளவில் அதை மாற்றி அமைத்தால் நீதி நிலைத்து தனியாகப் பணி புரிய உதவியாக இருக்கும். அதற்கான ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இது தான் எல்லோருடைய அபிப்பிராயமும் என்றும் கருதுகிறேன்.

அடுத்து நீதியை அளிக்கும்பொழுது, தீர்ப்பு அளிக்க காலதாமதம் ஆகிறது. அதனால் மக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. கிரிமினல் கோர்ட்டுக்களைப் பொறுத்த வரையில் மூன்று மாத காலத்திற்குள் முடித்தாக வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. ஆனால், முனிசிப் கோர்ட்டுகளில் அப்படி இல்லை. வருஷக் கணக்கில் கேஸ்கள் பெண்டிங்காக இருக்குகின்றன. இதனால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். வழக்கு என்ற சொன்னவுடனே முதலில் அவர்கள் வழக்கறிஞருக்குப் பீஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறகு அந்த ஊரில் கோர்ட்டு இல்லை என்றால், கிராமங்களிலிருக்கும் ஏழை எளிய மக்கள் கட்டுச் சோற்றைக் கட்டிக் கொண்டு பஸ்ஸிலே, ரயிலிலோ பிரயாணம் செய்து கோர்ட்டுக்கள் இருக்கிற இடத்திற்கு வந்து சேர வேண்டியிருக்கிறது. அல்லது ஹோட்டல்களில் அவர்கள் சாப்பிட வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் அவர்களுக்கு ஏராளமாகச் செலவாகிறது. பல இடங்களில் வருஷக் கணக்கில் 2, 3 ஆண்டுகளாகக் கூட சிவில் சூட்டுக்கள் பெண்டிங்காக இருக்கின்றன. அப்படி பெண்டிங்காக இருக்கிற நேரத்தில் என்ன செய்கிறார்கள் என்றால், வழக்கை வேறு ஒரு முன்சீப் கோர்ட்டுக்கு மாற்றி விடுகிறார்கள். இதைப்பற்றித் தான் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கனவே ஒரு வழக்கறிஞரிடம் ஒரு வழக்கை ஒப்படைத்து விட்டால், அவர் பிளேண்டு பைல் பண்ணுவது, பிறகு இஷ்யூஸ் ப்ரேம் பண்ணுவது இப்படி படிப்படியாக கிட்டத்திட்ட கேஸ் ஒரு வருஷ காலம் நீடித்துவிடுகிறது. இவ்வளவுக்கும் வழக்கறிஞருக்குக் கட்டணம் கொடுத்துவிட்ட பிறகு, கேஸுகள் அதிகமாகப் பெண்டிங் இருப்பதினால், சில ஓ. எஸ். நம்பர்கள் வேறு ஒரு கோர்ட்டுக்கு மாற்றப்படும் என்று சொல்லிவிடுகிறார்கள். வழக்கறிஞர் கையில் போன காசு திரும்பி வராது என்பது எல்லோருக்கும் தெரியும். கேஸ் வேறு ஊர் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது என்று சொன்னவுடனேயே அந்த வழக்கறிஞர் கட்டைக் கட்டி கையில் கொடுத்து விடுகிறார். இந்தக் கட்டை கட்டிக் கொண்டு கட்சிக்காரர் வேறு





ஊருக்குப் போய் அங்கே ஒரு வழக்கறிஞரை நியமித்துக் கொள்ள வேண்டும். அந்த வழக்கறிஞருக்கு திரும்பவும் கட்டணம் கொடுக்க வேண்டுமே. அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது போல, மேலே இருந்து பெண்டிங்காக இருக்கிறது, சீக்கிரம் பைசல் செய்யவேண்டும் என்று தாக்கீது வந்தவுடனேயே சாட்சியத்தை ஒழுங்காக பதிவு செய்யாமலே, ஏதோ மேலிருந்து உத்தரவு வந்திருக்கிறது என்ற காரணத்தினால், தீர்ப்புக்களை அவசரம் அவசரமாக எழுதி முடிக்கிற நிர்ப்பந்தத்திற்கு நீதிபதிகள் ஆளாகிறார்கள். அதனால் நீதி பாதிக்கப்படுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் செஞ்சிப் பகுதி மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். திண்டிவனம் வட்டத்தில் அது சேர்ந்திருக்கிறது. 7, 8 ஆண்டுகளாக செஞ்சிப் பகுதியிலுள்ள மக்கள் திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் போன்ற இடங்களிலுள்ள கோர்ட்டுக்களுக்கு வழக்குகள் மாற்றப் படுவதால், மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நீதி கோரி வருகின்ற மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். வேண்டுமானால் பணக்காரர்கள் எதையும் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால், ஏழை எளிய மக்கள், ஏதோ கிடைத்ததைக் கொண்டு வந்து வக்கீலிடம் கொடுத்துவிட்டு நியாயம் பெறவேண்டும் என்று நினைத்தால் இப்படி ஊர் ஊராக வழக்கை மாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் இருக்கிற நிலத்தையும் விற்று வழக்காடிவிட்டு, அம்போ என்று நடுத்தெருவில் வந்து நிற்க வேண்டிய நிலைமைதான் வரும். ஆகவே, கேஸ்கள் பெண்டிங்காக இருக்கிறது என்றால், கேஸ்களைத் தனியாகப் பிரித்து அந்த இடத்திலேயே வேறு ஒரு கோர்ட்டை அமைத்து அவைகளைப் பைசல் செய்யும்படிச் செய்தால், உண்மையிலேயே பொதுமக்களுக்கு அந்த ஏற்பாடு மிகவும் சௌகரியமாக இருக்கும். செஞ்சியைத் தனியாகப் பிரித்து அங்கு ஒரு தனிக் கோர்ட்டு இருக்க வேண்டும்.

சப் மாஜிஸ்டிரேட் இப்பொழுது கெஜடெட் ஆபீசராக இருக்கிறார்கள். இப்பொழுது ஒரு நடைமுறை இருந்து வருகிறது. அதாவது சில இடங்களில் கிரிமினல், சிவில் இரண்டு கேஸ்களையும் இணைத்து நீதியை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சப் மாஜிஸ்டிரேட் கெஜடெட் ஆபீசர், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கெஜடெட் ஆபீஸர், எஸ். டி. எம். கெஜடெட் ஆபீஸர், இப்படி இருக்கிற நேரத்தில் ஒவ்வொரு தாலூக்காவிலும், கிரிமினல் சிவில் இரண்டு கேஸ்களையும் இணைத்து நடத்துகின்ற ஒரு நீதிபதியை நியமித்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆகவே, அந்த வகையில் கோர்ட்டுக்களை மாற்றி அமைத்தால் பயன் உள்ளதாக இருக்கும். உயர் நீதி மன்றம் உத்தரவு போட்டால்தான் எல்லையை ஒரு கோர்ட்டிலிருந்து இன்னொரு கோர்ட்டுக்கு மாற்ற முடியும். அதனால் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, பொது மக்கள் சரியான முறையில் காலதாமதம் இல்லாமல் நியாயம் பெறும் அளவுக்கு எல்லைக் கோட்டுக்களை மாற்றி அமைத்து, அதற்குத் தகுந்தபடி கோர்ட்டுக்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோர்ட்டுக்களுக்குச் சென்றால், வழக்கறிஞர்கள் மட்டுமல்லாமல் மரத்தடியில் பெடிஷன் ரைட்டர்ஸ், டௌட்ஸ் என்று சொல்லப்படுபவர் பலரைப் பார்க்கலாம். அவர்கள் வழக்கறிஞர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும் இடையில் இருந்து கொண்டு, ஒருவருக்கு ஒருவர் நேர் தொடர்பு இல்லாமல் செய்து, அவர்களே வக்கீலுக்கு பீஸை வாங்கிக் கொடுக்கும் நிலைமையில், கட்சிக்காரர்களோடு அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு அவர்களை உறிஞ்சிவிடுகிறார்கள். அந்த நிலைமை நிச்சயம் மாறவேண்டுமென்றால், பொதுமக்கள் நல்ல முறையில் நியாயம் பெறவேண்டுமென்றால், இந்த வக்கீல்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும் இடையே உள்ள பெடிஷன் ரைட்டர்ஸ், டௌட்ஸ் இவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும். இவர்கள் இடையிலே இருந்து கொண்டு கட்சிக்காரர்களிடமிருந்து காசை வாங்குவது, வக்கீல்

களுக்குக் கொடுப்பது என்ற நிலைமை இருப்பதினால், கேஸ் தோற்று விட்டால் "வக்கீலைப் போய் கேள்" என்று சொல்லுவதும், வக்கீலைக் கேட்டால் " நான் உன்னை நேராகப் பார்த்ததே இல்லை " என்று சொல்லுவதும், இப்படிப்பட்ட நிலைமையில் கட்சிக்காரர்களை நேரிடையாக வக்கீல்களிடம் பேசவிடாமல் செய்து விடுகிறார்கள். இந்த நிலைமையை சட்ட அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள், அவர்கள் வழக்கறிஞராக இருந்தவர். ஆகவே, பெடிஷன் ரைட்டர்ஸ், டௌட்ஸ் ஆகியோர்களை ஒழிக்கிற அளவுக்கு இருக்கிற சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, ஜுடீஷியல் ஆபீஸர்ஸ் ரிடையர் ஆகும் வயதை உயர்த்தலாமா என்ற அபிப்பிராயம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் இந்த மாதிரி உத்தியோகஸ்தர்கள் ரிடையர் ஆகும் வயது உயர்த்தப்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், பள்ளி ஆசிரியர்கள், பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள், அந்தத் துறையில் பணிபுரியும் கெஜடெட் ஆபீஸர்கள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் அஸிஸ்டெண்டு என்ஜினியர் போன்றவர்கள் ரிடையர் ஆகும் வயது உயர்த்தப்பட்டிருக்கிறது. லாயர்ஸ், ஜட்ஜஸ் என்று எடுத்துக் கொண்டாலும் அவர்களும் டெக்னிகல் குவாலிபிகேஷன் உடையவர்களாகத் நான் கருதப்பட வேண்டும். எப்படி ஒரு என்ஜினியர் பி. ஈ. படித்துப் பட்டம் பெறுவதற்கு பல ஆண்டுகள் ஆகிறதோ, அதுபோலத்தான் ஜட்ஜஸ் டிஸ்டிரிக்ட் முனிசீப்ஸ், சப் மாஜிஸ்டிரேட்ஸ் ஆகியோர்களும் பட்டம் பெற்றவுடன் நீதிபதியாக வந்துவிட முடியாது. பட்டப் படிப்பு முடிந்த பிறகு, சட்டக் கல்லூரி படிப்பு முடிந்த பிறகு, அப்ரெண்டிஸாக இருந்து, நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி அனுபவம் பெற்று, பிறகு எம்.பி. எஸ்.ஸி. மூலமாக செலக்ஷன் செய்யப்பட்டு நீதிபதியாக வர வேண்டும். ஆகவே, இந்த வகையில் பார்த்தால் ஒருவர் 28, 29 வயதில் தான் நீதிபதியாக வர முடியும். அதுவும் நல்ல சிபாரிசு இருக்குமானால்; இல்லையென்றால் 30, 35 வயதிற்குத் தான் நீதிபதியாக வர முடியும். ஆகவே, இவர்களெல்லாம் 55-வது வயதில் ரிடையர் ஆக வேண்டும் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமானதாக இருக்காது என்று கருதுகிறேன். என்.ஜி. ஓ.க்களாக இருந்தாலும், அவர்களும் பல வருஷம் பணி புரிந்து, உத்தியோக உயர்வு பெற சப் மாஜிஸ்டிரேட், முனிசீப்பாக எம்.பி. எஸ். ஸி. மூலம் செலக்ஷன் ஆகித்தான் வரமுடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த யோசனையை என்.ஜி.ஓ. அதிகாரிகளும் எதிர்க்கமாட்டார்கள். கீழே இருக்கும் இளைஞர்களுக்கு வேண்டுமானால் சிறிது தயக்கம் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு பிரமோஷன் பிரிவெண்டு செய்யப்படமாட்டாது, போஸ்டுபோன் தான் ஆகும், 2, 3 வருஷங்களுக்குத் தள்ளிப் போகும், அவ்வளவு தான். ரிடையராகும் வயதை 58 ஆக உயர்த்தினால், இப்பொழுதிருப்பவர்களுக்கும் 58 வயது தான், வளர்ந்து வருகிற சமுதாயத்திலுள்ள இளைஞர்களுக்கும் 58 வயதுதான். அப்படி வருகிறபொழுது வேண்டுமானால் 3 ஆண்டுகளுக்கு உத்தியோக உயர்வு தள்ளிப் போகலாம். அவ்வளவுதான். அதைத்தவிர வேறொன்றும் பாதகம் ஏற்படாது. இப்படி இருக்கும் போது, திடீரென்று ஓய்வு பெறுகிறார்கள் என்றால், அவர்களுக்கு கிராசுடி தருகிறார்கள். அதோடு சம்பளத்திற்குத் தக்கபடி, பென்ஷனாகத் தரும்போது, சம்பளத்தில் எட்டில் மூன்று பாகம் பென்ஷன் ஆகவும், 15 மாதச் சம்பளம் கிராசுடியாகவும், அதோடு ப்ராவிடெண்ட் பண்ட் பணத்தையும் தருகிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்டு, மாதாமாதம் பென்ஷன் கொடுக்கிறோம். அந்தத் தொகையை மூன்று வருடம் தேக்கி வைத்தால், அரசாங்கத்திற்குப் பலன்தான் இருக்கும். ஆகவே, இந்த வயதை உயர்த்திக் கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.





அடுத்து, சிறைச்சாலை பற்றிப் பேசினார்கள். உண்மையிலேயே மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், இந்தியன் பீனல் கோட் குற்றவாளிகளோடு சேர்த்து வைக்கப்படுவதால், முதலில் சாராயத்தைக் காய்ச்சிவிட்டு சிறைக்கு வந்தவன், வெளியே வந்தவுடன் கத்தியை எடுத்துக் குத்திவிட்டு மறுபடியும் சிறைக்குப் போகிற நிலைமைதான் உருவாகிறது. அந்த அளவிற்கு அவன் மனதை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பம் தான் சிறைச்சாலையில் இருக்கிறது.

என்னுடைய ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியிலிருந்து இன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கும் நண்பர்கள், திருப்பித் திருப்பி குற்றத்தை எடுத்துச் சொல்லுகிறார்களே தவிர, மாற்று என்ன என்று சொல்லவில்லை. சொல்லுகின்ற குறைகளையும் சொல்லிவிட்டு, அதற்கு என்ன பரிகாரம், அதை எப்படிப் போக்கலாம், அதற்கான சாத்தியக் கூறுகள் என்னென்ன என்றும் குறிப்பிட்டால் நலமாக இருக்கும். மதிப்பிற்குரிய திரு. மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள், செஷன்ஸ் கோர்ட்டில், செஷன்ஸ் வழக்குகளுக்கு அரசினரே வக்கீல்களை ஏற்படுத்துவது போல, மற்றும் சிறிய கேசுகளுக்கும் ஸ்டேட் ப்ரீஃப் கொடுக்க வேண்டும் என்றார்கள். அது எப்படி உசிதம் என்று தெரியவில்லை. செஷன்ஸ் கோர்ட்டில், 7 வருஷம், 5 வருஷம் அல்லது ஆயுள் தண்டனை கொடுக்கக் கூடிய நிலையில், பண வசதியின்மை காரணமாக ஏதாவது பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அரசாங்கம் தாங்களே வக்கீலை நியமித்து ஏற்பாடு செய்கிறார்கள். அதையே சிறிய சிறிய கேசுகளுக்கும் செய்வது என்பது, பிக் பாக்கெட், 54 ஸி.ஆர்.பி,ஸி. கேசுகள் இவற்றிற்கும் கொடுப்பது என்பது எப்படி முடியும் என்று தெரியவில்லை. குற்றங்களைச் சொல்லும் எதிர்க் கட்சிக்காரர்கள், அவற்றை எந்த வகைகளில் நிவர்த்திக்கலாம் என்றும் குறிப்பிட வேண்டும்.

சிறைச்சாலை பற்றிச் சொல்லும்போது, சிக்கல்கள் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. ஒரு சப் ஜெயிலில் ஒரு குற்றவாளியை ரிமாண்ட் செய்யும்போது, அவன் உள்ளே பயந்து, பயந்து நுழைகிறான். ஆனால் அங்கே இருக்கும் கில்லாடி ஒருவன், " அடே, நாளைக்கு மாஜிஸ்ட்ரேட் கேட்டால், எனக்குத் தெரியாது, நான் குற்றவாளியல்ல " என்று சொல்லுடா என்று சொல்லிக் கொடுக்கிறான். ஆகவே உள்ளே இருக்கின்றவன் வருகிறவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான். அவனை கேசுக்குத் தயார் செய்கிறான். ஆகவே, மதுவிலக்குக் குற்றவாளியை தனி அறையிலும், இந்தியன் பீனல் கோடின் கீழ் தண்டிக்கப்பட்டவனை தனியாகவும் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் சிறு குற்றம் செய்து உள்ளே போகிறவன் அதிகமாகக் கெட்டுப் போகாமல் இருப்பான்.

பரவலாக கோர்ட் பீஸ் ஸ்டாம்பு, தட்டுப்பாடு இருக்கிறது. என்னுடைய ஒரு கருத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது, முன்சீப் கோர்ட்டில் பத்திரம் விற்கிறார்கள். அதற்குப் போஸ்ட் ஆபீசில் உள்ளது போல தனியாகக் கிளார்க்கு போட்டு, ஸ்டாம்புகளை விற்றால் நலமாக இருக்கும். தனிப்பட்டவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஸ்டாம்புகளைப் பதுக்கி வைத்துக் கொண்டு, வேண்டியவர்களுக்கு விற்கிறார்கள். ஆகவே அதை மாற்றி, தனிக் கிளார்க் போட்டு அவரே விற்று ட்ரெஷரியில் பணத்தை டெபாசிட் செய்யும் முறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். ஆகவே, இந்த ஏஜெண்ட்ஸ் லேல் முறை மாற்றப்பட வேண்டும்.

வழக்கறிஞர் என்கிற முறையில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். லீகல் ப்ராக்டிஷனர் பீஸ் என்று இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். அது ஆங்கிலேயன் காலத்தில் ஸ்மால்காஸ் வழக்குகளுக்கு 100-க்கு 5 ரூபாய் என்றும், ஒவ்வொரு ஓ. எஸ்-க்கும் 100-க்கு ரூபாய் 7 என்றும் மினிமம் ஓ. எஸ். ரூபாய் 25 என்றும் ஏற்படுத்தியிருந்தார்கள். ஒரு வழக்கின் மதிப்பு ரூ. 1,000 அல்லது

[திரு. வெ. முனுசாமி] [1967 ஜூன் 29

ரூ. 2,000 என்று இருந்தாலும் நிலத் தீர்வை அடிப்படையில் நிர்ணயிக்கின்ற மார்க்கெட் ரேட்டில் பீஸ் முடிவு செய்யப்படுகிறது. அப்படிப் பார்க்கும் போது, ரூ. 300, ரூ. 250 என்று கேஸ் வந்தால், பீஸ் 21 ரூபாயாக இருக்கும். அந்த வழக்கு இருக்கும் காலம் 2 வருஷம், அல்லது 3 வருஷம் என்று ஆகலாம். வக்கீல்களுக்கு பீஸ் போடும் போது, காஸ்ட் லிஸ்ட் அல்லது செலவு புள்ளிபோடும்போது, கூடுதலாகவும் எதுவும் போட முடியாது. இது ஆங்கிலேயன் காலத்தில் போடப்பட்டது. இதை மாற்றியமைத்தால் பொதுமக்களுக்கும் நன்மை ஏற்படும், வக்கீல்களுக்கும் பலன் ஏற்படும். சாதாரணமாக ரூ. 300 ரூ. 500 என்றுதான் வழக்குகள் வரும், குறிப்பாக எங்கள் பகுதியில். ரூ. 10,000 அல்லது ரூ. 20,000 என்று புரோ நோட்டு வழக்குகள் வருவதில்லை. அந்தக் கேசுகள் முடிய 4 மாதம், 6 மாதம் ஆகலாம். ஆக அவனுக்குக் கிடைக்கும் ரூ. 10, 15 ரூபாய்க்கு வக்கீல் எழுந்து, எழுந்து எப்பொழுதும் உட்கார வேண்டும். இவற்றை யெல்லாம் மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த அமைச்சரவை மாற்றும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே இந்த மானியம் மிக மிக அவசியமானது. அதுவும் நீதிக்கு மிக முக்கியமானது. இவற்றை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, with regard to the three Demands now under discussion, I wish to state a few salient points. Sir, it is a well known adage that justice delayed is justice denied. This is very much in practice in our State and probably in other States also. Now, the whole process by which a person who seeks remedy in a court of law is based upon the requirements that were there during the old British rule when the conception of the Welfare State was not in existence. To-day the problem is with regard to a person who seeks a remedy in a court of law. He can never get it in the shortest possible time. I am sure the two brilliant advocates who adorn the Treasury Benches will realise this aspect of the matter and do something in that direction.

Sir, it is a well known fact that the first one hour in a court of law is taken for adjourning or postponing most of the cases. Every day for one hour they go on reading a particular file and say that the case is adjourned or postponed to a particular day. Just imagine, if we total the number of hours lost in a particular year, how many hours it would come to. So far as litigation is concerned, in a normal situation a litigant will never go to the court for the first two or three occasions because it will be automatically adjourned. This sort of thing must go and proper care must be taken by the present Ministry to reorganise the entire Judicial system and scrap all the old laws which are obstructing the quick disposal of these cases and also see that cases are disposed of as quickly as possible. Otherwise, what would become of the fate of a number of litigants? Now, there is a demand before the House for the grant of a few crores of rupees but the actual problem is that a fantastic amount has been spent by the poor litigants to seek remedy in a court of law. If we total up all these amount, it will be a very huge amount. I am quite sure the Hon. Minister is aware of it. In this connection, I will illustrate a pathetic case. Let us presume that a gentleman [illegible] a motor car accident and he has sustained a fracture



1967 ஜூன் 29] [Dr. H. V. Hande]

of his rib or joint. If he has to get some amount from an Insurance company, he has to spend about Rs. 2,000. The Insurance comapny may give only Rs. 3,000 but the poor man has to spend Rs. 2,000. If he is working in a Government Office, he cannot go o the Office for a number of months. Is this justice? Are we to tolerate this kind of a situation? I want the Hon. Minister to examine this matter and do something about it.

So far as the difficulties of the lawyers in the High Court are concerned, I had an opportunity to meet a number of lawyers when I contested for the Graduates' Constituency. When I asked them about their grievances so that I could refer to them in the other House, they stated that they do not even have the facilities of ordinary convenience like a bathroom etc. Probably this situation has now changed. I am bringing these things to the notice of the Law Minister so that he may examine them and see that something is done.

I will briefly touch upon the subject of Registration. A number மு. ப. 11-30 of complaints have come to me with regard to Registration. A peculiar new rule has been introduced that only those who have put in a service of six years as Lower Division Clerks and two years as Assistants can be promoted to even vacancies reserved for Backward Classes. We talk in season and out of season on behalf of Backward Classes. This is a new rule which goes totally against the Harijans. I do not know why such a rule has crept in. There was a provision under which Backward Classes got promotion without having to satisfy these requirements of six years and two years. Now even the members of the Backward Classes have to satisfy their requirments before they got promotion. This rule was passed recently by the Inspector-General of Registration. Now that it is brought to the notice of the Government, I hope the Government will reverse the rule and see that Backward Classes are given the facility they deserve. The Vaidyanathan Committee has gone into this question and its report is available with the Government.

Sub-Registrars occupy a very, very pivotal position and a heavy responsibility is showered on them. But their pay is only Rs. 150. For the responsibility that is a owered on them, they deserve a pay of Rs. 600 or 700. Because of the low pay and the heavy responsibility, there is the dangerous possibility about which every Member knows namely corruption.

A new method of filing documents has been introduced. The Hon. Minister for Law referred to it in his introductory speech. This is a peculiar thing which has come recently. Formerly all the documents that were registered used to be written in a book. According to the new filing system, they are filed between plastic clips—I do not know what exactly they are. A person who has got influence in the Sub-registrar's office can quietly get the document removed and substituted by other documents. There should be a big book in which each document is properly written. I do not

know who has brought in this new practice. This is a dangerous trend which will give considerable scope for substituting documents. I understand that this was done with a view to minimise expenditure to the Government. But the advantages that would accrue are completely offset by the tremendous disadvantages that would result from this new procedure. I only hope that the Minister will look into this matter. Thank you, Sir.

***திரு. ச. துரைசாமி :** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில், நீதி-நிர்வாகம், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவுத் துறை ஆகிய மூன்று தலைப்புகளில் 'சிறைச்சாலை' என்கிற தலைப்பின் கீழ் எனது கருத்துக்களைச் சொல்லுகின்றேன். காரணம், ஏற்கனவே இருந்த அரசால், மொழிப் போராட்டத்தின்போதும், விலைவாசிப் போராட்டத்தின்போதும், நான் கைது செய்யப்பட்டு, நாலைந்து முறை சிறைச்சாலைக்குச் சென்று வந்திருக்கிறேன். இதன் காரணமாக, சிறைக்குள்ளே இருக்கக்கூடிய மக்கள் எப்படிப்பட்ட நிலைமையிலே நடத்தப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். சிறைச்சாலைகளில் உள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் நீக்க வேண்டும் என்ற அவசியத்தை நான் உணர்ந்த காரணத்தினால், அதைக் குறித்த என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்லுவது, இப்பொழுது புதிதாக வந்திருக்கிற அரசு எடுக்கவிருக்கும் காரியங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சிறைச்சாலையைப் பொறுத்த வரையில், அதிலும் குறிப்பாகக் கோவை மத்திய சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகளின் எண்ணிக்கை மூவாயிரம், அல்லது மூவாயிரத்திற்கும் அதிகமாகவே எப்போதுமே இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லலாம். 3,500 பேர் அந்தச் சிறைச்சாலையில் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குப் பரிமாறப்படக்கூடிய உணவு வகைகள் சுகாதார முறைக்கு ஏற்றதாக இல்லை என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே பெரிய நெருக்கடி இருக்கிறது. அங்கு உணவு வகைகளெல்லாம் இரும்புப் பாத்திரங்களில் தயாரிக்கப்படுகின்றன. அதனால் ஒருவிதமான நோய் அங்கே பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அங்கே வழங்கப்படுகிற குழம்பு துர்நாற்றம் வீசுவதால், அதைச் சாப்பிடுவதற்கே பயப்படக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. அத்துடன், சிறைக்குள்ளே இருக்கும் கைதிகளிடத்தில் இப்பொழுது வேலை வாங்கப்படும் முறையை மாற்றி அமைப்பதும் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பல்வேறு காரணங்களுக்காக சிறைச்சாலைக்குள்ளே வருகிறவர்கள், அவர்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்டுள்ள தொழில்கள் இருக்குமானால், அந்தத் தொழில்கள் மூலமாகவே அவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கலாம். அதைப் போலவே, சிறைச்சாலையிலே கூட பாக்டரி சட்டத்தை அமல்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே எட்டு மணி நேரம் வேலை என்பதற்கு நேர்மாறாகப் பத்து மணி நேரத்திற்கும் மேலாகக் கைதிகள் வேலை வாங்கப்படுகிற கொடுமை இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். சிறைச்சாலைக்குள்ளே கைதிகளிடம் வேலை வாங்குகிற முறை சரியாக இல்லை. கோயமுத்தூர் சிறைச்சாலைக்குள்ளே ஒரு ஸ்பின்னிங் மில் இருக்கிறது. அந்த மில்லில் ஒரு பக்கத்தில் நான்கு பேர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நான்கு பேர்களும் வேலை செய்கிறார்களா என்றால், அவர்களுக்கு வேலை தெரியாத காரணத்தினாலும் அந்த இடத்தில் நான்கு பேர்களுக்கு வேலை இல்லாத காரணத்தினாலும் அவர்கள் வேலை [illegible]கூடிய முறையில் அங்கே உற்பத்தி பாதிக்கக்கூடிய



நிலை இருந்து வருகிறது. அவையெல்லாம் சீர் செய்யப்பட்டு, முறையாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு நம்மால் வேலை வாங்கப்படுமானால், உற்பத்தி அதிகரிப்பதற்குக் கூட அது பயனுடையதாக இருக்கும்.

சிறைச்சாலைக்குள்ளே வேலை செய்கின்ற கைதிகளுக்கு இன்றைக்குக் கொடுக்கப்படக்கூடிய அலவன்ஸை உயர்த்த வேண்டும். சம்பளம் கொடுக்காமல் இருந்தாலுங்கூட, கான்டீன் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் திறமையாகவும், ஒழுங்காகவும், வேலை செய்கின்றவர்களுக்கு டீ, பீடி, சிகரெட் போன்றவற்றைக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தால் அவர்கள் உற்சாகமாகப் பணியாற்றுவதற்குப் பயன்படும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிறைச்சாலையில் கைதிகள் இருக்கக்கூடிய நேரத்தில், அவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைக்கும் வகையில் ஏற்பாடு செய்யலாம். அவர்கள் அங்கேயுள்ள ஒழுங்கு முறையை அனுசரித்து நடந்துகொண்டார்களானால், அவர்களுக்கு லீவு கொடுக்கலாம். அல்லது தண்டனை காலத்தைக் குறைக்கலாம். அப்படிச் செய்தால், கைதிகள் தாங்கள் நல்ல முறையில் நடந்துகொண்டு, தங்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்துக்கொண்டு, வெளியே வரவேண்டும் என்ற உணர்ச்சியோடு வேலை செய்யவும், பொதுவாக உற்பத்தியை ஓரளவு பெருக்குவதற்கும் கூட வசதிப்படும். அப்படிப்பட்ட நிலைமை கடந்த காலத்தில் இல்லை. ஆனால், இனிமேல் அப்பேர்ப்பட்ட முறைகளை நாம் உருவாக்குவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கோவைச் சிறைச்சாலையில் இருக்கின்றவர்களில் மிக அதிகமான பேர்கள் ஆயுட் கைதிகளாக இருக்கிறார்கள். அந்த ஆயுட் கைதிகள் என்ன குற்றம் செய்தார்கள் என்று பார்க்கின்றபோது, நூற்றுக்கு எண்பது பேர்கள் கொலைக் குற்றம் செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கொலைக் குற்றம் செய்ய என்ன காரணம் என்பதைப் பார்க்கும்போது, ஓரளவிற்குப் பெண் காரணம் என்ற நிலைமையில் குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்கள்தான் அங்கே பெரும்பாலும் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய குடும்பச் சிக்கலின்போது தவிர்க்க முடியாத உணர்ச்சி காரணமாக, இப்படிப்பட்ட கொலைகள் செய்கிறார்கள். அப்படிக் கொலைகளைச் செய்து ஆயுள் தண்டனை அடைந்து, 12 வருடங்களுக்கு மேல் சிறையில் இருந்தால் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நிலை இருக்கிறது. ஆனால், ஏழு வருடம், ஒன்பது வருடம் அவர்கள் சிறையில் இருந்து, அவர்களுடைய மனுக்கள் கருணை மனுக்கள் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அவர்களை வெளியிலே விடுவதற்கான அமைப்பு முறை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட முறை சரியாக அமல்படுத்தப்படாமல் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் கருணை மனுப் போடுகிறார்கள். மனுவை அனுப்பிய பிறகு போலீஸ்காரர்கள் விசாரிக்கக்கூடிய நிலையில், எதிர்த் தரப்பைச் சார்ந்தவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களை வெளியே விட்டுவிட்டால் ஆபத்து என்ற காரணத்தைச் சொல்வதனால் அது தடுக்கப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்ட உணர்ச்சி வசப்பட்ட கொலைக் குற்றம் செய்த ஆயுள் கைதிகள் கூட உண்மை வாழ்க்கையிலே திருந்த சந்தர்ப்பம் இருக்கிறது. காரணம், குடும்பச் சிக்கல் காரணமாக, உணர்ச்சி வசத்தாலே இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்கிறார்கள். கள்ள நோட்டு அடித்தல், கடத்தல், பொருள்களைத் தொடர்ந்து கொள்ளையடிப்பது, திருட்டு போன்ற வழிகளில் ஈடுபடுகிறவர்களும் இருக்கிறார்கள். உணர்ச்சி வசப்பட்டுக் குற்றங்கள் செய்யக்கூடிய கைதிகள் சிறைச்சாலையில் ஒழுங்கான நடத்தையுடன் இருப்பார்களேயானால், அதை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு, 9 அல்லது 8 வருடம் என்னும் அளவோடு அவர்களை வெளியே விட ஏற்பாடு செய்ய வேண்டும். இதைக் கூறக் காரணம் 62-வது ஆண்டு நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்களும் கோவைச் சிறையிலே இருக்கும்பொழுது அவர் வழக்கறிஞர் என்ற காரணத்தினால்

தினம் 20 பேர் வந்து எனக்குக் கருணை மனு எழுதிக் கொடுங்கள் என்று சொல்லுவது உண்டு. என்ன காரணம் என்று விசாரிக்கக்கூடிய நேரத்திலே பெரும்பான்மையான கைதிகள் குடும்பத் தகராறு என்பதோடு மட்டும் அல்ல, பெண்கள் விவகாரத்திலே நடத்தப்பட்ட குற்றங்களுக்காகவும் சிறைக்கு வந்திருப்பது தெரிய வந்தது. இப்படிப்பட்ட நிலையிலே அங்கிருப்பவர்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்த குற்றத்திற்காக அனுபவித்த தண்டனை 7 வருடம், 8 வருடம் என்றால், அதற்குப் பிறகு சிறைச்சாலைக் கைதிகள் நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடந்து, அங்கேயிருக்கின்ற தொழில்களை நல்ல முறையில் உற்பத்தி செய்திருந்தால் அதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்களை வெளியே விட ஏற்பாடு செய்யவேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிலும், பல சிறைச்சாலைகளிலே மருத்துவ வசதி போதுமானதாக இல்லாத குறையிருக்கிறது. இதைச் சொல்லக்கூடிய இதே நேரத்தில், அங்கிருக்கின்றவர்களின் உடலுக்கு ஏற்படுகின்ற கொடுமையைச் சொல்ல முடியாத நிலையிலும், சிறைச்சாலையில் பாகுபாடு இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமையும் பார்க்கிறோம்.

அரசியல்வாதிகளாகப் போகிறவர்கள் வேறு காரணமாகப் போகிறவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரி நடத்தக் கூடிய நிலை கடந்த காலத்திலிருந்து இருக்கிறது. அரசியல் குற்றங்களுக்காக, மொழிப் போராட்டத்திலே, விலை வாசிப் போராட்டத்திலே ஈடுபட்டுச் சிறை சென்றவர்களுக்கு பி வகுப்பு கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது. அதே நேரத்தில் கடத்தல் புரிபவர்கள், கள்ள நோட்டு அச்சடிப்பவர்கள், வேறு பல நாட்டு மக்களுக்குத் தேவையில்லாத காரியத்தில் ஈடுபடுகிற சமூக விரோதிகளுக்கு ஏ வகுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமை இருக்கக் கூடாதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். 1949-ம் ஆண்டு கடத்தல் காரணமாகத் தண்டனை பெற்றவர்கள், சிறைச்சாலைகளில் இருந்தவர்கள், இன்றையதினம் வேறு பல சிறப்பான இடங்களில் இருப்பதைக் கூட நம்மால் பார்க்க முடிகிறது. அதனால் கடத்தல்காரர்களுக்கு ஏ வகுப்புக் கொடுக்கக் கூடாதென்று சபைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடத்தல் பேர்வழிகள், பொதுமக்களின் உணவுப் பொருள்களைப் பதுக்குகின்றவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும் எந்த நிலையிலே இருந்தாலும் அவர்களுக்கு உயர்ந்த வகுப்பு கொடுக்கக் கூடாதென்று கூறிக்கொள்கிறேன்.

நான் இன்னொரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சிறைச்சாலைகளில் கடந்த காலத்திலே மொழிப் போராட்டத்தின் காரணமாகவும், வேறு பல அரசியல் தியாகங்கள் காரணமாகவும், சிறை சென்றவர்களுக்கும், நாட்டு விடுதலைப் போராட்ட காலத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்புவது அவசியம். விடுதலைப் போராட்ட காலத்திலே விடுதலை வீரராகவிருந்த, சரித்திரப் புரட்சிக்காரர் என்று சொல்லக்கூடிய வீர சாவர்கர் இருந்த பாளையங்கோட்டைச் சிறை கொடுமையைப் பற்றி எழுதியுள்ளார். ஊமைத்துரை போன்றவர்களும் இன்றைக்கு மொழிப் போராட்டத்தின் காரணமாய்த் தனிமைச் சிறையிருந்த கலைஞர் கருணாநிதி போன்றவர்களும் இருந்த சிறைச்சாலையிலே நாம் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போல கோவை மத்தியச் சிறைச்சாலையிலே வ. உ. சிதம்பரம் பிள்ளை, பெரியார் ராமசாமி, சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். மற்றும் மொழிப் போராட்டத்தின் காரணமாகச் சிறைச்சாலையிலிருந்த இந்த மன்றத்திலே தமிழ் மணம் கமழ சபை நடவடிக்கைகளை நடத்திச் செல்கின்ற சட்டமன்றத் தலைவர் ஆதித்தனார் போன்றவர்களும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நாவலர் போன்றவர்களும் இருந்த சிறைச்சாலையில், அவர்களுடைய நினைவுச் சின்னங்கள் அமைக்க வேண்டும். மொழிப் போராட்டத்திலும், விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட்டவர்கள் இருந்த இடத்திலே நினைவுச் சின்னங்



கள் எழுப்ப வேண்டும். நான் சிறைச்சாலையில் இருந்த நேரத்தில், எது வ. உ. சிதம்பரம் பிள்ளை இருந்த இடம் என்று கேட்டேன். அவர்கள் வெறும் கட்டாந்தரையைத்தான் காட்டினார்களே தவிர அந்த இடத்தைக் காட்ட முடியவில்லை. ஏனெனில் அங்கு எந்தவிதமான அடையாளமும் கிடையாது. மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வேலூர் சிறையிலிருந்த வீரர்களுக்கு சிறைச்சாலையில் நினைவுச் சின்னம் எழுப்பினால் அங்கே போகின்ற கைதிகள், அரசியல்வாதிகளாக இல்லாமல் இருந்தாலும்கூட, தனிப்பட்ட வேறு காரணங்களுக்காகச் சென்றவர்கள்கூட அந்த நினைவுச் சின்னங்களைப் பார்க்கக்கூடிய நேரத்தில், அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச்செய்து சிறைச்சாலைக்கு வந்திருக்கிறார்கள்; நாமும் இன்றைக்கு நாட்டுமக்களுக்கு பணியாற்றக்கூடிய முறைகளிலே அப்படிப்பட்ட ஒழுக்க சீலராக ஆக வேண்டுமென்ற ஒரு எண்ணம் உண்டாகும். ஆகவே அப்படிப்பட்ட காரியத்தை சிறைச்சாலையில் செய்து தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதே நேரத்தில் என்னுடைய சொந்தத் தொகுதியைப் பற்றி ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். திருப்பூரிலே ஒரு சப்-ஜெயில் இருக்கிறது. இந்த சப்-ஜெயில் உள்ள இடத்திற்கும் உணவு சாப்பிடச் செல்லும் இடத்திற்கும் 200 கஜ தூரம் இருக்கிறது. சப்-ஜெயிலிலிருந்து சாப்பாட்டு வேளைக்கு வெளியே அழைத்துச் செல்கிறார்கள். அந்த நேரத்திலே ஊர் மக்கள் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது அரசியல் கைதிகளாகச் சென்றவர்களுக்குப் பெருமையாகத்தான் இருக்கும். அதே நேரத்தில் வேறு பல காரணங்களுக்காகச் சிறை சென்றவர்களுக்கு இந்த நிலைமை மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கும். தவிர, திருப்பூர் சப்-ஜெயிலில் உணவு தயார் செய்யக்கூடிய அறையும் போதுமானதாக இல்லை. உணவு உட்கொள்ள வேண்டுமென்றால், வராந்தாவில் உட்கார்ந்தே சாப்பிட வேண்டிய நிலை இருக்கிறது. மழை வந்தால் சாப்பிடப் போதுமான இடமில்லாமல் இருக்கிறது. இந்த நிலையிலிருக்கும் சப்-ஜெயிலில் காலைக் கடன்களை முடிக்க போதுமான மறைப்புகள் கிடையாது. ஆகவே, இதற்கெல்லாம் போதுமான ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைச்சரவர்கள் கொண்டுவந்த இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** அவைத் தலைவரவர்களே, முதலாவதாக நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் தாலுக்காவிற்கு ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்துவது மிக அவசியம் என்று கருதுகிறேன். அதேமாதிரி முன்சீப் கோர்ட் ஒன்றும் தாலுக்கா தலைநகரில் இருப்பது அவசியம். அம்மாதிரி தலைநகரில் இந்தமாதிரி கோர்ட்டுகள் இல்லாத காரணத்தால், பல இடங்களிலிருந்து வழக்குகள் சம்பந்தமாக வருகிறவர்களுக்கு வீண் அலைச்சலும், பணச் செலவும் ஏற்படுகிறது. எனவே, தாலுக்கா தலைநகரில் கட்டாயம் ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் ஏற்படுத்துவது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன். அதே நேரத்தில், இன்றையதினம் சிட்டி சிவில் கோர்ட்டுகளில் வழக்குகள் முடிய பல மாதங்கள் ஆகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த வழக்குகள் முடிவு பெறுவதற்கு எக்கச்சக்கமான காலதாமதம் ஏற்படுகிறது. அந்தக் காலதாமதம் இல்லாத அளவுக்கு வழக்குகளை முடிக்க உத்தரவு செய்வது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன்.

அடுத்து, 3 எல்.டி.சி.க்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் ஒரு யு.டி.சி.யை நியமனம் செய்வது ரொம்ப ரொம்ப அவசியம் என்று கருதுகிறேன். அங்குள்ளவர்கள் பல நாட்களில் ராத்திரி 8, அல்லது 10 மணி வரையிலும் கூட வேலை செய்வதைப் பார்க்கிறேன். ஆதலால் இவ்வாறு நியமனம் செய்வது திறமையாகவும், காலதாமதம் இல்லாத வகையிலும் வேலை நடக்க உதவுமென்று கூறிக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, வழக்குகளை தாசில்தாருக்கு அனுப்பும் வழக்கமொன்று உள்ளது. அவர்கள் சட்டத்தைப் பற்றிப் படித்தவர்கள் அல்ல. அவர்களுக்கு நிர்வாக வேலை பல இருக்கிறது. ஆகவே, வழக்குகளை ஒத்திப்

கைதிகளுக்கு சிறைச்சாலையில் போதுமான விளையாட்டு இடம் வேண்டும். அவர்களுக்கு விளையாடச் சந்தர்ப்பம் இல்லை இடமும் இல்லை. கைதிகள் நல்ல முறையில் மாறவேண்டுமானால், அவர்களுக்கு விளையாட வசதி செய்து கொடுக்கவேண்டும், நேரமும் ஒதுக்கப்படவேண்டும். அம்மாதிரி விதத்தில் அவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும்.

கைதிகளின் கல்வித் தரத்தை உயர்த்தவேண்டும். குற்றத்தை அவர்கள் உணரும்படிச் செய்யவேண்டும். இன்றைக்கிருக்கும் ஜெயில் அமைப்பிலே ஒருவன் ஒரு தடவை குற்றவாளியாக சிறைக்குச் சென்றுவிட்டான் என்றால், மீண்டும் அவன் குற்றவாளியாகத்தான் வரவேண்டும் என்ற அளவிற்குச் சிறையின் சூழ்நிலை இருக்கிறது. அதிகாரியிலிருந்து வார்டர் வரையிலும் எடுத்துக்கொண்டால், அவர்கள் கைதிகளை நடத்தும் முறையைப் பார்த்தால், குற்றவாளியாக ஒரு தடவை சிறைக்குப் போனவன் பல தடவை குற்றவாளியாக, பரம்பரைக் குற்றவாளியாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலை மாறப்படவேண்டுமானால், கல்வி போதிப்பில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். பாதி நாளை படிப்புக்காக ஒதுக்கி, பரீட்சை எழுதுவதற்கான வசதியைச் செய்து தரவேண்டும். சிறை என்றால், அது அறிவு போதிக்கக்கூடிய சீர்திருத்தப் பள்ளியாக இருக்கவேண்டுமேயொழிய அடக்குமுறைக் கூடங்களாகக் காட்சியளிக்கக்கூடாது. இன்றையதினம் அது அவ்வாறு இல்லை. அந்த நிலை மாற்றப்படவேண்டும்.

குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு கடிதம் தரவேண்டும். நான் ஜெயிலில் இருந்திருக்கிறேன். எனக்குத் தெரியும். ஸி க்ளாஸ் கைதிகள் கடிதம் எழுதினால், வீட்டுக்கு அந்தக் கடிதம் போகக் குறைந்தது நான்கு மாதங்களாவது ஆகும். கிரிமினல்ஸ்தானே என்று அதிகாரிகளுக்கு ஒரு எண்ணம். கைதிகள் குறையைக் கேட்க யார் இருக்கிறார்கள் ? என்றைக்கோ சட்டசபையில் பேசுகிறோம். கேட்க நாதி இல்லை. அவர்கள் எழுதுகிற கடிதங்கள் போவது மட்டும்தான் அப்படி என்பதல்ல. அவர்களுக்கு வரக்கூடிய கடிதங்களும் அவர்களுக்கு ஒழுங்காக வருவது கிடையாது. கண்டிப்பாக வாரம் ஒரு கார்டு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வரும் கடிதங்கள்—இரண்டு நாட்களுக்குள்ளாவது அவர்களுக்குக் கிடைக்க கண்டிப்பான, நிச்சயமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே என்ன சென்ஸார் இருக்க வேண்டும் ? பொலிடிகல் ப்ரிஸனர்ஸ் என்றாலாவது சென்ஸார் வேண்டும் என்று சொல்லலாம். மற்றவர்களைப் பொறுத்தவரையில், அவரவர்களுடைய கடிதங்களை உரிய காலத்தில் கொடுப்பதற்கு சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசியல் கைதிகள் இப்பொழுது இல்லை என்று நான் நினைக்கிறேன். அரசியல் கைதிகள் என்ன பத்திரிகை படிக்க விரும்புகிறார்களோ அந்தப் பத்திரிகை அவர்களுக்கு வழங்கப்பட அரசு உத்தரவாதம் செய்யவேண்டும். இன்றைக்கு அந்த நிலை இல்லை. சில ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருக்கிறதென்று நினைக்கிறேன். அது கூடாது. அவர்கள் என்ன பத்திரிகை வேண்டுமென்கிறார்களோ, அதைப் படிக்க நிச்சயமாக அவர்களுக்கு வசதி செய்துகொடுக்கவேண்டும்.

நாகப்பட்டினம் சப்-ஜெயிலுக்கு சில விஸிடர்களை நியமித்து கெஜட்டில் போட்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன "பேஸிஸ்" இல் நியமிக்கப்பட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், அந்தந்தத் தொகுதியிலுள்ள எம்.எல்.ஏ.க்களை அதிகாரபூர்வமான விஸிடர்களாக மத்திய சிறைச்சாலைகளுக்கும், அந்தந்த சப்-ஜெயில்களுக்கும் நியமிக்க வேண்டும். அந்தவிதமாக அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க





வேண்டும். கைதிகளைப் பார்க்காதவர்கள் கூட, ஏதோ கௌரவத்திற்
காக அம்மாதிரி சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுவது
என்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அந்த முறையை
மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போர்டு ஒன்று போடுகிறார்கள். அதனுடைய "ஃபங்ஷன்" என்ன
என்றே தெரியவில்லை. அரை போர்டு, கால் போர்டு என்கிறார்கள்.
என்ன விஷயம் என்றே புரியவில்லை. அதனுடைய "ஃபங்ஷன்"
சரியில்லை என்று நினைக்கிறேன். போர்டு சம்பந்தமான விதிமுறை
களை நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும். டி.எஸ்.பி.யைக் கேட்டுக்
கொண்டு போட வேண்டுமென்றால் நம்முடைய சிபார்சு குறைவாக
இருக்கும். அந்த போர்டிலே இருக்கும் நிபுணர்களுடன், எம்.எல்.ஏ.க்
கள், எம்.பி.க்கள் ஆகியவர்களுக்கு அதிகமாக ரெப்ரஸெண்டேஷன்
கொடுத்து, சர்க்கார் பிரதிநிதிகளையும் நேரடியாக எடுத்துக்கொண்டு பரி
சீலிப்பது என்ற முறை இருந்தால் நிச்சயமாக போர்டு சரியான முறையில்
"ஃபங்ஷன்" பண்ணும் என்று நான் கருதுகிறேன். ஜட்ஜ் இருக்
கிறார், கவலை இல்லை. கலெக்டர் இருக்கிறார், கவலை இல்லை. ஆனால்
போலீஸ் நிர்வாகத்தினர் அதிகமாக இருக்கிற நிலை ஏற்பட்டால் அது
சரியாக இருக்காது. அந்த போர்டு அமைப்பது சம்பந்தமான விதிமுறையை
மாற்றியமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதல் தடவையாகக் குற்றம் புரிந்து ஆயுள் தண்டனை அடைந்தவர்
களை 12 வருடங்களுக்குப் பிறகு ரிலீஸ் செய்யலாம் என்று இன்று
நடைமுறை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். குற்றத்தை எப்
படிச் செய்கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்பதை விவாதிக்க நான்
விரும்பவில்லை. இன்றைக்கு சொஸைட்டியினுடைய விக்டிம்கள்தான்
சிறைக்குள் இருக்கும் ஆயுள் தண்டனைக் கைதிகள். முதன்முதலாக
தண்டிக்கப்பட்டிருந்தால், குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே
அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். அந்த அளவிற்கு அவர்
களுக்கு ரெமிஷன் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது
நிச்சயமாக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அதேமாதிரி, பத்து வருஷம், எட்டு வருஷம் இதற்கு மேலாகத்
தண்டிக்கப்பட்ட முதல் குற்றவாளிகள் இருந்தால், அவர்கள் பாதித்
தண்டனை அனுபவித்துவிட்டால், நிச்சயமாக அவர்களை விடுதலை
செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான
உத்தரவையும் நாம் பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளு
கின்றேன்.

இன்னொன்று, சின்ன விஷயம் தான். ஜெயிலில் எப்படிப்பட்ட
இன்-ஹ்யூமன் ட்ரீட்மெண்ட் கொடுக்கப்படுகிறது என்பதற்கு உதாரண
மாக பார்க்கவேண்டுமென்றால் "ரைஸ்", "டௌன்" என்று சொல்
லுவது மிக மோசமாக இருக்கிறது. காலை ஆறு மணியிலிருந்து
பத்து மணி வரைக்கும் இதே "ரைஸ்,—டௌன்" தான். சீஃப்
வார்டர் வந்தாலும் இதே ரைஸ்-டௌன் தான். ஆர்டர்லி வந்தாலும்
இதே ரைஸ்—டௌன் தான். இது ஏன் என்று எனக்குப் புரிய
வில்லை. இது எதற்காக ? கௌண்டிங் வேண்டுமென்றால், நான்கு
நான்கு பேர்களை எண்ணலாம். ரைஸ்-டௌன் என்பது
இன்ஹ்யூமன் ட்ரீட்மெண்ட்டாக இருக்கிறது. இந்த முறைகளெல்லாம் நிச்
சயமாக மாற்றப்படவேண்டும். அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மை
யோடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜெயில் அதிகாரிகளுக்கெல்லாம்
மூன்று மாதங்களுக்கொரு முறை ஒரு ரிஃப்ரெஷர் கோர்ஸ்
நடத்தவேண்டும். கைதிகளை மனிதர்களாக நடத்தச் சொல்ல
வேண்டும். அவர்களும் இந்த நாட்டின் பிரஜை என்று சொல்ல
வேண்டும். சமூகத்தினால் பழிவாங்கப்பட்ட, சமூகத்தின் கொடுமைக
ளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் என்று சொல்லவேண்டும். அவர்கள் மிரு
கங்கள் அல்ல, பிறவிக் குற்றவாளிகள் அல்ல, அவர்களும் சமு

தாயத்தில் வாழ வேண்டியவர்கள், வாழத் தகுந்தவர்கள் என்று கூறவேண்டும். அப்படி ரிப்ரெஷர் கோர்ஸ் நடத்துவதற்கு நட வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் சிறை சீர்திருத்தங்களைப் பற்றி நாம் கவனிக்கும்போது கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அட்வைசரி கமிட்டிபோல், சிறைச்சீர் திருத்தக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அதிலே எல்லா அர சியல் கட்சிகளுக்கும் ரெப்ரசென்டேஷன் இருக்கவேண்டும். ஐ. ஜி., நீதித்துறையில் ஒருவர், இவர்களையும் வைத்துக்கொண்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலனை செய்து எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலையை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆறு மாதங்களுக்கு மேல் ஜெயில் தண்டனை பெற்றவர்களுக்கு கோர்ட்டிலே வாதாட சர்க்காரே இலவசமாக வக்கீல் ஏற்பாடு பண்ணிக் கொடுக்க வேண்டும். இம்மாதிரி நாம் சிறையைப்பற்றிக் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். நிச்சயமாக அவர்களைப் பிறவிக் குற்றவாளிகளாக்கா மல், அவர்களையும் திருத்த வழி செய்யவேண்டும். எனவே, சிறைகள், பிரிட்டிஷ்காரன் காலத்தில் இருந்ததுபோல் இல்லாமல், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்ததுபோல் இல்லாமல், சுட்டுத்தள்ளுவதுதான் அவர்கள் தொழில், கொடுமைப் படுத்துவதுதான் அவர்கள் தொழில், எதிர்க் கட்சியினரை வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவதுதான் அவர்கள் தொழில் என்ற நிலை இருந்ததே, அந்தமாதிரி இல்லாமல், இந்த அரசு சிறைச்சாலை யை சீர்திருத்தப் பள்ளியாக, குற்றம் செய்யக்கூடியவர்களைத் திருத்தக் கூடிய பள்ளியாக ஆக்கும் விதத்தில் இந்த அரசு அணுகும் முறை இருக்க வேண்டும். அந்த விதத்தில் சில நிர்வாக உத்தரவுகளைப் பிறப்பித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னு டைய உரையை முடிக்கின்றேன்.

நண் பகல் 12-00 *திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச் சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அறிஞர் அண்ணு அவர்கள் புது ஆட்சியை ஏற்றுக்கொண்டு வந்தவுடன், சிறைச்சாலையில் இருந்து பழக்கப்பட்டவர்களே அந்தத் துறை அமைச்சராக வந்தவுடன், பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். பலரைப் பார்க்க நான் சிறைக்குச் சென்றிருந்த சமயத்திலே, சிறைக் கைதிகள் மாட்டியிருந்தார்களே ஒரு குல்லாய், அதை அமைச்சர் அவர்கள் வந்தவுடன் எடுத்துவிட்டார்கள். அங்கே இருந்து பழக்கமில்லாதவர் களுக்கு அதைப்பற்றி அவ்வளவாகத் தெரியாது. உலகத்திலே பல குல்லாய்கள் இருக்கின்றன. நாட்டிலேகூட பல காரியங்களுக்காக குல் லாய் போடுகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர் "அந்தக் குல்லாயை எடுத்ததற்காக இந்த சர்க்காருக்கு நன்றியுள்ளவராக இருப் பேன்" என்று சொல்லியுள்ளதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, புதிய அமைச்சரவை, சிறைச்சாலைக்கு இண்டர்வ்யூ— பார்வைக்காகச் செல்லுகின்றவர்களுக்கு ஒரு நல்ல ஏற்பாடு செய்து வைத்திருக்கிறது. இதற்கு முன்னால் தண்டனை பெற்ற கைதி சிறை உடையிலேதான் வந்து பார்க்க முடியும். அந்த உடை தடுக்கப்பட்டு, சிவில் உடையிலே—சொந்த உடையிலே வந்து அவர்களைப் பார்க்க வருகிற தாய், தகப்பன், சொந்தக்காரர்களுக்கு பேட்டி தருகிறான். முன்னால் சிறை உடையில் வரும்போது, யாரைப் பார்க்க வேண்டுமென்று வெளியில் இருந்து வந்திருப்பவர்களுக்கும் ஆள் அடையாளம் தெரியாது; கைதிக் கும் யார் வந்திருக்கிறார்கள் என்று தெரியாது. நாம் மிருகக் காட்சிச் சாலையில், கைகாட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதைப்போல்தான் கைதி களையும் அடையாளம் தெரியாமல் பார்த்துக்கொண்டிருப்போம்.

அடுத்தபடியாக, இப்போது இந்தப் புதிய சர்க்கார் பரோல் முறையில் கவனம் செலுத்தியிருக்கிறது. பலரும், 5 வருடம், 6 வருடம், 7 வருடம் பரோல் கேட்டும், 7, 8 வருடங்களில் வெளியே வராமல்,





இருந்தவர்களுக்குப் பல காரியங்களைச் [illegible] அவர்களுடைய குடும்பங்களைக் கவனிக்க, தன் பிள்[illegible] மணம் முடிப்[illegible]தற்காக —இப்படி பல நல்ல காரியங்களுக்[illegible]க [illegible]டனடியாக இந்[illegible]க்கார் பரிசீலித்து, பல சிறைச்சாலைகளில் அவர்களை பரோலில் [illegible]டுவிப் பதற்கான நன்மைகளையும் செய்தி[illegible]கிறது என்பதைத் தெரி[illegible]துக் கொள்கிறேன். அதே நேரத்தில் [illegible]சாலைக்கு வருபவர்களில் ந[illegible]ன்கு விதமான பேர்கள் வருகிறார்கள். ([illegible] குற்றத்தை உண்மையா[illegible]செய் தவர்கள்; (2) குற்றத்தைச் செய்[illegible]யாமல் சந்தர்ப்பவசத்தா[illegible]ட்டிக் கொண்டவர்கள்; (3) அரசியல் [illegible]திகள் வந்தார்கள்[illegible] வரு வார்களோ என்னவோ ? (குறுக்கீடு) [illegible]றேன்; [illegible] வாடிக் கைக் கைதிகளும் வருகிறார்கள். வாடி[illegible] [illegible]பவர்கள், குற்றத்தைச் செய்துவிட்டு ஒரு மூன்று மா[illegible] காலம் [illegible]றைச்சாலையில் இருப்பார்கள்; பிறகு வெளியில் வந்தால் ஒரு வாரம் வரை இருந்து விட்டு மீண்டும் சிறைச்சாலைக்கே வந்து விடுவார்கள். ஒழுங்காக இருக்க நினைத்தாலும் முடியாமல், அவர்களே ஆசைப்பட்டு சிறைச் சாலைக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு, சிறைச்சாலையில் மோரும் சோறும் கிடைக்கிறது. மணி அடித்தால் சோறு; முடி முளைத்தால் மொட்டை; வேப்பமரத்து நிழல்—என்று பேசப்படும் வசதிகள் இருக் கின்றன. ஆகவே, வாடிக்கைக் கைதிகள் வருகிற காரணத்தால், அவர் கள் அதை ஒரு பர்மனென்ட் வாசஸ்தலமாகச் செய்துகொள்கிறார்கள். அவர்களுடைய அட்டகாசம் பொறுக்க முடியாது. ஆகவே அமைச்சர் அவர்களுக்கு ஒன்று தெரியப்படுத்திக்கொள்கிறேன். அவர்களையெல்லாம் கடலூர், சேலம் போன்ற இடங்களுக்கு அனுப்பிவிடலாம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இளம் குற்றவாளிகளை நல்லபடியாக படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவருவதற்கு மிக ஜாக்கிரதையாக இருந்து செய்ய வேண்டும். அவர்கள் இந்த இடத்தில் பெரிய பெரிய கிரிமினல் குற்றவாளி களாக மாறுகிறார்கள். அங்கே பெரிய பல கெட்ட காரியங்களை வாடிக் கையாகச் செய்து கொண்டிருக்கிறவர்களிடம்—எப்படியோ தெரிந்தோ, தெரியாமலோ மாட்டிக்கொண்டு பொழுது போகாத நேரங்களில் அவர்களிடம் கதையாகக் கேட்கிறார்கள். இதைக் கேட்டவர்களில் பெரும்பாலோர் ஒருகாலத்தில் அப்படிச் செய்து பார்க்க வேண்டுமென்று முன்வந்து கைதிகளாக மாறுகிறார்கள்.

அடுத்து, சிறைச்சாலைகளிலே மூட்டைப்பூச்சி இருந்து வருகிறது. அது ஒரு பெரிய தொல்லை. மூட்டைப்பூச்சி என்றால், ஒன்று இரண்டு அல்ல. சாரை சாரையாகப் படையெடுத்து வரும். இதைக் கவனித்து மூட்டைப்பூச்சி இல்லாமல் செய்ய வேண்டும். இந்த மூட்டைப் பூச்சியினால் கைதிகளில் பல பேர்களுக்கு நிறைய வியாதிகள் வருகிறது. ஆஸ் பத்திரியில் கூட்டம் சேருகிறது.

'Goldsmith' அவர்கள் கூறியபடி 'doctor by birth' என்பதாக எந்த வியாதிக்கு எந்த மருந்து கொடுப்பது என்று எல்லாம் இல்லாமல் வியாதிகளை உற்பத்தி செய்கிறார்கள். ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள் எந்த வியாதிக்கு எந்த மருந்தைக் கொடுப்பது என்று தெரியாமல், 1½ வருட மான எல்லா வியாதிக்கும் ஒரே மருந்தைக் கொடுத்துக்கொண்டு வந்தார் கள். "எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்தைக் கொடுக்கிறீர்களே?" என்று டாக்டரைக் கேட்டேன். "இங்கே இருப்பது இது ஒரே மருந்து தான்" என்று டாக்டர் கூறினார். ஆகவே வைத்திய வசதிகளையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அப்ரூவர் என்று சொல்லப்படுகிற சாட்சியங்களை சென்ட்ரல் ஜெயிலிலேயே வைக்க வேண்டும். சப்ஜெயிலில் வைத் துவிடுகிறார்கள். குற்றத்தை நிரூபிப்பதற்காக போலீஸ்காரர்கள் இன்னும் வழக்கு வெற்றிபெற எதையும் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சென்ட்ரல் ஜெயிலில் வைத்தால் சாட்சியத்தைக் கலைத்

துவிடுவார்கள் என்று சொல்வார்கள். சென்ட்ரல் ஜெயிலில் கைதிகள் எல்லாம் ஒரே இடத்தில்தான் ஒன்றுகச் சேர முடியும். அதுதான் ஆஸ் பத்திரி. அந்தமாதிரி சந்தர்ப்பங்களில் அவர்களைப் பிரித்து வைத்தால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சப்-ஜெயில்கள் என்று தனியே இல்லாமல் அதையும் நம் சிறைத் துறையே எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். மேலும் ஜெயில் வார்டர்கள் குடும்பம் நடத்தவே முடியவில்லை. காலையிலும் டூட்டி, இரவிலும் டூட்டி, இரண்டு மூன்று மணி நேரத்திற்கு மாற்றி மாற்றிப் போக வேண்டும். அவர் களுடைய குறைகளையெல்லாம் போக்க போலீஸ்காரர்களுக்கு இருப்பது போன்ற வாய்ப்பாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைதிகளில் பலருக்கு அரசாங்கத்திலே செல்வாக்கு இருக்கிற காரணத்தாலே வெளியே வந்து விடுகிறார்கள். சிலர் ஜன்ம தண்டனை பெற்று 5 வருடம், 5½ வருடத்தில் விடுதலை ஆகி விடுகிறார்கள். சிலர் 14 வருடம் சிறைச்சாலையிலேயே இருக்கிறார்கள். நாம் இங்கேயே தான் சாகப் போகிறோம் என்ற நிலையில்தான் அவர்கள் அங்கே இருக் கிறார்கள். பத்து ஆண்டு காலத்திற்குப் பிறகாவது அவர்கள் நல்லவர் களாக இருந்து வருகிறார்கள் என்று கண்டால் உடனடியாக விடுதலை செய்வது பொருத்தமாக இருக்கும். முதுகுளத்தூர் வழக்கு நடந்து எவ்வளவோ காலம் ஆகிவிட்டது. அந்தச் சம்பவத்தைப் பலர் மறந்து கூடப் போயிருப்பார்கள். ஆனால் அந்தச் சம்பவத்தின் காரணமாக சிறை யில் இன்னும் பலர் இருக்கக்கூடும். அவர்கள் மீண்டும் நல்லவர்களாக வாழ ஒரு சந்தர்ப்பம் அளிப்பதற்காக அவர்களை விடுதலை செய்ய இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்ட மக்கள் இந்தப் புதுச் சர்க்காரைத்தான் நம்பிக்கொண்டிருக் கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நீதி நிர்வாக முறையில் ஆண்டி கரெப்ஷன் யூனிட் என்று வந்திருப்பது நல்லவர்களாக, நேர்மையுடையவர்களாக எந்த அதிகாரியும் நடந்துகொள்ள முடியாத சூழ்நிலையைத்தான் தோற்றுவிக்கிறது என்பது என் சொந்தக் கருத்து. எந்த ஒரு அதிகாரியாவது உண்மையாக நடந்துகொண்டால், நேர்மை உடையவராக நடந்துகொண்டால் உடனே அவரை இந்த ஆண்டி கரெப்ஷன் யூனிட் மூலம் உள்ளே பிடித்துப் போட்டு தொந்தரவு அளிக்கின்ற நிலையாகத்தான் இருக்கிறது. ஆண்டி கரப்ஷன் யூனிட் ஏற்படுத்தப்பட்ட பிறகுதான் எந்த அதிகாரியும் நேர்மை யாக நடந்துகொள்ள பயப்படுகிறார்கள். அப்படி நடந்திருக்கிறது. பெரிய குளம் தாலூகா, உத்தமபாளையம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பழி வாங்கப் பட்டிருக்கிறார். அதுபற்றிய வழக்கு இருப்பதனால் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கள்ளநோட்டு வழக்கு ஒன்றை மிகத் தீவிரமாக கண்டு பிடித்தார் என்பதற்காக கரப்ஷன் கேஸில் மாட்டிவிட்டு 2 மாதத்திற்கு சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள். கள்ளநோட்டு விவகாரத்தையே தீவிரமாக முன்னின்று கண்டு பிடித்தவர் லஞ்சம் வாங்குவாரா என்பதை இந்த மன்றத்தில் உள்ளவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். இப்படி உண்மை யாக நடந்து கொள்ளும் அதிகாரிகளை, நேர்மையானவர்களை வேண்டு மென்றே மாட்டிவிட்டு பழிவாங்க இந்த ஆண்டி கரப்ஷன் யூனிட் இன்று பயன்பட்டு வருகிறது. ஆகவே, நேர்மையான அதிகாரிகளுக்கு இந்த அரசு தக்க பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, எனது உத்தமபாளையம் தொகுதியில் தாசில்தார் அலுவலகம் இருக்கிறது. முன்சீப் கோர்ட் கிடையாது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து பேசப்பட்ட பேச்சு, இந்த ஆட்சிக்காலத்திலாவது நன வாக்கப்படவேண்டும். ஏற்கெனவே இதுபற்றி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே உத்தமபாளையத்தில், பெரியகுளம் தாலூக்காவில் ஒரு முன்சீப் கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நல்லசிவம் அவர்களைப் பேச அழைக்கிறேன். 5 நிமிடத்திற்குள் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லி முடிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

• **திரு. க. ர. நல்லசிவம் :** நான் சபாநாயகர் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காகப் பேசாமல் இருந்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்குத் தொல்லை ஒன்றும் இல்லை. குறிப்பிட்ட நேரத்திற்குள் பேரவையின் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டி யிருப்பதால், இருக்கக்கூடிய ஐந்து நிமிடத்திற்குள் மாண்புமிகு உறுப் பினரைப் பேச அழைத்தேன். ஐந்து நிமிட நேர வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. ர. நல்லசிவம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்துள்ள ஐந்து நிமிடத்திற்குள் நீதித் துறை பற்றியும், சிறைச்சாலைத் துறை பற்றியும் பேச வேண்டியவனாக இருக்கிறேன். நீதித் துறையைப் பொறுத்தவரையில் தற்போது வந்திருக்கக்கூடிய சர்க்காரானது, தமிழில் எல்லா நடவடிக்கைகளையும் நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்திருக்கக்கூடிய சர்க்கார், ஒரு காலவரம்பை ஏற்படுத்திக்கொண்டு அதற்குள் எல்லா நிகழ்ச்சிகளும் தமிழில் நடக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். சிலர் சொல்லக்கூடும், வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறபோது மொழி பெயர்ப்பு தேவைப்படுமே என்பதாக. அதுபோன்ற காரியங்களில் மொழிபெயர்ப்புச் செய்துகொள்ளலாம். இன்றையதினம் கோர்ட்டில் உள்ள நீதிபதிகள் அத்தனை பேரும் தமிழர்கள். தமிழர்கள் அல்லாவிட்டாலும் தமிழ் தெரிந்தவர்கள். ஆகவே தமிழிலேயே நடவடி க்கைகளை நடத்த இந்த அரசு வேகமாகத் திட்டமிட்டு செயல்படவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஈரோடில் ஒரு ஜில்லாக் கோர்ட் ஆரம்பிக்கவேண்டு மென்ற கோரிக்கை. அந்தக் கோரிக்கையின்மீது அனுதாபத்தோடு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கேள்விப்பட்டேன். விரைவில் அதைக் கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறைச்சாலையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு மரண தண்டனை என்று விதிக்கப்படுகிறதே, அதன் மூலம் தப்புச் செய் கிறவர்கள் மனதை மாற்ற முடியும் என்ற நிலை இருந்தால் பரவாயில்லை. அது கிடையாது. மரண தண்டனை என்பதையே ரத்து செய்யவேண்டும். மரண தண்டனை என்று ஏற்பட்ட காலத்தில் இருந்து, அதன் மூலம் மக்கள் மனதில் மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மனிதர்களு டைய மனப் பண்பை மாற்ற வகை செய்யவேண்டுமே அல்லாது மரண தண்டனையை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜன்ம தண்டனை பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர் களைப் பொறுத்தவரையில் 14, 15 வருஷம் சிறையில் இருக்கக்கூடியவர் கள் இருக்கிறார்கள். இப்படிப் பல வருஷங்கள் சிறையில் இருந்தவர் களுக்கு விடுதலை அளிக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில் அது பற்றி பரிசீலிக்க போர்டு இருக்கிறது என்றார்கள். போர்டு இருக்கிறது. இருந் தும் பயன் இல்லை. அரசியல் ரீதியாக நிர்ப்பந்தம் ஏற்படுகிற நபர்களைப் பற்றி மட்டும் பரிசீலிக்கிறார்களே தவிர, பொதுவாக இப்படி பத்து வருஷம், பன்னிரண்டு வருஷம் சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்ய பொதுவாக பரிசீலனை செய்வதில்லை. ஆகவே ஜன்மக் கைதிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு விடுதலை அளிக்கவும் தக்க கவனம் செலுத்தப்படவேண்டும்.

அடுத்தபடியாக ஒரு முறை பெரோலில் வந்தவர்கள் விதிமுறைகளின் படி அடுத்த தடவை அப்ளை செய்கிறபோது கூடுமான வரையில் அங்கனுப்பி இங்கனுப்பி பரிசீலனை செய்து காலதாமதம் செய்யக்கூடாது. ஒரு முறை

பரோலில் சென்று திரும்பி வந்திருப்பதில் இருந்தே அவர்கள் யோக்கிய மாணவர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் அவர் களுக்கு உடனடியாக பரோல் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கடைசியாக, 1958-ம் வருடம் முதுகுளத்தூர் சம்பவம் நடைபெற்றது. எனது மதிப்பிற்குரிய ராசாங்கம் அவர்களும் குறிப்பிட்டார்கள். முது குளத்தூர் சம்பவம் முழுக்க முழுக்க அரசியல் ரீதியான கலவர வழக்கு. அது நடந்து பத்தாண்டுகள் முடிந்துவிட்டன. அப்போது சிறை தண்டனை அளிக்கப்பட்டவர்கள் பத்துப் பன்னிரண்டு பேர்கள் இன்னமும் சிறையில் இருக்கிறார்கள். முன்பு இருந்த அரசாங்கத்தினாலே பழி வாங்கப்பட்ட- வர்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதுகுளத்தூர் வழக்கு சம்பந்த மாக பலதரப்புப் கட்சித் தலைவர்களும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தைப் பற்றி அதிக மாகப் பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. க. ர. நல்லசிவம் :** ஆகவே அந்த வழக்கின் காரணமாக இன்ன மும் சிறை தண்டனை அனுபவித்து வருகிறவர்களுக்கு விடுதலை அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப் பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளின் மேல் எங்கள் பகுதியிலே இருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணை களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் அவற்றைச் சொல்வதற்கு முன்னால் கனம் சபாநாயகர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிக்குத்தான் அதிகமாக நேரம் கொடுக்கவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சியிலே— இன்றைக்கு காங்கிரஸ்தான் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது. வெட்டுப் பிரேரணையைப் பொறுத்தவரையில் எங்களுக்குத்தான் அதிகமாக பேசக்கூடிய உரிமை இருக்கிற காரணத்தினாலே சாதாரண விவாதத்தை விட இதிலே எங்களுக்கு அதிகமாக நேரத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் சிறந்த நீதி நிர்வாகம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நல்ல உயர்தர நீதிபதிகள் இங்கே கொடுக்கின்ற தீர்ப்புக்கள் அகில இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே கூட ஏனைய கோர்ட்டுகளிலே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நம்முடைய நீதி— நிர்வாகம் உயர்ந்தது. சிறந்த நீதிபதிகள், வழக்கறிஞர்கள் இங்கே இருந்துகொண்டு இருக்கிறார்கள். இந்த நீதி நிர்வாகத்தை நிலையாக நிலைநிறுத்தவேண்டிய பொறுப்பு இந்த அமைச்சரவைக்கு நிச்சயமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது என்று நினைக் கிறேன். எதிலே அபிப்பிராயபேதம் இருந்தாலும் கூட, இந்த நீதியை நிலைநாட்டுகின்ற முறையிலே முன்னாலே எதிர்க்கட்சியாக இருந்து இப் பொழுது ஆளுங்கட்சியாக இருக்கின்றவர்கள் அதை இனி மேலும் நிலை நாட்டுவார்கள் என்றால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சில சந்தர்ப்பங்களிலே அவர்கள் சில கருத்துக்களை முன்பு ஆதரிக்காமல் எதிர்த்திருப்பதைப்போல் இப்பொழுதும் இருப்பார்களா னால் நீதியை நிலைநாட்டுகின்ற நிர்வாகத்திலே இருப்பவர்கள் மனம் தளர்ந்து போய் விடக்கூடிய முறையில் நிலைமை ஆகிவிடுமோ என்பதை யும் சிந்தித்துப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Justice delayed is Justice denied** என்று ஒரு பழமொழி உண்டு. எவ்வளவுக்கு எவ்வளவு நீதி கொடுப்பதற்கு நான் அதிகமாக ஆகிறதோ அதுவரைக்கும் நீதியே வழங்க முடியாத நிலை



இருக்கிறது என்பதை பொது மக்கள் உணர்கிறார்கள். கோர்ட்டுகளுக்குப் போனால் அதிகமான செலவு, தொல்லைகள் மிக அதிகம். வக்கீல்களிடம் போய்விட்டால், நானும் ஓரளவு அனுபவப்பட்டு இருக்கிறேன் வழக்கறி ஞர்களை விட. கோர்ட்டுக்குப் போனால், அங்கத்தினர் ஒருவர் சொன்ன மாதிரி வாய்தா போடுவதில்தான் அவர்கள் முக்கியமாக இருப்பார்களே தவிர, சீக்கிரத்திலே வழக்குகளை நடத்தி முடிக்கக்கூடிய நிலை இல்லை. ஆகவே சீக்கிரத்திலே, குறிப்பிட்ட காலத்திலே வழக்குகளை முடிக்கவேண்டு மென்ற நிலை ஏற்படவேண்டும். எனக்கு, நான் முன்பு இதைப் பற்றி இங்கு பேசிய ஞாபகம் இருக்கிறது. கேஸ் ஒன்று நடந்ததாம். அது யானைக்கு வடகலை நாமம் போடுவதா அல்லது தென்கலை நாமம் போடுவதா என் பதைப்பற்றிய கேஸ். அந்தக் கேஸ் முடிவதற்கு 17 வருஷங்கள் ஆயிற்று. ஆனால் அதற்குள் அந்த யானையே செத்துப்போய்விட்டது. அந்தத் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னாலேயே யானை இறந்து விட்டது. யானைக்கே அந்த நிலையென்றால், அதாவது வழக்காடுவதற்காக கோவில் பணம் இருந்திருக்கும். அதை வைத்துச் செலவு செய்திருப்பார்கள். ஆனால் தனி மனிதன் போனால் என்ன செய்யமுடியும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். டார்ட்ஸ், ஜூரிஸ்ப்ருடென்ஸ் இவற்றையெல்லாம் முன்னாலே சட்டக் கல்லூரியிலே படிக்கும்பொழுது தமாஷாகச் சிலவற்றைப் படிக்கவேண்டியிருக்கும். ஒரு பெரிய கேஸ். அதிலே தீர்த்தம் முதலில் யாருக்குக் •கொடுக்கப்படவேண்டுமென்பதில் வழக்கு. அப்பொழுது நீதி பதியாக இருந்தவர் ஒரு ஆங்கிலேய நீதிபதி. அவர் இது ஒரு பெரிய எஸ்டேட்டைப் பற்றிய விவகாரம் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டார். **What is theertham** என்று கேட்டார். **Theertham is nothing but sacred water with some leaves put into it** என்று சொன்னார்கள். உடனே, தீர்ப்பு இப்பொழுதே கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார். ஒரு டிரம் கொண்டுவந்து வைத்து குழாய் மூலம் இரண்டு பேர்களுக்கும் ஏக காலத்திலேயே கொடுத்துவிடவேண்டு மென்று தீர்ப்புக் கொடுத்தார். அந்தக்கேஸில் தீர்ப்புக் கொடுப்பதற்கு 12 வருஷங்கள் ஆயிற்று. ஆகவே நன்றாக சீக்கிரமே நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. "நீதி நிறைந்த மதி கல்வி நிறைய உடையவர்கள் மேலோர்" என்று பாரதியார் சொல்லியிருக்கிறார்கள். "பொற்பில் நின்றன பொலிவு பொய் யிலா நிற்பில் நின்றன நீதி" என்று கம்பன் சொல்லியிருக்கிறான். பொய்யில்லாமல் இருந்தால் மக்கள் எல்லாம் சிறப்பாக வாழ்ந்தார்கள். அப்பொழுது பருவ மழை பெய்து நாடு செழித்தது. அதேமாதிரி தமிழகத்திலே நீதி நிலைநாட்டப்படுகிறது என்பதை யாரும் மறுக்கமுடி யாது. இனிமேலும் அதே தரத்திலேயே அதே நிலையிலேயே நீதி நிலைநாட்டப்படுவதற்கு இப்பொழுதுள்ள சர்க்கார் மதிப்புக் கொடுத்து முயற்சி செய்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்ததாக ஜெயிலைப் பற்றிச் சொன்னார்கள். ஜெயிலிலே பட்ட அனு பவங்களைப்பற்றிச் சொன்னார்கள். தருமபுத்திரனை இந்த நாட்டிலே உள்ள கெட்டவனைப் போய் பார்த்துவிட்டு வா என்று சொன்னார்கள். தருமபுத்திரன் போய்ப் பார்த்துவிட்டுவந்து இந்த நாட்டிலே கெட்டவனே இல்லை, எல்லோரும் நல்லவர்கள் தான் என்று சொன்னான். பிறகு துரியோதனனை இந்த நாட்டிலே உள்ள நல்லவர்களைப் பார்த்துவிட்டு வா என்று சொன்னார்கள், துரியோதனன் போய்பார்த்துவிட்டு வந்து இந்த நாட்டிலே நல்லவர்களே இல்லை, எல்லோரும் கெட்டவர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னான். ஆகவே நல்லவர்கள் என்பதும், கெட்டவர்கள் என்பதும் ஜெயிலிலே இருப்பவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்தது . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தருமபுத்திரன் துரியோதனனையும் சேர்த்துத்தான் நல்லவன் என்று சொன்னானா என்று கேட்க விரும்பு கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தருமபுத்திரன் துரியோதனனை நல்லவன் என்றுதான் சொன்னான். நானும் அமைச்சர் அவர்கள் நல்லவர் என்றுதான் சொல்கிறேன். அதேபோல் துரியோதனன் தருமபுத்திரனை கெட்டவன் என்று தான் சொன்னான். நாம் நல்ல நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருப்பதைப் பற்றி பாராட்டாமல் இருக்கமுடியாது. இருந்தாலும் அங்கே இருக்கிற பலப்பல பற்றாக்குறைகள், இன்னும் அசௌகரியங்கள் இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து நன்றாக நடத்துவார்கள் என்று நினைக்கிறேன். இருக்கும்படியான அமைச்சர்களிலே இந்த அமைச்சர் சட்டம் படித்தவர், விஷயங்களை ஆராய்ந்து ஆற்றலோடும் சக்தியோடும் காரியங்களைச் செய்வார் என்று தான் எனக்குத் தெரிந்த அளவிலே நான் கருதுகிறேன். அவர்கள் இங்கே கொடுக்கும்படியான கருத்துக்களைக் கேட்டு நல்ல முறையிலே செய்வார் என்பதிலே சந்தேகம் இல்லை.

ரிஜிஸ்ட்ரேஷன் பற்றிச் சொன்னார்கள். அந்த ஆபீஸுக்குச் செல்வதே சிறப்பாக இல்லை. உடனே மராமத்து அமைச்சர் அவர்கள் கேட்பார்கள், 20 வருஷங்களாக இப்படித்தானே வைத்துக்கொண்டிருந்தீர்கள், நாங்கள் வந்துதானா இப்படி நிலைமை ஏற்பட்டது என்று, பழையதைப் பேசிப் பிரயோஜனம் இல்லை. நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைத் தான் பார்க்கவேண்டும். ஆகவே பழையதைப் பற்றிச் சொல்லி பொறுப்பிலிருந்து தட்டிக்கழிக்காமல் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். காப்பீ ஆக இருந்தால் எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள், பெரிய புத்தகமாக இருந்தால் நல்லது என்று சொன்னார்கள். எடுத்துக் கொண்டு போகிறவன் பெரிய புத்தகமாக இருந்தால் எடுத்துக்கொண்டு போகாமலா இருப்பான். போட்டோ காப்பி கூட எடுத்துவைத்துக் கொள்ளலாம். அப்படியென்றால் பெரிய சலவைக் கல்லிலே பொறித்து வைத்தால்தான், அதை தூக்கிக்கொண்டு போக முடியாது. இதெல்லாம் பெரிய பிரச்சினை அல்ல. இருக்கிற ரிக்கார்டுகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதுதான் பிரச்சினையேயொழிய, பெரியது, சிறியது என்பதல்ல பிரச்னை. இதிலே எல்லாம் சீக்கிரமாகச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய கட்சியிலே கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லும்பொழுது நான் ஆளுங்கட்சிக்கு அதிக நேரம் கொடுத்துவிட்டதாகவும், எதிர்க்கட்சிக்குக் குறைவாகக் கொடுத்துவிட்டதாகவும் சொன்னார்கள். நான் அதற்காக பேரேடு வைத்திருக்கிறேன். 138 பேர்களைக் கொண்ட ஆளுங்கட்சிக்கு 43 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 96 பேர்கள் கொண்ட எதிர்க்கட்சிகளுக்கு 57 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 138 பேர்களுக்கு 43 நிமிடங்கள் கொடுத்து, 96 பேர்களுக்கு 57 நிமிடங்கள் கொடுத்து, அதிலேயும் காங்கிரஸ் கட்சிக்கு 29 நிமிடங்கள், அதாவது ஏறத்தாழ அரை மணி நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னேற்றக் கழகத்திற்கு உரிய நேரத்தைக் கொடுக்காமல் குறைவாகக் கொடுத்ததற்காக அவர்கள் என்னை மன்னித்து விடுவார்கள் என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 12-30

* **மாண்புமிகு திரு செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மூன்று துறைகளைப்பற்றியும் இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் நல்ல பல ஆலோசனைகளைக் கூறியதற்கும், பாராட்டுரைகள் வழங்கியதற்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்றங்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்திலே மிகச் சிறப்பாக எல்லோரும் போற்றக்கூடிய அளவிலே நடைபெறுகின்றன என்பதை எல்லாத் தரப்பிலிருந்தும் சொன்னார்கள். அது பாராட்டுக்குரிய செய்தியாகும். நம்முடைய நாட்டிலேயே, தமிழகத்திலேதான் நீதித் துறை மிக நல்ல முறையில் செயல்படுவதாக மற்ற மாநிலங்களில் கூட கருத்



துக்கள் நிலவி வருகின்ற அந்த நிலைமை நீடித்து இன்னும் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்பட்டது காலதாமதத்தைப்பற்றி. இதைக்கூட சட்டக் குழு ஆராய்ந்திருக்கிறது. நம்முடைய உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதிகள் எல்லாம் மாநாடு கூட்டி அதிலே ஆராய்ந்திருக்கிறார்கள். நீதிமன்றங்களில் காலதாமதமாவதற்கு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு காரணத்தைச் சொன்னார்கள்—வழக்கறிஞர்களைப் பற்றி. அதுவும் ஓரளவு உண்மைதான் ; அது இல்லையென்று சொல்லமுடியாது. அதே சமயத்தில் வழக்கறிஞர்கள் தயாராக இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போன்று அவரிடத்தில் வரக்கூடிய வாடிக்கைக்காரர்கள் வாய்தா கொடுப்பது இயல்பு. இந்தக் காலதாமதத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் உணர்ந்துதான் இப்போது ஒரு புதிய திட்டத்தை உருவாக்கலாம் என்று இருக்கிறோம். ஒவ்வொரு நீதிபதிக்கும், எப்படி எப்படி எந்தெந்த வழக்குகளை எடுக்க வேண்டும், எப்போது எடுக்க வேண்டும், எவ்வளவு நேரம் எடுக்க வேண்டும், எவ்வளவு காலத்திற்குள் எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆலோசனையாக வரையறுத்து நம்முடைய உயர்நீதி மன்றம் இப்போதே செய்து வருகிறது. இன்னும் கடுமையாக எல்லா நீதிமன்றங்களிலும் ஒருமித்த முறைகளைப் பின்பற்ற ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையை நம்முடைய அரசாங்கம் உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்க எண்ணியுள்ளது. அந்த நிலைமை ஏற்பட்டால் காலதாமதம் குறையும் என்று நம்புகிறேன். பொதுவாக, நீதிமன்றத்திற்கு மக்கள் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாத சூழ்நிலை நம்முடைய சமுதாயத்தில் ஏற்பட வேண்டும். கம்பர் பாடிய கற்பனைச் சூழ்நிலை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், மகாபாரதத்திலே தருமரை எடுத்துக் காட்டியதுபோல், அப்படிப்பட்ட கற்பனை உலகத்திற்கு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த 20 ஆண்டுகளில் இழுத்துச் செல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கினால் எல்லோரும் மகிழ்ச்சி கொள்ள வாய்ப்பு இருக்கும்.

நீதிமன்றத் துறையைப் பற்றிக் காஞ்சீபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் குறிப்பிட்டுப் பேசினோம். பழைய வரலாற்றை, எதிர்த்தரப்பில் இருந்து பெற்ற வரலாற்றை, சரித்திரத்தின் ஒரு பகுதியைச் சொன்னோம். அதைப்பற்றி முழுவதும் வேண்டுமானால் விசாரணை நடத்தி விவாதிக்க இந்த அரசாங்கமும், அது சார்ந்திருக்கிற கட்சியும் என்றைக்கும் தயாராக இருக்கிறது. அதுபற்றி இந்த மன்றத்திலே விவாதிக்க எப்போது வேண்டுமானாலும் தயாராக இருக்கிறோம். அந்த நிலைமை வேண்டுமா என்பதை எதிர்க்கட்சி நண்பர்கள் முடிவு செய்தால் விவரங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

நீதிபதிகள் வயது பற்றியும், ஊதியத்தைப் பற்றியும், அவர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகளைப் பெருக்க வேண்டியது பற்றியும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தக் கருத்துக்களை நாங்கள் முன்பு சொன்னோம் என்றெல்லாம் எடுத்துக் காட்டப்பட்டது. முற்றிலும் உண்மை. கனம் அங்கத்தினர்கள் பேசும்போதெல்லாம் எனக்கு சில மாதங்களுக்கு முன்பு அந்தத் தரப்பில் இருந்து பேசிய நினைவுகள் எல்லாம் வந்தன. அது பற்றி இந்த அரசாங்கம் மிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, மாஜிஸ்ட்ரேட்டுகளைப்பற்றி இந்த அரசாங்கம் உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நாங்கள் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தபோது இவர்களை எல்லாம் கெஜட்டட் ராங்க் ஆக ஆக்க வேண்டுமென்று சொன்னோம் ; தீர்மானங்கள் கொடுத்தோம். அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டு அவர்களை கெஜட்டட் ராங்க் ஆக்கும் உத்தரவைப் போட்டார்கள். ஆனால் அதிலே வேதனைக்குரிய பகுதி என்னவென்றால், அவர்களுக்கு ராங்க் தான் கொடுக்கப்பட்டதே தவிர, சம்பளம் உயர்த்தப்

படவில்லை. இந்த அரசாங்கம் அதைப் பற்றியும் பரிசீலித்துக்கொண்
டிருக்கிறது. கேரளத்தில் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.
ஆந்திரத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் என்ற நிலையையே அகற்றி அவர்களுக்கும்
மாவட்ட முனிசிபுகளுக்கும் ஒரே அளவில் இருக்க வேண்டுமென்ற
கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். இதையெல்லாம் ஒருமித்து எடுத்
துக்கொண்டு ஆராய்ந்து வருகிறோம். நிச்சயம் அவர்களைப் பொறுத்து
வெகு விரைவில் முடிவு எடுப்போம் என்பதை இந்த மன்றத்திற்குத்
தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வயதைப்பற்றிச் சொன்னார்கள். இவர்களுடைய வயதை உயர்த்துவ
தால் மற்றப் பணிகளில் உள்ளவர்கள் சொல்லக்கூடிய எதிர்ப்பு நீதித்
துறைக்குப் பொருத்தமாக இருக்காது என்பதுதான் அரசாங்கத்தின்
கருத்து. மற்ற அலுவலர்களுக்கு வாய்ப்பு வசதிகள் குறையுமென்று
சொல்லுகிறார்கள். நீதித் துறையைப் பொறுத்தவரை நிலைமைகள் வேறு.
அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு உயர்நீதி மன்ற நீதிபதிகளின்
வயது உயர்த்தப்பட்ட காரணத்தால், அந்த நீதிபதி நிலைக்குச் செல்லக்
கூடிய வாய்ப்புள்ள மற்ற நீதிபதிகள் வயது உயர்த்தப்படாமல் இருக்கு
மானால் அவர்களுடைய வாய்ப்பு பாதிக்கப்படும் என்பதை அரசாங்கம்
முற்றிலும் உணருகிறது. அந்த அடிப்படையில் இந்த நீதிபதிகள் வயது
எந்த அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதைப் பரிசீலித்து வருகிறோம்.
ஏற்கனவே இருந்த அரசாங்கம் மாவட்ட நீதிபதிகளுடைய வயதை 58 ஆக
உயர்த்தி அவ்வாறு உயர்த்தக் கூடிய அதிகாரத்தை அரசாங்கமே வைத்
துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினார்கள். இன்றைய
அரசாங்கம் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. நீதிபதிகள்
நிர்வாகத்தின் பிடிப்பிலே இருக்க வேண்டுமென்பதை இந்த அரசாங்கம்
ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு வயதைக் கூட்டினால், கூட்டக்
கூடிய அதிகாரம், வாய்ப்பு எல்லாம் உயர்நீதிமன்றத்தில் இருக்க வேண்
டும். அப்போதுதான் சுதந்திரமான நீதிபரிபாலனம் நடக்க முடியும்
என்பது இந்த அரசாங்கத்தின் கருத்து. இதிலே உயர்நீதி மன்றத்தோடு
வாதம் செய்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு முடிவை எடுத்துக்
கொள்ளும் நிலைமையில் இருக்கிறோம்.

அவர்களுக்கு வீட்டு வசதி பற்றிச் சொன்னார்கள். அதுபற்றித் தலைமை
நீதிபதி கூட தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். அது அரசாங்கத்தின்
கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. "ஃபேஸ்டு புரோகிராம்"
என்ற முறையில் திட்டமிட்டு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது
ஒரு வழி. இன்னொரு வழி, இப்போது இருக்கக்கூடிய ரெண்ட் கண்ட்
ரோல் ஸ்தாபனத்தின் கீழ் வீடுகள் எடுத்து அவற்றை நீதிபதிகளுக்கு
ஒதுக்கவேண்டும் என்பது ஹவுசிங் போர்டு மூலம் நீதிபதிகளுக்கு வீடுகள்
ஒதுக்க வேண்டுமென்ற கருத்துக்களும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த
அரசாங்கம் இவற்றையெல்லாம் பரிசீலித்து எந்த முறையில் செய்வது
என்று முடிவு செய்து நிச்சயம் நீதிபதிகளுக்கு நல்ல நிலைமையை
உருவாக்கக்கூடிய காரியங்களைச் செய்யும் என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

ஏழைகளுக்குச் சட்ட உதவி கொடுக்க வேண்டுமென்ற கருத்து தெரி
விக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டிலேகூட நீண்ட நாட்களுக்குப் பின்
னலேதான் இந்தச் சட்ட உதவியைப் பற்றி ஒரு சட்டம் வந்திருக்கிறது.
இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் வழக்கறிஞர்கள் அதிகமாகப் பேசினார்
கள். அவர்கள் எல்லாம் முயற்சி எடுத்துக்கொண்டு அவர்களைச் சார்ந்த
ஏராளமான ஜூனியர்களெல்லாம் வாதிட வாய்ப்பு ஏற்படுத்தும் வகை
யில் அவர்கள் எல்லாம் சேர்ந்து திட்டம் போட்டு, அரசாங்கத்திலிருந்து
பணம் தரவேண்டுமென்ற நிலைமை இல்லாமல் ஏழைகளுக்கு உதவி
செய்ய முன்வந்தால் பாராட்டுக்குரியதாக இருக்கும்; அதைப்பற்றி அரசாங்
கம் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.





இன்றைக்கு நீதி வழங்குகின்ற முறையில் நிர்வாகத்தில் உள்ளவர்கள்
எக்சிக்யூட்டிவ் மாஜிஸ்ட்ரேட் ஆக இருக்கிறார்கள் என்ற கருத்தும்
சொல்லப்பட்டது. அது மிகவும் நல்ல கருத்து. நாங்களே அதைப் பரி
சீலித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமை ஒரு நல்ல நிலைமை
அல்ல என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. நிர்வாகத்திலே உள்ள
வர்கள் நீதி முறையிலே பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணம்
சொல்லி ஏழை மக்களை, நீதி விரும்பும் மக்களை அவர்களுக்குப் பயன்
படுத்தி பயிற்சி பெறுவது என்பது நல்ல முறை அல்ல. அதைப்பற்றிச்
சட்ட இலாகாவைப் பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம்.

அதை எந்தளவிற்கு மாற்ற முடியுமோ அந்தளவிற்கு மாற்றுவதற்கு
இந்த அரசாங்கம் முயற்சிக்கும். இந்தத் தரப்பிலிருந்து திரு. முனுசாமி
அவர்கள் தமது தொகுதியில் உள்ள நிலைமைகள் பற்றிச் சொல்லி
இந்த வழக்குகளை எல்லாம் அந்தக் கோர்ட், இந்தக் கோர்ட்டு என்று
மாற்றுவதற்குப் பதிலாக புதிய கோர்ட்டுகளைத் திறக்க வேண்டுமென்று
சொன்னார்கள். நான் என் தொடக்க உரையிலேயே சொன்னேன். புதிய
நீதிமன்றங்களைத் திறப்பது என்பது உயர் நீதிமன்றத்தின் கருத்துக்களின்
அடிப்படையில் மக்களின் வசதிகளைக் கருதி பார்த்துச் செய்ய வேண்டிய
நிலைமை. ஆனால் டிரான்ஸ்பர் ஆஃப் ஸூட்ஸ் என்பது இயற்கையாக
தொடர்ந்து நடத்திக் கொண்டு வருவது, இது ஓரளவு மக்களுக்கு வசதிக்
குறைவை ஏற்படுத்தினாலும் நீண்ட நாட்களாக ஒரு நீதி மன்றத்தில்
வழக்குத் தேக்கம் இருந்தால் பக்கத்திலுல்ல நீதிமன்றங்களுக்கு மாற்றப்
படவேண்டும் என்பது பொதுமக்களுக்கு ஓரளவு வசதியை ஏற்படுத்து
கிறது.

நீதிமன்றங்களில் கட்டணம் செலுத்துகிறவர்கள் தலையில் ஸ்டாம்ப்
கட்டணம் கடுமையாக இருக்கிறது, அவை கிடைக்கவில்லை, தவறுகள் பல
இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் பதவி ஏற்ற
வுடன் இதுபற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நேரிடையாக
மத்திய நிதியமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள். இந்த ஸ்டாம்ப்
கலெக்ஷன் நம்மிடம் இருந்தாலும், அந்த வருமானம் நமக்கு வந்தாலும்
அதைக் கொடுக்கக்கூடிய பொறுப்பு, அதிகாரம் மத்திய அரசாங்கத்தி
னிடம் இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து எழுதி அவர்களும் ஒத்துக்
கொண்டு நம் நாட்டில் உற்பத்தி செய்யும் தாளில், ஸ்டாம்ப் பேப்பரில்
அச்சடித்துத் தருவோம் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். அது
வருவதற்கு முன் இடைக்கால நிவாரணமாக சாதாரண தாளில் எழுதி
பத்திர அலுவலகத்தில் சென்று பதியக் கூடிய வாய்ப்பையும் இன்று
அரசு ஏற்படுத்தி உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த நிலைமையில்
ஓரளவு இந்தக் கட்டுப்பாடு குறையும், மக்களுக்கு நல்ல வசதி ஏற்படும்
என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு சம்பந்தப்படாவிட்டாலும் விஜிலென்ஸ் துறையைப்
பற்றி அங்கத்தினர் திரு. ராஜாங்கம் அவர்கள் சொன்னார்கள். அதில்
பல குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். விஜிலென்ஸ் துறையில்
இன்றுள்ள வழக்குகள்பற்றியெல்லாம் புள்ளி விவரம் எடுத்து எந்த
வருடம் போடப்பட்ட வழக்குகள், அதில் எவ்வளவு பேர்கள் ஸஸ்பென்ஷ
னில் இருக்கிறார்கள், அதற்கு என்ன காரணம் என்பதுபற்றியெல்லாம்
ஒரு புள்ளி விவரம் எடுத்திருக்கிறோம். அதைப் பரிசீலித்து
எந்தளவிற்கு இந்த முறைகளையெல்லாம் மாற்றியமைக்கலாம் என்று
இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது.
நான் முன்பே சொன்னேன். இது ஒரு பிரச்சினை அல்ல. நீதிமன்றங்களை
மட்டும் அதிகப்படுத்தினால் போதாது. அதில் செலவுதான் அதிக
மாகும். எங்கெங்கு வசதிகள் இருக்கிறது என்று பார்க்கிறோம். முதலில்
ஒரு இடத்தில் வழக்குகள் இருக்கிறதா என்று பார்க்கிறோம். பின்னால்
வாதாட வழக்கறிஞர்கள் இருக்கிறார்களா என்று பார்க்கிறோம். பின்னால்

[திரு. செ. மாதவன்] [1967 ஜூன் 29

வசதிகள் இருக்கின்றனவா என்று பார்க்கிறோம். இவையெல்லாம் பார்த்து முடிவு செய்யப்படுகிறது. அப்போதைக்கப்போது அங்கத்தினர்கள் கருத்துக் களைக் கூறினால் இந்த அரசு பரிசீலிக்கத் தயாராயிருக்கிறது.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் நீதி மன்ற மொழிபற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் அவர்களுடைய கொள்கையை ஏற்றுக் கொள்கிறது. முழுக்க முழுக்க நீதிமன்றங்களில் தமிழில்தான் இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. அதை எப்போது, எந்த அளவிற்கு, எந்த முறையில் என் பதுதான் இன்றைக்கு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதற் காக ஒரு சட்டக்குழு பணியாற்றுகிறது. அதற்கு தலைமை நீதிபதிதான் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் சொற்களையெல்லாம் தொகுத்து அதற்குப் பின்னால் சட்டங்களை தமிழில் ஆக்கித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வெகு விரைவில் அது முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது. இடைக்காலத்தில் ஆங்காங்கு நீதிமன்றங்களில் சாட்சிகள் விசாரிக்கப்படும்போது தமிழில்தான் விசாரிக்கப்படுகிறார்கள். அந்த நீதிபதிதான் அதை ஆங்கிலத்தில் அந்த இடத்திலே மொழி பெயர்த்துக் கொள்கிறார்கள். இது எந்தளவிற்கு சரி என்பது ஓரளவிற்கு ஆராயப்பட வேண்டியதாகும். இந்தச் சர்க்கார் சார்பில் உயர்நீதி மன்றத் திடம் சொல்லியிருக்கிறோம். இதை மாற்றியமைத்து தமிழில், எந்த மொழியில் சொல்கிறார்களோ அந்த மொழியில் பதிவு செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறோம். அதுபற்றி மாவட்ட நீதிபதிகளை எல்லாம் அழைத்துப் பேசி முடிவு சொல்வதாக தலைமை நீதிபதி அவர் கள் சொல்லியிருக்கிறார்கள். அது வந்தவுடன் முதல் திட்டமாகக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் இப்படிப் பேசும்போது இந்திய தலைமை நீதிமன்றத்தில் தமிழில் பேச முடியுமா என்பதெல்லாம் ஏற்கெனவே கேட்டுக் கேட்டு நாம் எல்லாம் அதற்குப் பதில் சொன்ன பிரச்சினை. இந்த நாட்டு மண்ணில் பிறந்தவர் கள் தன் சொந்த மொழியில் வாதாட உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளப்படும் கொள்கை. அந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. விரைவில் அதை நிறை வேற்ற முழு முயற்சியையும் எடுத்துக் கொள்ளும்.

மரண தண்டனை விதிப்பதுபற்றிச் சொன்னார்கள். இது உலகிலேயே சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும். இது வேண்டுமா வேண்டாமா என்பது உலகத்தில் உள்ள பல பகுதிகளிலும் உள்ள பெரிய அறிஞர்களால் வாதிக் கப்பட்டு வந்த பிரச்சினை. நம் நாட்டில் வாதிக்கப்பட்டு முடிவு எடுக்க முடியாத பிரச்சினை. சமுதாயத்தில் உள்ள சூழ்நிலை மாறினால்தான் இது போன்ற கொள்கைப் பிரச்சினையில் தலையிடலாம் என்ற பிரச்சினை இருக் கிறது. மக்கள் முடிவு செய்ய வேண்டிய ஒன்று அது, எப்போது எங்கு என்பது.

சிறைச்சாலைகளைப் பொறுத்த வரையில் இந்த அரசின் கொள்கை பற்றிச் சொன்னார்கள். சிறைச்சாலைகள் சீர்திருத்தச் சாலைகளாக ஆக்கப் பட வேண்டும். அங்கு கல்வி புகட்ட வேண்டும். தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும். சிறைச்சாலைகளில் இருந்து வெளியே வருகிறவர்கள் நல்லமுறையில் சமுதாயத்தில் வாழ வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பது கொள்கை. அந்த நோக்கத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. கைதிகள் எப்படி எப்படி, என்னென்ன குற்றங்களுக் காக கைதிகளாக இருக்கிறார்கள் என்பதுபற்றி விதிகள் இருக்கின்றன. க்ளாசிபிக்கேஷன் ஆஃப் ப்ரிஸினேர்ஸ்—இன்றுள்ள முறை போதிய அளவிற்கு ஒவ்வொரு கைதியையும் பிரித்து வைக்கும் நிலை இருக்கிறதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒரு கருத்து. உறுப்பினர்களின் கருத் துக்களை இந்த அரசு பரிசீலிக்கத் தயாராகயிருக்கிறது. உணவைப் பற்றிச் சொன்னார்கள். சிறைச்சாலையை அனுபவித்தவர்கள் இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உணவை நானே சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். அது எப்படியிருக்கிறது என்பது ஓரளவிற்குத் தெரியும்.



1967 ஜூன் 29] [திரு. செ. மாதவன்]

எப்படி தயார் செய்யப்படுகிறது, எந்தச் சட்டியில், இரும்புச் சட்டியில் என் றெல்லாம் சொன்னார்கள். இதையெல்லாம் அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதிலுள்ள கேடுபாடுகளை எல்லாம், நீக்கவேண்டுமென்று ஆணை பிறப் பித்திருக்கிறோம். எப்படி மாற்றலாம், எந்தப் பாத்திரத்திற்கு மாற்றலாம், எந்த முறையில் உணவு முறையை மாற்றலாம் என்பது இலாகா பரிசீலனை யில் இருக்கிறது.

அங்கத்தினர்கள் கருத்துக்களை எல்லாம் இலாகா அதிகாரிகள் பரி சீலனையில் எடுத்துக் கொண்டு நல்ல கருத்துக்களைத் தருவார்கள் என்று நம்பிக்கையிருக்கிறது. சிறைச்சாலைகளில் கூட்டம் அதிகமாக இருப்பதினால் தான் ஓரளவு இந்தத் தவறுகள் எல்லாம் ஏற்படுகின்றன. இதை அரசாங் கம் உணர்ந்து திருநெல்வேலியில் ஒரு புதிய மத்தியச் சிறைச்சாலை ஏற்படுத்தலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். அங்குள்ள இளம் குற்றவாளிகள் சிறைச்சாலையை புதுக்கோட்டைக்கு மாற்றலாம் என்ற முடி விற்கு வந்திருக்கிறோம். இதனால் மதுரைச் சிறைச்சாலையில் கூட்டம் குறையும்.

அடுத்தபடியாக, பல மாநிலங்கள் பின்பற்றும் முறை கைதிகளை எல் லாம் சிறைச்சாலையில் மட்டும் அடைத்து வைக்காமல் அவர்களுக்குத் திட்டங் கள் நடக்கக்கூடிய, ப்ராஜக்ட்ஸ் இடங்களில் வேலை கொடுத்து அதன் மூலம் அதிக ரெமிஷன் கொடுத்து அதன் மூலம் சம்பளம் கிடைக்கும் முறையில் செய்தால் சிறைச்சாலைகளில் கூட்டம் குறையும். இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படும் வாய்ப்பும் குறையும். அது பரிசீலனையில் இருக்கிறது. உண்மையில் அப்படிப்பட்ட திட்டங்கள் கிடைத்தால் உடனடியாக சிறைச் சாலைகளில் உள்ள கைதிகளைப் பயன்படுத்த இந்த அரசாங்கம் முழு மூச்சாக ஏற்பாடு செய்யும்.

அரசியல் கைதிகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. உண்மையில் அது வரவேற்கக் கூடியதே. அதுவும் எதிர்க்கட்சியில் உள்ள அரசியல்வாதிகளுக்கு அதிகாரிகள் மதிப்பு தரு கிறார்களா, சிறைச்சாலையில் மதிப்பு இருக்கிறதா என்பது பரிசீலிக்க வேண்டியதுதான். என் அனுபவத்தில் கூறுகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது "ஸி" கிளாஸுக்கு என்னை எடுத்துச் சென்றார்கள். எங்களையும் எழுந்திருங்கள், உட்காருங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நல்ல மரியாதை உள்ள நிலை சிறைச்சாலைகளில் வர வேண்டும் என்பதை அரசாங்கம் முற்றிலும் உணருகிறது. அதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறோம் ஏற்கனவே. யாராவது தவறாக நடந்தால் இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறது. அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள், எந்தக் கட்சியைச் சார்ந்தவர் களானாலும் அவர்களுக்கு தகுந்த மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு மட்டுமல்ல. இந்த நாட்டு மக்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற முறையில் கைதிகள் பரிபாலிக்கப்பட வேண்டும். அவர்களை அடிமைகள் போல் நடத்தக் கூடா தென்று கடுமையாகச் சொல்லியிருக்கிறோம்.

கைதிகளை அடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்களும் பார்த் திருக்கிறோம். விலங்கு மாட்டப்படுகிறது என்று சொன்னார்கள். நாங்க ளும் பார்த்திருக்கிறோம். இதற்கு நாங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறோம். கைதிகளை அடித்துத் துன்புறுத்தக் கூடிய நிலை, அடிமை வாழ்வு நடத்தக் கூடிய நிலை ஒரு சர்வாதிகார ஆட்சியில்தான் நடக்கமுடியும், ஜனநாயக ஆட்சியில் அந்த நிலை இருக்கக் கூடாது. அப்படி யாராவது தகவல் கொடுத்தால் இந்த அரசாங்கம் அதுபற்றி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தயாராயிருக்கிறது.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்க்க வாய்ப்பில்லை என்று குறிப்பிட்டார்கள். ஏற்கனவே அதுபற்றி ஒரு ஜீ.ஓ. இருக்கிறது. அந்த ஜீ.ஓ.-வில் அதிக விளக்கம் இல்லை என்று கருது

கிறேன். அதை ஆராய்ந்து எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களும் முன்னெச்சரிக்கையாக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவிப்புக் கொடுத்து சிறைச்சாலைக்குச் சென்று—தன்னுடைய கட்சிக்காரர்களைப் பார்ப்பதற்கு அல்ல ; அல்லது ஒரு தனிப்பட்ட கைதியைப் பார்ப்பதற்கு அல்ல—அங்குள்ள நிலைமைகளைக் கண்டறியும் முறையில் அந்த அளவுக்கு உத்தரவை மாற்றலாம் என்பதை நான் பரிசீலித்துச் செய்வேன் என்று இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (ஓர் உறுப்பினர் குறுக்கீடு) முன்னெச்சரிக்கையோடு போனால் உஷாராக ஆகிவிடுவார்கள் என்று சொன்னார்கள். நினைத்த நேரத்தில் போக முடியாது. மேலும் அவர்கள் பார்த்து சர்க்காருக்கு யோசனை சொல்லத்தான் போகிறார்களே தவிர, தவறுகளைக் கண்டுபிடிக்கப் போகவில்லை. தவறுகள் நடந்தால் அதைக் கண்டுபிடிக்க விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர் சென்று பார்த்து அரசாங்கத்திற்கு யோசனை சொல்லலாம் என்றுதான் இந்த ஏற்பாடு செய்ய உத்தேசம்.

கைதிகளின் உடைகள்பற்றிச் சொன்னார்கள். சிறைச்சாலைகளுக்குச் சென்று அனுபவித்தவர்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். பரிசீலித்து குல்லாயை எடுத்துவிட உத்தரவிட்டோம். சொந்த உடையை அவர்களாகத் தைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வதைப்பற்றி யோசனை செய்து கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறைக்குச் செல்லவில்லை என்று சொல்லுகிறார்கள்—ஆச்சரியம் தான். அவர்கள் பல தியாகங்களைச் செய்த கட்சியைச் சேர்ந்தவர்கள். எதிர்க் கட்சித் தலைவர் சிறைச்சாலைக்குச் சென்றவர் என்று நினைத்திருந்தேன். கேரளாவில் சில முறைகள் பின்பற்றப்படுகின்றன. நம் மாநிலத்தில் எந்த அளவுக்குப் பின்பற்றலாம் என்று கேரள மாநிலத்திற்கு எழுதியிருக்கிறோம். கைதிகளை, அவர்களும் மக்கள்தான் என்ற முறையில் அவமானப்படுத்தாத நிலையில் எப்படி இருக்கலாம் என்று பரிசீலித்து முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

கடிதங்கள் எழுதுவதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். இப்போது கைதிகளில் " ஏ " கிளாஸ், " பி " கிளாஸ், " ஸி " கிளாஸ் என்று பிரித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் ஒரு உரிமைதான் இருக்க வேண்டும். உறவினர்களோடு தொடர்புகொள்ளும்போது " ஏ " கிளாஸ் கைதிகளுக்கு ஓர் உரிமை, " ஸி " கிளாஸ் கைதிகளுக்கு ஓர் உரிமை ஜனநாயக நாட்டில் இருக்கக்கூடாது என்று இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டிருக்கிறேன். அது பற்றிய விவரங்கள் வந்ததற்குப் பின்னால் வேறுபாடு இல்லாமல் செய்யலாம் என்ற நிலைமையும் இருக்கிறது.

ஆயுள் தண்டனை கைதிகள் விடுதலை ஆலோசனைக் கமிட்டியில், போலீஸ்காரர் சொல்லும் கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்று சொன்னார்கள். அது நல்ல கருத்து. போலீஸ் காரர் ருட்டீன் முறைப்படி அனுப்பப்படுகிற கருத்து என்றாலும், ஓரளவுக்கு உண்மையானதுதான்—எல்லா இடத்திலும் உண்மை இல்லாவிட்டாலும். யாரை விடுதலை செய்யப் போகிறோமோ அவர் விடுதலைப் பெற்றுப் போனதற்குப் பின்னால் எந்த இடத்திற்குப் போவாரோ அந்த இடத்தின் சூழ்நிலையைப்பற்றி போலீஸ் அதிகாரியின் கருத்தை அரசாங்கம் அறிவது நியாயம் என்று அரசாங்கம் கருதுகிறது. அவர்கள் சொல்லக்கூடிய கருத்து நியாயமானதுதானா என்று நல்ல முறையில் அரசாங்கம் பரிசீலிக்கப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. சட்ட மன்ற உறுப்பினர் எழுதி அனுப்பினாலும் அதையும் கணக்கில் கொண்டு பரிசீலிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவில் பணிபுரிகிறவர்கள் சப்-ஜெயிலுக்குப் போக வாய்ப்பு இருக்கிறது, சென்று சில நேரத்தில் அப்ரூவர்களாக மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அதுபற்றியும் ஆராய்ந்து, சப்-ஜெயில்களெல்லாம் இன்றைக்கு கலெக்டர் நிர்வாகத்தில்





இல்லாமல் சிறை இலாகா மூலமாக எடுத்துக்கொண்டு, தவறுகளைத் தவிர்த்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதையும் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதுகுளத்தூர் கலக வழக்குகளைப்பற்றிச் சொன்னார்கள். பெரிய அரசியல் பிரச்சினை என்று சொன்னார்கள். இதைப்பற்றிய வரலாற்றையெல்லாம் பேசாது எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து, ஏதோ ஒரு நிலைமையில் ஏற்பட்ட பிரச்சினை என்று எல்லாப் பிரதிநிதிகளும் சேர்ந்து முடிவு கட்ட வேண்டும். எல்லாத் தலைவர்களும் இது குறித்து முயற்சி எடுத்தால் அரசாங்கத் தரப்பிலே ஒத்துழைக்க அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் கருத்துக்கு முழுக்க முழுக்க மதிப்புக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும் மற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், எல்லோரும் கலந்து கவனித்தால் சமுதாயத்தில் நல்ல நிலைமை ஏற்படும் என்று உணருகிறேன். இதற்கு எல்லாத் தலைவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறையில் புதியமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றிக் கருத்துக்களைச் சொன்னார்கள். இதிலே ஏற்கனவே இருந்த அரசு ஒரு முடிவு எடுத்தது. ஒரு அரசு ஆராய்ந்து முடிவு எடுத்த பிறகு உடனே அதை மாற்றுவது சரியல்ல என்பது இந்த அரசின் கொள்கை. எப்படி வேலை செய்கிறது என்று ஆராய்ந்து பார்த்ததற்குப் பின்னர் நல்ல முடிவுக்கு வருவது நல்லது என்று கருதுகிறேன்.

கனம் சுதந்திராக் கட்சி அங்கத்தினர் திரு. ஹாண்டே அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மால்-ப்ராக்டீஸ்—தவறுகள் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள். உண்மைதான். இதிலே தவறு செய்கிறவர்கள், அதிலும் தவறு செய்யலாம். எது நல்ல முறை, எது வாய்ப்புக் கொடுக்க வேண்டிய முறை என்று பார்க்க வேண்டும். அசல் பத்திரம் எழுதும் போது நகலை அதை எழுதியவரே எழுதும் முறை இருக்கிறது. முன்னே இருந்த முறையில் ஒரு கிளார்க் அதைப் பதிவார். பதியும்போது எப்படி வேண்டுமானாலும் பதியலாம். அவசரத்தில் தவறி எழுதலாம்—அந்த வாய்ப்பு இருக்கிறது. நீதி மன்றத்திற்கு காப்பியை மட்டும் எடுத்து வந்தால் 30 ஆண்டுகளுக்குப் பின்னால் அந்த விலை மதிப்பும் இருக்கிறது. அதைத் தடுக்க வாய்ப்பு இருக்கிறது. அசல் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொண்டு செல்லும்போது நகலிலும் கையெழுத்துப் போட வேண்டுமென்ற முறை இருக்கிறது. 60 ஆண்டுகளுக்குப் பின்னாலும் சாட்சி என்ற முறையில் விசாரிக்க வாய்ப்பு இருக்கிறது.

பதியக் கூடிய முறையில் காலதாமதம் குறைந்து, இன்றைக்குக் கொடுத்தால் " நான்கு நாட்கள் கழித்து வா " என்று சொல்லும் நிலைமை இல்லாமல் உடனுக்குடன் கொடுக்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்பது புதிய முறையின் தத்துவம். செலவுக் குறைப்பு என்பது அடுத்த தத்துவம். இதன் விளைவு ஒரு மாதத்தில் என்ன என்ற குறிப்பு என்னிடத்தில் தரப்பட்டிருக்கிறது. ஆவரேஜைப் பார்த்தால் ஏற்கனவே ஒரு நாளிலே 2,643 பத்திரங்கள் பதிவாகியிருந்தன. புதிய முறையைக் கொண்டு வந்ததற்குப் பின்னால் ஒரு நாளிலே 3,712 பத்திரங்கள் பதிவாகியிருக்கின்றன. இந்த வேகத்தில் பொதுமக்களுக்கு நல்ல வாய்ப்புக்கொடுத்து உடனுக்குடன் பத்திரத்தைப் பதிந்து திரும்பப் பெற வாய்ப்பு இருக்கிறது என்பது இப்போது பெறப்பட்ட அனுபவம். தொடர்ந்து இதுபற்றிப் பரிசீலித்து வருவோம்.

நான் கூட ஆங்காங்கு செல்லும்போது திடீரென்று பதிவு அலுவலகங்களுக்குச் சென்று பார்க்கிறேன். எப்படி பத்திரங்களை ஓட்டி வருகிறார்கள் என்று பார்த்து வருகிறேன். அனுபவத்திற்குப் பிறகு அப்போதைக்கப்போது பரிசீலித்து முடிவு செய்யவேண்டிய ஒன்று என்பதை இங்கே

[திரு. செ. மாதவன்] [1967 ஜூன் 29

தெரிவித்து மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் இந்தத் துறையைப் பற்றி நல்ல கருத்துக்களைச் சொன்னதற்காக என் நன்றியை மீண்டும் கூறி, அங்கத்தினர்களுடைய கருத்துக்களையெல்லாம் அரசாங்கம் பரிசீலிக்க இருக்கிறது என்ற காரணத்தினால், இந்த மானியத்திற்கு, எதிராகக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் மனமுவந்து அருள்கூர்ந்து திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மூன்று துறைகளும் நல்ல முறையில் செயல்பட வாய்ப்பு அளிப்பார்கள் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்து என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது நிதிக் கோரிக்கைத் தீர்மானங்களின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்கள் அவையின் முடிவுக்கு விடப்படுகின்றன. வெட்டுத் தீர்மானங்கள் வாக்குக்கு விடப்பட வேண்டுமென்ற அளவுக்கு வற்புறுத்தப்படவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வற்புறுத்துகிறார்களா? இல்லையா? என்று ஒவ்வொன்றாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா வெட்டுத் தீர்மானங்கள்மீதும் வாக்கு எடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற அளவுக்கு வற்புறுத்துகிறார்களா என்று கேட்கிறேன். அப்படி வற்புறுத்தவில்லை என்று கருதுகிறேன்.

**THIRU T. MARTIN :** Sir, I press my motion.

**THIRU K. RAMAMOORTHY :** Sir, I press my cut motion.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, என் பெயரில் கொடுத்திருக்கக் கூடிய வெட்டுத் தீர்மானங்கள் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பல பிரச்னைகளை கவனித்துத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே பிரதானமாக, எனக்குப் பேச வாய்ப்பு இல்லாத காரணத்தினால், ஒன்றே ஒன்று, குடியாத்தத்தில் நான்கு லட்சம் மக்கள் கொண்ட இடத்தில் முன்சீப் கோர்ட் அமைக்க வேண்டும் என்ற விஷயம் அதை கவனிக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கை எண் X—க்கு திரு. டி. மார்டின், திரு. க. இராமமூர்த்தி
பி.ப. 1-00 இவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றன.

ஏனைய வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,98,31,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியதொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XI-க்கு திரு. க. இராமமூர்த்தி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

ஏனைய வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் XI-சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,12,07,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1967 ஜூன் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் கோரிக்கை எண் V-க்கு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

ஏனைய வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் V—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,25,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியதொகை வழங்கப்பட்டது.

## (எ) கோரிக்கை எண் XIX—கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** XIX-வது எண்ணுள்ள கூட்டுறவு என்ற தலைப்பின் கீழுள்ள நிதிக் கோரிக்கையை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ.2,97,18,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. க. ர. நல்லசிவம் :** கொள்கை பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்:—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களும், திரு. நா. சௌந்திரபாண்டியன் அவர்களும் அவரவர்களுடைய இருப்பிடங்களில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படுகின்றன.

**திரு. க. ர. நல்லசிவம் :** கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படும் ஒழுங்கீனங்களைப் போக்குவதற்கு பரிகாரம் காண்பதுபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** வசதிக்காரர்களின் பிடிப்பிலிருந்து விடுவித்து சாதாரண மக்களுக்குப் பயன்படும் விதத்தில், கூட்டுறவு ஸ்தாபனங்களை இயங்க வைப்பதுபற்றி விவாதிக்க—என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கூட்டுறவுச் சங்கங்களில் கிராம அதிகாரிகள் இருப்பதால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்காட்ட என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப்பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் பற்றியும், உரம் போன்றவை பற்றியும் விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** விவசாய வேலைகளுக்குக் கொடுக்கும் கூட்டுறவு கடன்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டி விகிதத்தையும் பங்குத் தொகை விகிதத்தையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. இ. எம். சுப்பிரமணியம் :** கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் கொடுக்கப்படும் விவசாயிகளுக்கான ஜாமீன் கடன் தொகை வரம்பை உயர்த்துவது பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** கூட்டுறவில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன்களை இந்த ஆண்டு வசூலிப்பதை நிறுத்தி வைப்பது பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மனத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. க. இராமமூர்த்தி :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே உர விநியோகம் செய்வதுபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ்ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".





**திரு. கரு. சிமைச்சாமி :** என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன் :—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கம் மூலம் காலாகாலத்தில் இரசாயன உரங்கள் விற்பனை செய்யாததைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

இத்துறையில் நடைபெறும் ஒழுங்கீனங்களை நிவர்த்திக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**திரு. சி. கோவிந்தராசன் :** என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கூட்டுறவு ஸ்தாபனங்களில் பணம் கையாடல்கள் நடந்துவருவதைக் குறித்து விவாதிக்க."

கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ்ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.—

**THIRU N. S. V. CHITHAN :** Sir, to discuss about the undue delay in prosecuting the cases of misappropriation, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,97,18,500 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இல. பலராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. ஆகையால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப்பெற்றுக் கொண்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன்:—

சர்க்காரே ஒவ்வொரு நகரத்திலும் நகர பஞ்சாயத்துப் பகுதிகளிலும் சிறிய வங்கிகளை ஆரம்பிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

தவறு செய்யும் கூட்டுறவுச் சங்கங்களின்மீது உடனுக்குடன் ஆறு மாதத்திற்கு மேல் போகாமல் விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நடைபெறும் தவறுகளைப்பற்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துக்காட்ட—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ்ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967 ஜூன் 29

கூட்டுறவு விவசாய திட்டத்தை, தீவிரமாக விஸ்தரிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்ட—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

**THIRU A. BALASUBRAMANIAM**: Sir, to discuss the failure of the Government to allot more funds for Rural Housing and Urban Housing schemes for low income and middle income groups I move :—

'That the allotment of Rs. 2,97,18,500 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100.'

**திரு. கே. பி. எஸ். மணி**: தலைவர் அவர்களே, அரிசன வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க வேண்டியது பற்றி விவாதிக்க என்னுடைய பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

**THIRU A. BALASUBRAMANIAM**: Sir, to discuss the failure of the Government to reduce the price of yarn I move—

'That the allotment of Rs. 2,97,18,500 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100.'

**திரு. வி. கே. கோதண்டராமன்**: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை நான் முன்மொழிகிறேன்—

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு மில் விலைக்கு நூல் கொடுக்க வேண்டுமென்பது பற்றி எடுத்துக் கூற—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100ரூபாய் குறைக்க வேண்டும்."

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்**: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன்—

நூல் உற்பத்தி ஆலைகளிலிருந்து ஏஜெண்டுகள் மூலமாக அல்லாது நேரடியாக நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கும்படி உத்திரவாதம் செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படும் ஒழுங்கீனங்கள் காரணமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஏழை கைநெசவுத் தொழிலாளிகளின் பங்குத் தொகை பறிபோகாமலிருப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."



1967 ஜூன் 29]

**திரு. வி. கே. கோதண்டராமன்**: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கும் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன் :

கைத்தறித் துணிகளைச் சர்க்காரோ அல்லது மாகாணக் கூட்டுறவுச் சங்கமோ கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பற்றி எடுத்துக் கூற,

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

கைத்தறி நெசவுத் தொழில் நடைபெறாத பிரதேசங்களில் நெசவாளர்களுக்காகக் கட்டியுள்ள வீடுகளுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையிருப்பதால் அதைத் தள்ளுபடி செய்வதைப் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்."

பீடித் தொழிலைக் கூட்டுறவு முறையில் நடத்தப் போதுமான பணம் ஒதுக்கி ஊக்குவிக்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்கவேண்டும்."

**திரு. கரு. சீமைச்சாமி**: தலைவர்அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிகிறேன் :

மதுரை அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஓடாமல் ஸ்தம்பித்து நிற்பதுபற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்கவேண்டும்."

மதுரை காமதேனு சிறப்பு அங்காடி நஷ்டத்தில் நடந்துகொண்டிருப்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,97,18,500-ல் 100 ரூபாய் குறைக்கவேண்டும்."

**THIRU A. A SUBBA RAJA**: Sir to discuss the suggestion to install a pasteurisation and chilling plant at Rajapalayam, I move—

"That the allotment of Rs. 2,97,18,500 under Demand No. XIX—Co-operation—be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து தன்னுடைய இடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுகொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களது கோரிக்கைத் தீர்மானமும், மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

* **திரு. என். எஸ். வி. சித்தன்**: மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்திற்குக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைமீது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1967 ஜூன் 29

முன் எடுத்துவைக்க விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் கம்யூனிசத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் இடைநிலை என்று கூறுவார்கள், முன்பு பம்பாயில் ஏற்பட்ட கிளர்ச்சியின் பயனாக இந்தியாவிலே கூட்டுறவு இயக்கம் துவங்கியது. இன்றைக்குப் பல்வேறு துறைகளிலும். குறிப்பாகத் தமிழகத்தில் மிக நல்ல முறையிலே, கூட்டுறவு இயக்கம் இருக்கும் நிலையைக் காண்கிறோம். உழுதுண்டு வாழ்வோரை உய்விப்பதற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கூட்டுறவு இயக்கம் பணி செய்து வந்திருக்கிறது. ஆனாலும் அதன் சிறப்பான பலனை மக்கள் அடையவில்லை. இந்த நாட்டில் நான்கில் மூன்று பங்கினர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் கடனாளிகளாக இருக்கிறார்கள். ஒரு பேரறிஞர் கூறியபடி, விவசாயி கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வாழ்நது, கடனாளியாகவே இறக்கிறான். அன்று காளாஸ்ஸன் குறிப்பிட்டபடி, விவசாயி சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவனாக இருக்கிறான். பயிர்த்தொழிலைப் பிறருடைய கடன் உதவியின்றி விவசாயி செய்யமுடிவதில்லை. விவசாயிகள் கடன்பெரும் கணக்கைப் பார்த்தால், தனியாரிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் 92·7 சதவீதம், பெறுகிறான். அரசினரிடமிருந்து பல்வேறு வகைகளிலும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் 7·3 சதவீதம் அளவில் கடன்களைப் பெறுகிறான். ஏனென்றால், தனியாரிடமிருந்து கடன் பெறுவது விரைவாகவும், எளிதாகவும் இருக்கிறது. வட்டி விகிதம் அதிகமாக இருந்தாலும்கூட, பணம் அவனுக்குத் தேவைப்படும்போது கிடைக்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில், சிறப்பாக நில அடமான வங்கிகளில், கடன் கிடைக்க ஒரு தலைமுறைகூட ஆகிவிடுகிறது. அவ்வளவு காலதாமதம் இருக்கிறது. "அரும் பசிக்கு உதவாத அன்னம், ஆபத்துக்கு உதவாத பிள்ளை" என்பது போல, அது அவர்களுக்கு உதவாத கடனாகத்தான் இருக்கிறது. கூட்டுறவு நில அடமான பாங்கியில் கடன் பெற வேண்டுமென்றால், 20 ஆண்டு அடிப்பத்திரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. மூன்று முறையில் வில்லங்க சர்ட்டிபிகேட்டு வெவ்வேறு சமயங்களில் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவேதான் கூட்டுறவுத் துறையிலிருந்து உதவி பெற எளிதாக முடியவில்லை. பணம் கொடுப்பதும் ஐந்தில் ஒரு பங்குதான் நிலத்தின் மதிப்பின் பேரில் கொடுக்கிறார்கள். சட்ட அமைச்சர் 1967-68-க்கான ஆய்வு உரையில் ரூ. 3·79 கோடி சென்ற ஆண்டில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் 7 கோடிக்குமேல் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள முறைகளும் எளிதாக இருக்கின்றன. வட்டியும் 6 சதவீதம் தான். இவற்றை கனம் அமைச்சர் நல்ல முறையில் ஆராய்ந்து நல்ல முறையில் விவசாயிகளுக்குக் கடன் குறைந்த வட்டிக்கு விரைவாகக் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாயிகள் பணத்தைத் திருப்பித் தவணை நிர்ணயிக்கும் போது, அவனுடைய திருப்பிக் கொடுக்கும் சக்தியை, "ரிபேயிங் கபாசிடி" என்று சொல்லுவார்களே, அதை மனதில் கொண்டு, நிர்ணயிக்க வேண்டும். ஒரு நிலத்தின் மீது ஒரு ஆண்டுக்கு வரும் வருமானத்தில் எவ்வளவு மீத்து வைக்கமுடியும் என்பதைக் கணக்கிட்டு தவணையை நிர்ணயம் செய்யவேண்டும். இயற்கைக் கோளாறுகள், தீ விபத்துக்கள், வரட்சி இவற்றால் சேதம் ஏற்படும் காலங்களில் தவணை கட்டவேண்டாம் என்ற முறையை ஏற்படுத்தவேண்டும். காலையில் இந்த மன்றத்திலே ட்ராக்டர்கள் பற்றி பேச்சு வந்தது. இந்த அறிக்கையில் கூட்டுறவுப் பண்ணை பற்றி எந்த விதமான விளக்கமும் இல்லை. சிதறிக் கிடக்கும் நிலங்களை இணைத்துக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யக் கூடிய நிலைமையை உண்டுபண்ணினால் ட்ராக்டர்களின் உதவி கொண்டு உற்பத்தியைப் பெருக்க முடியும். இந்த அரசு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதில் மிக்க அக்கறை காட்டுகிறது. ஆகவே, அவர்கள் கூட்டுறவுப் பண்ணைகள் அதிகம் அமைக்க வழிவகை செய்யவேண்டும்.



1967 ஜூன் 29] [திரு. என். எஸ். வி. சித்தன்]

மார்க்கடிங் சொசைடிகளால் விவசாயிகளுக்கு விவசாயப் பொருள்களின்மீது கடன் தொகைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் மிக அதிகமான சதவீத வட்டியில் கொடுக்கப்படுகிறது. வியாபாரிகளுக்கு எந்த ஆதாரமும் இல்லாமல் 50,000 அல்லது ஒரு லட்சம் என்று ஷெட்யூல்டு பாங்குகள் கொடுக்கும்போது, விவசாயிகளுக்கு விவசாயப் பொருள்களின்மீது கொடுக்கும் பணத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நாட்டில் பல்வேறு வீடுகட்டும் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கே வீடு இல்லாதவர்களைவிட சொந்த வீடுகள் வைத்திருப்போராலேயே வீடுகள் கட்டமுடிகிறது. வீடில்லாதோர் புது வீடுகள் கட்டுவதற்கும், பழைய வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும் இந்த சங்கத்திலிருந்து பண உதவி தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பால் விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அதில் மாடு வாங்குவதற்குப் பணம் கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுத்தவர்களிடமிருந்து பால் பெறும்போது, வெளி விலைக்கும் குறைவாக சொசைடி விலை இருப்பதால், பால் கடன் பெற்றவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க பால் விலையை அதிகரிக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று. கூட்டுறவுத் துறையில் தணிக்கை (ஆடிட்) முறை சரியாக இல்லை. கூட்டுறவுத் துறையிலுள்ள ஆடிட்டர்கள், அதிகாரிகள், செய்யும் தவறுகளை ஒரே துறையைச் சார்ந்தவர்களாக இருப்பதால் மறைப்பதற்கு ஏற்ற சூழ்நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. வேறு துறைகளில் இருப்பதுபோல, தனியான தணிக்கைக் குழுவினரை ஏற்பாடு செய்து, இந்தத் தவறைச் சரி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்திற்கு அதிகமாகக் கடன் கொடுத்து உதவுவது ரிசர்வ் பாங்கு. ரிசர்வ் பாங்கு மூலதனத்தில் கடன் கொடுக்கும்போது கூட்டுறவுத் துறையின் மூலதனத்தைப்போல் 5 பங்கு அதிகமாகக் கடன் கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களையும், பல்வேறு சங்கங்களில் கூட்டுறவு இயக்கம் ஈடுபடுத்தியுள்ள ஷேர் காபிடலையும் சேர்த்து கூட்டுறவு இயக்கத்தின் மூலதனமாகக் கணக்கு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் பெட்ரோல் பங்குகள், சர்வீஸ் ஸ்டேஷன்கள் ஆகிய இவற்றைக் கூட்டுறவுத் துறை ஏற்க வேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுக்குக் குறிப்பு எழுதியனுப்பியிருந்தது. அவற்றைக் கூட்டுறவு முறையில் நடத்த தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறையின் பணிகளால் சமுதாயம் நல்ல பலன்களை அடைய வேண்டும். எனவே கூட்டுறவுத்துறைபற்றி நல்ல முறையில் விளம்பரம் செய்யவேண்டும். மேலும் நல்ல முறையில் அது பணி புரிய ஆவன செய்ய வேண்டும். கூட்டுறவு முறை செழித்து வளர அரசு முனைந்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்தின் பேரில் கொடுக்கப்பட்டுள்ள இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்

றவு என்று சொன்னவுடனே மக்களிடையே இன்று தவறான கருத்து இருக்கிறது. அது ஓரளவு உண்மை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த இலாக்காவின் பொறுப்பையேற்றவுடனே எனக்கு மனதிற்குக் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. நமது இராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அவர்கள் இந்தக் கஷ்டமான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே, அதிலிருந்து அவர்கள் நல்லதொரு பெயரை அடைவார்களா என்ற ஒரு சந்தேகம் இன்னும் இருந்துகொண்டே இருக்கிறது.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த ஐந்து ஆண்டுகளாகவே, சென்ற தடவை சட்டமன்ற உறுப்பினராய் இருந்தபொழுதே இந்தத் துறையில் ஊழல்கள் அதிகமாகப் பெருகியிருப்பதை எடுத்துச் சொன்னேன். அப்பொழுது அமைச்சர் சொன்ன பதில் தெளிவாக இல்லை. மந்திரத்திலே மாங்காயும் வரவில்லை, தேங்காயும் வரவில்லை. இன்று மந்திரியவர்கள் பொறுப்பேற்றவுடனே "நான் கூட்டுறவுத் துறையில் சிறந்த, ஒரு பெரிய மாறுதலைச் செய்து ஊழல்களை ஒழித்துக்கட்டுவேன். இதிலே பெரிய நபர்கள் சிக்கியிருக்கிறார்கள். அதைக் கண்டுபிடித்திருக்கிறேன்" என்று அமைச்சர் ஆனவுடனே தனது கருத்தை வெளிப்படுத்தினார்கள். அதற்கு நான் மனப்பூர்வமாக அவர்களைப் பாராட்டுகிறேன். சட்டத்திலே பல ஊழல்கள் இருக்கின்றன. அவற்றைத் திருத்த வழிமுறை காணுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே தலைவர் பதவி வகிக்கிறவர்கள் அதைத் தொடர்ந்து அடுத்த பீரியடில் பதவியில் இருக்கக் கூடாது என்று சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருக்கக்கூடியவர் மேலும் எத்தனைக் கூட்டுறவு சங்கங்களுக்குத் தலைவராக இருக்கலாம், இருக்கக் கூடாது என்பதைச் சட்டத்திலே நிர்ணயிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது கடந்த 2 மாத காலமாக இந்தக் கூட்டுறவியக்கம் ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறார்கள். காரணம், நிர்வாக இயந்திரம் ஓரளவுக்கு முடுக்கிவிடப் பட்டிருப்பதுதான். புதிதாக இந்தக் கூட்டுறவுத் துறைக்கு ரிஜிஸ்தராராகப் பதவியேற்றிருப்பவர்கள் நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டிருப்பதால் இதிலே நிச்சயமாகப் பெரிய வெற்றியைக் காணலாம். ஊழலை அம்பலப் படுத்த அவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் வெற்றி காண வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நடவடிக்கையால் பெரிய பெரிய ஆட்கள் கூட்டுறவுத் துறையிலே சிக்கியிருக்கிறார்கள். ஆதலால் கடந்த 2 மாத காலமாக கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தம்பித்துப் போய்விட்டன. பண்டங்கள் முடங்கிப் போய் இருக்கின்றன. அதிலே எவ்வளவு பெரிய மனிதர்கள் சிக்கியிருந்தாலும் அவர்கள் இப்பொழுது வெளியே வந்துகொண்டிருப்பார்கள். ஆகவே, இப்படிப் பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பெரியவர்களாயிருந்தாலும், அவர்கள் அரசியலிலே செல்வாக்குப், பெற்றவர்களாகயிருந்தாலும் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்றால், கண்டுபிடிக்கப்பட்டவுடனே அவர்கள் பெற வேண்டிய தண்டனைகளைப் பெற்றுத்தான் ஆக வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாகக் கூட்டுறவுச் சங்கங்களிலே பினாமி லோன் கொடுக்கப்படுகிறது. அது சம்பந்தப்பட்ட கணக்குகளை உடனடியாக ஆடிட் செய்து, யார் யார் இன்னும் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது, எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்று பார்த்தால் இதிலே பெரிய பெரிய ஆட்கள் சிக்கிக்கொள்வார்கள். அதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.



செக்ரடேரியேட் கெஜட் பதிவு பெறாத சிப்பந்திகள் வீடு கட்டிக் கொள்வதற்காக வீடு கட்டும் சங்கம் பெரம்பூரில் இருக்கிறது. அதிலே பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கத்தின் தலைவர், செக்ரட்டரி, டிரஷரர் ஆகியோர் ஜெயிலுக்குப் போக வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். மற்றும் மேடவாக்கம் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. இதிலும் பெரிய பெரிய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மதுரையில் அலங்காநல்லூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. தனியார் துறைகளில் வைத்திருக்கிற கரும்பு ஆலைகளில் டன் ஒன்றுக்கு 70, 80 ரூபாய் கொடுக்கிறார்கள். சர்க்கார் ஆலைகளில் 50, 55 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் ரயில் மூலமாகக் கரும்பை சர்க்கார் ஆலைக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆனால் தனியார் அவற்றை லாரிகள், டிராக்டர்கள் ஆகியவற்றில் ஏற்றி வருகிற செலவையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதே நேரத்திலே சர்க்கார் துறையில் அம்மாதிரிச் செய்வது கிடையாது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையினர் கிராம விவசாயிகளை அணுகி உங்களுக்கு என்ன வேண்டும், நாங்கள் கடன் கொடுக்க இருக்கிறோம் என்று லகுவாகச் சொல்வார்கள். அது வெற்றிகரமாயிருக்கும். ஆனால், சர்க்கார் துறையிலே அதிகாரிகள் அதிகாரத்தை வைத்துக்கொண்டே இங்கே பாருங்கள், அங்கே பாருங்கள் என்று சொன்னால் அது வெற்றிகரமாக இருக்காது. அலங்காநல்லூர் ஆலை நன்கு நடக்க வேண்டுமென்றால் டன்னுக்கு 75 ரூபாய் 80 ரூபாய் என்று விலையையேற்றி நடத்தினால் ஓரளவு வெற்றிகரமாக இருக்கும். ஆனால், சர்க்கார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து போன அமைச்சரவை வெற்றிகரமாக நடத்தும் என்று நினைத்ததற்கு மாறாக நடந்திருக்கிறது. இதற்குக் காரணம் யார், இவ்வளவு நாட்களாகச் செலவு செய்தது யார் என்று அலங்காநல்லூர் ஆலை சம்பந்தமாகப் பார்க்க வேண்டும். அதற்கு யார் யார் பொறுப்பு என்பதையும் நிச்சயமாகக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள், விலைவாசி உயராமல் தடுக்க அரசு சிறப்பு அங்காடி, காமதேனு ஏற்படுத்தியிருக்கிறது என்று. இந்தக் காமதேனு என்ன செய்கிறது? அதுவும் மதுரை சிறப்பு அங்காடியை எடுத்துக்கொண்டால், 6–11–1966–இல் ஆரம்பிக்கப் பட்ட இதிலே, ஆரம்பிக்கப்பட்ட ஜனவரியில் 9,000 ரூபாய் லாபம் வந்திருக்கிறது. பிப்ரவரியில் 4,000 ரூபாய் லாபம் வந்திருக்கிறது. மார்ச் மாதத்தில் 43,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஏப்ரல் மாதத்தில் 46,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதிலே எப்படி நஷ்டமேற்பட்டது என்று பார்க்க வேண்டும். அங்கு போர்டு இருக்கிறது. மானேஜர்கள் இருக்கிறார்கள். போர்டுக்கும், மானேஜருக்கும் தகராறு ஏற்படுகிறது. சாமான்களை வாங்கும்பொழுது யார் யார் போகிறார்கள் என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். சென்னையிலும், பம்பாயிலும் போய் பல லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு மதுரை சூப்பர் மார்க்கெட்டிற்கும், கோயம்புத்தூர் சிந்தாமணிக்கும் சாமான்கள் வாங்குகிறார்கள். என்ன சாமான்கள் வாங்குகிறார்கள் என்றால் பழைய துணி மணிகள் போன்றவற்றை பல லட்சக் கணக்கான ரூபாய்க்கு வாங்கி வைத்திருக்கிறார்கள். சூப்பர் மார்க்கெட் ஆரம்பித்ததின் நோக்கம் ஏழைகளுக்குக் கிடைக்காத பொருள்களை வாங்கிச் சர்க்கார் நியாயமான விலைக்குக் கொடுக்க வேண்டும் என்பது. ஆனால் இங்கு மூர் மார்க்கெட்டில் உள்ளதுபோல் பழைய செருப்புகள், சோப்பு, சீப்பு இதையெல்லாம் விலைக்கு வாங்கி அலங்காரமாக வைத்திருக்கிறார்கள். இதையே பொது மக்கள் காட்சிப் பொருள்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள். சென்னை காமதேனு, கோயமுத்தூர் சிந்தாமணி ஆகியவற்றைப் பார்த்து இருக்கிறேன். இதைச் சுற்றிப் பார்க்க வருகிறார்களே தவிர, வாங்குவதற்கு யாரும் வரவில்லை. இந்த மார்க்கெட்டுகளினால் ஏற்பட்டு வரும் நஷ்டத்திற்குக் காரணம் என்னவென்றால்,

மதுரையிலுள்ள மார்க்கெட்டிற்கு 30,000 ரூபாய் எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவு ஒரு மாதத்திற்கு ஆகிறது. தீபாவளி சமயத்தில் மதுரை சூப்பர் மார்க்கெட்டில் ஒரு பீஸில் இரண்டு வேட்டிகளை ஒரு வேட்டியாகச் சொல்லி ஆயிரக்கணக்கான வேட்டிகள் விற்றிருக்கிறார்கள். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அங்கு தொழிலாளிகள் எவ்வளவு பொறுப்பற்ற தன்மையிலே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான். ஆக, இந்த முறைகளாலே வந்த நஷ்டம் மக்களால் செலுத்தப்பட்ட வரிப் பணமாகும். மேலும் மதுரை சூப்பர் மார்க்கெட்டில் ஜெனரல் ஆபீசர், நாலு சீனியர் இன்ஸ்பெக்டர்கள், ஆடிட்டர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்? இதையெல்லாம் கவனிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்** : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் மாலை 3 மணிக்குக்கூடும்.

பிற்பகல் 1-30

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப் பிறகு 3 மணிக்குப் பேரவை மீண்டும், மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் கூடியது).

**திரு. கொளத்தூர் கோதண்டம்** : கனம் துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, கனம் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், எந்த நிலையில் இருப்பவர்களானாலும்சரி, கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டுக்குத் தேவைப்படுகிறது என்பதை எந்தக் கருத்து வேறுபாடு கொண்டவர்களும் மறுக்க முடியாது என்று நான் கருதுகிறேன். அதே நிலையில்தான், காலையிலே நடத்தப்பட்ட விவாதத்தின்போது, கூட்டுறவுத் துறை நம் நாட்டு மக்களுக்குக் குறிப்பாக சமதர்மப் பாதையை நோக்கி நடந்து செல்லுகிற மக்களுக்கு, இந்த நாட்டிலே நல்லதொரு நிலை ஏற்பட வேண்டுமானால், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவும், அதைச் செயல்படுத்த முடியும் என்ற அளவிலே இன்றைய தினம் கூட்டுறவு நிலை பெற்றிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயம் மட்டும்தான் பலனடைய முடியும் என்ற நிலை மாறி, பல்வேறு துறைகளில் உள்ள பலதரப்பட்ட மக்களும் கூட்டுறவுத் துறையின் மூலமாக நல்ல பல காரியங்களையும், நல்ல பல நிலைமைகளையும் பெறுவதற்கு வாய்ப்பாக இந்தக் கூட்டுறவுத் துறை இருக்கிறது. ஆனால், குறிப்பாகக் கூற வேண்டுமானால், விவசாயத்தைப் பெருக்குவதற்குக் கூட்டுறவு என்பது ஒரு தோழமை போலவும், உதவி செய்கின்ற ஒரு ஸ்தாபனத்தைப் போலவும் ஊக்குவிக்கின்ற ஒரு நிலைமையை நம்மால் காண முடிகிறது. ஆனால், இன்றைய தினம் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், மக்கள் மத்தியில் இருக்கிற பெரிய பீதி, கிராமத்திற்குக் கிராமம் நான் சென்று பார்க்கிற நேரத்தில், கூட்டுறவு என்றாலே பயப்படுகிற அளவிற்கு நிலைமை மாறி இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், ஏற்கனவே இந்தக் கூட்டுறவுத் துறையிலே இருந்த சில பல சிக்கல்கள், கூட்டுறவுத் துறையிலே நடந்திருக்கிற பல காரியங்கள் இன்றைய தினம் மக்கள் மத்தியில் அப்போப்பட்ட ஒரு பெரிய சந்தேக உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இந்த நிலைமை மாறியிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமை மாற்றப்பட மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டங்களிலே இருக்கிற சில பல கேடுபாடுகளை, சில பல ஓட்டை உடைசல்களை எப்படியாவது நீக்குவதற்கு இது சம்பந்தப்பட்டவர்களைக்கொண்டு ஒரு குழு அமைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் மூலமாக இந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கும் பல சிக்கல்கள் தீர வழிவகை செய்யப்படும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



கூட்டுறவுத் துறையில் விவசாயத்தை எடுத்துக்கொள்ளும் நேரத்தில் குறிப்பாகக் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களினாலே விவசாயிகள் பலன் அடைகிறார்களா என்று பார்த்தால், கூட்டுறவுத் துறையினால் என்ன பலன் ஏற்பட வேண்டும் என்று ஆரம்பக் காலத்தில் இயக்கத்தை வகுத்தார்களோ, அந்தப் பலனை விவசாயிகள் அடையவில்லை என்ற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், டார்ஜெட் என்ற ஒன்றை வைத்து, அந்த டார்ஜெட் மூலமாகத் தேவைக்கேற்ற அளவிற்குக் கடன்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற விதி இல்லை. பல கூட்டுறவுச் சங்கங்கள் 'ஓவர்-ட்யூ'வாக இருக்கக்கூடிய நிலையில், செயல்படாத பல நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டு வருவதையும் இந்த நேரத்தில் நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். அந்தக் காரணங்களால் பலப்பல கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைய தினம் செயல்பட முடியாத நிலையிலே இருந்துவருவதைச் சர்க்காருக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில், கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கிருக்கும் விதி முறைகளின்படி ஒரு சாதாரண ஏழை விவசாயி அல்லது அந்தச் சங்கத்தில் கடன் பெற்றிருக்கிற ஒருவர் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தியவுடன் அவருக்குக் கடன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவேண்டும். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், இன்றையதினம் செயல்பட்டு வருகிற கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே ஒரே ஒரு அங்கத்தினர் அந்தக் கடனைத் திருப்பி செலுத்தாமல் அந்தச் சங்கத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் உரிய காலத்தில் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தியிருந்தாலும் கூட, சங்கம் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அந்தச் சங்கத்தில் இருக்கிற ஒருவர் 100 ரூபாய் கடன் செலுத்த வேண்டியிருந்து, அது மத்திய பாங்குக்கு ஓவர் ட்யூ வாக்கப்பட்டிருந்தால், அதனுடைய ஷேர் காபிடல் ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாயாக இருந்தாலும்கூட, அந்தச் சங்கத்தின் ஓவர் ட்யூ, பத்து பர்செண்டோ, ஐந்து பர்செண்டோ இருக்கிறது என்ற காரணத்திற்காக மற்ற எந்த உறுப்பினரும் கடன் பெற முடியாத நிலையில் இன்றைய தினம் பல சங்கங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நான் கூட்டுறவுச் சங்கத்திலே தொடர்பு கொண்டிருக்கிறவன் என்ற காரணத்தால், நான் நிச்சயமாகக் கூறமுடியும். ஆகவே, இனிமேல் கூட்டுறவுச் சங்கங்களிலே வழங்கப்படுகிற கடன்கள் எந்த ஒரு உறுப்பினர் தாம் செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டாலும், அவர் மீண்டும் பெற வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தரக்கூடிய முறையிலும் விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய முறையிலும் விதி முறைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

தவணைக் கடன் பாக்கிகளைக் கணக்கிடுகின்ற நேரத்தில் அந்தச் சங்கங்களில் எந்தெந்த நிலையிலே கடன் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. நான் முன்னாலே குறிப்பிட்டபடி இரண்டு அல்லது மூன்று பேர் தவணைகளைக்கூட கட்ட முடியாத நிலையில் கடன் சங்கங்கள் சரிவரச் செயல்படவில்லை. உறுப்பினர்கள் தங்கள் கடனைக் கட்டிவிட்ட பிறகு மீண்டும் கடனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் விதி முறைகளை மாற்றி அமைப்பது நல்லது என்று கருதுகின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கெமிகல் பர்டிலைசர்ஸ் வழங்கப்படுகிறது. அந்த நேரத்தில் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பர்டிலைசர்ஸ் கடனாகக் கொடுத்து, பின்னால் வசூல் செய்துகொள்கிறார்கள். ஆர். டி. ஓ. அந்தச் சங்கத்திற்கு இத்தனை டன் என்று அலாட்மெண்ட் போட்டு, தலைவரோ, அல்லது சங்கத்திலே இருக்கிற பஞ்சாயத்தாரோ கைப் பணம் போட்டு அலாட்மெண்ட் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அலாட்மெண்ட் வருகிற நேரத்தில் அதற்குப் பணம் கட்டியாக வேண்டும். எல்லாச் சங்கத் தலைவர்களுமே வசதியுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். ரூபாய் இரண்டாயிரம், மூவாயிரம் என்று கொடுத்து கெமிகல் பர்டிலைசர்ஸ் எடுக்க முடிவது இல்லை. ஆகவே,

[திரு. கோளத்தூர் கோதண்டம்] [1967 ஜூன் 29

இதற்கால விதி முறைகளை மாற்றியமைத்து, அந்த அலாட்மென்டுகளை மாவட்ட மார்க்கடிங் சொஸைடி, தாலுகா மார்க்கெடிங் சொஸைடி மூலமாகச் சப்ளை செய்ய வேண்டும். சர்க்கரை போன்ற பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. அதையும் சங்கத் தலைவர் பணம் கட்டித்தான் எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தமாதிரி நிலைமை ஏற்படுகின்ற நேரத்தில் சில பல சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். ஆகவே, நல்ல முறையில், சொஸைடிகள் மூலமாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்களில் இன்றைய தினம் குறுகிய காலக் கடன்கள் மட்டுமே தரப்படுகின்றன. குறைந்த கால அளவு 10 மாதம் என்று வரையறை இருந்தாலும், ஆறு மாத காலத்திலேதான விவசாயி திருப்பிச் செலுத்தவேண்டிய நிலை ஏற்படுகிறது. குறைந்த காலக் கடன் கொடுக்கிறபோது ஓர் ஆண்டாகிலும் அவகாச கால அளவு கொடுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட வேண்டும். ஏனென்றால், புதிதாக '.·.பார்ம் பிளான்ஸ்' என்பதற்காக லோன் போட்டால் இன்றைய தினம் மாவட்டப் பாங்குகளுக்கும், சொஸைட்டிகளுக்கும் இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, குறித்த காலத்தில் கடன் வாங்க முடியவில்லை. ஓவர்ட்யூ என்ற அடிப்படையிலே நின்றுவிடுகிறது. விவசாயிக்குச் சுமக்க முடியாத அளவுக்குக் கடன்களைக் கொடுத்துவிட்டு, உடனடியாக வசூல் செய்ய வேண்டுமென்ற கருத்து பரவலாக இருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய மதுராந்தகம் தொகுதியை எடுத்துக்கொண்டால், அதிலுள்ள 100 சங்கங்களில் 70 சங்கங்கள் இம்மாதிரியான நிலைமையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கரும்பைப்பற்றிப் பேசப்படுகிறபோது, இந்தச் சர்க்கரை ஆலை மூலமாக ஏற்கனவே விவசாயி கடனைப் பெற்றுக்கொண்டு, கெமிகல் பர்டிலைசர்ஸ் பெற்றுக்கொண்டிருந்தான். இப்போது கெமிகல் பர்டிலைசர்ஸ் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் வழங்க வேண்டுமென்ற கருத்து வந்தபோது கரும்பு உற்பத்திக்காக, அந்தச் சங்கத்தின் மூலமாகக் கடனைப் பெருத காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உதவ முடியவில்லை. இந்த ஆண்டு ஏறக்குறைய 600 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். சர்க்கரை ஆலைகள் கெமிகல் பர்டிலைசர்ஸைப் பெற்றுக்கொண்டிருந்தன. இன்று மதுராந்தகம் பகுதியில் 200 ஏக்கர்கூட கரும்பு பயிரிட முடியாத நிலை இருந்து வருகிறது.

இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெற்று, புதியவர்கள் வருகிறார்கள். அப்படியிருப்பதால் எந்த வேலையும் சரியாக நடைபெருமல் துண்டுபட்டுப் போகிறது. ஆகவே ஒருவர் எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் இருக்கலாம். குறைந்தது 6 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் ஒரு பதவியை வகிப்பாரானால், இடையிலே ஒரு கால அளவு இடைவெளியாக விட்டு இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** சபாநாயகர் அவர்களே, வெட்டுப்பிரேரணையின மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கை மீது நல்ல விதத்திலே நல்ல பல திட்டங்கள் நடந்து வருகின்றன என்று நமது அங்கத்தினர்கூட குறிப்பிட்டார். கூட்டுறவு என்றால் மிக முன்னேற்றகரமாக, நல்ல விதத்திலே நடத்தப்படவில்லையென்று கூறினார்கள். ஊழல்கள், குழப்பங்கள் மலிந்திருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். பொதுவாகவே எந்தத் துறையில் எடுத்துப் பார்த்தாலும்கூட எல்லோரிடத்திலும் சில குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொதுவாக உள்ள குற்றங்களைக் கண்டுபிடிக்க போலீஸ் இலாகாவை வைத்துக்கொண்டிருக்கிறோம்.



[திரு. ஏ. அ. சுப்பராஜா]

1967 ஜூன் 29]

ஆடிட்ரிப்போர்ட் எடுத்துச்சொல்கிற குறைகளை அரசு
கூட்டுறவுத் துறையில் நிவர்த்தி செய்தால் இதற்கிடையிலே உள்ள
கவனித்து நல்ல விதத்தில் அடைத்துவிடலாம். உதாரணமாக, இராஜபாளையம்
ஓட்டைகளை எல்லாம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலும் பல கூட்டுறவு ஸ்தாபனங்
தொகுதியிலும், பெரிய பெரிய அரசியல்வாதிகளும், பெரிய பெரிய
கள் இருக்கின்றன. ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆடிட்
மனிதர்களும் அவற்றில் எடுத்துச் சொல்லி, மேல் நடவடிக்கை
ரிபோர்ட்களையெல்லாம் உடனடியாக தாமதப்படுத்திக்கொண்டிருப்பது
எடுப்பதற்கு உண்டான வழியில்லாமல் மெத்தனத்தை ஏற்படுத்தி, அந்தக்
எல்லாம் தெரிகிறது. அந்தப் போக்கு நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது.
குற்றங்களை நிவர்த்தி செய்ய முடியாத ஒரு உதவி இருக்கிறது.
பொதுவாக, ஜனங்களுக்கு, விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிற போது, அது
ஆனால் கிரடிட் சொஸைட்டிகளுக்குக் என்றால், 50 பேர்கள்
"ஓவர் ட்யூ" ஆகிறது. நூறு பேர்கள் இருக்கிறார்கள் மற்ற 50 பேர் சரியாகக் கட்டுவ
சரியாகத் தவணைகளைக் கட்டிவிடுகிறார்கள். குற்றம் இழைக்காதவர்களும்
இல்லை. குற்றம் செய்த ஒரு சிலருக்காக, விஷயமாக இருக்கிறது. நல்ல
பாதிக்கப்படுகிறார்கள் என்பது வருந்தத்தக்க கடனைத் தரவேண்டுமென்று
விதத்தில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களுக்கு
கேட்டுக் கொள்கிறேன்.

இருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்கள் அவர்களுக்கு
மத்திய வங்கியிலே ஓவர் ட்யூவாக இருந்தாலும்கூட பணம்
வேண்டியவர்களுக்கு எல்லாம் அதே சமயத்தில் அவர்களுக்குப் பிடிக்காத
கொடுத்து விடுகிறார்கள். ஆனால் வேண்டாத குற்றங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்
ஆட்களாக இருந்தால், திருத்தியமைக்காமல் இருந்தால், சொந்த விருப்பு வெறுப்புக்
கள். இதைத் வைத்துக்கொண்டு செய்தால், இதனால் ஏழை மக்கள்
களையெல்லாம் நிலையில் இருக்கிறார்கள். இதற்காக ஆய்வுக்
தான் கஷ்டப்படக்கூடிய சட்டசபை அங்கத்தினர்களை அதில் போட்டு,
குழு ஒன்றை அமைத்து, நல்லபடியாகப் பரிசீலனை செய்ய வேண்டு
ஆய்வுக் குழு அதனை ஆராய்ந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
மென்று இந்த நேரத்தில் அந்த
கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகள் எல்லாம் இன்றைக்கு
அடுத்தபடியாக, பொதுவாக ஸ்டோர்களை இந்த அரசு ஏற்
இருக்கக்கூடிய நிலையில், கன்ஸ்யூமர் சிறப்பு அங்காடி மருந்துக்கடை
படுத்தியிருக்கிறது. உதாரணமாக, முதல் நான்கு மாதங்
ஒன்று ராஜபாளையத்திலே ஆரம்பித்திருக்கிறார்கள். மதுரையில் ஆரம்பித்த
களில் சராசரியாக 800 ரூபாய் அளவில் விற்றது. கூறுகிறார்கள்.
சிறப்பு அங்காடியில் 300 ரூபாய்க்கு விற்கவில்லையென்று உள்ள அங்காடியில்
எண்பதாயிரம் ஜனத்தொகையுள்ள மதுரையில் சொல்லுவது ஆச்சரியப்படக்
300 ரூபாய்க்குத்தான் விற்கிறது என்று நாம் நல்ல விதத்தில்
கூடிய நிலைமையாக இருக்கிறது. இதையெல்லாம் கொள்கிறேன். இந்த
அணுகிக் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் சம்பந்தமாக எந்தெந்த
மாநிலத்திலுள்ள அத்தனை கன்ஸ்யூமர் ஸ்டோர்ஸ் நாம் கவனித்துப்
இடத்திலே நல்ல விதத்திலே நடக்கிறது என்பதை நடக்கக்
பார்க்க வேண்டும். அதைக் கவனித்து நல்ல முறையில் அவற்றைப்
கூடிய ஸ்தாபனங்களுக்கு எல்லாம் உற்சாகத்தைக் கொடுத்து, என்பதை
போன்று மற்றவை என் நல்லமுறையில் நடக்கவில்லை எனது தாழ்
ஆராய்ந்து பார்த்து குறைபாடுகளைத் தீர்க்கவேண்டுமென்பது
மையான கருத்தாகும்.

பிரச்னை பெரிய பிரச்னையாக
அதோடுகூட சிலவிடங்களில் ரைஸ்மில் கொடுக்கிறபோது
இருக்கிறது. அறைவைக்காகத் தனியாரிடம் தானியம் சொல்கிறோம். கூட்டு
இவ்வளவு அவுட்டர்ன் கொடுக்கவேண்டுமென்று தஞ்சை மாவட்
றவுத் துறையிலும் ரைஸ்மில் ஏற்படுத்தியிருக்கிறோம். ரைஸ்மில்லில் 68
டத்தில் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனியார்
சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரை அவுட்டர்ன் இருக்கிறது. 65, 64 சதவீதம்
துறையில் இருக்கும் ரைஸ் மில்காரர்களைக் கேட்டால் அதே முறைப்படியும்
கூடக் கட்டவில்லை என்று சொல்கிறார்கள்.

தனியார் ரைஸ்மில்காரர்களிடம் ஒப்பந்தம் செய்யப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் இருக்கும் ரைஸ்மில்லில் அதிக அளவு அவுட்டர்ன் இருக்கும் போது தனியாருக்கு அதிக ஆதாயம் கிடைக்கிற வகையில் ஏன் கொடுக்கவேண்டும். தற்கால நவீன ரைஸ்மில்களை ஜில்லாவாரியாக ஏற்படுத்தி, அதிக அளவுக்கு அவுட்டர்ன் பெறுவதோடு, நல்ல அரிசியை, சகாயமான விலையில் மக்களுக்கு சப்ளை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக எடுத்துக்கொண்டால், மாநிலம் முழுவதிலும் உள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களில் எவை நன்றாக நடக்கின்றனவோ அவற்றுக்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். நடத்தக்கூடிய ஆட்களைப் பொறுத்துத்தான் அந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் நல்லதா அல்லது கெட்டதா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லலாம். நடத்தக்கூடியவர்கள் மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்கிற நல்ல உள்ளத்தோடு செயல்பட்டால்தான் அந்த ஸ்தாபனம் வளரும். அப்பேர்ப்பட்ட ஆட்களுக்கு நிர்வாகத்தில் நல்ல ஊக்கம் தந்து, அத்தகைய ஸ்தாபனங்களுக்கு அதிக மானியங்களை அளித்து விலைவாசிப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த, சென்ட்ரல் ஸ்தாபனத்தின் அதிகாரிகளும் ஒத்துழைத்து ஜனங்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** மாமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். பொதுவாகக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்கிற எல்லா அதிகாரிகளும் சற்றேறக்குறைய புதிய சர்க்கார் ஆட்சிக்கு வந்த பிறகு 3 மாத காலத்தில் கூட்டுறவு இயக்கத்திற்குச் சுறுசுறுப்பும், புத்துணர்ச்சியும் ஏற்படுத்தி வருவதை நாம் பார்க்கிறோம். பல குறைகள் இதற்கு முன்பு இருந்தாலும் இந்தப் புதிய சர்க்கார் ஆட்சிக்கு வந்த பிறகு உரிய காலத்தில் கடன் தொகை விவசாயிகளுக்குக் கொடுப்பதிலும், உரிய காலத்தில் விவசாயிகளுக்கு ரசாயன எருக்களைக் கொடுப்பதிலும் தீவிரமாக பங்கு எடுத்துக்கொண்டு ஆங்காங்கு கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் பழைய பாக்கிகளை வசூல் செய்வதிலும் சர்க்கார் அதி தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. குறிப்பாக என்னுடைய தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சென்ற ஆண்டு 70 ஆயிரம் டன் ரசாயன உரம் கொடுத்தது. ஆனால், இவ்வாண்டு லட்சத்து எண்பதாயிரம் டன எருக்களைக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு ஆங்காங்குள்ள கூட்டுறவு சொஸைடி கிடங்குகளில் எருக்களை அவர்கள் முன்கூட்டியே ஸ்டாக் செய்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருக்கிறேன். பொதுமக்களுக்கு நல்லது செய்வதற்காகத்தான் கூட்டுறவுஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன. என்றாலும், ஒருசில இடங்களில் நிர்வாகிகள் தவறாக நடந்துகொள்வதனால் அந்தக் குறைபாடுகள் தான் மக்கள் கண்களில் பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையால், இந்தப் புதிய சர்க்கார் கூட்டுறவுச்சட்டத்தில் அவசியமான நல்லபல திருத்தங்களைக் கொண்டுவந்தாகவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இன்னார்தான் கூட்டுறவு சொஸைடியில் மெம்பராக இருக்கலாம், அப்படி இருப்பதற்கு உத்தரவு வாங்கவேண்டும், நிர்வாகம் மறுத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் விண்ணப்பித்துச் சேரவேண்டுமென்ற நிலை மாறி ஒவ்வொரு வாக்காளருக்கும் எந்தக் கூட்டுறவு சங்கத்திலும் சேர வாய்ப்பு இருக்கவேண்டும். மேலதிகாரிகள் முடிவு செய்வதைவிட, அதைச் சட்டத்திலேயே ஒவ்வொரு வாக்காளரும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பராக இருக்க உரிமை தரவேண்டும். மேலும் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளே இன்றைய தினம் பினாமி டிரான்சாக்ஷனை ஒருவகையில் பலபேர்களின் பேரில் கடன் பெற்றுக்கொண்டிருப்பதைத் தடுக்கத்தக்க வகை செய்யவேண்டும். பழைய கடன்களை வசூல் செய்கிற அதிகாரிகள் இதுபோல பினாமி டிரான்சாக்ஷன் நடந்திருப்பதைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். வசூல் பாக்கியை உண்மையாகவே விசாரணை செய்தால் நூற்றுக்கு 90 சதவீதம் நிர்வாகஸ்தர்களையேயும் 10 சதவீதம்



தான் மக்களிடத்திலேயும் இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களில் பினாமி டிரான்சாக்ஷன் வராத அளவுக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பது என் அவா.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ரசாயன உரத்தைக் கொடுக்கிறார்கள். வெற்றிலை பாக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்லலாம். கடனுகப் பணம், ரசாயன உரம் ஆகிய இரண்டையும் கொடுக்கிறார்கள். மூன்றாவதாக சுண்ணாம்பைச் சேர்த்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு சுண்ணாம்பு போன்றது கடலைப் பிண்ணாக்கு. கடலைப் பிண்ணாக்கையும் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நேற்றைய தினம் விற்பனை வரி மசோதா நடைபெற்ற போது அதிகாரிகள் கடுமையாக இருக்கிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார். இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் அதிகாரிகளிடம் பரிதாபப்படக்கூடிய அளவில் பெரிய மனிதர்களிடம் அவர்கள் பயப்படக்கூடிய அளவில் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இதில் சிப்பந்தியாக இருந்த ஒருவர் ஒரு பெரிய மனிதருடைய ஆதிக்கத்தின்கீழ் இருந்த பாங்கில் சோதனை போட்டுவிட்டு வெளியில் வருகிற நேரத்தில் அவர் பிணமாக்கப்பட்டார் என்ற செய்தி பலருக்கும் தெரிந்திருக்கும். காரணம் இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பரம்பரைப் பாத்தியமாகச் சில பணக்காரர்களிடமே இருந்து வருகின்றன. அதை மாற்றி அமைப்பதற்கான திட்டத்தைச் சட்டத்தில் கொண்டுவரவேண்டும். ஒரு டைரெக்டர் 3 ஆண்டுக்கு மேல் இருக்கக் கூடாது. அடுத்து தொடர்ந்து வருகிற அமைப்பும் இருக்கக்கூடாது. வேண்டுமென்றால் நடுவில் ஒரு தடவை விட்டுவிட்டு அடுத்த தடவை வரட்டும். அத்தகைய வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும். இந்த ஆண்டு இம்மாதக் கடைசிக்குள் மூன்றில் ஒரு பங்கு டைரெக்டர் ரிடையர் செய்யப்படவேண்டும். அந்த இடங்களுக்குத் தேர்தலை நடத்தியாகவேண்டும். அதைத் தடுத்து நிறுத்தி, சட்டத் திருத்தம் செய்து எல்லா டைரெக்டர்களுடைய ஸ்தாபனத்திற்கும் தேர்தலை நடத்த வகை செய்யவேண்டும். குறிப்பிட்டவர்களின் சுயநலத்திற்குப் பயன்படாது, எல்லா மக்களுக்கும் பயன்தரத்தக்க அளவில் மாற்றி அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிற
கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பகல்
இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் 3-30
பிரேரணையை வலியுறுத்தி நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்தில் இன்றைய தினம் அந்த இயக்கம் பெருமளவில் விவசாயிகளுக்கும் மற்ற நடுத்தர வகுப்பினருக்கும் உதவ வேண்டுமென்ற கண்ணோட்டத்தோடு, ஒரு உயரிய எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்டாலும் நடைமுறையிலே அது உபயோகப்படுகின்ற அளவிலே இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுக் கடன்களிலே, விவசாயிகளுக்குத் தரப்படுகின்ற கடன்களிலே ஜாமீன் கடன் என்ற ஒரு வகை இருக்கிறது. கடன்கள் பெரும்பாலும் ஒரு ஆண்டு காலத்திற்கே கொடுக்கப்படுகின்றன, அத்தகைய கடன்கள் அவர்களுக்கு முழுமையாக ஒரு ஆண்டுகாலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள முடிகிறதா என்றால் நிச்சயம் இல்லையென்றுதான் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. மனுச் செய்யப்பட்டு, கடன்கள் சாங்ஷன் செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட பிறகும், கிட்டத்தட்ட மூன்று மாத காலத்திற்குப் பிறகு தான் பணம் மனுச் செய்தவர்களுடைய கையிலே போய்ச் சேருகிறது. இப்படிப்பட்ட சொஸைடிகளைப் பொறுத்தவரையிலும் ஆங்காங்குள்ள சூபர்வைசருடைய தயவிலேயே பணத்தைப் பெறவேண்டுமென்ற அத்தியாவசியம் இருப்பதால் சொஸைடிகளை நடத்துகின்றவர்களும், மனுச் செய்து கொண்டவர்களும் சூபர்வைசருடைய வீட்டுக்கு நடந்து, நடந்து, கணக்கைத் தணிக்கைசெய்து, பணத்தை வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருப்பதால் இதிலேயே காலமானது மூன்று மாத காலத்திற்கு

போய்விடுகிறது. கூட்டுறவு சங்கத்தை நடத்துகின்றவர் திறமைமிக்கவராக இருந்தால் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே வசூல் செய்துவிடுகிறார். ஒரு ஆண்டு காலத்திற்கு என்று சர்க்கார் கொடுக்கின்ற தொகை 8 மாதத்திற்கு உள்ளாகவேதான் அனுபவிக்கப்படுகிறது. ஆனாலும் ஒரு ஆண்டு காலத்திற்கு வட்டித் தொகை பெறப்படுகிறது. இந்த நிலையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தவிர பணத்தை டிஸ்பர்ஸ் செய்யும்பொழுது விநியோகம் செய்யும்பொழுது கேட்டு இருக்கின்ற அங்கத்தினர்களுக்கு, மனுச் செய்து கொண்டவர்களுக்கு, விண்ணப்பம் செய்துக்கொண்டவர்களுக்கு ஒழுங்காக கிடைக்கக்கூடிய நிலைமை இல்லவே இல்லை. பல சொஸைடிகளிலே ஒழுங்காக வழங்குகின்ற முறை நடைபெறவில்லை. வழங்குகின்ற முறையில் பணம் நிறையச் செலவு எழுதப்படுகிறது, ஒவ்வொருவருடைய செலவுக்கும் பணம் அதிலே பிடிக்கப்படுகிறது. மொத்தமாக பணத்தை சொஸைடிக்குப் பெற்றுவருவதற்கு சொஸைடி தலைவரோ செயலாளரோ சென்று சூபர்வைசருடைய தயவிலேதான் பணத்தை வாங்கி வரக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும்.

மற்றத் துறையிலே இருக்கின்ற சொஸைடிகளைப் பொறுத்தவரையிலும் வெஸ்டட் இண்டரஸ்ட்ஸ் என்று சொல்லப்படுகின்ற நோக்கத்தோடு இருக்கிறவர்கள்தான் அந்தத் துறையிலே ஈடுபடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்தத் தொகைகளை மற்றவர்கள் மீது வாங்கியோ, அல்லது பெயரில்லாத ஊரில்லாத யாருக்குக் கடன் தேவையில்லையோ அவர்கள் மீது வாங்கியோ, அல்லது கடன் விண்ணப்பம் செய்து சொஸைடியிலே பணத்தைப் பெற்று பிறகு அதிகமான வட்டிக்கு 2 மடங்கு 3 மடங்கு என்ற வட்டி விகிதத்திலே தனியாக வட்டிக் கடை, தொழில் நடத்திவருகின்ற அளவிலேதான் அந்தப் பணம் செல்கிறது. கூட்டுறவு மார்க்கெட்ஸ், கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருக்கின்றன. அவற்றிலும்கூட பெரும்பாலும் வணிகர்கள் புகுந்துகொள்கிற காரணத்தினாலே லாபநோக்கோடுதான் கள்ள மார்க்கெட் நோக்கத்தோடு தான் அவை நடத்தப்படுகின்றன.

பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில் வியாபாரிகள் புகுந்து நடத்துகின்ற நிலையைப் போக்கவேண்டுமென்று சர்க்காருக்கு நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால்தான் பண்டகசாலைகள் எந்த மக்களுக்காக ஏற்படுத்தப்படுகிறதோ அவர்களுக்குப் பூரண பலன்கள் போய்ச் சேரக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடுகட்டும் கூட்டுறவு சங்கங்கள் பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வீடுகட்டும் சங்கத்திலே ஒரே நபர் தன்னுடைய சொந்தக்காரர்கள் மீது மூன்று, நான்கு-முடிந்தால், 7, 8 என்ற அளவிலே பல மனைகளை வாங்கி வைத்திருக்கிறார். கூடுமானவரையில் சீக்கிரம் வீடுகள் கட்டப்படுவதில்லை. என்னுடைய தொகுதியிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே பல மனைகள் இன்னமும் காலியாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட மனைகளை வாங்கியவர்கள் மற்றவர்கள் வீடுகட்டிய பிறகும் கூட இன்னும் கட்டாமல் வெறுமனே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாருக்கு வீடு அத்தியாவசியமோ அவருக்கு மனையில்லாமல், யாருக்குத் தேவையில்லையோ அவர்களுக்கு மனைகள் கொடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் இது நடக்கிறது. அதோடு மட்டுமல்ல, பின்னால் மனைகளாகவே வைத்திருந்தால் நல்ல லாபத்தை அளிக்கும் என்பதன் காரணமாகத்தான் அப்படிச் செய்கிறார்கள். இதையெல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களிலே உள்ள கூட்டுறவு சொஸைடிகளுக்கு நவீன உரங்கள், அமோனியா போன்றவற்றை வருடத்தில் மூன்று நான்கு முறைகள்தான் சப்ளை செய்கிறார்கள். அப்படி மூன்று நான்கு முறைகள் உர விநியோகங்களின் போது உரத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்ளுகின்ற, அதை வாங்கிவைத்துக்கொள்ளக்கூடிய நிலை இல்லாத காரணத்தாலும், பொருளாதார உயர்வு அவ்வளவு இல்லாத



காரணத்தாலும், வருகின்றபோது எடுக்கமுடிவதில்லை. உரம் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் சொஸைடிகளில் அது இருப்பதில்லை. சொஸைடிகள் இதனாலே அவர்களுக்கு தேவையானதைக்கூட எடுக்காமலே விட்டுவிடுகின்றன. அப்படி எடுக்க முடியாத காரணத்தினாலும், சொஸைடியினுடைய அங்கத்தினர் வாங்கமுடியாத காரணத்தாலும் அவை வாங்க முடியாத விலைக்கு விற்கப்படுகின்றன, அல்லது கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

தேர்தல் விதிமுறைகளைப் பொறுத்தவரையில், இப்பொழுதுள்ள கூட்டுறவு சங்க விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் வந்தாலும்கூட, தேர்தல் மனுக்கள் பரிசீலிக்கின்ற குழுவுக்கு அதிகமாக முன்னைப்போல இல்லாமல் அதிகாரம் அதிகாரிகளுக்கு இல்லாமல் மீதியிருக்கின்ற போர்டு ஆப் டைரெக்டர்ஸ் இருக்கிறார்களே, அவர்களுக்குத்தான் இருக்கிறது, செல்லுமா செல்லாதா என்பதைப் பரிசீலிக்கின்ற உரிமையும், அபேட்சை மனுக்களைப் பரிசீலித்து அதன்மீது முடிவு சொல்லக்கூடிய உரிமையும் அவர்களுக்கு இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. அப்படிக் கோர்ட்டுக்குச் சென்றாலும் தவருக மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டவர்மீது எந்தவிதமான தண்டனையும் கொடுக்க முடியவில்லை. நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. இதனால் அவர்கள் எண்ணப்போக்குப்படி, மனுக்களை அவர்கள் இஷ்டப்பட்டபடி முடிவுசெய்வதாலே பல அபேட்சா பத்திரங்கள் தவறுதலாகக்கூட நிராகரிக்கப்பட்டு, அவை கோர்ட்டுக்குச் செல்லவேண்டிய நிலையை இருக்கிறது. இதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சண்முகம்:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். சமுதாயத்தின் வாழ்வு வளம் பெற ஒரு இயக்கம் இருக்கிறது என்றால் அது கூட்டுறவு இயக்கந்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய நாட்டிலே கூட்டுறவு இயக்கம் துவங்கப்பட்ட காலத்திலே மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வது குறைவாக இருந்தாலும் கூட, அரசாங்கம் கூட அப்போது தங்களுடைய பொறுப்பை அந்தத் துறையிலே வளரச் செய்வதில் ஈடுபடாத நிலை இருந்து வந்தது. நாளடைவில் மக்கள் சமுதாயத்தில் ஜனநாயகத் தத்துவம் வளர, வளர கூட்டுறவு இயக்கத்திலே மக்கள் கவனம் செலுத்த தலைப்பட்டார்கள்; அரசாங்கமும் அதிகக் கவனம் செலுத்தி கூட்டுறவுத் துறையிலே மக்களுடைய வாழ்க்கையை வளம் பெறச் செய்யலாம் என்று முடிவுகளை எடுத்தது. எல்லா வகையிலும் அன்றாட வாழ்க்கைக்கு, சமுதாயத்தில் தேவைப்படும் அவ்வளவையும் கூட்டுறவுத் துறை மூலமாகவே வளரச் செய்யலாமென்ற நம்பிக்கை கொண்டு அரசாங்கமும் கூட்டுறவு இயக்கத்தை எல்லாத் துறைகளிலும் செலுத்தி மக்களுக்கு பயன்படச் செய்து வருகிறது என்பது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய விவசாயத்திற்குத் தேவையான நிதி உதவியைத் தனவந்தர்களிடமிருந்து பெறுவதிலே உள்ள கஷ்டத்தை நிவர்த்திக்கும் வகையிலே கடன் கொடுத்து உதவும் துறையிலே இந்த இயக்கம் ஆரம்பத்தில் துவக்கப்பட்டு கிராம நாணயச் சங்கங்கள் ஏற்பட்டன. அந்தக் காலத்திலே மக்கள் சாதாரணமாக இதைக் கடன் கொடுக்கும் சங்கம் என்று அழைத்து வந்தார்கள். அந்த நாளிலே இதிலிருந்து கடன் பெற்றாலும் திருப்பி செலுத்தாத நிலைமை இருந்து வந்தது. அதன் பயனாக நாளடைவில் சங்கத்திற்கு நல்ல பெயர் இல்லாத நிலைமை மக்கள் சமுதாயத்தில் வளர்ந்து வந்தது. இன்றுள்ள நிலைமையில் கூட்டுறவு இயக்கமானது பல துறையிலே மக்கள் சமுதாயத்திற்கு சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பயன்படுத்தும் நிலைமையில் அமைந்திருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் கூடுமான வரையில் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும்

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பல காரியங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஆரம்ப காலத்திலே நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டபோது குறுகிய காலக் கடன்கள் என்ற முறையிலேதான் கொடுக்கப்பட்டு வந்தது. பிறகு மத்திய காலக் கடன்கள், விவசாயத் துறையில் தேவையிருக்கிறது என்று உணர்ந்து விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகள் மூலமாக நீண்ட காலக்கடன் கொடுத்து 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் நிலை ஏற்பட்டது. உண்மையிலேயே, கூட்டுறவுத் துறையிலே ஒரு நல்ல இயக்கம் எது என்று சொல்ல வேண்டுமானால் அது விவசாய மக்களுக்கு உதவி செய்கின்ற நில அடமான பாங்கு ஒன்றுதான்.

கூட்டுறவு இயக்கத்திலே உள்ள குறைபாடுகளைப் பற்றி இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவு இயக்கத்தை நடத்துகின்ற நிலையிலே பல மோசடிகளும், தவறுகளும் ஏற்படுகின்ற காரணத்தால் மக்கள் அதன் பலனைப் பெறமுடியவில்லை என்ற குறைகள் சொல்லப்பட்டது. நாம் யார் பேரில் குறை சொல்லுவது என்பது அறியாத நிலைமையில் சொல்லி வருவது அவ்வளவு நல்லதல்ல. கூட்டுறவு இயக்கம் மக்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை நல்ல வகையில் உபயோகப்படுத்திக் கொள்ளும் பொறுப்பு மக்கள் கையில் இருக்கிறது. எல்லா மக்களும் சகோதரத்துவம், சமத்துவம் என்ற அடிப்படையில் பணி புரிந்து பலன் பெறுவதற்கு இந்தத் துறையிலே வழி இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இயக்கம் நல்ல முறையில் நடக்க, தவறுகள் ஏற்படுவதற்கு முன்பே, தவறுகள் நடக்காதபடி தடுத்து நிறுத்த அரசாங்கம் சட்ட விதிகளைத் திருத்தியமைத்தால் அது எல்லோருக்கும் நன்மையளிப்பதாக இருக்கும். அந்த வகையிலே சட்ட விதிகளைத் திருத்தியமைக்க கூட்டுறவு அமைச்சர் அவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கூட்டுறவு இயக்கத்தில் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளவர்கள் நீடித்து பல ஆண்டுகளாக இருந்து வருவதால் தான் தவறுகள் ஏற்பட வழிவகைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவு இயக்கமானது நிர்வாகஸ்தர்களால் நடத்தப்படுகிறது என்றால் அது பொது மக்கள் நலனுக்காகத்தான் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நலனைக்கொண்டவர்கள்தான் அதிலே தலையிட முடியும். அதிலே, தனவந்தர்களே பெரிதும் பொறுப்பேற்றிருப்பதால் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் அதிலே கவனம் செலுத்த வாய்ப்பு இல்லாதவர்களாக இருந்து வருகிறார்கள். பெரும்பாலும் நடுத்தர மக்கள் கூட்டுறவு இயக்கத்திலே செயல்பட்டு பயன்படுத்தும் நிலைமைவர வேண்டும்.

பல துறைகளிலே கூட்டுறவு இயக்கம் இருந்தாலும் கூட நில அடமான பாங்கைப்பொறுத்தவரை இன்று இருக்கக்கூடிய நிலை சிந்திக்கத்தக்கதாக இருக்கிறது. இதிலே, ஒரு சட்டத்தை ஏற்படுத்தியதன் காரணமாக நீண்ட காலக் கடனை விவசாயிகள் தங்களுடைய கடனைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் கொடுக்கப்பட்டு 20 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்த முடியாத அளவுக்கு இன்று சட்ட விதிகள் இருக்கின்றன. இன்றைய சட்ட விதிகளின்படி பழைய கடன்களை விவசாயிகள் கொடுப்பதற்காக நீண்டக் காலக் கடன் பெறும் நிலை மாற்றப்பட்டு விட்டது. நில அபிவிருத்திக்குத்தான் நீண்ட காலக் கடன் கொடுக்கக்கூடிய நிலை இன்று இருக்கிறது. இதனால் நில அடமான பாங்கின் முக்கிய நோக்கம் செயல்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த விதியைத்திருத்தியமைத்து பழையபடி விவசாயிகளுக்கு தங்கள் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கும் நீண்ட காலக் கடன் கொடுக்க வழி வகைகள் செய்யவேண்டும். அதற்கான விதியைத் திருத்துவது மிகவும் அவசியம்.

நிர்வாகஸ்தர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு வருஷமும் குறைந்த தேர்தல் நடத்தவேண்டுமென்ற விதி இருப்பது பொருத்தமாக அமையவில்லை. பழையமுறை இருப்பது நல்லது என்று தெரிவித்துக்



கொள்கிறேன். அந்த முறையில் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தவறுகள் செய்யும் நிர்வாகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் முக்கியமான விதிகளைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியம். நிர்வாகஸ்தர்கள் மீது தவறுகள் ருசுப்பிக்கப்பட்டால் அப்படிப்பட்ட நிர்வாகஸ்தர்கள் எப்போதுமே கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொள்வதற்கு இல்லாத முறையில் விதிகளைத் திருத்தியமைக்க வேண்டும்.

ஆகவே, கூட்டுறவு இயக்கமானது மக்கள் சமுதாயத்தின் நலன்களுக்காக அத்தியாவசியமாகத் தோன்றுவதால் அரசாங்கம் முழு கவனம் செலுத்தி, அனுபவ முறையிலே மக்களுக்குப் பயன்படும் முறையிலே சட்டத்தைத் திருத்த முன வந்திருப்பதை பாராட்டி இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின்மீது பேசக்கூடிய நேரத்தில் அதில் பெரும்பாலும் எந்த அளவிற்கு ஊழல் மிகுந்திருக்கிறது என்பதைப் பற்றித்தான் யார் பேசினாலும் அதை மறுக்க முடியாத அளவிற்கு பேசியிருக்கிறார்கள். உண்மையில் கூட்டுறவு பற்றி கூட்டுறவு நாட்டுறவு என்று சொல்கிறார்கள். கூட்டுறவு நாட்டுறவாக ஓரளவிற்கு இருக்கலாம். அது கூட்டு கொள்ளை உறவு என்று சொல்லும் அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே சென்ற இருபது ஆண்டு காலத்தில் எந்த அளவிற்கு இதில் ஊழல் மலிந்திருக்கிறது, எந்த அளவிற்கு, ஊழலைப் போக்கக்கூடிய அளவிற்கு காங்கிரஸ் சர்க்கார் முயற்சி எடுக்க முடியாத அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி 1957–62ல் நான் இங்கிருந்த போது அன்றே கிளப்பப்பட்டது. அந்தச் சட்டத்தை மாற்றி திருத்தியமைக்க வேண்டும் என்பதற்காக அன்றிருந்த அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் கொண்டு வந்து அவர்களைச் சார்ந்த, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மாவட்ட ரீதியில் இருந்த கூட்டுறவு பாங்க் தலைவர்களாக இருந்தவர்கள், கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டித் தலைவர்களாக இருந்தவர்கள் நெருக்கியதின் விளைவாக அதைத் திருத்தாத அளவிற்கு கைவிடும்படி ஏற்பட்டது. நாங்களும் திருத்தினோம் என்று சொல்லும் அளவிற்கு ஒரு சிறிய அளவிற்கு மாற்றப்பட்டதே தவிர அடிப்படையில், ஊழல்களில் ஈடுபட்டவர்கள், பணத்தை கையாண்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மீண்டும் அவர்கள் எந்த சொஸைட்டியிலும் தலைமை வகிக்கக் கூடாது, தலைவர்களாக வரக்கூடாது என்ற அளவிற்கு சட்டம் மாற்றி திருத்தியமைக்கப்படவேண்டும்.

இது போல் சட்டத்தில் எவ்வளவோ அடிப்படையில் மாற்றியமைக்கக் கூடிய அளவிற்கு பெரும் பகுதி இருக்கிறது. இதை நாம் பார்க்க தவறிவிடக்கூடாது. இன்று கைத்தறி நெசவாளர்கள் மட்டுமல்ல, சிறிய தொழில்களில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கும் இதிலிருந்து உதவி கிடைக்கிறது, விவசாயத்திற்கும் உதவி கிடைக்கிறது. இது போன்று பல துறைகளுக்கு கூட்டுறவு மூலம் உதவி கிடைக்கிறது என்பதைப் பார்க்கும் போது இன்று உணவு உற்பத்தியைப்பெருக்கவேண்டும். அதற்காக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று மிகப் பெரிய அளவிற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நான் ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மடாதிபதிகளுக்கும், கோவில்களுக்கும் சொந்தமாக இன்று நிலங்கள் உள்ளன. அந்த நிலங்களில் கூட்டுறவு விவசாயப் பண்ணை முறையை ஆரம்பிக்க வேண்டும். கூட்டுறவு விவசாய முறையை ஆரம்பிப்பதற்கு அந்த மடாதிபதிகள் அல்லது கோவில் ட்ரஸ்டிகளாக இருக்கக்கூடியவர்களின் கன்ஸெண்ட் கிடைத்தால் தான் கூட்டுறவு விவசாய முறை ஆரம்பிக்கப்படவேண்டுமென்று அந்த அளவிற்கு இன்று இருக்கிறது. அந்தக் காரணத்தினால் இன்று அதில் ஈடுபட்டு விவசாயம் செய்யக்கூடிய

விவசாயிகள் அவ்வளவு பேர்களையும் ஒன்றுபடுத்தி கூட்டுறவு விவசாய முறையை அமுல்படுத்த முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருந்து, ஏற்கனவே அந்தத் தொழிலாளர்களுக்காக வேண்டி க்ரெடிட் சொஸைட்டீஸ், நாணய சங்கங்கள் ஆரம்பித்தபோது கூட அந்த இண்டஸ்ட்ரீஸ் கன்செண்ட் இல்லாமல் எந்த சங்கத்தை அவர்கள் ஆதரிப்பது அல்லது எந்த சங்கத்திற்கு பணத்தை பிடித்துக் கொடுப்பது என்ற அளவிற்கு இருந்தது. அந்த அடிப்படையை மாற்றி திருத்தியமைத்த பிறகுதான் இன்று சர்க்கார் அங்கீகாரம் கிடைத்த பிறகு அந்தத் தொழிலைச் சார்ந்த முதலாளிகள் தொடர்ந்து அந்தச் சங்கத்திற்கு உதவி செய்யவேண்டுமென்ற அடிப்படையில் உள்ளது. அது போன்று இந்தச் சட்டத்தையும் மாற்றி திருத்தியமைத்தாகவேண்டும். மடாதிபதிகள் அல்லது ட்ரஸ்டிகளின் கன்செண்ட் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி சர்க்கார் முன் கை எடுத்து கூட்டுறவு விவசாயத்தை ஆரம்பிக்கவேண்டும்.

அது போல் தொழிலுக்காக, இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டீவ்ஸ் ஃபார் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்ற அடைப்படையில் இன்று அதற்கு கூட்டுறவு இருக்கிறது. அதற்காக வேண்டி ஒரு கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அந்தக் கமிட்டியின் ஆயுள் காலம் ஒன்பது ஆண்டுகள் என்று தெரிகிறது. சட்டசபை உறுப்பினர், அல்லது எம்.பி.-க்கள், இவர்களுக்கே ஐந்து ஆண்டுகள்தானே. முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்து போர்ட்ஸ் இவற்றிற்கு மூன்று அல்லது ஐந்து வருடங்கள் என்று தான் இருக்கிறது. இதற்கு மட்டும் ஒன்பது வருடங்கள் ஆயுள் காலம் எப்படிக்கொடுத்தார்கள் என்று புரியவில்லை. ஆகவே, கண்டிப்பாக இதுபோன்ற கமிட்டிகளுக்கு ஆயுள் காலம் ஒன்பது வருடங்கள் இருக்குமானால் அதைக் கண்டிபபாக மாற்றி ஒரு வருடம் அல்லது இரண்டு மூன்று வருடங்களுக்கு உட்பட்டு அப்படிப்பட்ட கமிட்டிகள் மாற்றி, திருத்தியமைக்கப்படவேண்டும்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக பரிந்து பேசாதவர்கள் கிடையாது. என்னதான் பரிந்து பேசினாலும் அவர்கள் நிலை என்ன ? கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் நிலைமை என்ன ? அந்தத் தொழில் நல்ல முறையில் இருக்க வேண்டும், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று நாம் எண்ணுவோமானால் ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு நூல் ஆலைகள் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக வேண்டி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதில் நூல் எந்த விலைக்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அந்த விலைக்கு அப்படியே அவர்களுக்குக் கொடுக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டு கடைசியில் தனிப்பட்ட மில் முதலாளிகளால் எந்த அளவிற்கு விற்பனை செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு விற்பனைக்குக் கொடுக்கக் கூடிய அளவிற்குத்தான் நிலைமை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலை குறைந்த விலையில் எந்த அளவிற்கு அசல் கிரயம் இருக்குமோ அந்த அளவிற்குக் கொடுத்து உதவி செய்தால் தான் கூட்டுறவு நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். அப்போது தான் அத்தொழில் நல்ல முறையில் வளர முடியும். அதே போன்று கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஷேர்ஹோல்டர்ஸாக, பங்குதாரர்களாக சேர்ந்திருக்கிறார்கள். அப்படி பங்குதாரர்களாக சேர்ந்து இருக்கக் கூடிய அதே நேரத்தில் அவர்கள் அந்த சொஸைட்டியில் வேலை செய்யும் நேரத்தில் ரூபாய்க்கு இந்த அளவிற்கு என்று 5 அல்லது 10 அல்லது 20 பைசா பிடித்து அவர்கள் கணக்கில் சேமித்து வைக்கிறார்கள். அப்படி சேமித்து வைக்கப்படும் அந்தப் பணம், அந்த சொஸைட்டி நல்ல முறையில் இயங்கவில்லை என்று சொன்னால், அல்லது அதில் நஷ்டம் ஏற்படும் நிலை ஏற்பட்டால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பணமும், அவர்கள் சேமித்து வைத்திருக்கக்கூடிய அந்தப் பணமும் கூட பறிமுதல் செய்யப்படும் அளவிற்கு இன்று நிலைமையிருக்கிறது. எப்படி தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு ப்ராவிடெண்ட் ஃபண்ட்பிடித்





தால் அதில் எந்தக் கடன்காரனும் கை வைக்கக் கூடாது என்ற நிலை இருக்கிறதோ அதே போன்று இந்த ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சேமித்து வைத்திருக்கக்கூடிய பணத்தை எந்தக் காரணத்தையொட்டியும் சர்க்காரோ அல்லது கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் போர்டோ எடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது).

கடைசியாக, மார்வாரிகள் நகரங்களிலும் சரி, பலவிடங்களிலும் சரி வட்டிக் கடைகள் வைத்துக் கொண்டு உடுத்துக் கொண்டிருக்கிற உடை, வீட்டிலுள்ள தட்டுமுட்டு சாமான்கள் இவற்றை வைத்துக் கொண்டு கடன் கொடுக்கிறார்கள். நகரங்களில் பாங்குகளில் நகையை வைத்து, அல்லது வீட்டை வைத்துக் கடன் வாங்கலாம். நான் சொல்வது ஏழை மக்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் பான் ப்ரோக்கர்கள் கடைவைத்திருப்பதைப் போன்று, கூட்டுறவு நாணய சங்கங்கள் பல ஏற்படுத்தி ஏழைகளுக்கு குறைந்த வட்டியில் பணம் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் பாமர மக்களைப் பாதுகாக்க முடியும். அதனால் படித்து வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலையும் கிடைக்கும். அந்த அடிப்படையில் அதில் தகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை :** பெருமதிப்பு மிக்க மன்ற உதவித் தலைவர் அவர்களே, கூட்டுறவு நாணய சங்கம் என்ற பெயரால் நடக்கும் கொடுமைகள் அத்தனையையும் பற்றி எடுத்துச் சொல்லி விட்டார்கள். நானும் சொல்வதானால் அதையே திரும்பத் திரும்பச் சொல்லவேண்டுமென்று கருதுகிறேன். சுமார் பத்து பதினைந்து ஆண்டுகளாக ஒரு குடும்பத்தில் கூட்டுறவு சிக்கிக் கொண்டு ஏழை மக்கள் நல் வாழ்வு வாழ முடியாத அளவில் தவிக்கிறார்கள் என்பது இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர் அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும். நானும் இந்தக் கூட்டுறவு சம்பந்த
பி. பகல் 4-00
மாகப் பல அதிகாரிகளை அணுகிக் கேட்டுவிட்டேன். அமைச்சரையும் அணுகிக் கேட்டுவிட்டேன். " சட்டம் இருக்கிறதே. என்ன செய்வது " என்று சொல்லுகிறார்களே தவிர, இந்தச் சட்டத்தைத் தவிர்க்க என்ன வழி செய்வது என்று யாருமே கூறவில்லை. சட்டத்திற்காக ஜனங்கள் இருக்கிறார்களோ, அல்லது ஜனங்களுக்காக சட்டம் இருக்கிறதோ என்று ஐயப்படவேண்டிய நிலை இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் கூறியபடி, ஒரு கூட்டுறவு சங்கத்தில் ஒரு குடும்பம் தான் பிழைக்கிறதே தவிர, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருக்கிறதே தவிர சாதாரணமானவர்கள் ரூ. 1–1–0 கொடுத்து ஒரு உறுப்பினராகச் சேர முடியவில்லை. நானும் எங்கள் கிராமத்தில் 7–8 ஆண்டுகளாகப் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்து கொண்டு இருக்கிறேன். என்னைக்கூட ரூ. 1–1–0 கொடுத்து உறுப்பினராகச் சேருவதற்கு அனுமதிக்கவில்லை. இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்து வருவதெல்லாம் நாடறிந்த உண்மை.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. சீமைச்சாமி புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொன்னார்கள். அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று தெரியவில்லை. இந்த மன்றத்தில் பேசிய ஒவ்வொரு உறுப்பினரும் அருமையான புள்ளிவிவரங்களோடு பல கருத்துக்களை ஆதாரங்களோடு எடுத்துக்கூறினார்கள். இந்த சட்டத்தைத் திருத்தாமல் " ஆகட்டும், பார்க்கலாம் " என்று ஏற்கனவே சொல்லிக் கொண்டு இருந்ததைப் போல மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தால் இந்த நாட்டிலே கூட்டுறவில் என்ன நிலைமை ஏற்படும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கூட்டுறவு நாணய சங்கத்தில் இருக்கிறவர் 10 ஆண்டுகளுக்கு முன் என்ன நிலையில் இருந்தார். கூட்டுறவு சங்கத்திற்கு தலைவனாக ஆகவிட்டு இவ்வளவு நிலம் வாங்கியிருக்கிறார். எவ்வளவு சொத்து இருக்கிறது என்று கணக்கு எடுத்துப் பார்த்தால், கூட்டுறவு முறை என்ன முறையில் இயங்கி வருகிறது என்பது நன்றாக விளங்கும்.

[திரு. தி. பொன்னுமலை] [1967 ஜூன் 29

இன்னும் பல சொல்லவேண்டுமேயானால், இதையேதான் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருக்கும். அத்தனை பேர்களுடைய கருத்துக்களையும் ஆழ்ந்து சிந்தித்து கூட்டுறவுச் சட்ட திட்டத்தை மாற்றி அமைத்தாலொழிய வழி இல்லை என்று கூறிக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி : சபைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு மான்யக் கோரிக்கையைச் சட்ட மன்றத்தில் வைத்திருக்கிறார்.

கூட்டுறவுத் துறையிலே தமிழ்நாடு முன்னணியில் இருக்கவேண்டும் என்பதுதான் இங்கு தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை பேர்களுடைய நோக்கமாக இருக்கும். படிப்படியாக சமுதாயத்தில் உற்பத்தியாகிற பொருள்கள் விற்பனை போன்ற துறையிலே சகலமும் கூட்டுறவு முறையில் வருவதற்கான ஒரு வாய்ப்பைத் தமிழகத்தில் உண்டாக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே, உற்பத்தியாகிற பொருள்கள் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்க கூட்டுறவுத் துறை விஸ்தரிக்கப்படவேண்டும்.

விவசாயத் துறைக்காக, கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுக்கப்படுகிறது. அது விவசாயிகளுக்கு எந்த [illegible] பயன் அளிக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். [illegible] கடன் சொஸைட்டிகளின் மூலமாகக் கொடுக்கப்படும் கடன்கள் குறுகிய காலக் கடன்களாகத்தான் அளிக்கப்படுகின்றன. முன்பு நீண்ட காலக் கடன்கள் அளிக்கப்பட்டு வந்தன. நீண்ட காலக் கடன்கள் கொடுக்கும் முறையில், எப்படியும் மூன்று ஆண்டுகளுக்குள் தன்னுடைய வருவாயைப் பெருக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு, வருவாய்த் தொகையில் மிச்சம் வைத்து, கடனைத்திரும்ப அளிக்கும் மார்க்கம் இருந்தது. இப்போது அப்படி இல்லை. இப்போது வெள்ளாமையின் பேரில் கடன் அளிக்கப்படுகிறது. ஒரு பகுதி உரமாகவும், ஒரு பகுதி பணமாகவும் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகிறபோது, அந்த விவசாயிகளுக்குக் காலாகாலத்திலே உரம் கொடுப்பதற்கான வழிவகைகள் கிடையாது. காரணம், மார்க்கெட்டிங் சொஸைட்டியிலே அல்லது பஞ்சாயத்து யூனியனிலே மார்க்கங்களைத்தேடி உரத்தை வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் பருத்திக்கு உரம் வேண்டுமென்று கேட்டால் பருத்தி வெடித்த பிறகு உரம் கிடைக்கிறது. பிளாக் மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து பருத்திக்குப் போடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நான் என்ன சொல்லுகிறேன் என்றால், கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம், உரம் போன்றவைகளை வீதாச்சார அடிப்படையில் அந்தந்த கிராமங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால், அந்த உரங்கள் போன்றவைகள் கிடைக்க சாத்தியக்கூறுகள் ஏற்பட்டு, முன்னேற்பாட்டுடன் கிடைக்கும். அப்படி இல்லாமல் இருந்தால், பருத்திக்கு வேண்டுமென்றால், பருத்தி வெடித்த பிறகு கிடைத்து பயன் இல்லாமல் போய், உரத்தை வேறு ஒருவர் பெயரில் பில்லைப்போட்டு வாங்கி பிளாக் மார்க்கெட் செய்ய வழிவகைகள் இதன் மூலமாக ஏற்படுகிறது. இதைத்தடுக்க வேண்டுமென்றால், கோட்டா முறையில் அந்தந்த க்ரெடிட் சொஸைட்டிகளுக்குக் கொடுத்து வினியோகிக்கும் மார்க்கத்தை அந்தச் சட்டத்தின் மூலமாக உண்டாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்குக் காலாகாலத்திலே உரம் கிடைக்க வழிவகைகள் ஏற்படும்.

அடுத்தபடியாக, இந்த நில அடமான பாங்கில் முன்பெல்லாம் முன் கடனுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. விவசாயிகள் வட்டிக் கடைகளில் அதிகப்படியான வட்டி கொடுத்து பணம் வாங்கி விவசாய



1967 ஜூன் 29] [திரு. கே. என். குமாரசாமி]

அபிவிருத்தி வேலைகளுக்கு, அல்லது குடும்பக் காரியங்களுக்குப் போடுவதன் மூலமாக ஏற்படுகிற கடன்கள், அதிக வட்டியினால் குடும்பங்கள் சிதைந்து போகின்றன. நில அடமான பாங்குகளில் முன் கடன் என்ற வகையில் கொடுத்து வந்தார்கள். அதையெல்லாம் ரத்து செய்து விட்டு நில அபிவிருத்தி என்ற பெயரில் கொடுக்கிறார்கள். இருபது ஆண்டு தவணையில் கொடுக்கப்பட்டு வந்தது 15 ஆண்டுத் தவணையில் கொடுக்கப்படுகிறது. நான் என்ன சொல்லுகிறேன் என்றால், நில அபிவிருத்தியின் பெயரால்தான் இதிலே கொடுக்க முடியும் என்றால், மற்ற கடன்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன என்பதை உணரவேண்டும். அந்தக் கடன்களை எப்படி வாங்குவது ? விவசாய அபிவிருத்தி என்ற பெயரில், பொய் சொல்லி வேறு காரியங்களுக்கு வாங்கவேண்டியிருக்கிறது. ஆகையால் விவசாயிகள் கோருகிற கடன், எப்படிப்பட்ட கடனாக இருந்தாலும் நீண்டகாலக் கடனாகக் கொடுக்கும் முறையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

பயிர்களின் பேரில் கொடுக்கும் கடன்களை எடுத்துக்கொண்டால், பயிர்கள் அழிந்துவிட்டால் திருப்பிக் குறுகிய காலத்தில் கொடுக்க முடியாது. குறுகிய காலக் கடனுக்கு வட்டி கட்ட முடியாமல், கடன் தொகையைக் கொடுக்க முடியாமல், வருவாய் இல்லாததால் திண்டாடுகிறார்கள். அதற்கு அரசாங்கம் ஒரு முடிவு செய்யவேண்டும். பயிர்கள் அழிந்தோ, விவசாயம் அழிந்தோ அந்த ஆண்டு வருமானம் கிடைக்கவில்லையென்றால், ஏதாவது 1–2 விவசாயிகளின் பயிர்கள் நாசமாகி அழிந்துவிட்டால், கடனுக்கான வட்டியை ரத்து செய்தும், கடன் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம், அதாவது 10 சத வீதம் ரத்து செய்யும் முறை இருக்க வேண்டும். அப்படிச் செய்யாமலிருந்தால் அந்த விவசாயிகள் மற்ற இடங்களில் கடன் வாங்கி, அந்தக் கடன்களை அடைக்க முடியாமல் போய்விடும். அப்படிப்பட்ட கடன்களை வாங்காமல் இதிலே வழிவகை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பங்குதாரர்கள் விழிப்போடு இருப்பதால் நல்ல முறையில் லாபங்கள் அடையப்படுகின்றன. நிர்வாகிகளாக இருக்கக் கூடிய மானேஜ்மெண்ட்டார் அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் தலைவர்களாக இருக்கிறார்கள். இப்போது என்ன நடக்கிறது என்றால் செண்ட்ரல் கோவாப்பரேட்டிவ் ஸ்டோருக்கு கட்டவேண்டிய பணம் கிட்டத்தட்ட 40–45 லட்சம் ரூபாய் இருக்கும். அந்தப் பணத்தை அந்த ஸ்டோரில் அவர்கள் கட்டாமல் இருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற கிளை விற்பனை ஸ்டோர்களில் அரிசி மாத்திரம் போடுகிறார்கள், மற்ற பண்டங்கள் போடுவது கிடையாது. தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், டைரக்டர்களாக இருக்கிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொண்டிருக்கலாம், அதைத் தடுக்க சட்டம் ஒன்றும் செய்ய முடியாது என்று கூட்டுறவுத் துறையில் நம்பிக்கை இழந்து, விற்பனை சொஸைட்டியில் இருக்கிற மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்களிடமிருந்து மாதத் தவணைகளில் பிடித்தம் செய்துகொண்டு, அந்தத் தொகையை முதலாளிகள் செண்ட்ரல் ஸ்டோரில் கட்டாமல் இருக்கிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் கூட்டுறவுத் துறை வளர்ச்சி பெற வேண்டுமென்று நோக்கம் இருக்கும்போது, இந்த நோக்கத்திற்கு இடையூறுகளாக இருக்கிறவர்கள் கூட்டுறவுத் துறையையே கீழான நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற சுயநல நோக்கத்தோடு, கூட்டுறவுத் துறையில் உள்ளே புகுந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் களைந்தெறிய, கூட்டுறவு நல்ல இயக்கம் என்று எடுத்துக்காட்ட, சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரிகளை நியமித்து, ஊழல்கள் ஏற்படும்போது, காலதாமதம் இல்லாமலே ஒவ்வொரு பிரச்னை மீதும் குறைந்த நாளில் ரிப்போர்ட்டை பெற்று, 10 நாட்களில் பிரச்னையைத் தீர்க்கும் முறையில் கூட்டுறவுத் துறையில் இருந்தால்தான் இந்தத் துறையைத் திருத்தமுடியும். அப்படி இல்லாமல் டிப்பார்ட்மெண்டை

நடவடிக்கை எடுப்பது என்ற பெயரால், என்குயரி வைத்து நீண்ட நாள் செய்வதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களிடத்திலே பல காரணங்களைச் சொல்லி, குறைபாடுகளே இல்லாமல் செய்துவிட்டு, தப்பை மறைக்கும் மார்க்கம் உருவாக்கப்படுகிறது. அது இல்லாமல் செய்து அரசாங்கத்திலே நிர்வாகம் சுறுசுறுப்பாக இருந்து கூடிய சீக்கிரத்தில் நடவடிக்கை எடுத்தால் ஓரளவு கூட்டுறவுத் துறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். வாழ்விற்குத் தேவையான பொருள்களைப்பெற, கடன்களைக்கொடுத்து நிவாரணம் அளிக்கும் நிலைமையை உண்டாக்க முடியும். கூட்டுறவுத் துறையை பலமான இயக்கமாக ஆக்கவேண்டும். அதற்கான சட்ட திட்டங்களை அரசாங்கம் இன்றைக்கே அமைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. போகப் போக அதில் இருக்கிற தவறுகளை ஆராய்ச்சி செய்து, சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. மு. ராசகோபால் :** மாண்புமிகு கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மான்யக் கோரிக்கையின் மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கூட்டுறவுத் துறையில் பாமர மக்களுக்கும், நடுத்தர குடும்பங்களிலுள்ள எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவேண்டும். இதற்கு முன்பு இந்த நாட்டை ஆண்டுவந்த அரசு 20 ஆண்டு காலமாக ஏகபோக உரிமையாக அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்களுக்கு யார் யார் சொந்தக்காரர்களோ அவர்களுக்கு, யார் அவர்களுடைய வெற்றிக்கு தேர்தலில் வோட்டுகள் சம்பாதித்துக்கொடுப்பார்களோ அவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்களின் தலைமைப் பதவி அளிக்கப்படும் நிலைமையைதோற்றுவித்திருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களை தலைவர்களாகக் கொண்டு குடும்பச் சொத்துக்களாக கூட்டுறவை ஆக்கிக்கொண்டார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கூட்டு உறவு என்பது 20 ஆண்டு காலத்தில் கூட்டு முறிவாகத்தான் செயல்பட்டது. அந்த அளவுக்கு அவர்களுடைய மனப்போக்கு, எண்ணம் இருந்ததுகொண்டிருக்கிறது. தணிக்கை செய்யப்படுகிறது என்ற பெயர் இருந்தாலும், அரசு தணிக்கையாளர்கள்கூட எந்த அளவுக்கு கூட்டுறவு சங்கங்களில் தணிக்கை செய்தார்கள் என்றுகூட தெரியவில்லை. ஒரு விவசாயி ஒரு கூட்டுறவு சங்கத்தில் ரூ. 100 கடன் வாங்கியிருந்தால், அவன் திருப்பிக்கொடுக்க முடியவில்லை என்றால், அவனுடைய சொத்து உடனடியாக ஜப்தி செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்படுகிறது. ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு தலைவராக இருந்தால் தனக்குப் பின்னாலே ஒரு சக்தி இருக்கிறது என்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, எந்த அளவுக்கு கொள்ளை அடிக்க முடியுமோ அந்த அளவுக்கு கொள்ளை அடித்தார்கள். கேட்பார்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் அந்த அளவுக்கு நடந்துகொள்கிறார்கள். இப்பொழுது இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற ஆட்சி அவர்களையெல்லாம் நடுத் தெருவில் கொண்டுவந்து கல்லில் எழுதி அவர்கள் பெயர்களை முச்சந்தியில் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தலைவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, கொள்ளை லாபம் அடித்தவர்களையெல்லாம், அவர்கள் மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், நடுத்தெருவில் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். பாமர மக்கள் கூட்டுறவுத் துறையால் பயன் அடைய முடியாமல் தலைவர்கள் என்ற பெயரால் பல பேர்கள் கொள்ளை லாபம் அடித்துவந்திருக்கிறார்கள். அவர்கள் மீது முன்னாலே இருந்த ஆட்சி தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையாதலால், எத்தனையோ பேர்கள் சாகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றிரண்டை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூருக்குப் பக்கத்தில் 5, 6 மைல் தொலைவு, நெல்வாய் என்ற கிராமத்தில் இருக்கும் கூட்டுறவுச் சங்கத்தினால் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கிட்டத்தட்ட



ரூ. 33,000 கையாடல் செய்திருக்கிறார்கள். அவர் மீது கையாடல் குற்றம் இருக்கிறது என்று சொல்லப்பட்ட உடனேயே அவர் தூக்குப் போட்டுக்கொண்டு செத்தார். சரியான முறையில் தணிக்கை செய்து, கணக்கைப் பொறுத்தவரையில் சென்ற அரசாங்கம் சரியாக நிர்வாகம் செய்திருந்தால் ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கவேண்டும் ? கணக்கு சரிவர தணிக்கை செய்யப்பட்டால் இம்மாதிரி நிலைமை ஏற்பட இடமில்லை. 1957-ல் வெற்றிபெற்று வந்த இங்கே உதவி சபாநாயகராக இருந்தவர் வடார்க்காடு மாவட்ட கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்த காரணத்தை ஒட்டி. . . .

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். . . .

**மாண்புமிகு துணை பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது தனிப்பட்ட ஒருவரைப் பற்றிக் குறிப்பிடாமல் பேசவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே வடார்க்காடு மாவட்டத்தில் பல தலைவர்கள் கொள்ளை லாபம் அடித்தார்கள்.. குறிப்பாக, ...த்தேரி கிராமத்தில் பழனி முதலியார் என்ற தலைவர் கையாடல் செய்த தொகை ரூ. 37,000. இந்த அளவுக்கு அராஜகம் இந்த நாட்டில் வளர்ந்திருக்கிறது. அதேபோலத்தான் வடார்க்காடு மாவட்டத்தில் கொற்கை என்ற கிராமத்தில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிகேசவலு நாயுடு என்பவர் ரூ. 36,000 அளவுக்கு கையாடல் செய்திருக்கிறார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மீண்டும் உறுப்பினர் அவர்கள் பெயரைச் சொல்லி பேசுகிறார்கள்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்கிறார்கள்.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, தணிக்கப் போனூரில் செந்தில் நாயுடு என்ற தலைவர் கையாடல் செய்த தொகை எவ்வளவு என்று தெரியுமா ? ரூ. 5,25,000. தன் மீது வாங்கிக்கொடுத்த பெரிய மனிதன் கொடுக்காத காரணத்தினால் அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரால் மசூலிப்பட்டணத்தில் தூக்க மருந்து வாங்கிச் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார். செயலாளர் முனுசாமி முதலியார் அவர்களுக்கு பணம் கட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டிருப்பதால் அவதிப்பட்டுகொண்டிருக்கிறார். பல பெரிய மனிதர்களெல்லாம் அவருக்காக சிபார்சுக்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது வந்திருக்கிற ஆட்சி அந்த சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு இந்த நாட்டிலே கூட்டுறவுத் துறையில் கொள்ளைஅடித்த ஆட்களை நடுவீதியிலே கொண்டு வந்து நிறுத்தவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுத் துறை பாமர மக்களுக்கு பயன்படுகிற வகையில் இயங்கவேண்டும். ஊராட்சி மன்றம் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு ஊர் ஊருக்கு கூட்டுறவு சங்கங்களை அமைத்து, விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்ற பொருள்களை அவர்கள் கூட்டுறவுத் துறை மூலம் எளிதில் பெறக்கூடிய வகையில் உறுதியான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் வேண்டிய கடனை கொடுத்து, அவர்களிடமிருந்து பெறவேண்டிய நெல்லை பெறவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அரசு செய்தது போல் செய்யக் கூடாது. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கூறியிருக்கிறார் தமிழகத்திலே :

> " நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
> நாடொறும் நாடு கெடும் "

என்பதைப்போல பொதுவாக இருப்பவரை தணிக்கையாளராக வைத்து, ஒரே நாளில் ஒரு மாவட்டத்தில் அப்படியே தணிக்கை செய்யவேண்டும்.

அப்படிச் செய்தால்தான் அத்தனை பேர்களும் அகப்பட்டுக்கொள்வார்கள் என்று கூறி, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு செ. பாலசுப்பிரமணியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யத்தின் மீது நான் வெட்டுப் பிரேரணை கொண்டுவந்தபொழுது சற்று அனுதாப உணர்ச்சியோடு கொண்டு வந்தேன். அனுதாப உணர்ச்சிக்குக் காரணம், இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கும் நமது அமைச்சர் அவர்கள் ஒரு இளைஞர், உற்சாகம் மிகுந்தவர், கூட்டுறவுத்துறையில் உள்ள ஊழல்களையெல்லாம் களைந்தெரிவதற்கு கண்ணும் கருத்துமாக பாடுபடுகிறார்கள். அவர்களுக்கு உதவக்கூடிய ரீதியிலே இருக்கவேண்டுமென்று இந்த வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். அவர்கள் ஏற்றிருக்கும் பொறுப்பு, கூட்டுறவுத் துறையிலே இருக்கும் லஞ்ச ஊழல்களை ஒழிப்பது என்ற பொறுப்பு மிகப் பெரிய பொறுப்பு. ஏனென்றால் கூட்டுறவுத் துறை என்று சொல்லும்பொழுது அதிலே பெரிய திமிங்கிலங்கள் இருக்கிற ஒரு துறை, அந்தத் திமிங்கிலங்களையெல்லாம் இவர்கள் வெளியே இழுத்துக்கொண்டு வந்து விட்டால் நிச்சயம் நாம் அவர்களுக்கு ஒரு பத்ம பூஷணம் பட்டத்தையே கொடுக்கவேண்டும் என்று டெல்லி அரசுக்கு சிபாரிசு செய்யலாம். நான் எதற்காக ஹாஸ்யமாக இப்படிச் சொல்கிறேன் என்றால், இந்தத் துறையில் எவ்வளவு ஊழல்கள் வளர்ந்துவிட்டன என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு பிரிவாகப் பார்த்தோமானால், ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு ராஜா இருப்பதை நாம் காணலாம். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுதுறையை எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு ராஜா. மாவட்ட ரீதியிலே நில அடமான பாங்குகளை எடுத்துக்கொண்டால் அதற்கு ஒரு ராஜா. இப்படி பல ராஜாக்கள் தோன்றியிருக்கின்றனர். இந்த ராஜாக்களை அகற்றுவதற்கு என்ன முயற்சி செய்தாலும் முடிவதில்லை. அதற்குக் காரணம் கூட்டுறவு சட்டத்தில் இருக்கிற விதிகள்தான். அவைகளெல்லாம்தான் இந்த ஊழல்களுக்கு காரணம். ஏகபோக முறை ஒழிய வேண்டும். கூட்டுறவு தேர்தல் விதிகளில் இருக்கிறது ஓட்டை உடைசல்களை அடைக்க வேண்டும். அதனால்தான் இம்மாதிரி ஏகபோக நிலைமைகள் ஏற்படுகின்றன என்பது என்னுடைய கருத்து. உதாரணமாக, கூட்டுறவு சட்டத்தில் இருக்கிற தேர்தல் விதிகளைப் பார்த்தால், தேர்தலை நடத்துகின்ற பொறுப்பு முன்பிருந்த டைரக்டர் சபைக்கு விடப்பட்டிருக்கிறது. ஆகவே, முன்பிருந்த டைரக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்களுக்குள்ளேயே ஒருவர் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். அந்தத் தேர்தல் அதிகாரிதான் தேர்தலை நடத்துகிறார். அந்தத் தேர்தலில் அவர்களுக்கு எப்படியெல்லாம் உசிதமோ அப்படிச் செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டாதவர்களாக இருந்தால் நியமனத்தை தள்ளுபடி செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் நியமனத்தை சரியாக்கிக் கொள்கிறார்கள். தேர்தல் கால ஏற்பாடுகளை இவர்களே செய்வதால், மறுபடியும் தங்களுக்கு வேண்டியவர்களே அங்கே வரும்படி ஏற்பாடு செய்துவிடுகிறார்கள். சென்ற முறை கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் டைரக்டர் சபையிலுள்ள மூன்றில் ஒரு பங்கு டைரக்டர்கள் ரிடையராகி. புதிய டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அந்த முறை இப்பொழுது நடைமுறையில் சரியாக இயங்கவில்லை ஆகவே, முன்பிருந்தபடியே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லோரும் ஒரேயடியாக ரிடையராகி, புதியதாக எல்லா டைரக்டர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தத் தேர்தல் நடத்தும் பொறுப்பை டைரக்டர் சபையிடம் விடாமல், அரசாங்க அதிகாரிகளே, கூட்டுறவுத் துறையே, இந்தத் தேர்தலை நடத்தினால், தேர்தல் ஊழல்கள் ஒழிக்கப்படும் என்று நம்புகிறேன். அதோடு, இப்பொழுது இருக்கும் ஏகபோக முறையும் மாறி, புதியவர்கள் டைரக்டர்களாக வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.



இன்னொரு யோசனையையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு முறை டைரக்டராக இருந்தவர், மறுபடியும் அதே போர்டில் டைரக்டராக வரக்கூடாது. அதாவது இரண்டு முறைகள் ஒருவர் டைரக்டராக வரக் கூடாது என்பதை பற்றி தீவிரமாக பரிசீலனை செய்து, அவசியமானால், அதற்கான திருத்தத்தை சட்டத்திலே கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஊழல்களைப் பார்க்கும் போது, லஞ்ச ஊழல்கள் இல்லாத கூட்டுறவுச் சங்கங்களே கிடையாதோ என்று அச்சப்படவேண்டிய நிலைதான் இருக்கிறது. பெரிய பெரிய பெயர்கள் கூட இந்த லஞ்ச ஊழல்களில் ஈடுபட்டிருந்தவர்கள்தான் என்று தெரிகிறது. அவர்கள் மீது லஞ்ச ஊழல் புகார் வந்தால், அன்றைக்கு இருந்த அரசு அவர்களுக்குச் சாதகமாக இருந்ததால், அவர்கள் பல வழிகளிலும் தப்பித்துக்கொண்டு போய் விட்டார்கள். அதே சமயத்தில் இன்னும் பல பல குற்றச்சாட்டுகள் பெரிய புள்ளிகளைப் பற்றி வரும்போது, அவற்றை நேரிடையாக அரசே கவனிக்கத்தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நான் ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையிலேயே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி—"செல்" என்று சொல்லுகிறேன்—எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அது சென்று, அங்கேயுள்ள ஆடிட் ரிபோர்ட்டைப் பார்த்து, ஏற்பட்டிருக்கும் ஒழுங்கீனங்களைக் கண்டுபிடித்து, கையாடல் செய்யப்பட்டிருக்கும் அம்சங்களைக் கண்டு, சம்பந்தப்பட்டவர்களை பிராசிக்யூஷன் செய்யவும் தயங்காமல் ஆவன செய்ய வேண்டும். அப்படியே ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்துவதன் மூலம் ஊழல்களைக் கண்டு பிடித்து, குற்றவாளிகளை கோர்ட்டின் முன் கொண்டுவர வாய்ப்பு இருக்கும். இந்த ஊழல்கள் பற்றிக் குறிப்பிடும்போது, அதிலே அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்திலேயே முன்பு கூட அந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. சென்னைக் கைத்தறிக் கூட்டுறவுச் சொசைடித் தலைவர், சென்னிமலை கைத்தறிக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் கூட. 1964–65 ஆடிட் ரிப்போர்ட்டின் பிரகாரம், 1,10,000 ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது என்று தெரியவந்தது. ஆனால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாகக் கிடையாது. பெரிய மனிதர் என்கிற ஒரே காரணத்திற்காக அதிகாரிகளெல்லாம் கூட அவரைக் கண்டு பயப்படுகிறார்கள். சமீபத்திலே கூட அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே, அங்கத்தினர்கள் சிலர் 1964–65-ம் வருஷ ஆடிட் ரிப்போர்ட்டின் நகல் ஒன்று வேண்டும் என்று கேட்டார்கள். சங்க விதிகள் பிரகாரம் அது அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. உடனே, அவர்கள் ஈரோடில் இருக்கும் டெபுடி ரெஜிஸ்ட்ராருக்கு எழுதிக் கேட்டார்கள். அவரும் கொடுப்பதற்கில்லை என்று எழுத்து மூலம் கொடுத்து விட்டார். அதன் பிறகு, ஊட்டியில் இருக்கும் தணிக்கைக் கணக்கு சம்பந்தப்பட்ட டெபுடி ரெஜிஸ்ட்ராருக்கு எழுதிக் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பேரில் ஊட்டிக்கு எழுதினார்கள். அவர்கள் சொன்னார்கள், ஈரோடில் இருக்கும் டெபுடி ரெஜிஸ்ட்ராருக்கு நகல் கொடுக்கும்படி சொல்லியிருக்கிறேன். கடிதம் எழுதியிருக்கிறேன். அங்கு சென்று கேட்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அங்கே, எம்.எல்.ஏ. ஆகிய நானும், சென்று கேட்டோம். ஆனால் ஈரோடு டெபுடி ரெஜிஸ்ட்ரார் எனக்குக் கொடுக்க விதியில்லை, மறுபடியும் ஊட்டிக்கே எழுதுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு வேறு வழி இல்லாமல், தங்கள் எதிர்ப்பைக் காட்டும் வகையில், அடையாளமாக ஒரு நாள் கூட்டுறவு சங்கத்திலேயே உண்ணாவிரதம் இருந்தார்கள். பெரிய மனிதர்களை கூட்டுறவு சங்கங்களிலே சேர்ப்பது பற்றி திட்டவட்டமாக மாறுதல்கள் செய்தால்தான் ஊழல்கள் ஒழியும். குறிப்பாக இப்பொழுது இருக்கின்ற அமைச்சரவை ஏகபோகக்காரர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று காண ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, கூட்டுறவு சங்கப் பொறுப்பில் இருந்தவர்கள் ஏற்கெனவே என்ன சொத்து வைத்திருந்தார்கள், இப்பொழுது என்ன சொத்து வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து, வெளியிட்டால் திடுக்கிடும் சம்பவங்களை தமிழ்நாடு அறியும். அப்பொழுது தெரியும் இவர்கள் எப்படி தினசரி ஏரோப்ளேனில் போகிறார்கள், உயர்தர ஓட்டல்களில் தங்குகிறார்கள் என்பதெல்லாம். இவர்கள் எப்படி கூட்டுறவு

[திரு. செ. பாலசுப்பிரமணியன்] [1967 ஜூன் 29

சங்கப் பணத்தை செலவழித்திருக்கிறார்கள் என்றும் தெரியும். ஆகவே, உற்சாகம் மிக்க அமைச்சரவர்கள், இந்தத் துறையில் இருக்கும் ஊழல்களை களைந்தெறிய நடவடிக்கை எடுத்து, பெரிய பெயரையும் புகழையும் அடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவருடைய அந்தப் பணிக்கு நாம் ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு என உரையை முடிக்கிறேன்.

* **திரு. சொ. கோவிந்தராசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையில் பேசும் சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு முதற்கண் நன்றி கூறிக்கொண்டு தொடங்குகிறேன்

கூட்டுறவு முறையில் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களில் நான் ஒருவன். ஆனால், இந்தச் சபையில் கூட்டுறவு என்பது கூட்டுக்கொள்ளையென குறை கூறிப் பேசினார்கள். அவற்றிலும் 99 சத விகிதம் உண்மையாகும். இவை களைத் தவிர்த்து நன்மை செய்யவேண்டுமானால், விவசாயிகளுக்கு எந்த வகைகளில் நன்மை செய்யலாம் என்று பார்க்கவேண்டும். உதாரணமாக, அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை எடுத்துக்கொண்டால், $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு செலவு ஏற்படுத்தி, அதை 1963-ல் தொடங்கி, 1966-ல் தேர்தல் சமயத்திலே, ஓட்டு வாங்குவதற்காகவோ என்னவோ, அதை ஓட்டிக் காண்பித்து விட்டு, பிறகு ரூ. 40 கையிருப்போடு, கொடுக்க வேண்டிய கடன் 14 லட்சம் என்று வைத்துவிட்டு, அதை ஓட்ட முடியாத நிலையில் சென்ற சர்க்கார் வெளியேறியிருக்கிறது. அதைப் பற்றிப் பல முறைகள் எடுத்துக் கூறியிருக்கிறேன். அச்சடித்துக் கையெழுத்துப் போட்டு சென்ற சர்க்காருக்குக் கொடுத்தும் ஒரு பயனும் இல்லாமல் போய் விட்டது. பணம் இல்லாததால் இன்றைக்கு அந்த ஆலை ஓடாமல் மூடிக் கிடக்கிறது.

அடுத்து, விவசாயிகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பதும், உரம் கொடுப்பதும் இந்த சங்கங்கள் செய்யும் வேலைகள். விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனின் வட்டி குறையவேண்டும். அந்த முறையில் செய்ய வேண்டும் என்றால், ஸ்டேட் கோ-ஆபரேடிவ் பாங்கியிலிருந்து (மாவட்ட) டிஸ்டிரிக்ட் கூட்டுறவு பாங்கிக்கு பணம் கொடுத்து, அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து, விவசாயிகள் வாங்குவதை விட, ஸ்டேட் கூட்டுறவு பாங்கியின் பிராஞ்சாக டிஸ்டிரிக்ட் கூட்டுறவு பாங்கியை மாற்றினால், வட்டி கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ சத விகிதம் விவசாயிகளுக்குக் குறையும், அதோடு நிர்வாகச் செலவும் அதிகம் மிச்சமாகும் என்றும் இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

மேலும் ஆண்டுக் கடன் திட்டம் பற்றிக் குறிப்பிடவேண்டும். அவசர அவசரமாக விவசாயிகளுக்குக் கடன் திட்டம் தீட்டி, வழங்கப்படுகிறது. ஆனால், முதல் கடன் வாங்கியதை, அறுவடையானவுடன் நெல்லை விற்று, பணத்தைக் கட்டிவிடவேண்டும். பிறகு திரும்பவும் புதுக்கடன் பெறவேண்டும் என்று விதியிருக்கிறது. இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத காரியமாக இருக்கிறது. இதைப் பற்றி கனம் ரெஜிஸ்ட்ரார் அவர்களிடம் கூறியிருக்கிறேன். ஆனால் அவர்கள் சொன்னார்கள், ரிசர்வ் பாங்கி அனுமதி கொடுக்கமாட்டார்கள் என்று. ஆகவே இதை அமைச்சரவர்கள் கவனித்து பிரயோசனமாக இருக்கும் வகையில் இந்த ஆண்டுக் கடனைத் திருத்தி, விவசாயிகளுக்கு ஒரு ஆண்டு தவணை கொடுத்து, கடன் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை சூப்பர் மார்க்கெட்டு பற்றிப் பேசும்போது, மேல் சபையில் நட்டக் கணக்கு வந்திருக்கிறது. 57,000 ரூபாய் நட்டம் என்றும், ஏன் என்று கேட்டதற்கு, பதிலளிக்கும்போது பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ரூ. 6,000 வாடகை கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் இந்த சூப்பர் மார்க்கெட்டுக்கு வாடகை ரூ. 6,000. இதில் எம். டி. வி. வி. பாங்கிற்குக் கொடுக்கப்படுகிறது,



1967 ஜூன் 29] [திரு. சொ. கோவிந்தராசன்]

ரூ. 5,000 மும், இரண்டு கோடவுன்களுக்கு ரூ. 500 வீதம் ரூ. 1,000 மும், ஆக ரூ. 6,000 ஆகிறது. அதிகச் செலவு ஆகிறது. வாடகையை எம்.டி. வி. வி. பாங்கு குறைத்துக் கொடுக்கலாம். அல்லது அந்த இடத்தை மாற்றிவிட்டு, குறைந்த வாடகையில் வேறு இடத்திற்குச் செல்லலாம். அப்படி வேறு இடம் குறைந்த வாடகையில் பிடித்தால் மதுரை சூப்பர் மார்க்கெட்டு லாபத்தில் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

இப்பொழுது மதுரை ஜில்லா கூட்டுறவு சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொசைடியிலிருந்தும், பழனி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடியிலிருந்தும் பல தொழிலாளிகள் வெளியேற்றப்படவேண்டும் என்று உத்தரவு வந்திருக்கிறது. அதற்குக் காரணம், அவர்களுக்குப் பயிற்சி இல்லாததால் அவர்களை வேலையிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று நிர்வாகஸ்தர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். பயிற்சி பெறாததற்குக் காரணம் தொழிலாளர்கள் அல்ல. தலைவரும், போர்டாரும் அவர்களைக் காலா காலத்தில் பயிற்சிக்கு அனுப்பாமல் நிறுத்தியதே காரணமாகும். இந்த ஏற்பாடு தொழிலாளர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை பார்த்துவிட்டு, அதன் பிறகு வேலையிலிருந்து நிறுத்துவது என்றால், அவர்களுடைய வாழ்க்கை கெட்டுவிடும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, அந்த நிர்வாகஸ்தர்களுக்குத் தகுந்த உத்தரவு போட வேண்டும். தொழிலாளர்களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களினால் லாபமில்லை என்று சொல்லும்போழுது திருச்சி, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், நீலகிரி, பொள்ளாச்சி போன்ற இடங்களில் லாரி உரிமையாளர்கள் "ஸ்பேர் பார்ட்ஸ்" கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து வருடந்தோறும் 60,000, 45,000 வீதம் லாபம் அடைவதுடன் லாரிக்காரர்களுக்கு நல்ல சாமான்களும் தருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது போல் பெட்ரோல், டீஸல் பம்பு நடத்த, புது வண்டிகள் வாங்கி இந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்த கூட்டுறவு முறையில் கடன் தரும்படி இந்தச் சமயத்தில் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

மேலும், சாதாரணமாக ஆடிட் ரிப்போர்ட்டுகளுக்குப் பதில் கொடுக்கும் பொழுது வேடிக்கையாயிருக்கும். அவர்கள் நாங்கள் இனிமேல் அவ்வாறு செய்வது இல்லை என்று தீர்மானத்தைப் போட்டிருப்பார்கள். இனிமேல் இவ்வாறு ஆடிட் ரிப்போர்ட்டில் கொடுக்கப்படும் குறைகளை இவ்வாறு போட்டுத் தப்பித்துக்கொள்ளாமல் கூட்டுறவுத் துறையிலுள்ள குறைகளைக் கடுமையான சட்டங்களின் மூலம் தடுக்கும்படி கனம் மந்திரி அவர்களை இது சமயம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மதுரை மத்திய தொகுதியைச் சேர்ந்த மாப்பாளையம், ஒத்தப்பட்டி, டீஉர் நகர், மேலவாசல், வைகை ஆற்று ஓரம், செல்லூர் போன்ற இடங்களில் ஏழைகளுக்கு 2 செண்டு வீதம் வீடு கட்ட ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டு அதன்படியும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் அவர்களுக்குக் கூட்டுறவு முறையில் வீடு கட்ட ஒத்தாசை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு பேச சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு நன்றியும், வணக்கத்தையும் கூறி அமைகிறேன்.

* **திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே என்னுடைய வெட்டுப் பிரேரணையின் மீது, கூட்டுறவுச் சங்கம் என்பது பற்றி எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் எல்லாம் தெளிவாக, விளக்கமாகக் கூறியதைக் காட்டிலும் நான் அதிகமாகக் குறையைக் கூற வேண்டிய அவசியமில்லை. குறிப்பாக இந்தக் கூட்டுறவு முறை கடந்த சுதந்திர காலத்திலிருந்து முறையாக அரசாங்கத்தால் நடைபெற்று வந்திருக்கிறது. இறுதியாக இதற்கு முன் ஆண்ட அரசாங்கத்தின் முறை காரணமாக முதலாளிகளை அதாவது ஜமீன்தார்கள் ஒழிந்துபோனாலும் கூட அவர்கள் பூஷ்வாக்கள் போலத் தான்

[திரு. கே. பி. எஸ். மணி] [1967 ஜூலை 20

இந்த கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளின் தலைமைப் பீடங்களாக விளங்கி வந்தன. இதிலே ஆதித் திராவிட மக்களும், பிற்பட்ட சமூகத்திலே இருக்கின்ற கீழ் மட்டத்திலே வேலை செய்கின்ற குடியானவர்களும் ஆகிய இவர்களில் எவருமே இல்லை யென்பது உண்மை. இதற்குக் காரணம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவரெல்லாம் பெரிய மிராஸ்தாரர்களும், பழைய நிலக்கிழார்களுமாக இருந்ததுதான். அதன் காரணமாகத்தான் இவர்கள் இதிலே ஒதுக்கப்பட்டு விட்டார்கள். சமுதாயத்தின் கடைசித் தளத்திலே அவர்கள் இப்பொழுது வாழ்கிறார்கள். அதே போல் பொருளாதார வளர்ச்சியிலும் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை, நாங்கள் இன்று சொல்லுகின்ற இந்தக் கோரிக்கையை இன்று ஆளும் கட்சியாக இருப்பவர்கள் இந்தத் தரப்பிலிருந்தபொழுது ஆட்சியாளருக்கு எடுத்துச் சொன்னார்கள். அதே நிலையில்தான், நீங்கள் சொன்னதை மனத்திற் கொண்டு ஜனநாயக முறையிலே இந்தச் சட்டங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு சீர்திருத்தினாலொழிய நல்ல முன்னேற்றத்தைக் காண முடியாது. நல்ல முன்னேற்றம் அடைய வேண்டுமானால் இந்தத் திருத்தத்தை இந்தச் சட்டத்தில் கொண்டு வந்தால்தான், எந்த மக்களை வாழ்விக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு வந்தீர்களோ அந்த மக்களுக்கு அது பயன்படும். மதிப்பிற்குரிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் செய்த திட்டங்கள் எல்லாம் யாரை வாழ்விக்க வேண்டுமென்று நினைத்தோமோ அவர்களை வாழ்விக்கவில்லை. பணக்காரர்கள் பெரிய பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள். முதலாளிகள் பெரிய முதலாளிகளாக ஆகியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இது 16 வருஷங்களுக்குப் பிறகுதான் அவருக்கே புரிந்திருக்கிறது. ஆகவேதான் அந்த முறையில் இந்தச் சட்டத்தின் அடிப்படையை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

என்னுடைய பஞ்சாயத்து யூனியனிலே வீடு கட்டும் சொஸைட்டி இருக்கிறது. 7,500 வரை ஒரே நபர் மோசடி செய்து விட்டார்கள். இன்னொரு நபர் மீது 3 கேஸ்கள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கேஸுக்கு நடவடிக்கை எடுக்க $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகிறது. அவர்கள் மீது சம்பந்தப்பட்ட கோவாப்பரேட்டிவ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். தயங்குகிறார்கள். இதற்குக் காரணம் தெரியவில்லை. சொஸைட்டி அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பூரண அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களிடமிருந்து உடனடியாக வசூல் செய்ய வேண்டிய, நிர்ப்பந்திக்கக்கூடிய அதிகாரத்தை ஒப்படைக்க அடிப்படையான மாற்றத்தைச் செய்ய வேண்டும்.

இந்தக் கூட்டுறவு சொஸைட்டி மூலம் உரம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த உர விநியோகம் செய்வதற்கு என்று கூட்டுறவு கம்பெனிகள் சர்க்காரோடு ஒப்பந்தம் செய்து காண்டிராக்ட் செய்துகொள்கிறார்கள். இதில் நடுவில் புரோக்கர் புகுந்து அதிகப் பணம் சம்பாதிக்கிறார்கள். இதேபோல்தான் ஸிம்கோ, டி. வி. எம். போன்ற கம்பெனிகள் நடக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களை இவர்கள் மொத்தமாக வாங்கி வைத்துக்கொண்டு, இப்படி நாட்டிலே நெருக்கடி வரும் காலத்தில் அதிக விலைக்கு விற்கிறார்கள்.

ஆகவே, இதை யெல்லாம் கவனித்து இந்தக் கூட்டுறவு சொஸைட்டி ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு இதன் பலன்கள் நேரடியாகக் கிடைக்கச் செய்ய உதவிகளை, வழிவகைகளைச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு வி. டி. அண்ணாமலை : பெருவணக்கத்திற்குரிய உதவி சபாநாயகரவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யத்தின் மீது இரண்டொரு வார்த்தைகள் கூறி என்னுடைய முழு ஆதரவையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு மான்யத்தில் தற்போது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறது. இந்



[திரு. வி. டி. அண்ணாமலை]

[1967 ஜூலை 20]

[illegible] கூட்டுறவு இயக்கம் ஆரம்பத்தில் 1904-இல் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டபொழுது கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று ஒரு பக்கத்தில் பெரு முதலாளிகள், பெரும் பணக்காரர்கள் சமூகத்திலே இருக்கின்ற மக்களைச் சுரண்டிக் கொண்டிருப்பதன் மூலம் அவர்கள் தவிக்கிறார்கள். அந்தக் காலத்திலே தமிழகத்திலே ஒப்பற்ற தலைவர்களாக இருந்த டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், மேடை தளவாய் குமாரசாமி முதலியார், ராவ் பகதூர் வி. ஏ. அருணாசல முதலியார், திவான் பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியார் ஆகிய இவர்களெல்லாம் தங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவழித்துக் கூட்டுறவு இயக்கத்தை நடத்தி அதன்மூலம் பெருமை தேடிக் கொண்டார்கள். ஆனால், சென்ற இருபது ஆண்டு காலமாகக் கூட்டுறவு இயக்கம் ஏதோ ஒரு காரணத்தினால், சூழ்நிலை காரணமாக, சில பெரியவர்களிடத்திலே சென்று அடைந்தது. அதன் காரணமாக, கூட்டுறவு இயக்கத்தை அவர்கள் சொந்த வீட்டு இயக்கமாக மாற்றி விட்டார்கள். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கொள்ளை அடிப்பதாக ஒருவர் சொன்னாரே அதைப்போல, கூட்டுறவு இயக்கத்தின் பணம் அவர்களுடைய சொந்த வாழ்க்கையின் உபயோகத்திற்கு உதவியது. அதன்மூலம் கூட்டுறவு நசித்தது. கூட்டுறவு இயக்கம் தூய்மையான இயக்கம். அதை வளர்க்க வேண்டும். Find Raiffeisan then there is Co-operation, என்ற முதுரை உண்டு. தன்னலமற்ற சேவை செய்யக்கூடிய, தியாகிகள் கூட்டுறவு இயக்கத்தில் இருந்தால், இந்த நேரத்தில் கூட, கூட்டுறவு இயக்கம் நல்ல பயனைக் கொடுக்கக்கூடும். ஆனால், சென்ற இருபது ஆண்டுகளாக இருந்த பெரிய பெரிய அதிகாரி, ரிஜிஸ்ட்ரார் போன்று இருக்கிறவர்கள், பணத்தைச் சம்பளமாகப் பெற்றார்களே தவிர, தாங்கள் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறிவிட்டார்கள். குற்றம் கண்டபோது அவர்களைத் தண்டித்திருக்க வேண்டும், ஆனால், செய்யவில்லை. அதை மன்னித்து விடுவோம். ஆனால், குற்றம் செய்தவர்களைத் திருத்தியாவது இருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை. மகா மோசமான குற்றம். ஆனால், கூட்டுறவு இயக்கத்தில் தவறு இழைத்தவர்களோடு கூடிக் குலாவினார்கள். எனவேதான், கூட்டுறவு இயக்கம் நசித்து, இந்த நேரத்தில் இவ்வளவு சீர்கேடு அடையும் நிலையில் ஆகிவிட்டது. கூட்டுறவு இயக்கம் நசித்தால் கிராம விவசாயிகளினுடைய வாழ்க்கையே பாழாகிவிடும். கிராம விவசாயிகளுக்கு நாம் எதைஎதையோ செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம். நம்முடைய முன்னாள் இந்தியப் பிரதமர், காலஞ்சென்ற உயர்திரு நேரு அவர்கள், கூட்டுறவு இயக்கம் மிக மிக முக்கியமானது, கிராமங்கள் செழிப்படைய வேண்டுமானால், கூட்டுறவு இயக்கம், பஞ்சாயத்து, இவைகளெல்லாம் தேவையானவை என்று கூறினார்கள். மாமேதை யெல்லாம் உயர்வாகக் கூறியிருக்கும் இந்த இயக்கத்தைப் பாழடையச் செய்யவைத்த அந்தப் பெருமை நம்முடைய தமிழகத்தில் காங்கிரஸ்காரர்களைத்தான் சேரும் என்பதை நான் மிக மிகத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சீர்கெட்டிருக்கும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நாமெல்லாம் சேர்ந்து, சீர்திருத்த வேண்டும். இந்த நேரத்திலாவது, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மற்றும் காங்கிரஸ் தோழர்களும் நமக்கு உறுதுணையாக இருந்தால், கூட்டுறவு இயக்கம் சீரடைய முடியும். அதன் மூலம் கிராமத்தில் இருக்கக்கூடிய உழவர் பெருமக்கள் வாழ்வில் நல்ல மலர்ச்சி காண முடியும்.

கிராமங்களில் யார் பணம் கொடுக்கிறார்கள்? லேவாதேவி சட்டப்படி கிராமங்களில் பணக்காரர்கள் பணம் கொடுப்பதில்லை. அங்கு பாங்குகள் இல்லை. கிராமங்களில் விவசாயம் பெருக வேண்டு மென்றால் வயலுக்குத் தண்ணீர் பாய்வதைப்போல் விவசாயிகளுக்குப் பணம் பாய வேண்டும். அப்பொழுதுதான் விவசாயத்தைச் செவ்வனே செய்ய அவர்களால் முடியும். அந்த நிலையில் விவசாயிக்குப் பணம் கொடுக்கக் கிராமத்தில் யார் இருக்கிறார்கள்? இவ்விருந்து கொண்டு, தமிழகத்திலிருக்கும் கிராமப் புறங்களில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களும் வெள்ளாமையைப் பெருக்குங்கள், உணவு உற்பத்தியை அபிவிருத்தி

[திரு. வி. டி. அண்ணாமலை] [1967 ஜூலை 20

செய்யுங்கள்" என்று சொல்லுவதனால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது. கிராம உழவர்களுக்குத் தேவையான பணம், உடலில் ஓடிக் கொண்டிருக்கிற ரத்தம் போல் பணம் அவர்களிடம் புழங்கிக் கொண்டிருக்க வேண்டும். இரத்த ஓட்டம் போல் பணம் இருந்தால்தானே விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியும்? விவசாயிகளிடம் பணம் புழங்கச் செய்தால், அவர்கள் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலையை இந்தப் பெருமன்றத்தில் இருக்கும் பெரியவர்கள் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விவசாயம் பெருக வேண்டுமானால், கூட்டுறவு இயக்கத்தை நாம் சீர்படுத்த வேண்டும். இந்த வகையில், தமிழகத்தில் உள்ள மத்திய கூட்டுறவு நில அடமான பாங்கு நமக்குப் பெரிய சேவை செய்து வருகிறது. மத்திய நில அடமான பாங்கு சென்னையிலே இருந்து கொண்டு பல கிளை அடைமான பாங்குகளை ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒன்றாக ஏற்படுத்தி இருக்கிறது. அது மட்டும் போதாது. உதாரணமாக, வந்தவாசி தாலூகாவில் 220 கிராமங்கள் இருக்கின்றன. என்றால், இன்னும் 20 கிராமங்களில் கூட்டுறவு நில அடமான பாங்கின் நிழல்கூடப் படவில்லை. தீண்டப்படாத கிராமங்களாக 20 கிராமங்கள் இருக்கின்றன. இத்தனை ஆண்டுகளாகியும், கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து 64 ஆண்டுகள் ஆகியும், கூட்டுறவு நில அடமான பாங்கின் சாயை அந்த 20 கிராமங்களில் படவில்லையென்றால், அதற்குக் காரணம் "ஏரியா ஆஃப் ஆபரேஷன்" என்று சொல்லுகிறோமே, அது அதிகம் என்றுதான் சொல்ல முடியும். பிர்க்காவிற்கு ஒரு பாங்கு அமைக்க வேண்டும். நில அடைமான பாங்கிலே இருக்கும் சிப்பந்திகளைப் பொறுத்த வரையில், அவர்களை "ப்ரொவின்ஷியலைஸேஷன் ஆப் தி ஸ்டாப்" என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். கூட்டுறவு நில அடைமான பாங்குகள் பழைய கடன்களைத் திருப்பிக் கட்டினால்தான், மேலும் கடன் கொடுக்கலாம் என்றும், கடனைத் திருப்பிக் கட்டாவிட்டால் கடன் கொடுக்கக் கூடாது என்றும் ரிசர்வ் பாங்கினர் கூறுகிறார்கள். கூட்டுறவு இயக்கம் வேறு; ரிசர்வ் பாங்கு வேறு. ரிசர்வ் பாங்கு நமக்கு வழிவகை சொல்லுவதில், கூட்டுறவு இயக்கத்தை அனுசரித்துத்தான் சொல்ல வேண்டும். பிரதம நில அடைமான பாங்குகள், விவசாயிகள் கோருகிற கடன்களை முன் கடன்களைத் தீர்ப்பதற்காக இருந்தாலும்—கொடுத்தால்தான் அவர்கள் மனம் தூய்மை அடையும். அவர்கள் மனம் தூய்மை அடைந்தால் வாழ்க்கை இன்பம் அடையும். பிறகு அவர்கள் நிம்மதியாக விவசாயம் செய்து, நிலத்திலே உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முடியும். முன்கடன் அவசியம் தீர்க்கப்பட வேண்டும். எந்தக் காரணத்திற்காக ஏற்பட்ட கடனாக இருந்தாலும், பிரதம நில அடைமான பாங்கு அதைக் கொடுக்க வேண்டும். எந்தக் காரணத்திற்காகக் கடன் கேட்டாலும் அதைக் கொடுக்க வேண்டும் என்ற வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களையும் தமிழக சர்க்காரையும் கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை முழுமனதோடு ஆதரித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திருமதி கே. பி. ஜானகியம்மாள்: உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடிய முக்கியமான சில விஷயங்களைக் கூறுவது என்னுடைய நோக்கமாகும். எனக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடிய பல விஷயங்களை இங்கே கூறியிருக்கிறார்கள். தற்போது இருக்கக்கூடிய கூட்டுறவு முறை எப்படியிருக்கிற தென்றால், தமிழகத்திலே செல்வாக்குப் படைத்தவர்களின் கையில் கூட்டுறவு இயக்கமும், கூட்டுறவுச் சங்கங்களும், இருக்கின்றன. அதன் காரணமாக, பொதுவாக யார் யார் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நன்மை அடைய வேண்டுமோ அந்த நன்மை அவர்களுக்குக் கிடைக்காத நிலைமை இருக்கிறது என்பதை இங்கே கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

கூட்டுறவு சங்கம் என்று சொல்லும்போது, ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிக்குப் பணம் கடன் கொடுக்கக் கூடிய, அல்லது உரம் கொடுக்கக் கூடிய பல சொஸைட்டிகள் இருக்கின்றன. அதேபோல், பால் சொஸைட்டி



1967 ஜூலை 20] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

யும் இருக்கிறது. இப்படிப்பட்டவைகளெல்லாம் கிராமப் புறங்களில் பெரிய தலைப் பிரமுகர்கள் அல்லது அரசியல் கட்சிகளில் இருக்கக்கூடிய பெரிய செல்வாக்கு வாய்ந்தவர்கள், இப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்தில் இருப்பதன் காரணமாக, கடன் பணமோ, உரமோ சாதாரணமாக அவர்களுடைய செல்வாக்கின்கீழ் இருப்பவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கிறது. பொதுவாக, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய சகலருக்கும் அது கிடைக்கவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

உண்மையாக, ஒரு கிராமத்தில் ஐம்பதாயிரம் ரூபாய் ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு லோன் கிடைக்கிற தென்றால், அந்தச் சங்கத்தின் தலைவர், தன்னுடைய செல்வாக்கின்கீழ், தன்னுடைய குடும்பத்திலிருக்கும் 25, 30 பேர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் என்று எடுத்துக் கொண்டு எல்லா மெம்பர்களுக்கும் கொடுத்ததாகக் கணக்கு எழுதி வைத்திருப்பதையும் பார்க்கிறோம். அந்த முறைகளையெல்லாம் மாற்றி, யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ, அவர்கள் அந்தப் பலனை அடையக்கூடிய முறையில் விதி முறைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறித் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இன்றைக்குக் கைத்தறித் தொழிலாளர்கள் சங்கம் என்று சொல்லும்போது, சாதாரணமாக, பத்து ரூபாய் கொடுத்து ஷேர் எடுத்து, எல்லோருமாகச் சேர்ந்து அந்த சங்கத்தை ஆரம்பிக்கிறார்கள். கடைசியில் ஒவ்வொரு ஆண்டிலும் அந்தப் பங்கிற்கான லாபமும் சேர்ந்து, அவர்களுடைய பங்குத் தொகை ஏறிக் கொண்டே வருகிறது. அந்தக் கைத்தறி சொஸைட்டியிலே ஏதாவது லஞ்சம் வாங்கினதாகவோ அல்லது வேறு நிர்வாகத்தில் ஊழல் ஏற்பட்டதன் காரணமாகவோ அந்தக் சங்கம் கலைக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டால், பத்து ரூபாய் பங்கு போட்ட அந்தச் சாதாரணத் தொழிலாளி, தன்னுடைய உழைப்பின் காரணமாக அந்தத் தொகையை பல வருஷங்களில் உயரச் செய்திருக்கக் கூடும். 100 அல்லது 200 அல்லது 300 ரூபாய் என்ற அளவிற்கு அந்தப் பங்குத் தொகை விஸ்தரித்திருந்தால், அந்தப் பங்குத் தொகை அவருக்குக் கிடைக்கக்கூடிய நிலை இருக்க வேண்டும். ஆனால், அப்படிக் கிடைக்காத நிலையும் ஏற்படுகிறது. அந்த சொஸைட்டி ஏற்பட்ட நாளிலிருந்து, அதை நிர்வாகம் செய்ததன் காரணமாகவோ அல்லது வேறு காரணமாகவோ அந்த சொஸைட்டி கலைக்கப்படக்கூடிய நிலையில், அந்தத் தொழிலாளியின் சிறு சேமிப்பாகச் சேர்ந்த அந்தப் பெருந்தொகை பறிமுதல் செய்யப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அப்படி வரக்கூடிய நேரத்தில், சாதாரண அந்தக் கைத்தறித் தொழிலாளர்களுடைய சேமிப்பு நிதி பாதிக்கப்படாத நிலைமையில் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு, கூட்டுறவு சம்பந்தமான விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.

கடன் பணம் கொடுக்கக்கூடிய நேரத்தில் ஏற்படும் ஊழலைத் தடுக்க வேண்டும் என்றால், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, நகரப் புறங்களில் உணவுப் பொருட்களுக்கு ரேஷன் கார்டு கொடுத்திருப்பதைப் போல, கொடுக்க வேண்டும். அரிசி, சர்க்கரை, கோதுமை, என்று இப்படிப் பல கட்டங்கள் அந்தக் கார்டில் இருப்பதைப் போல, விவசாயிகளைப் பொறுத்தும், கொடுக்கப்படக்கூடிய கார்டில், பல கட்டங்கள் இருக்க வேண்டும். விவசாயி ஒவ்வொருவருக்கும் எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது என்று கணக்கு எடுத்து, நிலத்தின் பரப்பிற்குத் தகுந்தாற்போல், எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்கலாம், எவ்வளவு உரம் கொடுக்கலாம் என்பதையெல்லாம் வரையறுத்துக் கார்டு கொடுத்து விட்டால், அவ்வப்போது வரக்கூடிய உரம், கடன் தொகை இவையெல்லாம் தவறாமல் கிடைக்க உத்தரவாதம் ஏற்பட்டுவிடும். சொஸைட்டிகளில் வரக்கூடிய பொருள்களையும் பணத்தையும் ஊதாரித்தனமாகவோ, ஊழல்

[திருமதி கே. வி. [illegible]] [1967 [illegible]

களுக்கு இடம் கொடுக்கக்கூடிய முறையிலோ தவறு செய்ய முடியாமல் தடுப்பதற்கும் வகை செய்யும். அம்மாதிரி செய்வதுபற்றிய ஆலோசனையையும் நான் இந்த அரசுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

அதேமாதிரி இந்த நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஊழல்களைத் தடுப்பதற்கு நான் சில யோசனைகளைக் கூறுகிறேன். ஒருமுறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அடுத்த ஐந்து வருஷம், ஏழு வருஷம் போனாலும் —அடுத்த தலைவராக அவர்கள் இருக்கக் கூடாது. இந்த முறையைக் கடைப் பிடித்தால் அடுத்த தடவை இந்த ஊழல்களைக் குறைக்க முடியும். அதேமாதிரியாக சொஸைட்டிகள் அதிகப்படியாக வந்துவிட்டது என்று சொன்னால், அவைகளிலுள்ள ஊழல்களைக் கண்டுபிடித்து அவர்கள் ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. சொஸைட்டிகளின் தலைவராக வரக்கூடியவர்களுக்குச் சொத்து இருக்க வேண்டும். அப்படிச் சொத்து இருப்பவர்கள்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலை இருந்தால், அவர்கள்மீது வரக்கூடிய குற்றச்சாட்டுகளுக்கு, ஊழல்களுக்கு —அங்கே நடக்கக்கூடிய ஊதாரித்தனத்திற்கு எல்லாம் நடவடிக்கை எடுத்து, அந்த நஷ்டத்தைச் சொத்திலிருந்து பறிமுதல் செய்ய வேண்டுமென்று விதி இருக்க வேண்டும். அப்படி விதிமுறைகள் இருந்தால், நிர்வாகத்திலுள்ளவர்களுக்குப் பயமும் பீதியும் ஏற்படும். அதன் மூலமாகத் தவறுகளைத் தடுத்து நிறுத்த முடியும். இதனால் கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கு வழி ஏற்படும்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது. நூல் கொடுப்பதற்கு மாநில சொஸைட்டிகளின் மூலமாக நல்ல முறையில் ஏற்பாடு செய்வது, துணித் தேக்கங்கள் ஏற்படுகின்ற நேரத்தில் மாநில சர்க்காரே இந்த மாநிலத்தின் ஸ்டாக்கைத் கொள்முதல் செய்து அரசாங்கத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நெருக்கடியைத் தவிர்ப்பது—போன்ற காரியங்களில் உதவி செய்ய வேண்டும். மில்களிலிருந்து நேரடியாக சொஸைட்டிகளுக்கு நூல் கிடைப்பதிலுள்ள சிக்கலைத் தவிர்த்து, நூல் எளிதில் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது நூல் ஏஜண்டுகளின் மூலமாகவே நெசவாளர்களுக்குக் கிடைக்கிறது. அதனால் பணச் செலவும் ஏற்படுகிறது. நூலின் விலையும் ஏறி, துணியின் விலையும் ஏறுகிறது. ஆகவே, மில்லில் தயாராகும் நூல் நேரடியாக சொஸைட்டிகள் வாங்குவதற்கு உதவி செய்வது, நெசவாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதனை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. இராசரத்தினம் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தை ஆதரித்து நான் பேச முன் வருகிறேன்.

இங்கே இந்தக் கூட்டுறவிலே இருக்கின்ற குறைபாடுகள் உடலிலே பெரிய நோயாக இருக்கின்ற புற்றுநோயாக பரவியிருக்கிறது. இந்தப் புற்று நோயைத் தவிர்க்க என்ன வழி என்றால் அறுவைச் சிகிச்சையாலும் முடியாது. 20 ஆண்டுக் காலமாக இது புற்றாக வளர்ந்து கொண்டே போய் இருக்கிறது என்பதற்குக் காரணம், அங்கு நடைபெறுகின்ற தேர்தல் முறை, முறையாக இல்லை. தேர்தல் 3 ஆண்டுக்கு இருந்து, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், மூன்றிலே ஒரு சத விகிதத்தினர் போய், மற்ற இரண்டு சத விகிதத்தினர் உள்ளே இருக்கிறார்கள். புதிதாக வருபவர்களும், பெருவாரியாக உள்ளே இருப்பவர்களுடைய எண்ணங்களுக்கு மாறாக நடக்காதபடி, உள்ளே இருப்பவர்கள் மாற்றிவிடுகின்றார்கள். "பை லா" வை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள். ஸ்ரீபெரும்பூதூரிலே கூட்டுறவுச் சங்கம் இருக்கிறதென்றால், அந்தச் சங்கத் தேர்தல் ஒரே இடத்திலேதான் இருக்க வேண்டுமென்று அவர்களே பை லாவை மாற்றியமைத்துக் கொள்கின்ற சௌகரியம் இருக்கிறது. அந்தக் காரணத்தினால் தொடர்ச்சியாக பல தவறுகள் மீண்டும் [illegible]



[திரு. டி. இராசரத்தினம்]

[illegible] குறிப்பாக, ஸ்ரீபெரும்புதூர் மார்க்கெட்டிங் [illegible] 15,[illegible] ரூபாயும், 1957-58ல் 27,915 ரூபாயும், [illegible] 1959-60-ல் 12,392 ரூபாயும்—இப்படி 1964-65-ல் 20,[illegible] ரூபாயும், [illegible] கணக்கைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இதற்கு தொடர்ச்சியாக நஷ்டம் [illegible] பார்க்கிறபோது, ஒரு ஆடிட்டரைப் போட்டு, ஆடிட் [illegible] ரிபோர்ட் [illegible] சொல்கிறார்களே, என்றால் ஆடிட் பிரகாரம் அங்கு பரிசீலனை செய்வதைச் [illegible] 27—3—1967 அன்று ஸ்ரீபெரும்புதூரில் [illegible] இருக்கின்ற தலைவர் சேஷாசாரியார், [illegible] வந்தபொழுது அங்கே [illegible] ஆண்டுக்கான தஸ்தாவேஜு ஒன்றுமகூட இல்லை [illegible] 1966-67ம் ஆண்டுக்கான [illegible] 31—3—1967 அன்று புகார் கொடுத்தார் [illegible] போலீஸ் ஸ்டேஷனில் [illegible] ஆடிட்டர் ஆடிட் செய்திருந்தும் இதுவரையிலும் [illegible] 41 குற்றச்சாட்டுகளை [illegible] எடுக்கப்படவில்லை. அவர்கள் [illegible] இரண்டுமாத காலமாக எந்த நடவடிக்கைகளும் [illegible] என்ற அளவில் இருக்கிறது. [illegible] ஏதோ பெரிய சதி செய்கிறார்கள் [illegible] இருப்பவர்கள் தொடர்ச்சியாக [illegible] முன்னைப்போலவே நிர்வாகத்தில் [illegible] கொண்டே போகிறது. கூட் [illegible] செய்வதால் தொல்லைகள் வளர்ந்து [illegible] நிலையை ஏற்படுத்தித் தர [illegible] மூலமாக நல்லதொரு [illegible] கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக செங் [illegible] வேண்டுமென்று இந்த அரசைக் [illegible] நவம்பர் மாதம் 3ம் தேதி அடித்த [illegible] மாவட்டத்திலே 1966ம் ஆண்டு [illegible] கொடுக்கப்பட்டிருக்கிற கடன், விவசாயி [illegible] விவசாயிகளுக்கு அங்கு [illegible] பயன் அளிக்கவில்லை. மதுராந்தகம் ஏரிகள் [illegible] அங்கு நல்லபடியாகப் [illegible] உள்ள விவசாயிகளுக்கும் கொடுத்திருக்கும் [illegible] பட்டிருப்பதால் அங்கு [illegible] தவணைக் கடனாக மாற்றித் தர வேண்டுமென்று [illegible] காலக் கடன் [illegible] என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. ஜீ. [illegible] :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மேல் [illegible] வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும்படியான [illegible] —எனக்கே சந்தேகம்—நான் பேசுவதை யெல்லாம் அந்தக் கட்சி [illegible] இருப்பவர்கள்தான் குற்றம் [illegible] பேசிவிட்டார்கள். எதிர்க் கட்சியில் [illegible] அவர்கள் பேசுவதும், நாங்கள் சொல்வார்கள். கொஞ்சநாள் போனால் [illegible] அங்கத்தினர் டி. இராச [illegible] பேசுவதும் [illegible]. ஸ்ரீபெரும்புதூர் [illegible] இது புற்றுநோய் போல் வளர்ந்து [illegible] அவர்கள் பேசும்போது, [illegible] டாக்டர் அவர்களிடத்தில் [illegible] என்று சொன்னார்கள். இப்போது [illegible] அந்த நோயை செவ்வனே [illegible] தான் இருக்கிறார்கள். நல்ல முறையில் [illegible] துணைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக் [illegible] என்பதைத் [illegible] இந்தக் கூட்டுறவு இயக்கத்தை பொறுத்த [illegible] கொள்ளுகிறேன். ஆனால் [illegible] தேசத்திலே—நமது சென்னை மாகாணத்தைப் [illegible] மட்டிலும்—நமது பாரத [illegible] வளர்ந்து வேறு எந்த [illegible] போலவே சிறப்பாக நல்ல முறையில் [illegible] நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த [illegible] மாநிலத்திலேயும் இல்லை. [illegible] எல்லா மாகாணத்திற்கும் சென்று வந்திருக்கி [illegible] சமயத்தில் அநேகமாக [illegible] குறிப்பிட்டதைப்போல் மறைந்த [illegible] றேன். நம்முடைய அங்கத்தினர் [illegible] நம் மாநிலத்தைப்பற்றிச் [illegible] தலைவர் [illegible] நேருஜி அவர்கள் [illegible] சிறப்பாக இந்தக் கூட்டுறவுச் சங்கம் [illegible] சொன்னதைக் குறிப்பிட்டார்கள். [illegible] வேண்டும். மக்களுக்காகப் பணி [illegible] மேலும் சிறந்த முறையில் நடத்தப்பட [illegible] நல்லதொரு பணியைச் செய்ய [illegible] புரியும் வகையிலே, விவசாய மக்களுக்காக [illegible] வேண்டும். தவறுகள் ஏன் ஏற் [illegible] வேண்டுமென்ற முறையிலே இது அமைய [illegible] என்பதை ஆராய்ந்து பார்த்தால் நன்கு [illegible] படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன [illegible] பார்த்து, நாம் நடக்கும் முறையைப் [illegible] தெரிய வரும். நம்முடைய தரத்தைப் [illegible] பார்த்துத்தான் குற்றங்கள்—தவறு [illegible] பார்த்து, நம் அதிகாரிகளின் போக்கைப் [illegible] இந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முக்கிய [illegible] கள் ஏற்படுகின்றன. அத்துடன் [illegible] "All for [illegible] for all" எல்லாம் ஒவ்வொருவருக்கும் [illegible] நோக்கம். [illegible] என்ற தத்துவம் தான் இதில் அடங்கி [illegible] —ஒவ்வொன்றும் எல்லோருக்கும் [illegible] நம்முடைய கடமை என்று கொள்ள [illegible] யிருக்கிறது. இந்தத் தத்துவத்தை [illegible] இதில் பங்கு இருக்கிறது. இதிலே கூட்டுறவைப் [illegible] வேண்டும். சர்க்காருக்கும் [illegible] காரணமாக, பலவிதமான முறையில் [illegible] பற்றி, அதிகமாகக் குறிப்பிட்டுள்ளதன் [illegible] சீக்கிரமாகக் கடனை அடைப்பதற்கு [illegible] கடன் கொடுத்து, குறித்த காலத்தில் [illegible] அடைப்பதற்கு வழி இல்லை. மக்க [illegible] வழி இல்லை. அதை மீண்டும் [illegible]

விடத்திலே துரதிர்ஷ்டவசமாக ஒரு பழக்கம் இருந்து வருகிறது. கடன் வாங்கினால் திருப்பிக் கொடுக்கக் கூடாது என்ற நிலைமைதான் அது. சர்க் காருக்கே அந்த நிலை வந்திருக்கும் போது தனிப்பட்ட மனிதர்களுக்கு அந்த எண்ணம் வருவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

பி. ப. 5-00 நமக்கே கடனுக்கு வட்டி கேட்கக் கூடாது என்கிற மனப்போக்கு இருக்கிறபோது அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த மனப்போக்கு மாற வேண்டும். நம் எல்லோருக்குமே வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுகிற மனப்பான்மை வளர வேண்டும். நம்மிடத்தில் இருப்பதை டெபாசிட் போட வேண்டுமென்ற மனப்பான்மை வளர வேண்டும்.

இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் ஸ்மால் க்ரெடிட் சொஸைட்டிகள் எல்லாம் ஒன்ருக இணைக்கப்பட்டு வயபிள் சொஸைடி 3 ஆக ஏற்படுத்தப்பட்டிருப்பது தெரியும். இப்படி இணைப்பது நல்ல பயனைத் தருமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லா இடங் களிலும் தவறு ஏற்பட்டு வருவதாக இப்பொழுது சொல்லுகிறோம். சில சொஸைட்டிகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன என்பதையும் ஒப்புக் கொள்ளுகிறோம். தவறு இல்லாத சொஸைடி ஒன்று, தவறு நடக்கும்படி யான சொஸைடியோடு இணையும்போது அவர்களும் சேர்ந்து தவறு செய் யும்படியான வேண்டாத நிலைமைதான் உருவாகும். 11,000 க்ரெடிட் சொஸைடிகளுக்குப் பதிலாக தனித்து இயங்கக் கூடிய 6,300 சொ ஸைடிகளாக மாற்ற திட்டம் போட்டிருக்கிருர்கள். கடன் வழங்கு யூனியன் களுடன் இணைந்த 507 சங்கங்களை மூடிவிட்டு, 150 கடன் வழங்கு யூனியன் களைக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்க இருக்கிருர்கள். இப்படி இன் னும் அதிகமாக விரிவுபடுத்தி மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் படியான சந்தர்ப்பம் கிடைக்கும்.

இன்னொரு விஷயம், ரிசர்வ் பாங்க் சர்க்கார் நிதியையும், சொஸைடி நிதியையும் கட்டுப்படுத்தும்படியான நிலைமையில் தொந்தரவாகவும், இடைஞ்சலாகவும் தான் இருக்கிருர்கள். ரிசர்வ் பாங்க் கொடுக்கிற கடன் வசதிகளைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கத்தை நன்ருக வளர்க்க நமக்கு சௌகரியமிருக்கும். ரிசர்வ் பாங்கைப் பொறுத்த வரையில் வட்டி விகித நிபந்தனை அதிகமாக இருக்கிறது. அதனுல் பொதுமக்களுக்குக் கிடைக்கும்படியான வசதிகள் குறைகின்றன. நம் சர்க்கார் மத்திய சர்க்கா ரை அணுகி, ரிசர்வ் பாங்குடன் பேசி வேண்டிய தாராளமான பணவசதி களை, நிதி உதவியைப் பெற்றுல்தான் நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு விவசாயிகளுக்குக் கொடுக்கும்படியான கடன்கள் காலா காலத்தில், குறிப்பிட்ட நேரத்தில் கிடைத்தால் தான் நன்ருக இருக்கும். துறிப்பாக உர விநியோகம் பண்ணும்படியான திட்டம் இருக்கிறது. சென்ற வருஷத்தில் ஒன்னரை கோடி ரூபாய்க்கு உரம் அமோனியம் சல்பேட் கொடுத்ததாகவும், இந்த வருஷத்தில் விவசாயிகளுக்கு சுறுசுறுப்பாக வேண்டிய பல உதவிகளைச் செய்ய சர்க்கார் முன் வருகிறது என்று சொல்லுகிற நேரத்தில் ஒரு கோடி ரூபாய்க்குக் கொடுக்கப் போவதாகவும் குறிப்பில் காணப்படுகிறது. போன வருஷம் ஒன்னரை கோடி ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறபோது, இவ்வாண்டு 50 லட்சம் குறை வாகக் கொடுக்க இருக்கிற நாம் விவசாயிகளிடத்தில் அக்கறை கொண்ட வர்களாகவா இருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதில் இன்னொரு விஷயம். நான் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்தேன். அங்கெல்லாம் கூட்டுறவுத் தன்மையில் தான் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ரிவால்விங் சொஸைடி என்பதாக சொஸைடியில் உள்ள விவசாயிகளுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. பத்தில் ஒரு பங்குகூட அரசாங்கத் திடமிருந்து மானியம் பெறும்படியான நிலைமையில் நடைபெறவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுடைய விளைபொருள்களை எல்லாம் அவர்கள் சொஸைடி மூலமாக விற்பனை செய்கிறார்கள். சொஸைடிகள் மூலமாக விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு வேண்டிய பண்ட உதவிகள், உரங்கள் இன்னும் அவர்களுடைய குடும்பச் செலவிற் காகக் கூடப் பண உதவி எல்லாம் அளிக்கப்படுகிறது. விளை பொருள்களைக் கொண்டுவந்தவுடன், அவற்றை மார்கெட் நிலவரப்படி வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு வழங்கியுள்ள தொகை போக பாக்கியை அவர்கள் கணக்கிலேயே வரவு வைத்து அவர்களை ஊக்குவித்து வருகிறார்கள். அதைப்போல பரீட்சார்த்தமாகவாவது ரிவால்விங் சொஸைடியை ஒன்றிரண்டு இடத்தில் வைத்தால் அதன்மூலம் இந்த இயக்கத்திற்கே ஒரு புது வலுவை, சக்தியை நாம் ஏற்படுத்தலாம்.

எற்கனவே நான் சொன்னமாதிரி குறைகள், புகார்கள் இருந்தாலும் அவைகளை எல்லாம் வெகு வேகமாகக் களைந்து எவ்வளவுக்கெவ்வளவு கூட்டுறவு இயக்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை உண்டாகச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு இந்த இயக்கம் நல்ல வெற்றி பெறும். இப்போது இருப்பதைவிட பத்துப் பங்கு முன்னேற்றம் அடையும், நிறைய ரிசர்வ் பாங்கிடமிருந்து பணம் பெற்றுத் தந்தால் தான் இந்தச் சங்கங்கள் விவசாயிகளுக்கு எல்லா வசதிகளையும் தரக் கூடியனவாக அமையும் என்று சொல்லி, நண்பர் சித்தன் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. கெ. மாதவன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது நல்ல ஆலோசனைகளையும், சிறந்த கருத்துக் களையும் நிர்வாகத்தில் உள்ள தவறுகள் திருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் கூறிய மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு நான் என் நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் அவசியம், அப்படிப்பட்ட கொள்கை நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்குத் தேவை என்பதை எல்லா அங்கத்தினர் களும் ஒப்புக் கொண்டு பேசியிருப்பது பாராட்டுவதற்குரியது, வரவேற்கக் கூடிய செய்தியாகும். இப்படிப்பட்ட இயக்கம் தொடர்ந்து இந்த நாட்டில் வளர்க்கப்பட்டு வந்தாலும், ஓரளவு அரசாங்கத்தால் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்தாலும் எல்லோரும் போற்றக்கூடிய அளவு இந்த இயக்கம் அமையவில்லை என்ற குற்றச் சாட்டு அதிகமாகக் கூறப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நம் நாட்டில் இந்த இயக்கத்தின் தாத்பரியத்தை உணர்ந்து எல்லோரும் இதில் கலந்து கொண்டு இந்த இயக்கத்தை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் இன்னும் அதிகமாக பரப்பப்பட வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் எண்ணமாகும். அதற்காக கனம் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும். குற்றம் சொல்வதை அரசாங்கம் பரிசீலிக்கக் காத்து இருக்கிறது. அதே சமயத்தில் குற்றங்களைக் களைவது எப்படி என்பதை கனம் அங்கத்தினர் கள் எல்லோரும் சேர்ந்து ஆலோசித்து முடிவு கூறுவதோடு, இந்த இயக்கத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்வது மிகவும் அவசியம் என்பதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த இயக்கத்தில் போதுமான அளவு வளர்ச்சி இல்லை. அதை வளர்க்க வேண்டு மென்பதில் எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டுமென்பது எங்கள் கருத்தாகும். ஆனால் இதுவரை இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நேரிட்டபோது அதை எந்த அளவுக்குத் தடுக்க ஆட்சி யாளர்கள் முயன்றார்கள் என்று பார்க்க வேண்டும். அதுதான் இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்கிறது.

[திரு. செ. மாதவன்] [1967 ஜூன் 20]

இந்த அரசாங்கம் புதுமையான கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் கொள்கை அளவில் வளர்க்கப்பட வேண்டுமென்றாலும் இந்த இயக்கம் தனிப்பட்டவர்களுக்காக, ஒரு சில [illegible] என்ற நிலைமை மாறி தவறுகள் எப்போது ஏற்படுகிறதோ, [illegible] அங்கெல்லாம் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் எண்ணமாகும். பொதுவாக, அதிகாரிகளைப்பற்றிச் சொன்னாலும், ஆட்சியாளர்கள் எப்படியோ அப்படித்தான் அதிகாரிகள், இன்றைக்கு ஆட்சி மாறியிருக்கிறது. இன்றைக்கு அமைச்சர்கள் தங்களுடைய கருத்தை, அரசாங்கத்தின் கருத்தை திட்டவட்டமாகக் கூறி வருகிறார்கள். நாங்கள் வகுத்துக் கொடுக்கிற கொள்கையை அதிகாரிகள் மிகச் சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

கனம் உறுப்பினர்கள் எங்காவது குறிப்பிட்டு யாராவது தவறு செய்து இருந்தால் அதைப்பற்றிச் சொன்னால் இந்த அரசாங்கம் அதன் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள [illegible] தயங்காது. அதிகாரிகளை ஆதரித்துப் பேசவேண்டுமென்ற சரித்திரம் எங்களுடைய ஆட்சியிலே இருக்காது. ஆட்சி என்பது, அமைச்சரவை என்பது கொள்கையை வகுக்கின்ற நேரத்தில் கொள்கையை நிறைவேற்றக்கூடிய ஆங்காங்கு இருக்கின்ற அரசாங்க இயந்திரம் எங்கு தவறு செய்தாலும் அதைச் சுட்டிக்காட்டக்கூடிய கடமை இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்திலெல்லாம் அதை ஏற்று அரசாங்கம் கவனிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாகக் கூட்டுறவு இயக்கம். விவசாயிகளுக்கு அதிகமாகப் பயன் படவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பமாகும். அவர்களுக்கு அதிகக் கடன் வசதிகளைக் கொடுத்து விவசாயம் நல்ல முறையிலே பெருகுவதற்கு ஏற்ற முறையிலே கடன்களைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் கருத்தாகும். அரசாங்கமே கடன் கேட்கிறது. வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்களே என்றெல்லாம் சொன்னார்கள். விவசாயிகள் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்க உரிமை இருக்கிறதா என்றால் உரிமை உண்டு. கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர் என்ற முறையில் அல்ல, தனிப்பட்ட மாநில அரசுக்கு மத்திய அரசாங்கத்தைக் கேட்கின்ற உரிமை இருக்கிறது. விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய கடன்கள் எல்லாம் திருப்பிச் செலுத்தமுடியாத நிலை சில சமயங்களிலே ஏற்படுகிறது. புயல் ஏற்படுகிறது ; பஞ்சம் ஏற்படுகிறது ; சாவியாகப் போகின்றது பயிர் ; இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அது அரசாங்கத்தினுடைய கடனாக இருந்தால் அவ்வப்பொழுது அதன்மேல் உத்தரவு பிறப்பிக்கிறோம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்ற கடன்களைப் பொறுத்தவரையில் கஷ்டமான நிலை இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், ரிசர்வ் வங்கி இருக்கிறது, கடன் கொடுக்கக்கூடிய முறைகள், கடன் கொடுப்பதிலே அது போடுகின்ற கட்டுத்திட்டங்கள் இவற்றையெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொல்வது ஓரளவுக்கு உண்மை. ஏன் அப்படிப்பட்ட கட்டுத்திட்டங்களை ரிசர்வ் வங்கி போடத் தொடங்கியது என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இருபது ஆண்டுகளாக கூட்டுறவு இயக்கங்கள் எப்படி எப்படி நடந்தன, என்ன என்ன சிக்கல்கள் ஏற்பட்டன, அதையெல்லாம் மாற்றுவதற்கு எப்படிப்பட்ட புதிய சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன என்பதைப் பார்க்கவேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் பாக்கி இருக்கக்கூடிய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கக்கூடாது என்ற நிலையில் தான் அப்படிப்பட்ட கட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ரிசர்வ் வங்கியினிடத்தில் இந்த அரசாங்கத்தினுடைய சார்பிலே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. சில வங்கிகளிலே சில பேர்கள் கடன் கொடுக்காத



1967 ஜூன் 20] [திரு. செ. மாதவன்]

விவசாயிகள் கடன் பெறமுடியாமல் காரணத்தாலே பெரும்பான்மையான இருப்பது நல்ல நிலைமையல்ல என்பதை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். கணக்குப் பார்க்கும்போது ஒரு சங்கத்திலே பாக்கியிருக்கக் கூடிய தொகை அதிகமானாலும் அதைக் கொடுக்கவேண்டிய நபர்களை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால், கடன் ஒழுங்காகச் செலுத்தக் கூடியவர்கள் அதிகம். இதைப்பற்றியும் ரிசர்வ் வங்கியினிடத்திலும் மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த அதிகாரியினிடத்திலும் நாம் வலியுறுத்தியிருக்கிறோம். கூடிய விரைவிலே அதைப்பற்றி ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும். கொடுக்கக்கூடிய கடன்களை விரைவிலே எளிதிலே கொடுத்தால்தான் அதனால் பயன் உண்டு என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அது நல்ல கருத்து. அது பரிசீலிக்கப்படவேண்டிய கருத்து. இதற்குக் காரணம் விதிமுறைகளிலே உள்ள கோளாறு ? விதிமுறைகளிலே எப்படி,– எப்படி இருக்கின்றனவென்பதையும், காலதாமதம் ஏற்படுவதற்கு அதுதான் காரணமா, வேறு என்ன காரணம் என்பதையும், பரிசீலிக்கும்படி யோசனை கேட்கப்பட்டிருக்கிறது. எப்படி மாற்றியமைத்தால் எளிதாக விவசாயிகளுக்கு உடனடியாக கடன் கிடைக்கும் என்பதையெல்லாம் பரிசீலித்து, விதிமுறைகள் காரணமா, நடத்துகின்ற நிர்வாகம் காரணமா என்பதையெல்லாம் பரிசீலித்து அதைச் செய்வதற்கு முயற்சித்து வருகிறோம்.

கணக்கு ஆய்வு முறைகளிலே ஆடிட் சிஸ்டத்திலே இருக்கக்கூடிய குறைகள் காரணமாக பெரும்பான்மையான கூட்டுறவு இயக்கங்கள் மோசமான நிலைக்குப் போகக்கூடிய நிலை உருவாகிவிடுகிறது என்ற கருத்துச் சொல்லப்பட்டது. அந்தக் கருத்தும் ஓரளவு உண்மையானதுதான். அதையும் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் முக்கியமாகக் கருதி பரிசீலித்து வருகிறது. ஆடிட் சிஸ்டம் ஒரு தனி விங் ஆக இருந்து, தனிப் பிரிவாக இருந்து ஏ. ஜி. அலுவலகத்திலிருந்து, மத்திய சர்க்கார் நிர்வாகத்திலிருந்து ஒருவரை சீப் ஆடிட்டராகப் போட்டு நிர்வாகம் நடந்து வருகிறது. ஆனாலும், இந்தக் கணக்கு ஆய்வு விரைவிலே நடத்தப்பட முடியவில்லை என்ற கருத்து இருக்கிறது, அதையும் அரசாங்கம் பரிசீலித்தது. அரசாங்கம் ஐந்து லட்சத்திற்கு மேலே கடன் கொடுத்து இருந்து அப்படிப்பட்ட நிறுவனங்கள், கூட்றவு அமைப்புக்கள் இருந்தால் அப்படிப்பட்ட அமைப்புகளைப் பொறுத்த அளவில் நாம் நம்முடைய பிரிவை உபயோகப்படுத்தி கணக்கு ஆய்வு செய்வதோடுகூட, டெஸ்ட் ஆடிட் முறையிலே ஏ. ஜி. அலுவலகத்திலிருந்தும் செய்யவேண்டுமென்று ஏ. ஜி. அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலிக்கிறது. அது நல்ல கருத்து, இதைப்பற்றி விரைவிலே முடிவெடுக்கப்படும். தன்னிறைவு பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள், அதாவது கடன் வாங்காத சங்கங்கள் அரசாங்கத்திலோ மத்திய வங்கியிலோ கடன் வாங்காத தன்னிறைவுபெற்ற சங்கங்கள், அப்படிப்பட்ட சங்கங்கள் இருப்பதுதான் கூட்டுறவின் தனித்தன்மை, அப்படித் தன்னிறைவை எய்திவிடும் சங்கங்கள் இருக்குமானால் கணக்கு ஆய்வு சார்டர்ட் அக்கவுண்டண்ட் மூலமாக அவர்களே நடத்திக்கொள்ளலாம் என்ற யோசனையும் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய பணம் மத்திய வங்கியினுடைய பணம் இல்லாத காரணத்தால் அந்தக் கருத்து தரப்பட்டது. அதையும் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. இப்படிப்பட்ட முறைகளை எல்லாம் புகுத்துவோமானால் கணக்கு ஆய்வு முறை நல்ல முறையில் செய்யப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சங்கங்களிலே ஊழல் அதிகமாக இருக்கிறது, காலதாமதம் அதிகமாக இருக்கிறது, இதற்கெல்லாம் அரசாங்கம் தீவிரமாக முனைந்து செயல்படுகிற காரணத்தால் பலபேர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று தகவல் கொடுத்தார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்காக நாம் பரிதாபப்படக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. இதைக் காரணம் காட்டி பொதுமக்களுடைய பணம் விரையம் ஆவதைத் தடுப்பதிலே அரசாங்கம் சுணக்கம் காட்ட விரும்பாது. ஊழல் நடந்தால் உடனே நடவடிக்கை எடுப்பதில் இந்த ஆட்சி முனைந்த ஆட்சியாக

இருக்கிறது. எங்கெங்கே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன, என்ன என்ன காரணங்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து வருகிறது. தேர்தல் முறையிலே ஊழல், பணம் பட்டுவாடாச் செய்வதிலே ஊழல் என்றெல்லாம் வருகிறது. பணம் பட்டுவாடாச் செய்வதிலே டெம்பரரி மிஸ்அப்ரோப்ரியேஷன் கண்டு பிடிக்கக்கூடிய நேரத்திலே ஆளே இல்லாத நிலைமை, வழக்குகள் தொடர்ந்தால் நபர் இறந்ததற்குப் பிறகுகூட வழக்குகள் நடக்கின்ற நிலைமை இவையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையைச் சொன்னார்கள். 1959-ம் ஆண்டு இந்தச் சட்டம் வந்தபொழுது சில பிரிவுகள், சில கொள்கைகள் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டன. ஆனால், சட்டமாக ஆக்கப்பட்ட பொழுது அவையெல்லாம் எடுக்கப்பட்டு விட்டன. எப்படி மாற்றியமைத்தால் நல்ல நிர்வாகம் ஏற்படும் என்று பரிசீலிப்பதற்காக ஒரு குழு அமைக்கலாம், அதனுடைய அறிக்கையின் அடிப்படையிலே ஒரு அறிக்கையை, இந்த மன்றத்திலே ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம், அதன் அடிப்படையிலே மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்ததற்குப் பின்னாலே அது சட்டமாக்கப்படலாம் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. இந்தக் கொள்கை நிறைவேற்றப்பட்டால் கனம் அங்கத்தினர்கள் சொன்ன பல குறைகளை நீக்கக்கூடிய நிலை உருவாகும் என்று கருதுகிறேன்.

சிறப்பு அங்காடிகளைப் பற்றிக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. மதுரையில் இயங்கக்கூடிய சிறப்பு அங்காடி அனுபவத்தைப் பற்றி அந்தப் பகுதி அங்கத்தினர்கள் எல்லாம் சொன்னார்கள். சிறப்பு அங்காடிகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற கொள்கை மத்திய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டமாகும். அதற்காக அவர்கள் உதவி செய்கிறார்கள். இந்தத் திட்டத்தினுடைய பின்னணியிலே உள்ள கருத்து—இப்படிப்பட்ட சிறப்பு அங்காடிகள் தோற்றுவிக்கப்பட்டால் நாட்டிலே விலைவாசிகள் இறங்கும் என்று கருதுகிறார்கள். பரீட்சார்த்தமாகச் செய்யலாம் என்று நம்முடைய மாநிலத்திலே ஆறு இடங்களிலே ஆரம்பிக்கலாம் என்று திட்டமிட்டு ஐந்து இடங்களிலே ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. ஓரளவு நஷ்டம், நிர்வாகக் குறை எல்லாம் காணப்படுகிறது. அது இரண்டு சிறப்பு அங்காடிகளில் மட்டும்தான் காணப்படுகிறது. மற்ற சிறப்பு அங்காடிகள் லாபத்தில் நடைபெற்று வருகின்றன. இதைப் பற்றிக் குறுகிய காலத்திற்குள்ளாக, சில மாதங்களுக்குள்ளாகவே முடிவுக்கு வந்து விடாமல் தொடர்ந்து பரிசீலித்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும் என்று கருதினால் இந்த அரசாங்கம் தகுந்த முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, கூட்டுறவு அமைப்புகளிலே நடவடிக்கை எடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இதிலே தலையிடுவதிலே சட்டப் பிரச்சினை இருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கமானது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தன்னாட்சி உரிமை பெற்றது—அடானமஸ் பாடி—எந்த அளவுக்குச் சட்டத்தை உபயோகப்படுத்தி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றியெல்லாம் வரைமுறைகள் இருக்கின்றன, விதி முறைகள் இருக்கின்றன. அதை யெல்லாம் பின்பற்றித் தான் இந்த அரசாங்கம் செயல்படும். காலதாமதம் இருப்பதைத் தடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். 'கலைத்துவிடுங்கள்' என்று சொன்னால் மிக எளிது. அதைத் தான் இந்த அரசாங்கம் கடைசியாகச் செய்ய முடியும். கூட்டுறவு எண்ணத்தை வளர்க்க வேண்டும், கூட்டுறவுக் கொள்கைக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கருத்து. ஆகவே, இதிலே இருக்கிற தவறுகளைக் களைய, அப்போதைக்கப்போது பரிசீலித்து, நேரத்திற்குத் தக்கவாறு, இடத்திற்குத் தக்கவாறு, சூழ்நிலைக்குத் தக்கவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது ஒன்று. விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள், உரம், டிராக்டர்கள் போன்ற கருவிகள் கொடுப்பதுதான் முக்கியமான வேலை. உரத்தைப்



பொறுத்த அளவில் இருக்கக்கூடிய முறையை எப்படி மாற்றியமைத்தால் விவசாய மக்களுக்கு எளிதாக உரம் கிடைக்கும் என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்தது. ஏற்கனவே இருந்த முறை மாவட்டங்களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும் விநியோகித்து வந்தார்கள். பல மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டும் விநியோகித்து வந்தார்கள். தனியாரிடம் கொடுத்தால் அவர்கள் தன்னிச்சையாக உர விநியோகத்தில் ஈடுபட்டதால் பொதுமக்களுடைய நன்மையைக் கவனிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாக செயல்படாத காரணத்தால் எல்லா விவசாயிகளுக்கும் இந்த உரம் போய்ச் சேருவதில்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு. இந்த அரசாங்கம் இந்த நிலைமைகளை எல்லாம் பரிசீலித்து ஓரளவு முடிந்த இடங்களில் எல்லாம் கார்டு சிஸ்டத்தை ஏற்படுத்தி உரத்தை வழங்கத் திட்டமிட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டங்களிலுள்ள கலெக்டர்களிடத்திலிருந்து நிலைமை ஆராய்ந்து, ஆங்காங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நடைபெறுகின்றன. சிறந்த முறையில் நடைபெறுகின்றனவா என்பது பற்றிக் கூட்டுறவுப் பதிவாளரிடத்திலிருந்து அறிக்கை வாங்கி அந்த அறிக்கையின் அடிப்படையில் அந்தந்த மாவட்ட நிலைமையைக் கவனித்து, கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறுகின்ற இடங்களில் அவற்றுக்கு முதலிடம் கொடுத்து மற்ற இடங்களில் கலெக்டர் அவர்கள் நிர்வாகத்தின் மூலம் கொடுக்கலாமா என்பதுபற்றி முடிவுக்கு வந்து உர விநியோகத்தில் ஈடுபடலாமா என்று அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. கலெக்டர்கள் கருத்துக் கேட்டு விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

விவசாயிகளுக்கு வேண்டிய கடன்கள் முழுவதும் கொடுத்தால்தான் அவர்கள் வேறு நபர்களிடத்திலே கடனுக்காகச் செல்ல முடியாத சூழ்நிலையை உருவாக்க முடியும், அதுதான் நல்லது என்ற கருத்து சொல்லப்பட்டது. அது நல்ல கருத்துத்தான், நல்ல ஆலோசனைதான். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன்களுக்குப் பல கட்டுதிட்டங்களை உருவாக்கிவிட்டு, வட்டிக் கடைக்காரன், மார்வாடி ஆகியோரிடம் செல்ல முடியாத நிலைமையை உருவாக்கிவிட்டு அவனுக்கு வேண்டிய கடனைக் கொடுத்தால் அவன் அதைத் திருப்பிக் கட்டவும் சவுகரியம் ஏற்படும் என்ற முறையில் செய்யலாமா என்பது பற்றியும், இந்த அரசாங்கம் எவ்வளவு அதிகமாகக் கடன் உதவி கொடுக்கலாம் என்பது பற்றியும் அரசாங்கம் பரிசீலித்து ரிசர்வ் வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று எண்ணி வருகிறது. அந்த முறையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வாய்ப்பு ஏற்படும். நாம் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். விவசாய வளர்ச்சிக்கென்று கொடுக்கப்படுகின்ற கடனை அவர்கள் வேறு வழியில் செலவு செய்து விடுகிறார்கள். விவசாய வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படுகின்ற கடனை பல வேறு காரியங்களுக்குச் செலவு செய்துவிட்டு விவசாயத்திற்குப் பணம் இல்லாமல் தவிப்பதைப் பார்த்திருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் எல்லாம் இதைப் பற்றி உணர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டிருப்போருக்கு இதைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி எடுத்துச் சொன்னால் பயிர்க் கடன் என்ற திட்டம் நல்ல முறையில் செயல்படும்.

பயிர்க் கடன் திட்டத்திலே குறைந்த காலத்திலே திருப்பி வசூலித்து விடுகிறார்கள். ஆனால் அதிக காலத்திற்கு வட்டி வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு அதிகமாக வட்டி வாங்க வேண்டுமென்ற விதி ஒன்றும் இல்லை. அவ்வாறு தவறாக நடைபெற்றால் அதைப் பற்றிப் பரிசீலித்து விவசாயிகளிடத்தில் அதிக வட்டி வாங்காத முறையைப் பின்பற்ற இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'கூட்டுறவு இயக்கத்தால் யாருக்கு சவுகரியங்கள்? விவசாயிகளுக்கு வசதி செய்கிறார்களா? கூட்டுறவு இயக்கத்தின் பேரிலே சிலபேருடைய ஏகபோக உரிமை இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்களா?' என்ற கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த அரசாங்கத்தைப்

[திரு. செ. மாதவன்] [1967 ஜூன் 29

பொறுத்தமட்டில் அப்படிப்பட்ட கேள்விகளிலே உண்மை இருப்பதை உணருகிறது. நாங்கள் பரிசீலித்த அளவில் இந்த இயக்கம் ஏழைகளிடத்தில் செல்லவில்லை, பெருவாரியான விவசாயிகளுக்கும் செல்லவில்லை என்பதை இந்த அரசாங்கம் ஏற்று அதனுடைய அடிப்படையில் பரிசீலிக்க ஆரம்பிக்கும். விவசாயிகளுக்கு ஏராளமாகக் கொடுத்துவிட்டோம், கூட்டுறவு இயக்கத்தால் விவசாயிகள் அதிகமாகப் பயன்பெறுகிறார்கள் என்ற வாதமெல்லாம் ஏட்டிலே, புள்ளி விவரத்திலே நன்றாக இருக்கும். நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறும் வகையில் இந்த அரசாங்கம் எதிர்காலத்திலே செயல்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

"வயபிள் யூனிட்" தேவையா என்ற கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். சிறு சிறு சங்கங்கள் பொருளாதார வளர்ச்சி பெறுவதில் தன்னிறைவு சங்கங்களாக இயங்காத சூழ்நிலை இருப்பதால் பெரிய அளவாக அமைந்தால் தன்னிறைவு பெற்று நடைபெறமுடியுமா என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் என்றைக்குமே அரசாங்கத்தையும், ரிசர்வ் வங்கியையும், மத்திய வங்கியையும் நம்பித்தான் வாழ வேண்டுமென்ற நிலைமை மாற வேண்டும். தன்னிச்சையாக நடக்கும் நிலை ஏற்பட வேண்டும். நம்முடைய நாட்டில் 60 ஆண்டுகளாக நடைபெறக் கூடிய சங்கங்களைப் பார்க்கிறோம். அதற்குப் பிறகும்கூட அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதை மாற்றியமைத்து தன்னிறைவு சங்கங்களாக அமைய வேண்டும் என்ற முறையில் "வயபிள் யூனிட்" ஆக அமைப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்து. ஆனால் நன்றாகச் செயல்படக்கூடிய சங்கங்கள் தவறாக நடந்து வருகின்ற சங்கங்களோடு இணைகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அது மக்களுக்குச் செய்யும் பாதகம் ஆகாதா என்று கேட்டார்கள். என்னுடைய உள்ளத்திலே கூட அது ஒரு போராட்டமாக இருக்கக்கூடிய கருத்தாகும். அதைப் பற்றி அதிகாரிகளைப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறேன். அப்படி இணைத்தால் கூட இப்போது இருக்கிற தவறுகள் நிவர்த்திக்கப்படக்கூடிய வகையிலே கவனம் செலுத்தப்படும். எந்தச் சங்கமும் போகக் கூடாது. போகாமல் தடுக்க முடியுமா ! பின்னால் தேர்தலில் நல்லவர்கள் வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட முடியுமா என்பது பற்றியெல்லாம் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் பல பேர் இந்த நிலைமைகளைப் பற்றியெல்லாம் எழுத்து மூலம் தந்திருக்கிறார்கள். அப்போதைக்கப்போது அந்தந்த இடத்தில் சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று பார்த்து மாற்றியமைத்து தீயவர்கள் கையிலே, தவறான முறையிலே நிர்வாகம் நடத்துகிறவர்கள் கையிலே அமைப்புகள் போய்விட முடியாத நிலையில் இந்த அரசாங்கம் கண்காணிக்கும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து இந்த நாட்டில் நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டும். பல துறைகளிலும் அது வளர்க்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இவ்வளவு குறைகள் சொல்லப்பட்டாலும் குறுகிய கால அனுபவத்தில் பல சங்கங்களை பார்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பல சங்கங்கள் முழுக்க முழுக்க தன்னிறைவு பெற்று மிக நல்ல முறையில் அதன் அங்கத்தினர்களுக்குச் சேவை செய்யக் கூடிய நிலைமையைப் பார்த்தேன்.

விலையைக் குறைத்துக் கொடுக்கக் கூடிய நிலைமை, ஏராளமான பணம்
பிற் பகல் 5-30 டிவிடெண்ட் கொடுக்கும் நிலை, எந்த அளவிற்கு லாபத்தை எல்லாம் விலையைக் குறைப்பதில் பயன்படுத்த முடியுமோ அதற்குப் பயன்படுத்தும் முறை எல்லாம் பார்த்தேன். இதையெல்லாம் பார்க்கும்போது இந்த இயக்கம் வளர நம் நாட்டில், நம் மாநிலத்தில் இன்னும் வாய்ப்பிருக்கிறது என்பது என் எண்ணம். இதை எல்லோரும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். அந்த முறையில் நாம் அத்தனை பேர்களும் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையை ஏற்றிருப்பதால் இதில் ஏற்படும் நன்மையை



[திரு. செ. மாதவன்]

1967 ஜூன் 29]

எல்லாம் அப்போதைக்கப்போது கண்டு நல்லமுறையில் நடத்திச் செல்ல எதிர்காலத்தில் இந்த இயக்கம் மிகவும் நன்றாக முன்னேறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு இந்த நம்பிக்கை எல்லோருக்கும் இருப்பதால் இந்த மானியத்திற்கு எதிராக வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கும் நண்பர்கள் எல்லாம் இந்தக் கொள்கையில் எங்களோடு இணைந்திருப்பதால் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்புள்ள கேள்வி: "கோரிக்கை எண் XIX—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,97,18,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமுன்னால் அறிவிப்பு ஒன்றுள்ளது.

சட்டமேலவையின் மாண்புமிகு செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு செய்தி வந்துள்ளது என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். செய்தியாவது—

1967-ம் வருடம் ஜூன் மாதம் 27-ம் தேதியில் மேலவையில் கீழ்க்கண்ட திருத்தங்களுடன் மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா, 1967 [District Municipalities (Amendment Bill) 1967] நிறைவேற்றப்பட்டு, கையொப்பமிடப்பட்டு பேரவையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது :—

திருத்தங்கள்.

'In clause 2, in new sub-section (5-A)' add the following proviso—

"Provided that before publishing a notification under this sub-section, the State Government shall publish in the *Fort St. George Gazette* a notice specifying the grounds on which they propose to publish such notification, fix a period of not less than four weeks for any person interested to show cause against the proposal and consider the objections, if any."

இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை நாளை பிற் பகல் 5-35
1967-ம் வருடம் ஜூன் மாதம் 30-ந் தேதி காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Satutory Rules and orders.

*309. Notification issued with G.O. Ms. No. 494, Home, dated the 17th February 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicle MSR 5544 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Government General Hospital, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931)].

*210. Notification issued with G.O. Ms. No. 4218, Home, dated the 12th December 1966, exempting tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicle MSV 3052 gifted to the Dean, Government Stanley Medical College, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

*211. Notification issued with G.O. Ms. No. 4005, Home, dated the 23rd November 1966, exempting from payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, in respect of the private carrier vehicle MDA 2314 gifted to the Diocesan Director, Catholic Charities, India at Madurai. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

*212. Notification issued with G.O. Ms. No. 448, Home, dated the 11th February 1967, regarding collection of quarterly tax at reduced rate in respect of the luxury coach belonging to Messrs. Chellam Transports Private Limited, Palani, from 1st January 1967 till 30th September 1967. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

213. Notification issued with G.O. Ms. No. 3999, Home, dated the 23rd November 1966, making an amendment to the Madras Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

214. Notification issued with G.O. P. No. 739, Revenue, dated the 4th April 1967, making an amendment to the Madras Entertainments Tax Rules, 1939. [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act*, 1939 (*Madras Act X of* 1939).]

**B. Reports, Notifications and other papers.**

53. Notification issued with G.O. Ms. No. 642, Revenue, dated the 20th March 1967, regarding the cancellation of the Revenue Department Notifications specified in the notification with effect, on and from the 1st April 1967 under the Central Sales Tax Act, 1956.



இணைப்பு

[118-ம் பக்கத்திலுள்ள 109-வது உடுக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

| | டிசம்பர் 1966-ஜனவரி 1967. தாலூகா வாரியான ஒதுக்கம். (மூட்டைகள்.) | ஜனவரி 1967-பிப்ரவரி 1967. தாலூகா வாரியான ஒதுக்கம். (மூட்டைகள்.) |
|---|---|---|
| 1 ஆரணி .. .. .. | 546 | 510 |
| 2 வேலூர் .. .. .. .. | 4,586 | 4,279 |
| 3 அரக்கோணம் .. .. .. | 655 | 611 |
| 4 செங்கம் .. .. .. | 328 | 306 |
| 5 செய்யாறு .. .. .. | 328 | 306 |
| 6 குடியாத்தம் .. .. .. | 874 | 815 |
| 7 போளூர் .. .. .. | 328 | 306 |
| 8 திருவண்ணாமலை .. .. | 874 | 815 |
| 9 திருப்பத்தூர் (வாணியம்பாடி துணைத் தாலூகா.) | 1,310 | 1,223 |
| 10 வந்தவாசி .. .. .. | 327 | 306 |
| 11 வாலாஜா (ஆர்க்காடு) .. .. | 764 | 713 |
| மொத்தம் | 10,920 | 10,190 |

சர்க்கரை ஒருமாதக்காலத்துக்கு ஒதுக்கப்படுகிறது. ஒரு மாதத்தின் 23-ம் தேதியிலிருந்து அடுத்த மாதம் 22-ந் தேதி வரை இந்த ஒரு மாத கால அளவு கணக்கிடப்படுகிறது.

2. வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரை போதுமான தல்ல என்று அம் மாவட்டக் கலெக்டரிடமிருந்தோ பொதுமக்களிடமிருந்தோ முறையீடு எதும் வரவில்லை. தவிர, நாட்டில் சர்க்கரை உற்பத்தி பெருமளவு குறைந்துவிட்டது. எனவே, இன்னும் கொஞ்ச காலத்திற்குச் சர்க்கரைப் பற்றுக்குறை உணரப்படும்.

3. மேலே பகர்ந்துள்ள விடையின் காரணமாக இக் கேள்வி எழவில்லை.

| | December 1966 to January 1967. (Talukwise allotment.) | January 1967 to February 1967. (Talukwise allotment.) |
|---|---|---|
| | Bags. | Bags. |
| 1 Arani .. .. .. | 546 | 510 |
| 2 Vellore .. .. .. | 4,586 | 4,279 |
| 3 Arkonam .. .. .. | 655 | 611 |
| 4 Chengam .. .. .. | 328 | 306 |
| 5 Cheyyar .. .. .. | 328 | 306 |
| 6 Gudiyatham .. .. | 874 | 815 |
| 7 Polur .. .. .. | 328 | 306 |
| 8 Tiruvannamalai .. .. | 874 | 815 |
| 9 Tirupattur (Vaniyambadi sub-taluk). | 1,310 | 1,223 |
| 10 Wandiwash .. .. | 327 | 306 |
| 11 Wallajah (Arcot.) .. | 764 | 713 |
| Total .. | 10,920 | 10,190 |

The period of allotment for sugar is for a month reckoned from the 23rd of a month to 22nd of the next month.

2. There has been no representation either from the Collector of North Arcot or from the public about the inadequacy of the allotment. However, there is a great fall in the production of sugar in the country and shortage will be felt for sometime to come.

3. Does not arise in view of answer above.

65011